No. 568

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகள் செயலக
# வெளியீடு

தொகுதி-15 எண்-1

அகுண் பிஃ-5 1992

211 31 1992
12-15-1
2334

வெளியீடு 20-8-1992 Issued 20-8-1992

568

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

புதன்கிழமை பிப்ரவரி 5, 1992 - தொகுதி 15 - எண் 1
Wednesday the 5th February, 1992 - Volume 15 No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

## உள்ளடக்கம்.

5—02—1992


பக்கங்கள்.

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் iii—v

Personnel of the Government of Tamil Nadu vi —x

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. xi—xii

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகரவரிசைப்படி) .. .. xiii—xxiv

1. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் ... 1—40

2. சிறப்புக் குறிப்புகள்—

(அ) தஞ்சை, காயிதேமில்லத் மாவட்டங்களில் நேரடி நெல் கொள்முதலிலுள்ள இடர்பாடுகள் குறித்து .. .. .. 40—44

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப்படாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து .. .. 44—49

3. தகவல் கோரல்—

உறுப்பினர் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை குறித்து .. .. .. 49—50

4. உறுப்பினர் பேரவைப் பணிகளினின்றும் தற்காலிகமாக நீக்கி வைக்கப் பெறுதல் .. .. 50—53

5. கவன ஈர்ப்பு—

திருச்சி மாவட்டம் மாயனூர் தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் பைப் கம்பெனி லே-ஆப் செய்யப்பட்டுள்ளது குறித்து .. .. 53—55

6. அறிக்கை அளித்தல்—

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு .. .. ... ... .. 55

| | | பக்கங்கள் |
|---|---|---|
| | சட்ட முன்வடிவுகள்—அறிமுகம் செய்தல்— | |
| | டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (திருத்த) சட்டமுன்வடிவு, 1992 .. .. .. .. | 56 |
| 8. | ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி. | |
| | *திரு. கு. சிவசுப்பிரமணியன் | 60—68 |
| | டாக்டர் அ. செல்லக்குமார் | 69—75 |
| | *திரு. ச. காந்திராஜன் | 75—80 |
| | திருமதி கவிநிலவு தர்மராஜ் | 80—83 |
| | திரு. கே. ஏ. மனோகரன் | 84—86 |
| | திரு. ஜி. பழனிசாமி | 86—100 |
| | | 103—106 |
| | திரு. கே. பி. ராஜு | 106—111 |
| | திரு. காஞ்சி பன்னீர்செல்வம் | 111—114 |
| | திரு. உ. பலராமன் | 114—119 |
| | திரு. ம. சின்னசாமி | 119—121 |
| | *திருமதி கே. மரியமுல்ஆசியா | 121—125 |
| | *திரு. எச். எம். ராஜு | 125—128 |
| | திரு. சிங்கை கோவிந்தராசு | 128—131 |
| 9. | பார்வையாளர் மாடத்திலிருந்து ஒருவர் குரல் எழுப்பியது குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு | 68—69 |
| 10. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. — | 131—132 |


V211,31 N92
N92-15-1
600 009
162334

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—திரு. பீஷ்ம நாராயண் சிங்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத் துறை, சர்க்கரைப் பாகு கழிவு, பிற்பட்டோர் நலம் சிறுபான்மையினர் நலம், இந்து சமய அறநிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப் படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுரங்கம் மற்றும் கனிம வளம், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு.

2. நிதி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம்.

3. சட்ட அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. ஏ. இருஷ்ணசாமி : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல்) சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட), கம்பெனிகள் பதிவு.

4. வருவாய்த் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. ஏஸ். டி. சோமசுந்தரம் : வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, அரசு அச்சகம், பூமிதானம் மற்றும் கிராமதானம், பயண இசைவுச் சீட்டு, வணிக வரிகள்.

| | | |
|---|---|---|
| 5. | கல்வி அமைச்சர் .. | மாண்புமிகு திரு. இராம வீரப்பன் கல்வி, தொழில் நுட்பக் கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தொல் பொருளியல், முன்னாள் இராணுவத்தினர் நலம். |
| 6. | தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.. | மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு. |
| 7. | மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். ... | மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல், மின்னணுவியல், இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு. |
| 8. | போக்குவரத்து துறை அமைச்சர். .. | மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : போக்குவரத்து அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள், வனங்கள் மற்றும் சின்கோனா. |
| 9. | கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர். .. | மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : கைத்தறி மற்றும் நெசவாலைகள். |
| 10. | பொதுப்பணித் துறை அமைச்சர். .. | மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப் பணிகள், பாசனம் (சிறு பாசனம் உட்பட), நெடுஞ் சாலைகள், மின்சாரம், மரபு சாரா எரிசக்தி வளர்ச்சி. |
| 11. | உள்ளாட்சித் துறை.. அமைச்சர். | மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை, நகர்ப்புற மற்றும் கிராமப்புற குடிநீர் வழங்கல். |



| | | |
|---|---|---|
| 12. | உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர்.. | மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு, கூட்டுறவு, நுகர்பொருள் வழங்கல், விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளிவிவரங்கள். |
| 13. | வேளாண்மைத் துறை அமைச்சர். .. | மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, சர்க்கரை வரி மற்றும் சர்க்கரை வளர்ச்சி. |
| 14. | வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர். .. | மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : வீட்டு வசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப்பாடு, நகர அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம். |
| 15. | ஊரகத் தொழில் துறை அமைச்சர். .. | மாண்புமிகு திரு. முஹமது ஆசிப் : சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில்கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப். |
| 16. | சமூக நலத்துறை அமைச்சர். .. | மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம். |
| 17. | ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர். .. | மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம். |
| 18. | மீனளத்துறை அமைச்சர். ... | மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மீனளம். |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

THIRU BHISHMA NARAIN SINGH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. Chief Minister .. .. | THE HON. DR. J. JAYALALITHA : Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service and other All India Services, District Revenue Officers, Police, Prevention of Corruption, Industries, Prohibition and Excise, Molasses, Backward Classes, Minorities, Hindu Religious and Charitable Endowments, Information and Publicity, Film Technology, Cinematograph Act, Tourism and Tourism Development Corporation, Mines and Minerals, Tamil Development and Tamil Culture. |
| 2. Minister for Finance .. | THE HON. DR. V.R. NEDUNCHEZHIAN : Finance, Planning, Elections and Legislature. |
| 3. Minister for Law .. | THE HON. THIRU K.A. KRISHNASAMY : Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt relief including Legislation on Money lending, Chits and Registration of Companies. |
| 4. Minister for Revenue .. | THE HON. THIRU S.D. SOMASUNDARAM : Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Indians Overseas, Refugees and Evacuees, Stationery and Printing, Government Press, Bhoodan and Gramdan, Passports and Commercial Taxes. |

5. Minister for Education .. THE HON. THIRU ERAAMA VEERAPPAN : Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology and Welfare of Ex-Servicemen.

6. Minister for Labour .. THE HON. DR. C. ARANGANAYAGAM : Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census.

7. Minister for Healths .. THE HON. THIRU S. MUTHUSAMY Health, Medical Education, Family Welfare, Environmental Pollution Control, Electronics, Iron and Steel Control and Newsprint Control.

8. Minister for Transport .. THE HON. THIRU K.A. SENGOTTAYAN : Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports, Forest and Cinchona.

9. Minister for Hand looms and Textiles .. THE HON. THIRU E. MADHUSUDHANAN : Handlooms and Textiles.

10. Minister for Public Works. .. THE HON. THIRU S. KANNAPPAN : Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity and Non-Conventional Energy Development.

11. Minister for Local Administration. .. THE HON, THIRU ALAGU THIRUNAVUKKARASU : Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes and Rural Indebtedness, and Urban and Rural Water Supply.

12. Minister for Food and Co-operation. .. THE HON. THIRU G. VISWANATHAN : Food, Co-operation, Civil Supplies, Price Control and Statistics.



13. Minister for Agriculture. .. THE HON. THIRU KU. PA. KRISHNAN : Agriculture, Agricultural Engineering, Agro Service, Co-operatives, Horticulture, Sugar, Cess and Sugar Development.

14. Minister for Housing and Urban Development. .. THE HON. THIRU T.M. SELVAGANAPATHI : Housing, Slum-Clearance, Rural Housing Development, Accommodation Control, Town Planning, Urban Development, Madras Metropolitan Development Authority.

15. Minister for Rural Industries. .. THE HON. THIRU MOHAMED ASIF : Small-Scale Industries, Rural Industries including Cottage Industries, Khadi and Village Industries Board and Wakf.

16. Minister for Social Welfare. .. THE HON. TMT. R. INDIRA KUMARI : Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon-Meals, Beggar Homes, Orphanages and Correctional Administration.

17. Minister for Adi-Dravidar Welfare. .. THE HON. THIRU M. ANANDAN : Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour, Animal Husbandry, Milk, Dairy Development

18. Minister for Fisheries. .. THE HON. THIRU D. JAYAKUMAR : Fisheries.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. இரா. முத்தையா

பேரவைத் துணைத் தலைவர் ;

பேராசிரியர் க. பொன்னுசாமி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. ம. சின்னசாமி
2. திரு. வ. சத்தியமூர்த்தி
3. திரு. ஆர். சிங்காரம்
4. திரு. வே. தம்புசாமி
5. திரு. நா. சா. பழனிசாமி

செயலாளர்

திரு. செ. சு. ஜானகிராமன்

பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி)—

| | |
|---|---|
| இராமச்சந்திரன், திரு. ரெ. கு., பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி. எல். | இணைச் செயலாளர் |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல்., | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| சண்முகநாதன், திரு. கோ., பி. காம். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| சந்திரசேகர், திரு. ஆர். பி.ஏ. | துணைச் செயலாளர் |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | துணைச் செயலாளர் |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல்., டி.பி. மற்றும் பி.ஏ. | துணைச் செயலாளர் |
| கிருஷ்ணமூர்த்தி, திரு. சு., பி.எஸ்ஸி. | குழு அலுவலர் |
| வெங்கட்டராமன், திரு. ப. சி., பி. காம். | குழு அலுவலர் |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| இராசாராமன், திரு. வி. பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| உமா, திருமதி வி. நா., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| கண்ணன், திரு. கே., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| சாயிநாதன், திரு. கி., பி.ஏ., பி.ஜி. எல். | சார்புச் செயலாளர் |
| பவானி சுப்பையா, திருமதி பி.ஏ., பி.ஜி. எல். | சார்புச் செயலாளர் |
| பானுமதி அனந்தராஜன், திருமதி பி.எஸ்ஸி. பி.ஜி. எல். | சார்புச் செயலாளர் |

| | |
|---|---|
| முடிகோபதி, திரு. நா., எம்.ஏ. | சார்புச் செயலாளர் |
| முனிர்உன்னிசா, திருமதி பி.எஸ்ஸி., பி.ஜி. எல். | சார்புச் செயலாளர் |
| ராஜன், திரு. கே. பி. டி. ஆர். எஸ். | சார்புச் செயலாளர் |
| ராஜேந்திரன், திரு. பி. சி., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| கணேசன், திரு. சா., பி.ஏ., பி.ஜி.எல், | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு. கோ. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| சுந்தரராஜுலு, திரு. துரை., எம்.ஏ. | தலைமை நிருபர் |
| துரைபாண்டியன், திரு. செ.ஏ., பி.ஏ. | தலைமை நிருபர் |
| ஜெயதேவ், திரு. பி. சி. | தலைமை நிருபர். |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | |
|---|---|
| 1. அண்ணாமலை, திரு. எஸ். | ஆலந்தூர் |
| 2. அபரஞ்சி, திரு. பெ. | அரூர் (செ.வ.) |
| 3. அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | மயிலாடுதுறை |
| 4. அமர்நாத், திரு. ஓ.எஸ். | மதுரை கிழக்கு |
| 5. அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு. | கன்னியாகுமரி |
| 6. அரங்கநாதன், திரு. ஆர். டி. | விருத்தாசலம் |
| 7. அரங்கநாயகம், டாக்டர் செ. | தொண்டாமுத்தூர் |
| 8. அர்ச்சுனன், திரு. க. | வீரபாண்டி |
| 9. அழகிரி, திரு. ச. | சிதம்பரம் |
| 10. அழகு திருநாவுக்கரசு, திரு. | ஒரத்தநாடு |
| 11. அறிவழகன், திரு. ஆ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 12. அன்பழகன், திரு. எஸ். | நாமக்கல் (செ.வ.) |
| 13. ஆசைமணி, திரு. எஸ். | குத்தாலம் |
| 14. ஆண்டி அம்பலம், திரு. எம். | நத்தம் |
| 15. ஆண்டித் தேவர், திரு.எஸ். | திருப்பரங்குன்றம் |
| 16. ஆரோக்கியசாமி, டாக்டர் ச. | திருச்சிராப்பள்ளி-1 |
| 17. ஆறுமுகம், திரு. செ. | வானூர் (செ.வ.) |
| 18. ஆனந்தன், திரு. எம். | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |

| | |
|---|---|
| 19. இந்திரகுமாரி, திருமதி இரா. | நாட்ராம்பள்ளி |
| 20. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | மேலூர் |
| 21. இராசாராமன், திரு.சோ. | பாபநாசம் |
| 22. இராசாராம், திரு. க. | பனைமரத்துப்பட்டி |
| 23. இராதாகிருஷ்ணன், திரு. த. க. | திருமங்கலம் |
| 24. இராமகிருஷ்ணன், டாக்டர். இ. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 25. இராமசுவாமி அம்பலம், திரு. கே. ஆர். | திருவாடனை |
| 26. இராமசுவாமி, திரு. சி. | சங்கராபுரம் |
| 27. இராமச்சந்திரன், திரு. மா.சா. மா. | இளையாங்குடி |
| 28. இராமச்சந்திரன், திரு. ஒ. ஆர். | கம்பம் |
| 29. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர் |
| 30. இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 31. இராமதாஸ், திரு. எஸ்.எஸ்.ஆர். | செஞ்சி |
| 32. இராமநாதன், திரு. இராம. | கும்பகோணம் |
| 33. இராஜமன்னார், திரு. சூ. சே. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 34. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, திரு. இ. | திருத்தணி |
| 35. இராஜேந்திரன், திரு. பி.வி. | வேதாரண்யம் |
| 36. இராம வீரப்பன், திரு. | காங்கேயம் |
| 37. இலதா பிரியகுமார், திருமதி | அரக்கோணம் (செ.வ.) |



| | |
|---|---|
| 38. இளம்வழுதி, திரு. | எழும்பூர் |
| 39. ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. | தாராபுரம் (செ.வ.) |
| 40. ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 41. ஏகாம்பர ரெட்டி, திரு. எ. | பள்ளிப்பட்டு |
| 42. கண்ணப்பன், திரு. எஸ். | திருப்பத்தூர் |
| 43. கண்ணன், திரு. வே. | திருவண்ணாமலை |
| 44. கந்தசாமி, திரு. கே. | தலைவாசல் (செ.வ.) |
| 45. கருப்புசாமி, டாக்டர் எம். | குன்னூர் (செ.வ.) |
| 46. கலியபெருமாள், திரு. ப. | திருவையாறு |
| 47. கலைச்செல்வி, திருமதி கே. எம். | காட்பாடி |
| 48. கவிநிலவு தர்மராஜ், திருமதி. | மொடக்குறிச்சி |
| 49. கற்பகம் இளங்கோ, திருமதி, | காரைக்குடி |
| 50. கனகவல்லி, திருமதி என். சி. | விளாத்திகுளம் |
| 51. காஞ்சி பன்னீர்செல்வம், திரு. | உத்திரமேரூர் |
| 52. காந்திராஜன், திரு. ச. | வேடசந்தூர் |
| 53. காளன், திரு. கோ. | வில்லிவாக்கம் |
| 54. காளிராஜன், டாக்டர் மு. | சமயநல்லூர் (செ.வ.) |
| 55. கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ. | ஆயிரம்விளக்கு |
| 56. கிருஷ்ணன், திரு. எஸ். எம். | தாம்பரம் |
| 57. கிருஷ்ணன், திரு. கு.ப. | ஸ்ரீரங்கம் |
| 58. கிருஷ்ணன், திரு. சி. | ஓமலூர் |
| 59. குப்பன், திரு. க. | திருவொற்றியூர் |
| 60. குமரி அனந்தன், திரு. | சாத்தான்குளம் |

61. குமாரதாஸ், டாக்டர் தே. கிள்ளியூர்
62. குழந்தைவேலு, திரு. சி. குளத்தூர் (செ.வ.)
63. கோடிமாரி, திரு. ஆர். நாகப்பட்டினம்
64. கோபாலகிருஷ்ணன், திரு. வே. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
65. கோபால், டாக்டர். க. நன்னிலம் (செ.வ.)
66. கோவிந்தராசு, திரு. மா. ரிஷிவந்தியம்
67. சக்குபாய், திருமதி ரா. கும்மிடிப்பூண்டி
68. சக்குபாய் தேவராஜ், திருமதி டி. திருவள்ளூர்
69. சஞ்சய் ராமசாமி, திரு. விருதுநகர்
70. சண்முகநாதன், திரு. எஸ். ஆலங்குடி
71. சண்முகம், திரு.எஸ்.வி. மதுரை மேற்கு
72. சத்தியமூர்த்தி, திரு. வ. கடலாடி
73. சந்திரசேகர், திரு.வி.பி. பொள்ளாச்சி
74. சம்பத், திரு. எ. வாணியம்பாடி
75. சரஸ்வதி, திருமதி அ.தி. சத்தியமங்கலம்
76. சரஸ்வதி, திருமதி ப. கபிலர்மலை
77. சரோஜா, டாக்டர் வெ. சங்கரி (செ.வ.)
78. சாத்தையா, திரு. தி. இராஜபாளையம்(செ.வ.)
79. சாவித்திரி அம்மாள், திருமதி ஆர். முசையூர்
80. சிங்காரம், திரு. ஆர். பேராவூரணி
81. சிங்காரம், திரு. கே. மொரப்பூர்
82. சிங்கை கோவிந்தராசு, திரு. சிங்காநல்லூர்
83. சியாமளா, திருமதி ரெ. கோவில்பட்டி



84. சிவசுப்பிரமணியன், திரு. கு. குறிஞ்சிப்பாடி
85. சிவபதி, திரு. என். ஆர். தொட்டியம்
86. சின்னசாமி, திரு. ம. கரூர்
87. சின்னசாமி, திரு. கா. சேந்தமங்கலம் (ம.ப.)
88. சின்னசாமி, திரு. வி.கே. பவானிசாகர்
89. சின்னப்பன், திரு.கே.கே. ஜெயங்கொண்டம்
90. சீனியம்மாள், டாக்டர் மு. அவினாசி (செ.வ.)
91. சீனிவாசன், திரு. ஆ. கு. பெரணமல்லூர்
92. சீனிவாசன், திரு. கு. மன்னார்குடி
93. சுதர்சனம், திரு. டி. பூந்தமல்லி
94. சுந்தரசாமி, திரு. எம். கலசப்பாக்கம்
95. சுந்தரதாஸ், திரு. மா. விளவன்கோடு
96. சுந்தரம், திரு,எம்.கே. தண்டராம்பட்டு
97. சுந்தரராஜ், டாக்டர் எஸ். பரமக்குடி (செ.வ.)
98. சுந்தரவேல், திரு. ஏ. கே. சி. திருப்பத்தூர்
99. சுந்தராம்பாள், திருமதி செ. மேட்டூர்
100. சுப்பிரமணியம், திரு. வ.மு. மானாமதுரை (செ.வ.)
101. சுப்பிரமணியன், திரு. வி. என். பெருந்துறை
102. சுப்பிரமணியன், திரு. வீ. கண்டமங்கலம் (செ.வ.)
103. சுப்புரத்தினம், திரு. ஆ. பழனி (செ.வ.)
104. சுலோசனா, செல்வி எல். மேட்டுப்பாளையம்
105. சுவாமிநாதன், திரு. சி. புதுக்கோட்டை
106. செங்கோட்டையன், திரு. கே. ஏ. கோபிசெட்டிபாளையம்

107. செல்லக்குமார், டாக்டர் அ. — அண்ணா நகர்
108. செல்லசாமி, திரு. ஏ.டி. — ஒட்டன்சத்திரம்
109. செல்லதுரை, திரு. ஆ. — திருச்செந்தூர்
110. செல்வகணபதி, திரு. டி. எம். — திருச்செங்கோடு
111. செல்வராசன், திரு. அ. — துறைமுகம்
112. செல்வராஜ், திரு. கே. — கோயம்புத்தூர் மேற்கு
113. செழியன், திரு. தா. — பெரம்பலூர் (செ.வ.)
114. சேகர், டாக்டர் எம். பி. — பெரம்பூர் (செ.வ.)
115. சேகர், திரு. எம். ஜி. — பாலக்கோடு
116. சொக்கலிங்கம், திரு. பி. — மதுராந்தகம்
117. சோமசுந்தரம், திரு. எஸ். டி. — தஞ்சாவூர்
118. ஞானசேகரன், திரு. சி. — வேலூர்
119. டேனியல்ராஜ், திரு. எஸ். — ஸ்ரீவைகுண்டம்
120. தங்கமுத்து, திரு. கு. — திருவோணம்
121. தங்கராஜ், திரு. ஆர். — ஆண்டிமடம்
122. தங்கவேல், திரு. எம். — முசிறி
123. தண்டாயுதபாணி, திரு. வி. — குடியாத்தம்
124. தமிழரசன், திரு. செ.கு. — வந்தவாசி (செ.வ.)
125. தமிழரசு, திரு. வே. — ஆத்தூர்
126. தம்புசாமி, திரு. வே. — திருவாரூர் (செ.வ.)
127. தர்மலிங்கம், திரு. இ. — அணைக்கட்டு
128. தர்மலிங்கம், திரு. பே. — பாளையங்கோட்டை
129. தவசி, திரு. கே. — ஆண்டிப்பட்டி
130. தனபால், திரு. ம. — திருப்போரூர் (செ.வ.)



131. தாமரைக்கனி, திரு. இரா. — ஸ்ரீவில்லிபுத்தூர்
132. தாமோதரன், திரு. சி. — நெல்லிக்குப்பம்
133. திருநாவுக்கரசு, திரு. எஸ். — அறந்தாங்கி
134. துரை, திரு. எஸ். எம். — ஆத்தூர்
135. துரைமுருகன், திரு. கு.சு. — பல்லடம்
136. துரை ராமசாமி, திரு. — வெள்ளக்கோவில்
137. தெய்வநாயகம், திரு. எ. — மதுரை மத்தி
138. தென்னவன், திரு. மு. — இராமநாதபுரம்
139. தேவராஜ், திரு. அ. — செய்யாறு
140. தேனி பன்னீர்செல்வம், திரு. — போடிநாயக்கனூர்
141. நடேசன், திரு. இரா. — திருவட்டாறு
142. நடேசன், திரு. மு. — சேலம்-2
143. நடேசன் பால்ராஜ், திரு. வெ. — நாங்குநேரி
144. நாகூர் மீரான், திரு. எஸ். — கடையநல்லூர்
145. நிர்மலா, செல்வி பி. — திண்டுக்கல்
146. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. — தேனி
147. பஞ்சவர்ணம், திருமதி கே. — வலங்கைமான் (செ.வ.)
148. பட்டாபிராமன், திரு. கா.ப. — காஞ்சிபுரம்
149. பரந்தாமன், டாக்டர் ஜெ. — பேரணாம்பட்டு (செ.வ.)
150. பரமசிவம், திரு. ஆர். பி. — சின்னசேலம்
151. பரமசிவன், திரு. ஏ. எம். — சோழவந்தான்
152. பலராமன், திரு. உ. — பூங்காநகர்
153. பழனிசாமி, திரு. இரா. — தாரமங்கலம்
154. பழனிசாமி, திரு. க. — எடப்பாடி
155. பழனிசாமி, திரு. நா.சா. — கிணத்துக்கடவு
156. பழனிசாமி, திரு. வெ. — திருப்பூர்
157. பழனிசாமி, திரு. ஜி. — திருத்துறைப்பூண்டி (செ.வ.)

| | | |
|---|---|---|
| | —முனியம்மாள், திருமதி க. | ராசிபுரம் |
| 159. | பன்னீர்செல்வம், திரு. என். | திருவிடைமருதூர் |
| 160. | பன்னீர்செல்வம், திரு. சா. | திண்டிவனம் |
| 161. | பன்னீர்செல்வம், திரு. ஜெ. | திருநாவலூர் |
| 162. | பாண்டியம்மாள், திருமதி இரா. | உசிலம்பட்டி |
| 163. | பாப்பா சுந்தரம், திரு. அ. | குளித்தலை |
| 164. | பாலகங்காதரன், திரு. ஜெ. | சிவகாசி |
| 165. | பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர் |
| 166. | பாலசுப்ரமணியன், திரு. எஸ். ஆர். | பொங்கலூர் |
| 167. | பாலசுப்பிரமணியன், திரு. கி. | பட்டுக்கோட்டை |
| 168. | பாலன், திரு. எம். கே. | சைதாப்பேட்டை |
| 169. | பாலையா, திரு. ஆ. | குளச்சல் |
| 170. | பீட்ரிக்டி, சோசா, டாக்டர். | நியமனம் |
| 171. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | தென்காசி |
| 172. | புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. | சேரன்மகாதேவி |
| 173. | புரட்சிமணி, திரு. ச. | மங்களூர் (செ.வ.) |
| 174. | புருஷோத்தமன், டாக்டர் வெ. | பெண்ணாகரம் |
| 175. | பூராசாமி, திரு. எம். | பூம்புகார் |
| 176. | பெரியசாமி, திரு. வே. | அந்தியூர் (செ.வ.) |
| 177. | பெரியவீரன், திரு. எம். | பெரியகுளம் |
| 178. | பெருமாள், திரு. செ. | ஏற்காடு (ம.ப.) |
| 179. | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 180. | பொன்னுசாமி, பேராசிரியர் க. | மருங்காபுரி |
| 81. | பொன்னுசாமி, திரு. பெ. | தருமபுரி |



| | | |
|---|---|---|
| 182. | பொன்னுவேலு, திரு. ஏ.ரா. | வரகூர் (செ.வ.) |
| 183. | போளூர் வரதன், திரு. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 184. | மணிமேகலை, டாக்டர் சு. | அரியலூர் |
| 185. | மணிமேகலை, திருமதி வி. ஜி. | அருப்புக்கோட்டை |
| 186. | மணிவாசகம், திரு. கே. பி. | உடுமலைப்பேட்டை |
| 187. | மதுசூதனன், திரு. இ. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர். |
| 188. | மரியம்உல் ஆசியா, திருமதி கே. | அரவக்குறிச்சி |
| 189. | மல்லிகா, செல்வி, கோ. | புவனகிரி |
| 190. | மனோகரன், திரு. கே. ஏ. | ஓசூர் |
| 191. | மாணிக்கம், திரு. சி. | ஈரோடு |
| 192. | மாலா, டாக்டர் ஜி. ஆர். | திருச்சிராப்பள்ளி-2 |
| 193. | முஹமது ஆசிப், திரு. | திருவல்லிக்கேணி |
| 194. | முத்துசாமி, திரு. சு. | பவானி |
| 195. | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 196. | முருகானந்தம், திரு. கே. ஆர். | சிவகங்கை |
| 197. | முருகையா பாண்டியன், திரு. ஆர். | அம்பாசமுத்திரம் |
| 198. | முனிரத்தினம், திரு. ஏ. எம். | சோளிங்கர் |
| 199. | முனிவெங்கடப்பன், திரு. கே. | கிருஷ்ணகிரி |
| 200. | முனுசாமி, திரு. கா. பூ. | காவேரிப்பட்டிணம் |
| 201. | மூர்த்தி, திரு. து. | சீர்காழி (செ.வ.) |
| 202. | மோசஸ், டாக்டர் எம். | நாகர்கோவில் |
| 203. | ரகுபதி, திரு. செ. | திருமயம் |
| 204. | ரங்கநாதன், திரு. ப. | புரசைவாக்கம் |
| 205. | ரங்கராஜன், திரு. டி. எம். | மயிலாப்பூர் |
| 206. | ரத்தினவேல், திரு. த. | திருவெறும்பூர் |
| 207 | ரமணி நல்லதம்பி. | ராதாபுரம் |
| 208. | ரமேஷ், திரு. வி. பி. ஆர். | தாக்[illegible] |

| | |
|---|---|
| 209. ரவிக்குமார், திரு. ஏ. | பொன்னேரி (செ. வ.) |
| 210. ரவிச்சந்திரன், திரு. வி. | உப்பிலியாபுரம் (ம.ப.) |
| 211. ராமசுப்பு, திரு. எஸ். எஸ். | ஆலங்குளம் |
| 212. ராஜு, திரு. எச்.எம். | உதகமண்டலம் |
| 213. ராஜு, திரு. கே. ஆர். | கூடலூர் |
| 214. ராஜு, திரு. கே. பி. | பேரூர் |
| 215. ராஜேந்திரன், திரு. என். ஆர். | காட்டுமன்னார் கோவில் (செ.வ.) |
| 216. லட்சுமணன், திரு. வி. கே. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 217. லாரன்ஸ், திரு. கு. | பத்மநாபபுரம் |
| 218. லோகாம்பாள், திருமதி ஜெ. | லால்குடி |
| 219. வரதராஜன், திரு.செ.து. | செங்கல்பட்டு |
| 220. விசுவநாதன், திரு. ஜி. | ஆற்காடு |
| 221. வீரபாண்டியன், டாக்டர் பெ. | செங்கம் (செ.வ.) |
| 222. வெங்கடராம ரெட்டி, திரு. மு. | தளி |
| 223. வெங்கடேசன், திரு. பி.ஆர். எஸ். | கடலூர் |
| 224. வேடியப்பன், திரு. தா. | போளூர் |
| 225. வேணுகோபால், திரு. என். ஜி. | ராணிப்பேட்டை |
| 226. வேலையா, திரு. டி. | திருநெல்வேலி |
| 227. ஜனார்தனன், திரு. தே. | விழுப்புரம் |
| 228. ஜானகிராமன், திரு.கோ. | மேல்மலையனூர் |
| 229. ஜீனத் சர்புதீன், திருமதி | சேப்பாக்கம் |
| 230. ஜெயக்குமார், திரு. எஸ். | தியாகராயநகர் |
| 231. ஜெயகுமார், திரு. டி. | இராயபுரம் |
| 232. ஜெயராமன், திரு.எஸ்.ஆர். | சேலம்-1. |
| 233. ஜெயலலிதா, டாக்டர் ஜெ. | பர்கூர் |
| 234. ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் | ஆரணி |
| 235. ஸ்ரீதரன், டாக்டர் அ. | வால்பாறை (செ.வ.) |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.

சுப்பிரமணியன், திரு. கே. — தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### தை 22, பிரஜோற்பத்தி—திருவள்ளுவராண்டு 2023.

### 1992, பிப்ரவரி 5, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணி அளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து ".

உரிய காலத்திற்காக கொக்கு போல் அமைதியாகப் பொறுத்திருக்க வேண்டும். காலம் வாய்த்த போது, அதன் குத்து போல் தவறாமல் செய்து முடிக்க வேண்டும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள், வினா எண் 41, திரு. தேனி பன்னீர்செல்வம். மாண்புமிகு நிதி அமைச்சர்.

### போடி நாயக்கனூரில் கருவூலம்.

41—

வினா எண். *3562 திரு. தேனி பன்னீர்செல்வம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

போடிநாயக்கனூரில் ஏற்கெனவே இயங்கிவந்த கருவூலம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டதை மீண்டும் போடிநாயக்கனூரில் கொண்டுவர பொதுமக்கள் சார்பில் கொடுக்கப்பட்ட விண்ணப்பத்தின் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

போடிநாயக்கனூரில் இதுவரை கருவூலம் எதுவும் இயங்கி வரவில்லை. மேலும், போடிநாயக்கனூரில் மீண்டும் கருவூலம் கொண்டுவர பொதுமக்களிடமிருந்தோ அல்லது பிறதுறை அலுவலர்களிடமிருந்தோ விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை.

[1992 பிப்ரவரி 5

திரு தேனி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடிநாயக்கனூரிலே ஏற்கெனவே கருவூலத் தினுடைய ஒரு பிரிவு இயங்கியதாகவும், அது ஏதோ ஒரு காரணத் திற்காக வேறு இடத்திற்கு மாற்றப்பட்டதாகவும் என்னிடம் பொது மக்கள் சார்பிலே கோரிக்கை மனுவைக் கொடுத்திருக் கிறார்கள். அந்த அடிப்படையிலேயும், அரசு அலுவலர்களுடைய பல்வேறு பிரிவு அலுவலர்களுடைய கோரிக்கையின் அடிப்படையி லேயும், இந்தக் கோரிக்கையை இந்த அவையின்மூலம் வைத்திருக் கிறேன். மேலும், இன்றைக்கு போடியிலே இருக்கக்கூடிய பல்வேறு அரசு அலுவலகங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி அலு வலகம், பேரூராட்சி, கால்நடை மருந்தகங்கள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் கல்வித் துறையினைச் சார்ந்த பல்வேறு பிரிவு அலுவலர்கள் எல்லாம் அரசுப் பணிகள் சம்பந்தமாக சம்பளப் பட்டியல் பெறுவது அல்லது பயணப்படி பட்டியல் பெறுவது, வாகன வரி போன்ற பல்வேறு காரணங்களுக்காக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. தேனி பன்னீர்செல்வம் : பல்வேறு காரணங் களுக்காக அங்கே போடியிலிருந்து தேனிக்குச் செல்ல வேண்டி யிருக்கிறது. தேனியிலும் கூட, தேனி நகரத்திலே அமையாமல் அந்த அலுவலகம் மதுரை ரோட்டிலே 1 கிலோ மீட்டர் தொலை வில் அமைந்துள்ளது. அந்த அலுவலர்கள் மீண்டும் 'பில்லை' மாற்றம் செய்ய வேண்டுமென்றால், தேனிக்கு வந்து . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி. விளக்கம் கூடாது.

திரு. தேனி பன்னீர்செல்வம் : அங்கே இருக்கக்கூடிய பாரத ஸ்டேட் வங்கிக்குச் செல்ல வேண்டுமென்றால் மீண்டும் பெரியகுளம் சாலைக்கு வர வேண்டியிருக்கிறது. இது போன்ற பல்வேறு சிரமங்கள் அந்தப் பணியிலே இருக்கின்ற காரணத்தால், பொதுமக்களுடைய சௌகரியத்தை கருதி குறிப்பாக, போடித் தொகுதியில் இருக்கக்கூடிய மலைவாழ் மக்களுடைய வசதிகளைக் கருதி, போடி தொகுதியிலே சுதந்திரப் போராட்டத் தியாகிகள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். ஏறக்குறைய நூற்றுக்கும் அதிகமான தியாகிகள் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேளுங்கள். துணைக் கேள்வியில், பதிலையொட்டியே கேள்வி இருக்கவேண் டும் விளக்கம் என்பது பேசுகிற போது தான் இருக்க வேண்டும். கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. தேனி பன்னீர்செல்வம் : எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இவ்வளவு பிரச்சினைகள் இருக்கக்கூடிய



1992 பிப்ரவரி 5]

இந்தக் காலக்கட்டத்தில் பயணப்படிகள் மிச்சம் ஆகின்ற கார ணத்தையொட்டி, கருவூலம் அங்கே அமைவதற்கான நடவடிக் கையை எடுக்க அரசு முன்வருமா என்பதை தெரிவிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே பாரத ஸ்டேட் வங்கியும் அங்கே இயங்கி வருகிறது. எனவே, இந்தச் சூழ்நிலை யில், அங்கே கருவூலத்தை அமைப்பதற்கான வாய்ப்புகளை அரசு ஏற்படுத்தித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையிலிருந்து கருவூலத் துறை பிரிவதற்கு முன்னால், போடிநாயக்கனூரில் அரசுக்குச் சேர வேண்டிய வருவாயை வசூல் செய்வதற்கு ஒரு வசூல் அலுவலகம் அதாவது '' கலெக்ஷன் டெப்போ '' ஒன்று இருந்தது. உத்தமபாளையத்தில் முழுமையான அதிகாரம் பெற்ற வட்டாட்சியர் அலுவலகம் ஆரம்பித்ததற்குப் பிறகு, போடி நாயக்கனூரிலே இயங்கி வந்த வசூல் அலுவலகம் '' கலெக்ஷன் டெப்போ '' மூடப்பட்டு, அது உத்தமபாளையம் கருவூலத்தோடு இணைக்கப்பட்டது. இப்போது வட்டம் மற்றும் தலைநகர் ஒவ்வொன்றிலும் ஒரு துணைக் கருவூலம் இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் 170 துணைக் கருவூலங்கள் வட்டங்களுடைய மையப் பகுதிகளிலே, தலைநகர்களிலே அமைந்து இருக்கின்றன. எந்தக் கருவூலத்திலே வேலைப் பளு அதிகமாக இருந்து ஒரு கருவூலம் இயங்க முடியாத அளவுக்கு அதிகமாக கொடுக்கல், வாங்கல் முறைகள் இருக்குமேயானால், அப்படிப்பட்ட இடங் களிலே மட்டும் போதுமான அளவுக்குக் கொடுக்கல், வாங்கல் ஆகியவைகள் இருப்பதையொட்டி வேறு துணைக் கருவூலங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அந்த வகையில் 32 துணைக் கரு ஆலங்கள் பல்வேறிடங்களில் பணியாற்றி வருகின்றன. என்றா லும் போடிநாயக்கனூரினைப் பொறுத்தவரையிலும் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள உத்தமபாளையத்தில் ஒரு கருவூலமும் 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தேனியில் ஒரு கருவூலமும் இருக்கின்றன. அங்கே எல்லாம் போதுமான அளவுக்குக் கொடுக்கல், வாங்கல் முறைகள் இருப்பதன் காரணத்தால் போடி நாயக்கனூரில் ஒரு தனிக்கருவூலம் ஏற்படுத்துவதற்குரிய வகையில் போதுமான அளவுக்கு வேலைப்பளு இருக்கிறது என்று கணக்கில் இல்லாததன் காரணத்தால் போடிநாயக்கனூரில் ஒரு புதிய கரு வூலத்தைத் துவக்க வேண்டிய அவசியம் இல்லை. உத்தமபாளையம் கருவூலமும், தேனி கருவூலமும் அதனுடைய தேவைகளை நிறைவேற்றிவருகின்றன என்று சொல்லப்படுகிறது.

முற்பகல் 9-35

திரு. தேனி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணைக் கருவூலத்தைப் பொறுத்த வரையில் போடியிலிருந்து மட்டும் கணக்கெடுத்தால் மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் சொல்லிய அந்த கிலோ மீட்டர் தொலைவு என்பது வரும். ஆனால் போடி தொகுதியில் இருக்கக்கூடிய பல் வேறு கிராமங்களிலிருந்து வந்து பணியாற்றுகிற அலுவலர்கள் வந்து சேரவேண்டிய நிலையைக் கணக்கில் எடுத்துப் பார்க்கின்ற போது 25 கிலோ மீட்டர் தொலைவுக்கும் அதிகமாக வருகிறது. எனவே, மலைப் பிரதேசங்களில் உள்ள மலைவாழ் மக்களின் நலன் கருதிஇந்த விதியைக் கொஞ்சம் தளர்த்தி வரும் ஆண்டிலாவது இந்த துணைக் கருவூலம் அமைவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி வட்டத் தலைநகரங்களிலே ஒரு துணைக் கருவூலம் அமைய வேண்டும் என்பது கொள்கை. அந்த வகையில் உத்தபபாளையம் தனி வட்டமாகப் பிரிந்ததற்குப் பிறகு இந்த உத்தமபாளையத்தில் ஒரு துணைக் கருவூலம் அமைக்கப்பட்டு இருக்கிறது. உத்தமபாளையத்தில் உள்ள கொடுக்கல், வாங்கல் ஆகியவற்றில் பளுவினைக் கணக்கெடுக்கின்றபோது அதைப் பிரித்து அந்த வட்டத்திற்குள்ளே இன்னொரு கருவூலம் அமைப்பதற்கு இப்போது வாய்ப்புக்கூறுகள் இல்லை என்பதன் காரணத்தால் இப்போது புதிய கருவூலம் அமைப்பதற்குரிய அத்தியாவசியம் ஏற்படவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண் 42, திரு. எஸ். ஆசைமணி. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

42—

<u>நன்னிலம் நீதிமன்றம்.</u>

<u>வினா எண். *1552 திரு. எஸ். ஆசைமணி :</u> மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலத்தில் ஏற்கெனவே இயங்கி வரும் சிவில் நீதிமன்றத்தோடு, கிரிமினல் நீதிமன்றத்தையும் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலத்திற்கு குற்றவியல் நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று வழக்காடும் போது மக்களிடமிருந்தோ அல்லது வழக்கறிஞர் சங்கத்திடமிருந்தோ கோரிக்கை எதுவும் பெறப்படவில்லை. எனவே, இது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.





<u>திரு. எஸ். ஆசைமணி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலத்தில் பல ஆண்டுக்காலமாக சிவில் நீதிமன்றம் மட்டும் இயங்கி வருகிற காரணத்தால் நன்னிலம் மற்றும் குத்தாலம் தொகுதியைச் சேர்ந்த பகுதிகளின் மக்கள் நாகப்பட்டினம், திருவாரூர் போன்ற அதிக தூரத்தில் உள்ள ஊர்களுக்குச் செல்ல மிகவும் சிரமப்படுகிற காரணத்தால் வருகிற ஆண்டிலாவது இந்த நீதிமன்றம் பற்றி பரிசீலனை செய்யப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீதிமன்றம் அமைப்பது குறித்து ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உயர்நீதிமன்றத்தினுடைய கிளையோ அல்லது சபார்டினேட் கோர்ட்டோ அல்லது ஸ்பெஷல் கோர்ட்டோ ஆகிய எந்த நீதிமன்றம் அமைக்க வேண்டுமானாலும் அதற்கு அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்குத்தான் உண்டு. அரசுக்குக் கிடையாது. ஆனால் அவர்கள் பரிந்துரை செய்தால் அந்த பரிந்துரையின் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்கமுடியும். எனவே, தயவு செய்து அரசினிடத்தில் நீங்கள் அமைக்க இருக்கிறீர்களா என்று கேட்பதைவிட, உடனடியாக ஒரு கோரிக்கை ரூபமாக அரசுக்கு அனுப்பினால் நான் நீதிமன்றத்திற்கு அனுப்பி ஒப்புதலைப் பெற்று, ஆங்காங்கே தேவைப்படுகிற இடங்களில் நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. சி. ஞானசேகரன், இது தஞ்சை மாவட்டம் நன்னிலம் சம்பந்தப்பட்டது.

<u>திரு. சி. ஞானசேகரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இங்கே நீதிமன்றத்திற்கும் அரசுக்கும் சேர்த்து நாங்கள் கோரிக்கை வைத்தால் அதை அரசு பரிசீலிக்கும் என்று. ஏற்கெனவே எங்களுடைய வேலூர் (குறுக்கீடு) ஏற்கெனவே ஒரு 5 கோடி ரூபாய்க்கு ......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நான் முதலிலேயே சொன்னேன். மூலக்கேள்வியை ஒட்டி அதிலே ஏதாவது துணைக் கேள்வி இருந்தால்தான் கேட்க வேண்டும் என்று.

அடுத்து வினா எண் 43 திருமதி கவிநிலவு தர்மராஜ். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

43—

<u>தண்டத் தீர்வை குறைப்பு</u>

<u>*3359 திருமதி கவிநிலவு தர்மராஜ் :</u> மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 பிப்ரவரி 5

(அ) விவசாயிகள் செலுத்த வேண்டிய தண்டத் தீர்வையை (80 மடங்காக உள்ளதை) குறைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

(அ) மற்றும் (ஆ) :

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் செலுத்த வேண்டிய தண்டத் தீர்வையை தள்ளுவதாக அரசுக்கு உத்தேசம் இல்லை. ஆக அதற்கு இடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது 80 மடங்கு தண்டத் தீர்வை என்று சொல்லியிருக்கிறார்கள். வருவாய்த்துறையினுடைய நிலையாணையின்படி அதாவது ''ரெவின்யூ ஸ்டேண்டிங் ஆர்டர்'' என்பதன்படி 20 மடங்குக்கு மேலே போட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-40

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளிங்கராயன் வாய்க்கால் பாசன விவசாயிகளைப் பொறுத்தவரை பாசன வசதி அனுமதி பெறாத காரணத்தால், இந்தத் தண்டத் தீர்வைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். முறையான பாசனத்திற்கு அரசு அனுமதி அளிக்குமேயானால், இந்தத் தண்டத் தீர்வை என்ற கண்டத்திலிருந்து குறிப்பாக மொடக்குறிச்சி தொகுதி மக்கள் பெருமூச்சு விடக்கூடிய அந்த நல்லதொரு வாய்ப்புக் கிடைக்கும். எனவே, ஏற்கெனவே அரசு சட்ட விதிகளின்படி 1988ஆம் ஆண்டு மோகனூர் பள்ளிபாளையம் வாய்க்காலைச் சார்ந்த, ராஜபாளையம் வாய்க்காலைச் சார்ந்த 7,884 ஏக்கர் முறையற்ற பாசனம் நடத்திக்கொண்டிருந்த பாசனதாரர்களுக்கு சில அனுமதிக்கப்பட்ட நிபந்தனைகளின்பேரில் அதனை முறையான பாசனத்திற்கு உட்படுத்தி அவர்களுக்கு வாழ்வு அளித்திருக்கிறார்கள். அதையே பின்பற்றி இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய பொன்னான ஆட்சியிலே விவசாயத்தையே மூச்சாகக் கொண்டிருக்கக்கூடிய எங்களுடைய தொகுதியினுடைய மக்கள் வாழ்வதற்காகவும், கிராம ராஜ்யம் அது ராம ராஜ்யம் என்பதை நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கின்ற...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வியாகக் கேட்க வேண்டும் அம்மா, கேள்வியாகக் கேளுங்கள். அந்த பதிலையொட்டி உங்களுடைய கேள்வி இருக்க வேண்டும். விரிவாக விளக்கம் போயிற்று என்றால் எப்படி ? நான் 20 கேள்விகள் எடுக்க வேண்டும், ஒவ்வொரு நாளும். என்ன கேள்வி என்பதைக் கேளுங்கள். மொடக்குறிச்சி தொகுதி விவசாயிகள் நிரம்பிய தொகுதி என்பது அமைச்சருக்கும் தெரியும்.



1992 பிப்ரவரி 5]

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; விவசாயப் பெருங்குடி மக்களுடைய தீராதப் பிரச்சினையாக இருக்கக்கூடிய இந்தத் தண்டத் தீர்வையை ரத்து செய்யும்படி, மீண்டும் அதை அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு தண்டத் தீர்வை போட வேண்டும். விவசாயிகளுக்குத் தண்டத் தீர்வை போடுவதனால் விவசாயம் செய்யாமல் இருக்க வேண்டும், தண்டத் தீர்வை போடுவதனால் விவசாயத்திலே நஷ்டத்தை உண்டாக்க வேண்டுமென்று இந்த அரசுக்கு அப்படிப்பட்ட எண்ணம் இருக்க முடியாது. ஆனால், அணையைக் கட்டுகிறபோது அந்த அணையிலே எவ்வளவு தண்ணீர் வரும் என்பதும், எவ்வளவு தேக்கம் இருக்கும் என்பதும் அதற்கு ஆயக்கட்டு எது எது என்பதையும் முதலிலேயே பகிர்வு செய்து அங்கே வருகிற வரத்துக்கு ஏற்றவாறு ஆயக்கட்டுகளை நியமிக்கிறார்கள். அப்படி நியமிக்கப்பட்ட ஆயக்கட்டு அல்லாதவைகளுக்கு தண்ணீர் கொடுக்கிறபோது அதிலே உரிமை இருக்கின்ற ஆயக்கட்டுகளுக்கு தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது. அதற்காகத்தான் அவர்கள் இப்படி தவறு செய்யக்கூடாது, அப்படி வாய்க்காலை வெட்டக்கூடாது. கரையை வெட்டக்கூடாது, அணையைப் போடக்கூடாது என்பதற்காகத்தான் தண்டத் தீர்வை போடுகிறோம். தண்டத் தீர்வை போடுவது என்றால் எடுத்த எடுப்பிலேயே 20 மடங்கு போடுவதில்லை. முதலிலே 3 மடங்கு போடுகிறோம் எச்சரிக்கையாக. மீண்டும் தவறு செய்தால் அதற்குப் பிறகு 5 மடங்கு போடுகிறோம். மீண்டும் செய்தால், 10 மடங்கு போடுகிறோம். அப்புறம் 15 மடங்கு போடுகிறோம். இப்படி போடுவதற்குக் காரணம் அந்த தவறை அவர்கள் செய்யக்கூடாது என்பதற்காகத்தான். அப்படிப் போடப்படுகிறதே ஒழிய தண்ணீர் இருந்தால் கொடுப்பதற்கு இந்த அரசு மட்டுமல்ல எந்த அரசு இருந்தாலும் தண்ணீர் கொடுப்பதற்குத் தயங்காது. இந்த அரசும் தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தண்டத் தீர்வை போட்டதன் நிமித்தம் இதுவரை அரசுக்கு அதிகமாகக் கிடைத்து இருக்கக்கூடிய வருவாய் எவ்வளவு என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்னபடி அரசுக்கு வருமானம் வரவேண்டும் என்பதற்காக விவசாயிகளை கசக்கிப் பிழிய வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதை நான் முதலிலேயே தெரிவித்திருக்கிறேன். அதற்கு

எவ்வளவு பணம் வந்தது, வரவில்லை என்பது முக்கியமான நோக்கம் அல்ல. அவர்கள் அந்தத் தவறுகளை செய்யக்கூடாது என்பது, எங்கே ஆயக்கட்டுகள் இருக்கிறதோ அந்த ஆயக்கட்டுக்கு தண்ணீர் விட வேண்டும் என்பதும் ஆயக்கட்டு இல்லாத நிலங்களுக்குத் தண்ணீர் வழங்குகிறபோது, அதிகாரம் பெற்ற ஆயக்கட்டுகளுக்கு தண்ணீர் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதாலும் இதைத் தடுத்து நிறுத்துவதற்காகவும் தவறு செய்பவர்களுக்கு தண்டனை கொடுப்பதன் மூலமாகவும் தான் தவிர்க்க முடியும். தண்டனைக்காக செய்கிறோமே யொழிய அரசுக்குப் பணம் வரவேண்டும், கஜானாவுக்கு பணம் வரவேண்டுமென்பதற்காக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9—45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தண்டத்தீர்வை எப்படி விதிக்கப்படுகிறது என்கிற விளக்கத்தை இங்கே தெரிவித்தார்கள். நான் பணிவன்போடு கேட்டுக் கொள்வது, தண்டத்தீர்வை விதிப்பது என்கிறபோது, குறிப்பிட்ட அந்தக் கசிவு நீர்ப் பாசனங்களை எடுத்து பயன்படுத்துகின்ற விவசாயிகள்தான் பெரும்பாலாக இருக்கிறார்கள். அங்கே தாசில்தார் போன்ற வருவாய்த் துறை அதிகாரிகளிடத்தில் போய் விவசாயிகள் பலமுறை விண்ணப்பத்திருக்கிறார்கள். கசிவுநீர் தானாக எங்கள் நிலத்திற்கு வந்து சேர்கிறது. அதை நாங்கள் தடுக்க முடியவில்லை. ஆகவே, எங்களையும் ஆயக்கட்டில் சேர்த்து, தண்டத் தீர்வையை ரத்து செய்ய வேண்டும். முறையாக குறிப்பிட்ட தொகையை தண்ணீர் தீர்வையாக விதித்தால் நாங்களும் செலுத்தத் தயாராய் இருக்கிறோம் என்று பலமுறை சொல்லியும் வருவாய்த்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல், காலதாமதம் செய்துகொண்டு வருகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அப்படி விண்ணப்பிக்கின்றவர்களுக்கு உடனடியாக அதற்குரிய ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அதை நன்றாக அறிவார்கள். (சிரிப்பு) விவசாயிகள் கசிவுநீரிலிருந்து பாசனம் செய்கிறதாக உறுப்பினர் இங்கே சொல்கிறபோது குறிப்பிட்டார்கள். ஆனால், வேண்டுமென்றேதான் வருவாய்த்துறை அதிகாரிகள் தண்டத் தீர்வை போடுவதாகவும் இங்கே சொன்னார்கள். அது முற்றிலும் உண்மை அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கசிவுநீரை எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்லிவிட்டு, கரைகளையே வெட்டிவிடுகிறார்கள். அதுமட்டுமல்ல, குறுக்கே அணைகட்டி விடுகிறார்கள். அதற்குப் பின்னால் இருக்கிற விவசாயிகள் அதனால் பாதிக்கப்படுகிறார்கள். அப்படி அவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகத்தான், ஒரு எச்சரிக்கைக்காகத்தான் அரசு ரெவின்யூ ஸ்டான்டிங் ஆர்டரில் நிலையான உத்தரவு போட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டத் தீர்வை என்பது, கோவை, பெரியார் மாவட்டங்களில் பரம்பிக்குளம்—ஆளியாறு பாசனத் திட்டம், லோயர் பவானி பாசனத் திட்டம், காளிங்கராயன் பாசனத் திட்டம் போன்ற திட்டப் பகுதிகளில்தான் போடப்படுகிறது. அதிலே, கசிவுநீர் பாசனத்தை செய்பவர்களுக்கு மட்டும் தண்டத்தீர்வை போடுவதில்லை. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்திலே, புஞ்சை பயிருக்கு நஞ்சைப் பயிர் என்ற ஏக்கர் வாரியாக தீர்வை விதிக்கப்படுவதாலே நஞ்சை அல்லாத பகுதிக்கு தண்ணீர் அங்கே அதிகமாகத் தேங்கி நிற்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, அங்கே நெல் பயிரிட்டால் தண்டத்தீர்வை போடுகிறார்கள். இன்னும் சில பகுதிகளில் கசிவுநீர் ஓடி, அவர்கள் வயல்களில் ஓடும்போது அது தவிர்க்க முடியாமல் அந்தக் கசிவுநீர் பயனற்றுபோகின்றதே என்ற ஆதங்கத்தில் அதை பயன்படுத்தும்போது அங்கே தண்டத்தீர்வை போடுகிறார்கள். இப்படி தண்டத் தீர்வை போடுவதால் விவசாயிகளுக்கு பயிர் செய்து பெருத்த நட்டம் ஏற்படுகிறது. எனவே, இந்தத் தண்டத்தீர்வை என்பதை, ஒரு மடங்கு தீர்வையிலிருந்து, 2 மடங்கு, 3 மடங்கு என்று குறைந்த அளவிலே போட்டு, அதே நேரத்தில். . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் 3ஆவது துணைக் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். நேரடியாக கேள்விக்கு வந்துவிட வேண்டும். தண்டத் தீர்வை என்பது என்ன, கசிவுநீர் என்பது என்ன என்பதை அமைச்சரே சொல்லிவிட்டார்கள். நேரடியாக கேள்விக்கு வாருங்கள்.

திரு. நா. சா. பழனிசாமி : ஏக்கர் வாரியாக பாசன முறையை கொண்டுவந்தால் பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்திலே தண்டத்தீர்வை போடுகின்ற பிரச்சினை இருக்காது. கேரளாவில் இதே ஆளியாறு பாய்கிறது. அங்கே ஒரு ஏக்கர்வாரி பாசனத் தீர்வையைத்தான் வைத்திருக்கிறார்கள். எனவே, இந்தத் தண்டத் தீர்வையை அரசு எடுத்துவிட்டு, ஏக்கர்வாரி முறையையும் எடுத்துவிட்டு, ஒரு மடங்குக்கு பதில் இரண்டு மடங்கு, மூன்று மடங்கு என்கின்ற முறையில் தீர்வையை விதித்தால் தண்டம் என்று தண்டிக்கின்ற ஒரு நிலை வராது. அவர்களும் கட்டுகின்ற வாய்ப்பு இருக்கும். ஏற்கெனவே, இதற்கு முந்திய அரசாங்கங்கள் தண்டத் தீர்வையை தள்ளுபடி செய்திருக்கின்றன. அதையொட்டி இந்த அரசும் தண்டத் தீர்வையை தள்ளுபடி செய்து உதவுமா என அறிய விரும்புகிறேன்.

[1992 பிப்ரவரி 5

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கசிவுநீருக்குத் தண்ணீர் வரியை எங்கே விதிக்கிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னால், அதைப் பற்றி சர்வே நம்பரை குறிப்பிட்டுச் சொன்னால், அதை அரசு ஆராயும். அவர்கள் சொல்லுகிறபோது, கேரளாவில் பயிர்வாரியாகதான் விதிக்கிறார்கள் என்று சொல்லிவிட்டு, இங்கே மட்டும் நிலத்து வாரியாக விதிக்கிறார்கள் என்று சொன்னார்கள். நில வாரியாக விதிக்க முடியாது. நஞ்சை இருக்கிறது, புஞ்சை இருக்கிறது. நெல் போடுகிறோம், கரும்பு போடுகிறோம், அதிலே முதலில் ஆயக்கட்டை பிரித்து எடுக்கிறபோது, எந்தெந்தப் பகுதிகளில் பயிர் இட வேண்டும், நஞ்சை, புஞ்சை என்று சொல்லிவிடுகிறோம். தண்ணீர் 3 மாதம் கொடுக்கிறதா, 5 மாதம் கொடுக்கிறதா, இல்லை 6 மாதம் கொடுக்கிறதா என்றும் சொல்லப்படுகிறது. அதற்கு ஏற்றாற்போல்தான் தண்ணீர் தீர்வை போடப்படுகிறது. அதை மீறி செய்கிறபோதுதான், புஞ்சையை நஞ்சையாக்குகிறபோது தான் சங்கடம் ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் இந்தமாதிரி நீர் எடுக்கும்போது அவர்களுக்கு தண்டத் தீர்வை போடுகிறோம். வாய்க்காலை எல்லாம் உடைக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படி வாய்க்காலை உடைக்கும்போது, நிச்சயமாக அது போலீஸ் கேஸ் ஆகிவிடும். அப்படி ஏதாவது போலீஸ் கேஸ் ஆகி இருக்கிறதா ? அதன் அடிப்படையில்தான் அந்தத் தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலீஸ் கேஸ்களைப் போட்டு, யாரையும் தண்டிக்க வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. அப்படி நடைபெறாமல் இருக்க வேண்டுமென்பது தான் இந்த அரசின் எண்ணம். அதற்காகத்தான் தண்டத் தீர்வை போடுகிறோம். தண்டத் தீர்வை போட்டாலே, விவசாயிகள் அதற்குக் கட்டுப்படுவார்கள் என்று நம்புகிறோம். எனவே அதற்காக கிரிமினல் வழக்கு போட வேண்டியதில்லை என்று இந்த அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கோ நதி உற்பத்தியாகிறது. 300 400 மைல்களுக்கு அப்பால் பாசனம் செய்கிறோம். அப்படி தண்ணீர்



1992 பிப்ரவரி 5]

போகும்போது பெர்கொலேஷன் வாட்டர் என்ற முறையில் பக்கத்திலுள்ள நிலங்களுக்கு அந்தத் தண்ணீர் வருகிறது. அந்த நிலங்களிலே புஞ்சை விவசாயமும் பண்ண முடியாமல், நஞ்சை விவசாயமும் பண்ண முடியாமல் விவசாயிகள் மிகுந்த சிரமத்தை அடைகிறார்கள். அவர்கள் தண்ணீரை எடுத்துப் பாய்ச்சவில்லை. இப்படிப்பட்ட நிலைமையில் உள்ள பகுதிகளிலாவது தண்டத் தீர்வை இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நீங்கள் தண்ணீரைக் கட்டுப்படுத்துங்கள், நாங்கள் விவசாயம் செய்யமாட்டோம். தண்ணீரைக் கட்டுப்படுத்தாத நிலையில், அந்த இடங்களில் தண்டத் தீர்வை போடுவதை நிறுத்தி வைக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலேயே தெளிவாக, விளக்கமாகப் பதில் சொல்லிவிட்டேன். கசிவு நீருக்கு இந்த அரசு தண்டத் தீர்வையோ, வேறு எந்தத் தீர்வையோ போடவில்லை. அப்படி எந்த இடம், எந்த சர்வே நம்பர், எந்த மாவட்டம் அல்லது வட்டம் என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னால் அதை இந்த அரசு ஆராயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கசிவு நீருக்குத் தண்டத் தீர்வையோ, வேறு எந்தத் தீர்வையோ போடப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்,. கோவை மாவட்டத்திலும், பெரியார் மாவட்டத்திலும், பரம்பிக்குளம்-ஆளியார் பாசனத் திட்டத்தில் கசிவு நீரால் பயன்பெறும் கிணறுகள் என்று சொல்லி, கிணற்றுப் பாசனத்திற்குத் தீர்வை விதிக்கப்படுகிறது. அப்படி தீர்வை விதிக்கப்படுதவதோடல்லாமல் அவற்றுக்குத் தண்டத் தீர்வையும் விதிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட தீர்வைகளையும், தண்டத் தீர்வைகளையும் இந்த அரசு விலக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்டவைகளை இந்த அரசு ஆராயும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். நானும் ஒரு விவசாயிதான். எனக்கும் நன்றாகத் தெரியும். சில நேரங்களில் வாய்க்காலிலிருந்து கேணிகளுக்கு பைப்புகளைப் போட்டுவிடுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 44, திரு. கி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

44—

## பட்டுக்கோட்டையில் பெண்கள் பொறியியல் கல்லூரி.

4815—திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை, மன்னார்குடி, ஒரத்தநாடு, முத்துப்பேட்டை, அறந்தாங்கி போன்ற இடத்திலுள்ள பெண்கள் பயன்பெற வசதியாக பட்டுக்கோட்டையை மையமாக வைத்து ஒரு பெண்கள் பொறியியல் கல்லூரி அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பரிசீலனையில் இல்லை.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை, மன்னார்குடி, ஒரத்தநாடு, முத்துப்பேட்டை, அறந்தாங்கி போன்ற இடங்களிலுள்ள பெண்கள் பயன்பெற வசதியாக பட்டுக்கோட்டையை மையமாகக் வைத்து ஒரு பெண்கள் பொறியியல் கல்லூரி அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள், அப்படியானால் அடுத்த ஆண்டிலாவது அது தொடங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை என்பதோடு இப்படிப் பொறியியல் கல்லூரிகளை அரசுத் துறையிலே தொடங்குகின்ற கருத்து ஏதும் இப்போது பரிசீலனையில் இல்லை. குறிப்பாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டிருக்கிற பட்டுக்கோட்டை, மன்னார்குடி, ஒரத்தநாடு, முத்துப்பேட்டை, அறந்தாங்கி போன்ற பகுதிகளுக்குப் பயனுள்ள வகையில் தஞ்சையை ஒட்டி இப்போது இரண்டு பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. வல்லத்திலே ஒரு பொறியியல் கல்லூரியும், பெண்களுக்கென்று தந்தை பெரியார் மணியம்மை நூற்றாண்டு விழா பொறியியல் கல்லூரியும் தஞ்சை நகரை ஒட்டி இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியில் பொறியியல் கல்லூரி தேவையில்லை என்றுதான் தெரிகிறது.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் யாராவது அந்தக் கல்லூரியை ஆரம்பிக்க முன்வந்தால் அரசு அதை அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரி மற்றும் கலைக் கல்லூரிகள் போன்று உயர் கல்வியைத்தரும் கல்லூரிகளை அரசு அதிக முதலீடு செய்து ஆரம்பிப்பதைவிட, கல்வித் துறையிலே நாட்டமுள்ள, மக்களுக்குப் பணியாற்ற வேண்டுமென்ற உணர்வோடு நல்ல வசதியுள்ளவர்கள் அடிப்படை ஆதாரங்களை எல்லாம் ஏற்படுத்துகின்ற சூழ்நிலையில், எந்தப் பகுதியில் கல்லூரி தேவைப்படுகிறதோ அந்தப் பகுதியில் கல்லூரி அமைக்க முன் வந்தால் அதை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 45, திரு. சோ. இராசாராமன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

45—

## வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கம்ப்யூட்டர் வசதி.

*2627— திரு. சோ. இராசாராமன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகப் பணிகளை கம்ப்யூட்டர் மயமாக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு செய்யப்பட உள்ளன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மைய அரசின் உதவியோடு கீழ்க்கண்ட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகப் பணிகளை, கம்ப்யூட்டர் மூலம் ஆற்ற கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் தற்போது உள்ளது :

1. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், மதுரை.
2. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், வேலூர்.
3. தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை.
4. தொழில் நுட்ப மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், மதுரை.
5. தொழில் நுட்ப மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை.

முற்பகல் 9-55

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண் 46, திருமதி கே. மரியம்உல் ஆசியா மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

46—

## கருச்சிதைவு தடைச் சட்டம்.

*2383 <u>திருமதி கே. மரியம்உல் ஆசியா :</u>

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தாயின் வயிற்றில் இருக்கும்போதே குழந்தை பெண்ணாக இருந்தால் கருச்சிதைவு செய்துகொள்ள பலர் முனைவதால் பெண் சிசு கொலையைத் தடுக்க சட்டம் கொண்டுவரப்படுமா ?

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நாடாளுமன்றத்தில் இதற்கான தடைச்சட்டம் அகில இந்திய அளவில் கொண்டுவரப்படவுள்ளது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் இது எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தும் வகையில் அமையும்.

• <u>திருமதி கே. மரியம்உல் ஆசியா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக ஸ்கேன் எனப்படுகின்ற கருவியின் மூலம் எடுத்துப் பார்க்க வசதியில்லாதவர்கள் குழந்தை பிறந்தும் பெண் குழந்தையாக இருந்தால் அந்தக் குழந்தைக்கு கள்ளிப்பால் மற்றும் நெல் மணிகளைக் கொடுத்து கொலைசெய்து விடுகிறார்கள். அதைத் தடுப்பதற்கும் அதற்குக் காரணமாக இருப்பவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> **

இப்படி. (கள்ளிப்பால்) வைத்துக் கொன்று விடுகிறார்கள் என்று வருவது சரியல்ல. பொதுவாக இப்படி ஒரு நிலைமை இருக்கிறது என்று இருக்கலாம். ** அந்த சொற்றொடர்கள் நீக்கப்படுகின்றன.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தை, சிசுவாக கருவில் இருக்கிறபோதே அழிப்பதைத் தடுப்பதற்காகத்தான் இப்போது அந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று ஏற்கெனவே சட்டமன்றத்தில் ஒரு கருத்து வந்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுகுறித்து தடுப்பதற்கான சட்டம் கொண்டு வரப்படும் என்று தெரிவித்தார்கள். குழந்தை பிறந்த பின்னாலே அந்தக் குழந்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





தையைக் கொன்று விடுகிறார்கள் என்று சொன்னால் அதற்கென்று உரிய சட்டங்கள், வழிமுறைகள் இருக்கின்றன. அதன் மூலம் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகளை அரசாங்கம் நிச்சயமாக செய்யும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திருமதி ஜீனத் சர்புதீன்.

<u>திருமதி ஜீனத் சர்புதீன் :</u> மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை எப்படி நிறைவேற்ற முடியும் என்பதுதான் என்னுடைய கேள்வி. ஏனென்றால் ஸ்கேனை நிறுத்திவிட்டால்; ஸ்கேன் மூலம் அந்தக் குழந்தை எப்படி வளருகிறது, என்ன பொசிஷனில் இருக்கிறது, அல்லது வரும் வாயிலில் நஞ்சு அடைத்துக்கொண்டிருக்கிறதா என்பதைக் கண்டறிந்து, குழந்தையையும் காப்பாற்றும் வேலைகளை அவர்கள் அதன்மூலம் செய்கிறார்கள். மேலும், இன்னொன்றையும் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படியென்றால் இதற்கு சட்டத்தின் மூலம் தண்டனை கொடுத்தாலும், அந்தத்தண்டனையை டாக்டர்களுக்கும் கொடுப்பீர்களா, அல்லது பெற்றோர்களுக்குக் கொடுப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன். ஆப்பரேஷனை பெற்றோர்கள் ஒப்புதலுடன்தான் செய்கிறார்கள். ஆகவே, இதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் ஒரு விவரத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று கருதுகிறேன். ஸ்கேனை நிறுத்துவது என்ற எண்ணம் அரசாங்கத்திற்குக் கிடையாது. ஸ்கேன் என்பது வேறு, ஆம்னியோ சென்டசிஸ் என்பது வேறு. கருவிலே இருக்கின்ற குழந்தை ஆணா, பெண்ணா என்பதை அறிய செய்யப்படும் சோதனைக்குப் பெயர்தான் '' ஆம்னியோ சென்டசிஸ் ''. எனவே, அந்த முறைதான் நிறுத்தப்படும் என்று அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்திருக்கிறது. '' ஸ்கேன் என்பது, எக்ஸ்-ரே போன்ற ஒரு கருவியைப் பயன்படுத்தி, உள்ளே என்ன இருக்கிறது என்பதைப் படம் பிடிப்பதாகும். ஆகவே, ஆம்னியோ சென்டசிஸ் என்பது வேறு.

கர்ப்பப் பைக்குள் ஒரு ஊசியை செலுத்தி நீரை வெளியிலே எடுத்து, சோதனை செய்து அதன் மூலம் கருவிலே இருக்கின்ற சிசு ஆணா, பெண்ணா என்று அறிவதுதான் '' ஆம்னியோ சென்டசிஸ் '' என்ற முறையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆம்னியோ சென்டசிஸ் என்ற முறையைத்தான் மருத்துவர்கள் பயன்படுத்திவருகிறார்கள் என்று பரவலாக புகார்கள் வந்திருக்கின்றன. இந்த ஆம்னியோ சென்டசிஸ் சோதனை மூலம் குழந்தை ஆணா, பெண்ணா என்பதைக் கண்டறிந்த பின்பு, கருவைக் கலைத்து விடுகிறார்கள். எனவே, ஸ்கேனை நிறுத்தினால் மருத்துவர்கள் உள்ளே இருக்கிற கோளாறுகளை

எப்படி அறிவார்கள் என்ற கேள்விக்கே இடமில்லை. ஸ்கேனை. நிறுத்துகிற எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண் 47, திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

47—

## கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் சார்பில் தொழில்நுட்பக் கல்லூரி திறத்தல்.

*3343—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேரன்மகாதேவி தொகுதி கோபாலசமுத்திரத்தில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் தொழில்நுட்பக் கல்லூரி (Polytechnic) தொடங்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும் ?

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 10—00

<u>திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவியில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பாலிடெக்னிக் ஒன்று அமைக்க முந்தைய சட்டமன்ற உறுப்பினர் பெரிதும் முயற்சி எடுத்து அதற்கான இடங்கள் எல்லாம் ஆர்ஜிதம் செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருந்தபோதிலும் பின்னர் அது திராவிட முன்னேற்றக் கழக அரசால் கைவிடப்பட்டதாக கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து அறிந்தேன். அதனால்தான் இதை வினாவாக சட்டமன்றத்திற்கு அனுப்பினேன். சேரன்மகாதேவி சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில் அதில் கிடைத்த வெற்றி, எனக்குக் கிடைத்த வெற்றியல்ல, மாண்புமிகு புரட்சித் தலைவிக்குக் கிடைத்த வெற்றி. ஆகவே



அதை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய சொந்தத் தொகுதியாக எண்ணி, எந்தக் கல்லூரியும் சேரன்மகாதேவி தொகுதியில் கட்டபொம்மன் கழக சார்பில் அமைக்கப்படாத காரணத்தால், அமைக்க இருக்கின்ற அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி என்னுடைய தொகுதிக்கு அதை புரட்சித் தலைவி அவர்கள் வழங்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதைச் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவியில் கிடைத்த வெற்றி புரட்சித் தலைவிக்குக் கிடைத்த வெற்றி என்று குறிப்பிட்டார்கள், தமிழகத்திலே கிடைத்திருக்கின்ற அத்தனை வெற்றிகளும் புரட்சித் தலைவிக்கு கிடைத்த வெற்றியே தவிர வேறு யாருக்கும் கிடையாது என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). ஆகவே, சேரன்மகாதேவியைப் பொறுத்தவரையில் 30 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய அரசு நடவடிக்கையை மேற்கொண்டது. அந்த நிலத்தை அவர்கள் தருவதற்குத் தயக்கம் காட்டிய காரணத்தால் அது பரிசீலனையில் இல்லை என்று தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர் 30 ஏக்கர் நிலங்களை ஆர்ஜிதம் செய்து கொடுப்பாரேயானால், அல்லது அந்த நிலத்தைக் கொடுக்க யாராவது முன் வருவார்களேயானால், அவர்கள் அதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முன்வருவார்களேயானால் 1992–93 ஆம் ஆண்டிலேயே பாலிடெக்னிக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. இரா. புது நயினார் ஆதித்தன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உடனடியாகச் சென்று 30 ஏக்கர் அல்ல 50 ஏக்கர் நிலத்தைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை இந்த நடப்பாண்டில் நடைமுறைப்படுத்தி, புரட்சித் தலைவியின் தொகுதியான சேரன்மகாதேவியை வளம் பெறச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்ததற்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இந்த ஆண்டே செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறார்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக வருகின்ற நிதியாண்டிலேயே அதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. பீட்டர் அல்போன்ஸ்.

[1992 பிப்ரவரி 5

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 30 ஏக்கர் வழங்கினால் சேரன்மகாதேவி தொகுதிக்கு மட்டும்தானா? இல்லை தென்காசி தொகுதியிலும் 30 ஏக்கர் வழங்கினால் கல்லூரியை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி சேரன்மகாதேவியைப் பொறுத்ததாகும். ஆகவே சேரன்மகாதேவிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 48. திரு. வி. கே. சின்னசாமி. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்,

48—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்தல்,

*4885— திரு. வி. கே. சின்னசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் பிரிக்கும் கழகத்திற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பெயர் சூட்ட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தில்லைநாயகம் குழுவின் பரிந்துரையை ஏற்று திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்க அரசு கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளது.

(ஆ) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் ஆகிய இரண்டையும் பிரித்து காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம் செயல்பட நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள் சென்ற ஆண்டிலேயே அதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டிருப்பது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கும் உத்தேசம் உள்ளதா என்பது



1992 பிப்ரவரி 5]

தான். திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பேருந்துகள் இருப்பதால், குறிப்பாக நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதால், நிர்வாகத்தை கவனிக்கக்கூட முடியவில்லை என்று சொல்லுவதால் இதை இரண்டாகப் பிரித்து என்றைக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நம்பிக்கையைப் பெற்ற மக்கள் வாழ்கின்ற பெரியார் மாவட்டத்தில் ஒரு தலைமை இடத்தை அமைத்து அங்கே தனியாக ஒரு போக்குவரத்துக் கழகத்தை நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியைப் பெற்றெடுத்த தெய்வம் அன்னை சந்தியாவினுடைய பெயரிலே உருவாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த எனது தாயார் பெயரில் ஒரு போக்குவரத்துக் கழகம் பெயரிடப்படுவதை நான் விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர் அவர்களோடு இரட்டைக் குழல் துப்பாக்கிபோல இயங்கி வந்த எங்களுடைய அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களுடைய பெயரை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைப் பிரிக்கிறபோது அதற்கு வைக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண், 49. திருமதி செ. சுந்தராம்பாள், திரு. இரா. பழனிசாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

49—

மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில்லை இயங்கச் செய்தல்.

*258—திருமதி. செ. சுந்தராம்பாள் ;

திரு. இரா. பழனிசாமி :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், மேட்டூரில் ஏழு ஆண்டுகளாக மூடிக்கிடக்கும் மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில்லை மீண்டும் இயங்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1992 பிப்ரவரி 5

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும் ?

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் மேட்டூரிலுள்ள மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் ஆலையினை திறப்பதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்ததன் விளைவாக ஆலை மீண்டும் கூட்டுறவு நிர்வாகத்தின் கீழ் செயல்பட துவங்கியுள்ளது. நிதி பற்றாக்குறை காரணமாகதான் ஆலை முழுவதும் செயல்பட இயலவில்லை.

<u>திருமதி செ. சுந்தராம்பாள் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தலின்போது எனது தொகுதிக்கு வருகை புரிந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஏழு ஆண்டுகளாக மூடி கிடக்கும் மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் ஆலையைத் திறந்து, 2,606 தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்போம் என்று கூறினார்கள். எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்த மில்லை முழுமையாகத் திறந்து, தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க ஆவன செய்வார்களா என்று பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நினைத்ததை நடத்தியே முடிக்கிற தகுதியினால், நினைத்து நடத்தி முடிக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. ஆனால், வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. நீதிமன்றத்திற்குள் நிர்வாகம் தலையிடுகிற உரிமை இல்லை. அத்தகைய அரசாக தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு இல்லையென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. இரா. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் பியர்ட்சல்லாக இருந்த அந்த நிர்வாகம், மேட்டூர் டெக்ஸ்டைல்சாக மாறியபின் அந்த மில்லை நிர்வாகத்தினர் நலிவடையச் செய்துவிட்டனர். அந்தப் பகுதியில் இருக்கிற அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்கிற ஆண்களுக்கு. டாக்டர்களுக்கு கூட பெண் கொடுக்காமல் பெண் கொடுக்க முன்வந்த நிலை இருந்தது. இன்று அவர்கள் எல்லாம் நடுத்தெருவில் நிற்கிறார்கள். மண் சுமக்கிறார்கள். நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் காலத்தில் இதற்கு விரைவில் ஒரு தீர்வு காணப்படுமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நேற்று கூட ஒரு இனிய செய்தியை இந்த அவையில் அறிவித்தார்கள். பி. அண்ட் சி. மில் விரைவில் திறக்கப்படும் என்ற நல்ல செய்தியை இங்கே தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதுபோல் விரைவில் இந்த மில்லை திறப்பதற்கான நல்ல செய்தியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1992 பிப்ரவரி 5]

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில் என்பது மிகவும் சிக் யூனிட். அது மிகவும் நலிந்த நிலையில் இருக்கிறது. அதை மீண்டும் திறப்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. சட்டப்பிரச்சினைகளும் இருக்கின்றன. இருப்பினும், அந்த மில்லின் ஒரு பகுதி இப்போது இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளாக மூடிக்கிடந்த ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலையை இந்த அரசு எடுத்துக்கொண்ட தீவிர முயற்சிகளின் காரணமாக அண்மையில்தான் திறக்க ஏற்பாடு செய்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தொழிற்சாலை இப்போது செயல்பட்டு கொண்டிருக்கிறது. அதைப் போலவே மீண்டும் திறக்கவே முடியாதோ என்று அனைவரும் ஐயுறும் அளவுக்கு நலிந்து போயிருந்த பி. அண்ட் சி. மில்லையும் திறக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) வருகிற தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று பி. அண்ட் சி. மில் திறக்கப்படும் என்று நம்புகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-10

அதைப்போலவே மேட்டூர் டெக்ஸ்டைல்சையும் திறக்க வேண்டும் என்ற ஆசை இந்த அரசுக்கு இருக்கிறது. அதிலுள்ள பிரச்சினைகளைப் பரிசீலித்து வருகிறோம்; ஆராய்ந்து கொண்டு வருகிறோம். கூடிய விரைவிலேயே மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில்லைத் திறப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் .

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து தீபாவளி சமயத்தில் கருணைத் தொகையாக 400 ரூபாய் வழங்கப்பட்டது. அதில், மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில்லைச் சார்ந்த தொழிலாளர்களுக்கும் அந்தத் தொகை வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர், அம்மையார் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, 2,606 பேர்களுக்கும் தரப்படவில்லை. 431 நபர்கள் விடப்பட்டு, 2,175 தொழிலாளர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு இருக்கிறது. அதற்குக் காரணம், நிர்வாக இயக்குநர் தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த 431 பேர்களில், பலர் இறந்துவிட்டார்கள் என்றும், பலர் ஓய்வு பெற்றுவிட்டார்கள் என்றும், தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தவறான தகவலின் அடிப்படையில் குறைந்த நபர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், தொழிலாளர் துறையின் அரசு ஆணை எண் 1060,

தான் : 22-10-1991-ன்படி, இறந்துவிட்ட தொழிலாளர்களுக்கும் தரவேண்டும் என்று இருக்கிறது. எனவே, மீண்டும் இதைப் பரிசீலித்து பாதிக்கப்பட்ட அந்த 431 தொழிலாளர்களுக்கும் இந்தக் கருணைத் தொகை கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா? ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தீபாவளியை முன்னிட்டு தமிழகத்தில் நலிந்து போய் இருக்கின்ற நிலையில் மூடிக்கிடக்கிற அனைத்து ஆலைகளின் தொழிற்சாலைகளின் பணியாளர்களுக்கும், கருணைத் தொகை, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டது. ஏறத்தாழ 21 ஆயிரம் தொழிலாளர்களுக்கு இந்தக் கருணைத் தொகை வழங்கப்பட்டது. பி. அண்ட் சி. மில்லைச் சார்ந்த 8 ஆயிரம் பேர்களுக்கும், இன்னும் தமிழகத்திலே உள்ள அனைத்து ஆலைகளின் பணியாளர்களுக்கும் இந்தத் தொகை வழங்கப்பட்டது. அப்படியிருக்கும்போது, 430 பேர்களுக்கு கருணைத் தொகை வழங்கக்கூடாது என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. நாங்கள், அதைப்பற்றி விசாரித்தபோது, இந்த 430 பேர்களும் ஓய்வு பெற்றுவிட்டார்கள் என்ற தகவல்தான் எங்களுக்குக் கொடுக்கப்பட்டது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியது உண்மையானால், அதை ஆராய்ந்து அவர்களுக்கும் கருணைத் தொகை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 50, திருமதி ஏ. டி. சரஸ்வதி. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

50—

## தாளவாடி மின்நிலையம்.

*3448 திருமதி அ. தி. சரஸ்வதி;

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சத்தியமங்கலம் தொகுதி, தாளவாடி ஊராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள மின்நிலையம் ( Power House ) அமைக்கும் திட்டம் எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடியில் அமையவிருக்கும் 110/11 கிலோ வாட் துணை மின் நிலையம் எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு உள்ளது. இத்துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணி 1994-95 ஆம் ஆண்டு தொடங்கவிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.





திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகால இருண்ட ஆட்சியில் நலிந்துபோன மலைவாழ் மக்களின் வாழ்க்கை முன்னேற, 1½ கோடி ரூபாய்த் திட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காங்கேயத்திற்கு வருகை தந்த தினம், இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்கள். அங்கு வாழும் மலைவாழ் மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள். வீதிகளில் விளக்கு வசதிகள் சரிவர இயக்கப்படவில்லை. இதனால், இந்தத் திட்டத்தை 1993 ஆம் ஆண்டிலாவது, தொடங்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடியில் மின் சீரமைப்பிற்காக, உடனடியாக கஜவட்டி என்கிற இடத்திலே, 110/11 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம், 1992 ஆம் ஆண்டு நிறுவி இயக்க முடிவு எடுக்கப்பட்டு உள்ளது. அதன் மூலம் தற்போது அந்தப் பகுதியில் உள்ள மின் தடைகள், மின் கோளாறுகள், குறைந்த அழுத்தம் எல்லாம் சீர்செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது தவிர, 1995ஆம் ஆண்டு எடுக்க இருக்கிற திட்டத்திற்கு, வனப்பகுதியிலே அது செல்கின்ற காரணத்தினால், மத்திய அரசினுடைய அனுமதி பெறவேண்டியிருப்பதாலே, அதிலே சில சிக்கல்கள் இருக்கிற காரணத்தினாலேதான், இந்தத் திட்டம் 1994-95 -லே தொடங்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே, அந்த அனுமதி உடனடியாக மத்திய அரசிடமிருந்து கிடைத்தவுடன், அதற்கான முழு மூச்சுடன், புரட்சித் தலைவியினுடைய அரசு ஏற்பாடுகளைச் செய்து, அந்தத் திட்டமும் தொடங்கப்படும். தற்

முற்பகல் 10-15

போது தாளவாடி பகுதிக்கு, 1992ஆம் ஆண்டிலே கஜவட்டியிலே தொடங்குகின்ற இந்த திட்டம் அந்தப் பகுதியினுடைய மின் திறனை அதிகப்படுத்தி அந்தப் பகுதியை மேம்பாடு செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 51, திரு. செ. பெருமாள். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

51—

## கரியக்கோயில் நீர்த்தேக்க அணை.

*3989—திரு. செ. பெருமாள் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 பிப்ரவரி 5

(அ) சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் பாப்பிநாயக்கன் பட்டியில் கட்டப்படும் கரியக்கோயில் நீர்த்தேக்க அணை எப் போது கட்டி முடிக்கப்படும் ?

(ஆ) அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இந்தத் திட்டம் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் பாப்பிநாயக்கன்பட்டியில் கரிய கோயில் நீர்த்தேக்கத் திட்டம் புரட்சித் தலைவர் ஆட்சியில், ஏழை—எளிய விவசாயிகள் பயன்பெறும் வகையிலே ஆரம்பிக்கப் பட்டது. இந்த அணையானது 7, 8 ஆண்டுகள் ஆகியும் இன்னும் கூட முடிக்கப்படாமல் உள்ளது. புரட்சித் தலைவர் ஆட்சியில் இந்த அணை ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் புரட்சித் தலைவியி னுடைய ஆட்சியில் மீண்டும் ஆரம்பித்து முடித்துக் கொடுத்தால் அந்தப் பகுதியிலே இருக்கிற ஏழை எளிய விவசாயிகள் பயன் பெறுவதற்கு வசதியாக இருக்கும். எனவே, மார்ச் மாதம் என்பதை விட, மிக விரைவிலே முடிப்பதற்கு இந்த அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்ட உடனே இந்தத்திட்டத்தை உடனடியாக முடிக்க வேண்டுமென்று உத்திரவிடப்பட்டு அந்தத் திட்டம் காலதாமதம் ஆனதற்கான காரணங்களையும் ஆய்ந்து உடனடியாக மிக வேகமாக இந்தத் திட்டத்தை நாங்கள் செயலாற்றிக்கொண்டிருக் கிறோம். இந்தத் திட்டம் கால தாமதம் ஆனதற்கான காரணங் களை நான் சொல்லியாக வேண்டும். இதற்காக வனத்துறை யிடம் அனுமதி வாங்க வேண்டிய காரணத்தினாலே, மைய அரசினுடைய அனுமதி பெறுவதிலே கொஞ்சம் காலதாமதம். அதற்குப் பின்னாலே இந்த நீர்த்தேக்கப்பகுதியிலே இருக்கிற மண் பகுதி கூழாங் கற்களாக அமைந்துவிட்ட காரணத்தாலே அந்த திட்டத்தை நிறைவேற்றுவதிலே சிக்கல்கள் இருந்தன. ஆகவே தான் இந்தத் திட்டம் கால தாமதம் ஆகியது. என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே உடனடியாக அங்கே அதிகாரிகளையெல்லாம் அதிகமாக நியமித்து, இந்த 7, 8 மாதத்திற்குள்ளேயே பணி முடுக்கிவிடப் [illegible] நிச்சயமாக 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிந்துவிடும். 1992 மார்ச்: என்பதில் இன்னும் ஒரு மாத



1992 பிப்ரவரி 5]

காலம்தான் இடையிலே இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து, நிச்சய மாக அது முடிக்கப்பட்டு விடும் என்பதைத்தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 52, திரு. ச. காந்திராஜன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

52—

வேடசந்தூரைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குக் குடிநீர்.

*275—திரு. ச. காந்திராஜன் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆத்தூர் அணைக்கட்டு குடிநீர்த் திட்டம் மூலம் வறட்சிப் பகுதியான வேடசந்தூர் நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆத்தூர் அணைக்கட்டிலிருந்து வறட்சிப் பகுதியான வேடசந்தூர் நகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் எதுவும் தற்சமயம் ஆய்வில் இல்லை. ஆனால் உலகவங்கி நிதி உதவி யுடன் வேடசந்தூர் குடிநீர்த்துணைத் திட்டத்தின் அனைத்து பணிகளும் 11—6—1989-இல் முடிக்கப்பெற்று முழுப்பயனுக்கு கொண்டுவரப்பட்டுவிட்டது.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் வறட்சிப் பகுதி என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நிச்சயமாக தெரியும். அந்த அள விலே தான் அங்கே எதிர்காலத்திலே ஏற்படுகின்ற பிரச்சினை களையெல்லாம் கருத்திலே கொண்டு அந்தத் திட்டத்தை அமைச்சர் அவர்களிடம் கேட்டிருந்தேன். ஆத்தூர் அணைக் கட்டிலேயிருந்து ஏற்கெனவே திண்டுக்கல்லிலே கலெக்டர் அலுவலகம் வரை பைப் லைன் போடப்பட்டு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. எனவே அதற்கு அருகாமையிலே இருக் கிறது என்ற காரணத்தினாலேயும், இந்தத்திட்டத்திற்கு அதிகம் செலவாகாது என்கிற நோக்கத்தோடும் இந்தத்திட்டத்தைப்பற்றி நான் கேட்டிருந்தேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டிலாவது அதை கருணை உள்ளத்தோடு பரிசீலிப்பார்களா என்பதை இந்த அவையின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[1992 பிப்ரவரி 5

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகிற ஜனத் தொகையை கணக்கில் இட்டு வேடசந்தூர் மற்றும் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளுக்கு குடிதண்ணீர் அளவை அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தின்கீழ் குடகனாறு அணையிலிருந்து தண்ணீர் வேண்டுமெனப் பொதுப்பணித்துறையை குடிநீர் வாரியத்தின் அலுவலகத்தின் சார்பாக கோரிக்கை விடுத்திருக்கிறோம். அந்த கோரிக்கைக்கு அனுமதி அளித்தவுடன் அது பற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 53. டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

53—

## வைகை ஆற்றில் சாக்கடை நீர் கலத்தல்.

*2253—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குடிநீர் பெறப்படும் வைகை ஆற்றில் பரமக்குடி நகராட்சிப் பகுதிகளில் சாக்கடை நீர் கலப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: பேரவைத் தலைவரவர்களே,

(அ) ஆம், வந்துள்ளது.

(ஆ) வைகை ஆற்றின் கரையை ஒட்டி 5 கி.மீ. நீளத்திற்கு தடுப்பு சுவர் கட்டுவது குறித்து தமிழ்நாடு குடிநீர் வாரியத்திடம் திட்டம் தயாரிக்க கோரிக்கை விடப்பட்டுள்ளது. அது விரைவில் முடிக்கப்பட்டு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

முற்பகல் 10-20

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி 72,000 ஜனத்தொகையைக் கொண்ட பெரிய நகராட்சியாகும். இந்த 72,000 ஜனத்தொகை மட்டுமின்றி இளையாங்குடி போன்ற நகர்களுக்கும் பரமக்குடி நகராட்சிப் பகுதியிலிருந்துதான் குடிதண்ணீர் பெறப்படுகின்றது. அவ்வாறு இருக்கும்போது ஒப்பன் ட்ரெய்னேஜ் சரியாக இயங்காத காரணத்தாலும் முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜ்



1992 பிப்ரவரி 5]

காலத்திலேயே நிறைவேற்றப்பட இருந்த பாதாள சாக்கடைத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படாத காரணத்தினாலும் பரமக்குடி நகராட்சியின் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக எஸ். எஸ். கோவில், முத்தானந்தம் பள்ளித்துறை.....................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுந்தரராஜ் கேள்விக்கு வரவேண்டும். நீங்கள் பெருந்தலைவர் காலத்திலிருந்து கேள்வி நேரத்தில் பேசுவது சரியாக வராது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: போன்ற பகுதிகளில் சாக்கடை ஆற்றில் கலப்பதினால் ஆற்றிலிருந்து குடிநீர் பெறப்படும் இடங்களில் காலரா, மஞ்சள் காமாலை போன்ற வியாதிகள் பரவுவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. ஆகவே, நோயைக் கட்டுப்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது அரசு, மருத்துவ நலத்திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகின்ற இந்தக் காலத்தில் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து சாக்கடை, ஆற்றில் குடிநீர் பெறப்படும் இடங்களில் கலக்காமல் இருப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, இந்த பரமக்குடி நகராட்சிப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் தொகை 1 இலட்சத்திற்கும் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே பாதாள சாக்கடைத் திட்டத்தை அமைப்பதற்கு அரசால் இயலாது என்ற நிலையில் வைகை ஆற்றில் கரையை ஒட்டி சுமார் 5 கிலோ மீட்டர் நீளத்திற்கு தடுப்புச் சுவர் கட்டுவது குறித்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் திட்டம் தயாரிக்கும்படி கோரப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் கழிவுநீர் வைகை ஆற்றிற்குச் செல்கிற வாய்ப்பு இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்ற பல்வேறு பிரச்சினைகள் இதன்மூலம் தீர்க்கப்படும் என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண், 54, டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

54—

## கன்னியாகுமரியில் மாவட்ட கூட்டுறவு வங்கி கிளை.

*3114)—டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சுற்றுலா மையமான கன்னியாகுமரியில் மாவட்ட கூட்டுறவு வங்கியின் கிளை தற்பொழுது திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கன்னியாகுமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியினுடைய புதிய கிளையை கன்னியாகுமரியிலே திறப்பதற்கு அரசு அனுமதித்து இருக்கிறது. அது விரைவிலே துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு வங்கியின் கிளையைத் திறப்பதற்கு அனுமதி வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு குமரித் தொகுதி மக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு வங்கிக்குச் சொந்தமாக புதியதாக கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புதிய கிளை உடனடியாகத் துவங்கப்படும். கட்டிடம் கட்டி முடிப்பதற்கு சற்று கால தாமதம் ஆகும். அதற்கு நிதியும் தேவை. ஆகவே, அது பின்னாலே பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 55. திரு. எஸ். எஸ். ராமசுப்பு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

55—

## ஆலங்குளத்தில் விவசாயக் கல்லூரி.

*1328)— திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளத்தில் விவசாயக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம், எனில், அதற்கான பணி எப்போது துவக்கப்படும் ?





மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

(அ) நெல்லை கட்டபொம்மன் ஆலங்குளத்தில் புதிய விவசாயக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

(ஆ) எனவே அது தொடர்பான மற்றொரு கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலிக்கு மேற்குபக்கமாக உள்ள ஆலங்குளம், தென்காசி அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி மற்றும் வாசுதேவநல்லூர், அந்தப் பகுதிகளைச் சுற்றி எந்த அரசு கல்லூரியுமே கிடையாது. அதுவும் விவசாயத்தை நம்பி வாழ்கின்ற அந்தப் பகுதியிலே ஒரு விவசாயக் கல்லூரியை அமைத்தால் மிகப் பொருத்தமாக இருப்பதோடு மட்டுமல்லாமல் அங்கு விவசாயக் கல்லூரி அமைக்கப்படும்பொழுது விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட இருப்பதினால் அந்த விவசாயக் கல்லூரியை அங்கே ஏற்படுத்த அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டத்தில் கிள்ளிகுளம் என்ற ஊரில் ஒரு வேளாண்மைக் கல்லூரி செயல்பட்டு வந்துகொண்டிருக்கிறது. கிள்ளிகுளத்திற்கும், ஆலங்குளத்திற்குமிடையே 35 கிலோ மீட்டர் தான் இடைவெளி இருக்கிறது. கோவில்பட்டியில் புஞ்சை தானியங்கள் ஆராய்ச்சிக்காக ஒரு வேளாண் பயிற்சி மையமும், அம்பாசமுத்திரம் நஞ்சைப் பயிர் ஆராய்ச்சி மையமும் செயல்பட்டு வந்து கொண்டிருக்கின்றன. எனவே புதிய கல்லூரி அமைக்கும் உத்தேசம் அரசிடம் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 56, திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்

56—

## ஓசூரில் வீட்டுவசதி வாரிய வீடுகள்.

*1301—திரு. கே. ஏ. மனோகரன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வீட்டு வசதித் துறை மூலமாக ஓசூரில் கட்டப்பட்டுள்ள பல வீடுகளின் தொகுதி உயர்நீதிமன்ற தடையாணையால் ஒதுக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

[1992 பிப்ரவரி 5

(ஆ) ஆம் எனில், தடையாணையினை நீக்கி விரைவில் வீடுகளை ஒதுக்கித்தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். தடையாணையை நீக்கி ஒதுக்கப்படாமல் உள்ள எல்.ஐ.ஜி. 300 மற்றும் 211 வீடுகளை, ஒதுக்கீடு செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேற்சொன்ன தடையாணை எச்.ஐ.ஜி. வீட்டினைக் கட்டுப்படுத்தாததால் அவ்வீடுகள், குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு விட்டன என்று இந்த அவையின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாரிய வீடுகள் தடையினை நீக்கி, உடனடியாக, கூடிய விரைவிலே ஒதுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடை ஆணையை நீக்குவதற்கு காலதாமதம் ஏற்படுகின்ற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிற காரணத்தால் வீட்டினுடைய தரமும், மற்றும் வாரியத்தினுடைய நிதியும் முடக்கப்படுகின்ற சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதுசம்பந்தமாக அரசு ஊழியர்களுக்கு ஒதுக்கீடு செய்த ஆணையை திரும்பப் பெற்று அதற்குப் பிறகு விளம்பரத்தின் வாயிலாக குலுக்கல் முறையில் ஒதுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒசூர் பற்றி துணைக் கேள்வி இருக்கவேண்டும்.

திரு. கே. பி. ராஜு : அதே கேள்விதான் கொஞ்சம் மாறியிருக்கும். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 57, திரு. மு. தென்னவன். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.



1992 பிப்ரவரி 5]

57—

## இலவச காலணி வழங்கும் திட்டம்.

*3543—திரு. மு. தென்னவன்:

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இலவசமாக காலணி வழங்கும் திட்டம் மீண்டும் கொண்டுவரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒன்றாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை படிக்கின்ற பள்ளி சிறுவர்கள், சத்துணவு சாப்பிடுகின்ற சிறுவர்களுக்கு இலவச காலணி வழங்குகின்ற திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருவதால் இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் கிடைப்பதை தன்னுடைய பொறுப்பாக கருதிக் கொண்டிருக்கிறார்கள் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நடக்க, நோயை தடுக்க இலவச காலணி திட்டத்தை மீண்டும் செயற்படுத்தியதை நான் பாராட்டுகிறேன். இந்தத் திட்டத்தின் மூலம் எத்தனை பேர் பயன்பெறுகிறார்கள் என்பதையும், இந்தத் திட்டத்திற்கான ஒரு ஆண்டு செலவு எவ்வளவு என்பதையும், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தை சேர்ந்தவர்கள் வேலை வாய்ப்பைப் பெறுகிறார்கள். அப்படி எத்தனை பேர் வேலை வாய்ப்பைப் பெறுகிறார்கள் என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதன் மூலமாக சமூகநலத் துறையின்கீழ் 39 காலணிகள் தயாரிக்கின்ற பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதன் மூலமாக சுமார் 2 ஆயிரம் பெண்களுக்கு வேலைவாய்ப்பை சமூகநலத்துறை அளித்து வருகிறது. இந்தத் திட்டம் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படக்கூடிய திட்டமாக இருக்கிறது. சத்துணவுச் சாப்பிடுகின்ற அனைத்துக் குழந்தைகளுக்கும் இந்தக் காலணி வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

[1992 பிப்ரவரி 5

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காலணிகள் வழங்குவதை நான் விரோதமாகச் சொல்லவில்லை. இருந்தாலும் கூட 10 வயது வைத்து இந்தக் காலணிகளை தைக்கச் சொல்லுகிறோம். சில பையன்கள் 10 வயதில் இவ்வளவு வளர்ந்து விடுகிறான். 12 வயதில் இவ்வளவு வளர்ந்து விடுகிறான், கால் வளர்கிற அதே மாதிரி காலத்திற்கு தகுந்தாற்போல் இந்தக் காலணிகள் அமையவில்லை. ஆகவே, பலயிடங்களில் இதை நிறைவேற்றி பிரயோசனம் இல்லாமல் இருக்கிறது. ஒன்று, இந்தத் திட்டத்தை நல்லமுறையில் செய்ய வேண்டும் என்றால் ஒவ்வொரு பள்ளியிலும் சத்துணவுச் சாப்பிடுகின்ற குழந்தைகளின் கால்களை அளவு எடுத்து இந்தக் காலணிகளைத் தயார் செய்ய வேண்டும். இல்லையென்றால் இந்தத் திட்டம் செயல்படுவதில் பயன் அற்ற நிலை ஏற்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? எனவே இதை மீண்டும் மறுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலணிகளைத் தைக்கின்ற போது குழந்தைகளின் கால்களை அளவு எடுத்துதான் காலணிகள் தைக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல குழந்தைகள் திடீரென்று வளர்வதற்கு அரசு பொறுப்பு எடுத்துக் கொள்ள முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பார்வையாளர் மாடத்திலிருந்து ஒருவர் குரல் எழுப்பினார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். அன்பழகன்.

திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலணி செய்யும் தொழிலையே நம்பி ஆயிரக்கணக்கான குடும்பங்கள் சேலம் மாவட்டத்தில் குறிப்பாக எனது தொகுதியான நாமக்கல்லில் வசிக்கிறார்கள். அவர்களுக்கு வேறு வேலை இல்லாததால் இப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலையை எனது தொகுதியில் கொண்டுவர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலணிகள் தைக்கின்ற பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் எந்த மாவட்டத்திலே அமைக்கப்பட்டாலும் அதை சமூகநலத்துறை அங்கீகரிக்கும். ஆகவே சேலம் மாவட்டத்தில் அப்படிப்பட்ட பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுமானால் அதை சமூக நலத்துறை அங்கீகரிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 58. திரு. உ. பலராமன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்,



1992 பிப்ரவரி 5]

58—

பார்வையற்றோர்க்கு வேலைவாய்ப்பில் ஒதுக்கீடு.

*3826—

*திரு. உ. பலராமன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பார்வையற்றோர் நல்வாழ்விற்காக அலுவலகங்கள், தொழிற்சாலைகள் ஆகிய இடங்களில் பணியமர்த்துதலில் சதவிகித கணக்கில் இடம் ஒதுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பார்வையற்றவர்களுக்காக அரசு அலுவலகங்களில் ஒரு சதவீத இடஒதுக்கீடு செய்யவேண்டும் என்கின்ற அரசு ஆணை ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. உ. பலராமன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அரசு அலுவலகங்களில் மட்டுமல்லாது, தொழிற்சாலைகள், கூட்டுறவுத் துறை, தனியார் துறை ஆகிய மூன்று துறைகளிலும் . . (மணியடிக்கப்பெற்றது.)

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் அவையின் முன் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

திரு. உ. பலராமன் : அவர்களுக்கு அந்த மூன்று துறைகளிலும் சதவிகிதக் கணக்கில் இடம் ஒதுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீடு ஆணை அரசுத் துறைகளுக்கும், அரசுத் துறை நிறுவனங்களுக்கும் மட்டுமே பொருந்தும். ஆனால் தனியார் நிறுவனங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் இந்த ஒதுக்கீடு விகிதப்படி ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு வேண்டுகோள் விடுத்து வருகிறது. அதிக அளவில் ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பொதுத்துறை, தனியார் நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் பரிசு அளிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. தனபால்.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையற்ற, ஊனமுற்றவர்களில் கல்வித் தகுதி படைத்தவர்களுக்குத்தான் அரசு அலுவலங்களில் இட ஒதுக்கீடு

[1992 பிப்ரவரி 5

தரப்பட்டுக்கொண்டிருக்கிறது. கல்வியறிவற்ற பார்வை யற்றவர்கள், ஊனமுற்றவர்கள் போன்றவர்களுக்கும் அரசு தரப்பிலோ அல்லது தனியார் நிறுவனங்களிலோ இட ஒதுக்கீடு அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையற்றோருக்கான தகுதியான வேலை வாய்ப்புகள் குறைவு. இன்னின்ன வேலை களுக்கு இவர்களை நியமிக்கலாம் என்று 1988-ஆம் ஆண்டின் அரசு ஆணையில் குறிப்பிட்ட வகையில் இயன்ற வரையில் பார்வையற்றோருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசு பொறுப் பேற்றவுடன் படிக்காத பார்வையற்றவர்களுக்கு அரசு அலுவலகங்களில் நாற்காலி பின்னுகின்ற ஓயர் வேலைகளை அளிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி பியாட்ரிக் டிசாசோ.

D:. BEARIX DSOUZA : Hor'ble Speaker Sir, I would like to know what opportunities the physically handicapped women have in employment?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இலட்சம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவேண்டுமென்கின்ற திட்டத்தின் மூலமாக தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் ஏறக்குறைய 10 ஆயிரம் பெண்களை, ஊனமுற்றவர்களாக உள்ளவர்களை தேர்ந்தெடுக்கவேண்டுமென்கின்ற ஆணையை நம்முடைய தமிழக முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பிறப்பித்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன் முதலாக, உடல் ஊனமுற்றவர்களுக்காக, புரட்சித் தலைவி யைத் தவிர வேறு எந்த முதலமைச்சரும் (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையில் எடுத்துச் சொன்னதில்லை என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையற்ற குழந்தைகளுக்கு, வயது வரம்பை கணக்கில் கொள்ளாமல் எல்லா பார்வையற்றவர் களுக்கும் ஒய்வூதியமாகிய 50 ரூபாய் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற நிதிநிலை நெருக்கடியில் இதை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்பதை பேரவைத் தலைவர் மூலமாகத் தெரியப் படுத்திக்கொள்கிறேன்.



1992 பிப்ரவரி 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 59, டாக்டர் வெ. புருஷோத்தமன், மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர்.

59—

## கோழித்தீவனத்திற்கு தரக் கட்டுப்பாடு.

* 1070 டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோழித்தீவனம், கோழி மருந்து ஆகியவற்றிற்கு தரக் கட்டுப்பாடு கொண்டுவரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) ஆம். கோழித்தீவனத்திற்கு தரக்கட்டுப்பாடு கொண்டு வரும் திட்டம் அரசிடம் பரிசீலனையில் உள்ளது. ஆனால் கோழி மருந்துக்கு தரக் கட்டுப்பாடு திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) அனைத்து கால்நடை மற்றும் கோழி தீவனங்களின் தரக்கட்டுப்பாட்டினை நிர்ணயிப்பதற்காக அரசிடம் செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே, கோழிப் பண்ணை விவ சாயிகளினுடைய உற்பத்தித் திறன் 30-லிருந்து 40 விழுக்காடு வரை குறைவாக உள்ளது. இதன் காரணமாக முட்டையி னுடைய விலையும், இறைச்சியினுடைய விலையும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வருகிறது. தரமான தீவனமும், தரமான மருந்துகளும் மார்க்கெட்டிலே கிடைக்காத காரணத் தால், விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இதற்காக, நாமக்கல்லில் குறைந்த பட்சம், தனி கட்டுப்பாட்டு அதிகாரியை யாவது நியமிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 60, திரு. எஸ். டேனியல்ராஜ், மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

[1992 பிப்ரவரி 5

60

## சங்கு குளித்தல்.

*4876 **திரு. எஸ். டேனியல்ராஜ் :** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடலில் பிடிக்கும் மீன்கள் மீனவ தொழிலாளர்களுக்கே சொந்தம் என அரசு ஆணை பிறப்பித்துள்ளதுபோல, கடலில் எடுக்கும் சங்குகள் சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்கே சொந்தம் என்று ஆணை பிறப்பிக்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் வாழும் மீன் இனங்களை அரசுடைமை அதாவது (Monopoly) என்று அரசு அறிவிக்கவில்லை. எனவே மீன்பிடிக் கலங்களைக் கொண்டு மீன்பிடித் தொழில் செய்யும் மீனவர்கள் தங்களால் பிடிக்கப்படும் மீன்களை தங்களுடைய உடைமையாகக் கொண்டு விற்பனை செய்து அதன் பலனை அனுபவிக்கின்றார்கள். ஆனால் கடல் உயிர்வாழ் இனங்களான முத்தும், சங்கும் (Pearl & Chank) அரசுடமையாக (Monopoly) அரசினால் அறிவிக்கப்பட்டு, அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் மீன் வளத் துறையின் கண்காணிப்பிலும் அனுமதியின் பேரிலும் அனுமதி பெற்ற குளியாட்கள் மூலம் சங்கு குளித் தொழில் நடைபெறுகிறது. எனவே இந்த வினாவிற்கு இடமில்லை.

முற்பகல் 10-35

**திரு. எஸ். டேனியல்ராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி, திருச்செந்தூர், இராமேஸ்வரம் ஆகிய பகுதிகளைச் சார்ந்த கடலில் சங்கு குளிக்கும் தொழிலாளர்கள் தங்களுடைய உயிரைப் பணயம் வைத்து, கடலுக்குள், 80 அடி ஆழம் சென்று, அவர்கள் இந்தச் சங்கினை எடுத்து வருகிறார்கள். எடுத்து வருகிற இந்தச் சங்கினை மீன் இலாக்காவிடம் ஒப்படைத்து, அவர்கள் அந்தச் சங்கினை ஏலம் விடுகிறார்கள். ஏலத்திலே வருகின்ற பணத்தை 90 சதவீதம் சங்கு தொழிலாளர்களுக்கும், 10 சதவீதத்தை அரசாங்கமும் எடுத்துக் கொள்கிறது. ஆகவே, இதன் மூலமாக ஏலம் எடுக்கின்ற வியாபாரிகளுக்குத்தான் இலாபம் கிடைக்கிறதே தவிர, அரசாங்கத்திற்கோ அல்லது சங்கு குளி தொழிலாளர்களுக்கோ எந்தவித இலாபமும் கிடைக்கவில்லை. கடந்த பத்தாண்டுகளாக மீன் இலாக்காவுக்கு இதன் மூலமாக எந்தவிதமான இலாபமும் இல்லை........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாகக் கேளுங்கள் :



1992 பிப்ரவரி 5]

**திரு. எஸ். டேனியல்ராஜ் :** மீன்பிடி தொழிலாளர்கள் எப்படிக் கடலில் பிடிக்கின்ற மீன்கள் அவர்களுக்குச் சொந்தம் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறதோ அதே போன்று கடலில் சங்கு குளிக்கின்ற தொழிலாளர்களுக்கு அவர்கள் குளிக்கின்ற சங்கு அவர்களுக்கே சொந்தம் என்று அறிவிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது உள்ள ஆணைப்படி, சங்கு குளிப்போர் ரூபாய் 100 செலுத்தி, அனுமதி பெற்று, துறையின் கண்காணிப்பில் சங்கு குளித்து எடுக்கலாம். இவர்களுக்குத் துறை, அடையாள அட்டையும் வழங்கி, குளித்து எடுத்த சங்கைத் துறையிடம் தந்தால், குளித்து எடுத்த சங்கை அலுவலர்களால் நியாயமாக நிர்ணயிக்கப்பட்டு, சங்குகளின் விலையை, அதன் அடிப்படையில் மதிப்பிட்டு, முதலில் 50 சதவீதம் தொகை செலுத்தப்பட்டு விடுகிறது. பிறகு ஒரு குறிப்பிட்ட நாளில், தனித்தனியாகக் குவியலாக்கி, வியாபாரிகளுக்குக் காண்பித்து ஏலம் விடப்படும். ஏலத் தொகை வரப்பெற்றதும், உடனே சங்கு குளித்து எடுத்தவர்களுக்கு மீதம் உள்ள 50 சதவீதம் தொகை பட்டுவாடா செய்யப்பட்டு விடும். எனவே, இதில் சங்கு குளிப்பவர்களுக்கு ஏமாற்றமோ, அல்லலோ இருப்பதாக அரசுக்குத் தெரிவிக்கவில்லை. அப்படியிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டால், அவர் எந்த மாதிரியான புரப்போசல் கொடுக்கிறார்கள் என்பதையறிந்து, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அரசு கனிவுடன் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். டேனியல்ராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மீன் இலாக்காவின் மூலமாக சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்கு, முதல் ரக சங்குக்கு 10 ரூபாயும், இரண்டாம் ரக சங்குக்கு 7 ரூபாயும், மூன்றாம் ரக சங்குக்கு 1 ரூபாயும் வழங்கப்படுகிறது. இந்தத் தொகையைப் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு உயர்த்தி, முதல் ரக சங்குக்கு 15 ரூபாயும், இரண்டாம் ரக சங்குக்கு 10 ரூபாயும், மூன்றாம் ரக சங்குக்கு 2 ரூபாயும் வழங்குவதற்கு அரசு முன் வருமா? கடலில் சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்கு 6 மாதங்கள் தான் வேலை இருக்கிறது ; 6 மாதங்கள் அவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு மற்றக் காலங்களில் மீன் பிடிப்பதற்கு மீன்பிடி சாதனங்களும்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்தக் கேள்வியோடு நிறுத்திக் கொள்ளுங்கள்; விரிவாகப் பேசிக் கொண்டே இருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள், கூலி நிர்ணயம் பற்றி, 10, 7, 1 என்று சொல்கிறார்களே, அதைப்பற்றிப் பதில் அளித்தால் போதும்.

[1992 பிப்ரவரி 5

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரிய வகையில் எவ்வாறு அந்த மாற்றத்தை அளிக்கலாம் என்று முன் வந்தால் அதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## குறுகிய காலஅறிவிப்பு வினா.

## பத்திரப் பதிவுக் கட்டணம்.

1—

*8463 திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் பத்திரப் பதிவுக் கட்டணம் அதிகமாக இருப்பதால் நிறைய பேர் அண்டை மாநிலமான கேரளாவிற்குச் சென்று பத்திரம் பதிவு செய்வதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) பதிவுக் கட்டணம் எல்லா இடங்களிலும் ஒரு சதவீதம் தான். கேரளாவில் பதிவுக் கட்டணம் ஒரு சதவீதம். தமிழ்நாட்டில் ஒரு சதவீதம் தான். முத்திரைக் கட்டணம் தான் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. அப்படி முத்திரைக் கட்டணம் கேரளாவில் அதிகபட்சமாக 5 சதவீதம். தமிழ்நாட்டில் முத்திரைக் கட்டணம் சென்னை, கோவை, திருச்சி, மதுரை, சேலம், நகரங்களில் 8 சதவீதமும், சில இடங்களில் 7 சதவீதமும் உள்ளது. சர்சார்ஜ்—மேல்வரி கேரளாவில் 5 சதவீதம் இருக்கிறது கேரளா மாநகரில். மற்ற இடங்களில் 4 சதவீதம் இருக்கிறது.

முற்பகல் 10-40

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பொதுவாக முத்திரைக் கட்டணம் அதிகமாக இருப்பதால், நிறைய பேர் கேரளாவிற்குச் சென்று அங்கே ஓர் 5 சென்ட் நிலத்தை உடனடியாக வாங்கி அப்போதே பத்திரத்தைப் பதிவு செய்து கொள்கிறார்கள். இங்கே, நிலத்தினுடைய மதிப்புக்குத்தான் பதிவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால், அங்கே 47-ஏ என்கிற பிரிவைப் பயன்படுத்தி, குறைந்த கட்டணத்திலே பதிவு செய்து கொண்டு வருகிறார்கள். அதனால், தமிழக அரசுக்கு மிகப் பெரிய வருவாய் இழப்பு



1992 பிப்ரவரி 5]

ஏற்படுகிறது அப்படி, கேரளா போன்ற மாநிலங்களில் பதிவு செய்யும் பத்திரத்தை இங்கேயுள்ள சார் பதிவு அலுவலகங்களில் 'என்ட்ரி' போடக் கூடாது என்கிற ஒரு சட்டத்தை அரசு கொண்டு வந்தால், அதன் மூலம் அப்படிப்பட்ட பதிவைத் தடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். அதை அரசு செய்ய முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு வந்த பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள், இப்படி பதிவுத் துறையிலே இருக்கிற பல குறைபாட்டினால் நமக்கு வர வேண்டிய பணம் அண்டை மாநிலங்களுக்குச் செல்வதை அறிந்து, இதைப்பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டு இருக்கிறார்கள். அந்த உத்தரவின்படி, மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி, இங்கேயே பதிவு செய்ய வேண்டுமென்று சொன்னால் மட்டும் போதாது ; அங்கே பதிவு செய்தாலும், அந்தப் பதிவுக் கட்டணத்தை இங்கே கொடுக்க வேண்டுமென்று சொன்னால் மட்டும் போதாது. ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 1908 என்பது மத்திய அரசினுடைய சட்டம். அந்த மத்திய அரசின் சட்டத்தை நாம் நினைத்தபடி திருத்த முடியாது. அதிலே 28-வது விதியின்படி, நம்முடைய மாநிலத்தில் எங்கேயாவது ஓரிடத்தில் நிலம் இருந்தால், அதே போல் கேரளாவிலும் நிலம் இருந்தால், கேரளாவில் பதிவு செய்து கொள்ளலாம் என்று இருக்கிறது. அப்போது நமக்கு வர வேண்டிய வரி வராமல் போய் விடுகிறது. ஆக இன்றைக்கு இருக்கிற சட்டப்படி, அங்கே பதிவு செய்தாலும், இங்கே அதைச் செலுத்த வேண்டும் ; அங்கே பதிவு செய்வதற்கும், இங்கே பதிவு செய்வதற்கும் உள்ள வித்தியாசத்தை இங்கே ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்று இருக்கிறது. அதை யாரும் செய்வதில்லை. இதை நம்முடைய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆய்வு செய்த பிறகு—ஒரு 3 இடங்களில் முதலில் ஆய்வு செய்தார்கள் ; அதிலே ஏறக்குறைய ஓராண்டில் 2 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, மொத்தமாக எல்லா இடங்களையும் பார்த்தால், ஒரு வருடத்திற்கு 6 கோடி ரூபாய் வரவேண்டிய பணம் வராமல் போய் விடுகிறது என்பது இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது—அதைத் தடுத்து நிறுத்துவதற்கு எல்லாவிதமான நடவடிக்கையையும் இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் துணைத் தலைவர்.

பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து வாகனங்களின் அண்டை மாநிலங்களிலிருந்து வாங்கி வரும் போது, வரி ஏய்ப்புச் செய்கிறார்கள் என்பதைத் தடுப்பதற்காக நுழைவு வரி என்ற வகையிலே இந்த

[1992 பிப்ரவரி 5

அரசு முடிவெடுத்து சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது. அதே
போன்று, அண்டை மாநிலங்களில் பத்திரத்தைப் பதிவு செய்து,
முத்திரைக் கட்டணத்தை ஏமாற்றியவர்களிடமிருந்து, அந்தத்
தொகை வேறுபாடு எவ்வளவு என்பதைக் கண்டறிந்து, அதை
வசூலிப்பதற்கு தனிப்பட்ட முறையில், தக்க சட்டமுன்வடிவை
இந்த அவையில் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அதில் இருக்கிற வித்தியாசத்
தைப் பார்த்து, இங்கே வசூல் செய்வதற்கு இன்றைக்கு அதி
காரம் இருந்தாலும், அதை முறையாக நிறைவேற்ற முடிவ
தில்லை. ஏனென்றால், கேரளாவில் இருக்கிற அதிகாரிகள்,
அங்கே யார் யார் பதிவு செய்தார்களோ, அந்த விவரத்தை
இங்கே நமக்கு கணக்கு காட்டவேண்டுமென்று இருக்கிறது.
அவர்கள் அவ்வாறு கொடுக்காவிட்டால், ஏன் கொடுக்கவில்லை
என்று கேட்பதற்கும் இந்த அரசுக்கு அதிகாரம் இல்லை. அப்படி
இல்லாததினால், யார் யார் அங்கே பதிவு செய்தார்கள் என்பது
நமக்குத் தெரியாமல் போய்விடுகிறது. அதற்காகத்தான், எந்
தெந்த மாநிலத்திலே நிலம் இருக்கிறதோ, அந்தந்த மாநிலத்
திலேயே பதிய வேண்டுமென்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவர
முடியுமா என்பதை இந்த அரசு யோசித்து, ஒரு முடிவெடுக்கும்.
இன்றைக்கு இருக்கிற சட்டம் சென்ட்ரல் ஆக்ட். ரிஜிஸ்ட்
ரேஷன் ஆக்ட் 1908 என்பது மத்திய அரசினால் போடப்பட்ட
சட்டம். மத்திய அரசிடமிருந்து அனுமதி வாங்கி, ஒரு
சட்டத்தைக் கொண்டு வருவதற்கு இந்த அரசு எல்லாவிதமான
நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள்
முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்
பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது
என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் குறிப்புகள்.

### (அ) தஞ்சை காயிதே மில்லத் மாவட்டங்களில் நேரடி நெல் கொள்முதலிலுள்ள இடர்பாடுகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசாங்கத்தின் கவனத்
திற்கு .. (குறுக்கீடு).

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே..



1992 பிப்ரவரி 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்
கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : ஒரு வாரமாகக் கேட்டுக்
கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள் ;
தயது செய்து உட்காருங்கள் ; நான் சொல்கிறேன்.. உங்களுடைய
பிரச்சினைக்கு நான் வருகிறேன்..

டாக்டர் தே. குமாரதாஸ் : நான் ஒரு வாரமாகக் கேட்டுக்
கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமாரதாஸ்
கொடுத்திருக்கிற பிரச்சினையை விட முக்கியமான பிரச்
சினையை இன்னொரு உறுப்பினர் கொடுத்திருக்கிறார்...

டாக்டர் தே. குமாரதாஸ் : ஒரே ஒரு நிமிடத்தில் ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை, உங்
களுடைய பிரச்சினைக்கு நான் அடுத்து வருகிறேன். இன்
னோர் உறுப்பினர் பேசுவதை நீங்கள் தடுக்கக் கூடாது.

திரு. ஜி. பழனிசாமி அவர்கள் தஞ்சை மாவட்டத்திலே
காயிதே மில்லத் மாவட்டத்திலே, விவசாயிகளிடமிருந்து நெல்
கொள்முதல் செய்வதில் சில இடர்பாடுகள் இருக்கின்றன என்ற
மிக இன்றியமையாத மக்கள் பிரச்சினை ஒன்றை எழுப்ப
வேண்டுமென்று என்னுடைய அனுமதியைக் கேட்டிருக்கிறார்.
அவருக்கு அனுமதி வழங்குகிறேன், அவர் இப்போது அந்தக்
கருத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல்
நிலையங்களில் இன்றைக்கு தஞ்சை மாவட்டத்திலும், காயிதே
மில்லத் மாவட்டத்திலும் பல ஆயிரக்கணக்கான நெல் மூட்டை
கள் தேங்கியிருக்கின்றன. அதோடு மட்டுமல்ல. ஒவ்வொரு
கொள்முதல் நிலையத்திலேயும் 10,000, 15,000 மூட்டைகள்
வரை இப்படி ரோடுகளில் அடுக்கி வைத்திருக்கிறார்கள். இதன்
மூலமாக அந்த நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் இன்
றைக்கு விவசாயிகள் நேரடியாகச் சென்று நெல்லைப்
போட முடியாது என்ற ஒரு பரிதாபகரமான சூழ்நிலைமை
இன்றைக்கு தஞ்சை மாவட்டத்திலும், காயிதே மில்லத்

[திரு. ஜி. பழனிசாமி] [1992 பிப்ரவரி 5

மாவட்டத்திலும் ஏற்பட்டிருக்கிறது. அதோடு மட்டு
மல்ல, அநேகமாக நேரடி கொள்முதல் நிலையங்களில்
தொடர்ந்து பல ஆண்டுக்காலமாக நெல் கொள்முதல் செய்து
கொண்டிருக்கக்கூடிய அந்த இடங்களில் இன்றைக்கு அந்தக்
கொள்முதல் நிலையங்களை மாற்றுவதன் மூலமாக விவசாயி
கள் பல இடங்களிலே உண்ணாவிரதம், பஸ் மறியல் போன்ற
இயக்கங்களைத் தொடர்ந்து நடத்தக்கூடிய நிலைகள்
ஏற்பட்டிருக்கின்றன. ஆக, சென்ற ஆண்டு நடைமுறையில்
எந்தெந்த இடங்களில் நேரடி கொள்முதல் நிலையங்கள்
இருந்தனவோ, அந்த இடங்களிலே நெல்லை கொள்முதல் செய்ய
வேண்டுமென்று சொல்லி அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும்.
அதே போன்று தலைஞாயிறில் அநேகமாக ஓரணி அம்பலம்
என்கிற ஊரிலே நேரடி கொள்முதல் நிலையங்களை மாற்றி
யதன் மூலமாக நேற்றையதினம் பஸ் மறியல் செய்திருக்கக்
கூடிய 80 பேர்கள் கைது செய்யப்பட்டிருப்பதால் எனக்கு தந்தி
மூலமாக இன்றைய தினத்திலே தகவல் கிடைத்திருக்கிறது.
தொலைபேசி மூலமாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக
ஆளுங் கட்சியைச் சேர்ந்திருக்கக் கூடிய சில பிரமுகர்கள் தலை
யிட்டு இப்படி மாற்றுவதன் மூலமாக தஞ்சை மாவட்டத்தில்
இப்படிப்பட்ட பதட்ட நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆக
நேரடியாக கொள்முதல் நிலையங்களில் முழுமையாக நெல்லை
கொள்முதல் செய்வதற்கு மாறாக இடங்களை மாற்றுவதன்
மூலமாக இப்படிப்பட்ட நிலைகளை தவிர்த்து அரசு உரிய
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அமைச்சருடைய
கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த நெல் கொள்முதல் நிலையங்களில் ஏற்
பட்டிருக்கக்கூடிய சிக்கலை மாண்புமிகு உறுப்பினர் திரு.
பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதேபோல் அந்த
கொள்முதல் நிலையங்களிலே பணியாற்றுகின்ற அந்த சுமை
தூக்கும் தொழிலாளர்கள் 10, 15 ஆண்டுகளாக குறைந்த
சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த
சீனியாரிட்டியை பின்பற்றி சம்பளம் உயர்த்திக் கொடுக்க
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்
(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அவசரப் பொது
முக்கியத்துவம் அல்ல. சம்பள விவகாரம் எல்லாம் வேறு
விவகாரம். இந்தப் பிரச்சினைக்கு பதில் வரட்டும். மாண்புமிகு
உணவுத் துறை அமைச்சர்.



1992 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி
அவர்கள் இரண்டு பிரச்சினைகளை இங்கே குறிப்பிட்டிருக்
கிறார்கள். ஒரு பிரச்சினை நேரடி கொள்முதல் நிலையங்கள்
அடிக்கடி மாற்றப்படுகின்றன. இதிலே ஆளும் கட்சியின்
தலையீடு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதை
நான் வன்மையாக மறுக்கின்றேன். எங்கே சட்டமன்ற உறுப்
பினர்கள் வேண்டுகோளை வைத்து சில கொள்முதல் நிலையங்
களை மாற்ற வேண்டுமென்று சொல்கிறார்களோ, அங்கே
மட்டும் தான் மாற்றம் செய்யப்படுகின்றது.

முற்பகல் 10-50

அடுத்தாற்போல நெல் ஆங்காங்கே தேங்கிக் கிடக்கின்றது
என்று குறிப்பிட்டார்கள். இதிலே சிறு சிக்கல் ஏற்பட்டிருப்
பது உண்மைதான். ஆனாலும் அதற்குத் தகுந்த நடவடிக்
கையை உடனடியாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். நேற்
றைய முன்தினம் சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷன் அதிகாரி
களையும், தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்தும், அதேபோன்று
நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்திலிருந்தும் அதிகாரி
களை அழைத்துப் பேசி இருக்கின்றோம். சென்ற சனிக்கிழமை
ரயில்வே நிர்வாகத்தினுடைய மூத்த அதிகாரிகளுடன் பேச்சு
வார்த்தை நடத்தப்பட்டிருக்கின்றது. அவர்கள் தங்களுக்
குள்ள குறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். நெல் நிறைய
இப்போது வந்துகொண்டிருக்கின்றது. நாம் எதிர்பார்த்ததை
விட அதிகமாக நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நெல்
வருவதால் வேகன்கள் அதிகமாக வேண்டுமென்று கேட்டுக்
கொண்டிருக்கிறோம். ரயில்வே துறை நெல் போக்குவரத்தைப்
போல உரத்திற்கும், அதேபோன்று சிமெண்டிற்கும் வேகன்கள்
கொடுக்க வேண்டியிருக்கின்றது. போதுமான அளவுக்குக்
கொடுக்க முடியவில்லை என்பதைச் சொல்லியிருக்கிறார்கள்.
எனவே, நாம், ஒரு புதிய உத்தியைக் கையாள இருக்கின்றோம்.
இங்கே இருந்து வேகன்கள் போகும்போதும், வரும்போதும்,
இரண்டு வழியிலேயும் பயன்படுத்தத் தக்க அளவுக்கு, தூத்துக்
குடி பக்கம் அல்லது மதுரை பக்கம் அதிகமான வேகன்களை
ஒதுக்குவதற்குத் திட்டமிட்டு இருக்கின்றோம். அதுபோக,
இப்போது மதுரைக்கு இரண்டு ரேக்குகளையும், திருநெல்வேலிக்கு
1½ ரேக்குகளையும், தூத்துக்குடிக்கு ஒன்றையும், இன்னும்
காரைக்குடி போன்ற பகுதிகளுக்கு அதிகமாக வேகன்களை
அனுப்புவதற்குத் திட்டமிட்டிருக்கின்றோம். இது போதாது
என்று, மாவட்டத்திற்குள்ளே, தஞ்சாவூர், திருத்துரைப்பூண்டி
போன்ற இடங்களிலே போக்குவரத்தை அதிகரிப்பதற்காக
இன்னும் அதிக வேகன்கள் வேண்டுமென்று இரயில்வே
இலாக்காவைக் கேட்டு இருக்கின்றோம். அவர்களும் பரிசீலிப்
பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது போக, தமிழ்நாட்
டிலே இருக்கிற அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களையும்

அழைத்து ஆங்காங்கே இருக்கின்ற ஆர்.டி.ஓக்களின் உதவியைக்
கொண்டு, எந்த அளவுக்கு அதிகமாக லாரிகளை இந்த இரண்டு
மாவட்டங்களுக்கும் அனுப்ப முடியுமோ அவ்வளவு லாரிகளையும்
அனுப்ப வேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு உறுப்பினர் ஒரு
பிரச்சினையை எழுப்பி அதற்கு அமைச்சர் பதில் சொல்லுகிற
நேரத்தில் அதற்கு இடையூறு செய்வது போல், அந்த உறுப்பினர்
இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டு பேசுவது சரியல்ல.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : ஆகவே, இரயில்வே
வேகன்கள் மட்டும் போதாது என்று லாரிகளையும் அதிகரிப்ப
தற்கு எல்லா மாவட்டங்களிலும் அங்கே இருக்கின்ற மாவட்ட
ஆட்சித் தலைவர்களையும், ஆர்.டி.ஓக்களையும் கேட்டு,
எவ்வளவு அதிகமான லாரிகளைத் தஞ்சாவூர் மாவட்டத்திற்கும்,
நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்திற்கும் அனுப்ப
முடியுமோ அவ்வளவு லாரிகளையும் அனுப்ப வேண்டுமென்றும்
கேட்டிருக்கிறோம். ஆகவே, நெல் கொள்முதல் நிலையங்களில்
நெல் தேங்காமல் உடனடியாக அவைகள் எங்கே போய்ச்
சேர வேண்டுமோ அங்கே அனுப்புவதற்கு வேண்டிய எல்லா
விதமான நடவடிக்கைகளையும் நமது புரட்சித் தலைவி அவர்
களுடைய அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரி
வித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இன்னொரு சிறு பிரச்சினையையும் இங்கே குறிப்பிட்டார்
கள். அது தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினை. நான்
அதிலே, சி.பி.எம்., சி.பி.ஐ. ஆகிய இரண்டு கட்சிகளையும்
கேட்டுக் கொள்ள விரும்புவது, அதிகமான தொழிலாளர்கள்
இப்போது தேவைப்படுகிறார்கள். ஆகவே, ஏற்கனவே
இருந்த தொழிலாளர்களைத் தவிர, மற்றவர்கள் யாரும் புதி
தாக வேலைக்கு வரக்கூடாது என்ற நிலையை மேற்கொள்ளா
மல், புதிதாக வேலைக்குச் சேர்த்துக் கொண்டால்தான்
நீங்கள் கேட்கிற கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு உதவியாக
இருக்கும். ஆகவே, அதிலே பிரச்சினை செய்யாமல் ஒத்து
ழைக்க வேண்டுமென்று இரண்டு சட்டமன்ற உறுப்பினர்
களையும் நான் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்
கொள்கிறேன்.

## (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப்படாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமாரதாஸ், திரு.
சுந்தரதாஸ், திரு. லாரன்ஸ், திரு. அம்மமுத்து பிள்ளை
ஆகியோர் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசிரியர்கள் சிலர்



ஊதியம் இல்லாத காரணத்தால் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிற
பிரச்சினை குறித்து என்னுடைய கவனத்திற்குக் கொண்டு
வந்திருக்கிறார்கள். அதுபற்றிச் சுருக்கமாகத் தெரிவிக்க
வேண்டும். திரு. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கடந்த பல ஆண்டுகளாகத் தீர்க்கப்படாத பிரச்
சினையாக இருந்த ஊதியம் இல்லாத ஆசிரியர்களுக்கு ஊதியம்
வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில்
பல கட்டப் போராட்டங்களை நடத்திய ஆசிரியர்களுடைய
கோரிக்கையை ஏற்று, புதிதாகப் பொறுப்பேற்றிருக்கின்ற இந்த
அரசு, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில், அதாவது
1—6—1991 முதல் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படும்
என்ற உத்தரவினை, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்
இங்கே அறிவித்தார்கள். அதற்கு என்னுடைய நன்றியினைக்
கூறிக்கொள்கிறேன். அதே நேரத்தில், 1991 வரைக்கும்
அரசு அனுமதியுடன் அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் பணி
யாற்றுகின்ற ஆசிரியப் பெருமக்களுக்கும் ஊதியம் வழங்கிட
வேண்டும் என்று சொல்லி, அவர்களுக்குக் கொடுத்த உத்தர
வாதத்தையும், உறுதிமொழியையும் உடனடியாக அமல்படுத்த
வேண்டுமென்ற காரணத்தினாலே, வறுமைக் கோட்டிற்கும்
கீழே வாழ்ந்து கொண்டிருக்கும் ஆசிரியப் பெருமக்கள் தொடர்ச்
சியாகப் போராட்டம் நடத்தி வருகின்றார்கள். கிட்டத்தட்ட
300-க்கும் அதிகமான ஆசிரியைகளும், 200-க்கும் அதிகமான
ஆசிரியர்களும் இன்றைக்குக் கைது செய்யப்பட்டு, சிறையிலே
அடைக்கப்பட்டிருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு கல்வி
அமைச்சர் அவர்கள், தமிழக முதல்வர் அவர்களுடைய ஒப்பு
தலின் அடிப்படையில், அளித்த உறுதி மொழியினை உடனடியாக
நிறைவேற்றி, இந்த மாதத்திலேயிருந்து அவர்களுக்கு ஊதியம்
கிடைப்பதற்கு வழிவகை செய்ய முன் வருமா என்பதையும்,
அதே போல், அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்கு
என்று போராடி வருகின்ற, போராடி இன்றைக்குச் சிறை
யிலே இருக்கின்ற அவர்களை விடுதலை செய்வதற்கு அரசு
முன் வருமா என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஊதியம் இல்லாத ஆசிரியர்கள் பல ஆண்டுகளாக
இந்தப் போராட்டத்தை நடத்தி வருகின்றார்கள். கடந்த
ஆளுநர் ஆட்சியிலேதான் ஒரு ஆணை போடப்பட்டது.
இவர்களுடைய வேலைக்குச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்
பது, இங்கே நிதி நிலைமை மிகவும் மோசமாக இருப்பதை
எல்லா உறுப்பினர்களும் அறிந்திருக்கிறார்கள். ஆனாலும்,
இந்த ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் பல
ஆண்டுகளாகப் படிப்பளித்த மாணவர்கள் இன்று பட்டதாரிகள்

ஆகியிருக்கின்றார்கள். சிலர் சட்டமன்ற உறுப்பினர்களாகக் கூட ஆகியிருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு அவர்களுடைய பணி நல்லமுறையில் சிறப்பாக நடந்திருக்கிறது. ஆனால் அவர்களுக்கு ஊதியம் கிடைக்கவில்லையே.. அதாவது அவர்களுக்கு சம்பளம் கிடைக்கவில்லையே என்ற பிரச்சினை இருக்கிறது. (குறுக்கீடு) அவர்களுக்கு வயது 40, 42-ஐத் தாண்டிவிட்டது. இனி புதிதாக எந்த வேலைக்கும் போக முடியாது. அவர்கள் ஏறத்தாழ பத்து ஆண்டுகளாக, 15 ஆண்டுகளாக வேலை செய்து விட்டார்கள். அங்கே மாணவர்கள் இருக்கிறார்கள். ஆனால் கேரளா மாநிலத்தைப் பொறுத்தவரையில்........

முற்பகல் 10-55

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அதே கருத்தைத்தான் அவரும் சொல்லியிருக்கிறார். புதிதாக ஏதாவது சொல்வதாக இருந்தால் நீங்கள் சொல்லுங்கள்.

<u>திரு. மா. சுந்தரதாஸ் :</u> அதாவது கேரளா மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஏதாவது பள்ளிக்கூடம் தொடங்கிவிட்டால் 30 நாட்களுக்குள்ளே டி. ஈ. ஓ. அல்லது சி. ஈ. ஓ. வந்து உட்கார்ந்து அங்கேயுள்ள 'பீப்பிள்ஸ்-டீச்சர்ஸ் ரேஷியோ' ஃபிக்ஸ் செய்து உடனடியாகச் சம்பளம் போட்டுக் கொடுக்கிறார்கள். ஆனால் எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் சரி, தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் சரி பன்னிரெண்டு ஆண்டுக்காலம் என்ற அந்த அளவுக்கு அவர்கள் வேலை செய்த பிறகும் கூட அவர்களுக்கு ஊதியம் கிடைக்கவில்லை என்ற கஷ்டத்தினால்தான் இத்தகைய போராட்டத்தைத் தொடங்கி இன்றைக்கு சிறையில் இருக்கிறார்கள். ஆகவே அந்த ஆசிரியர்களுக்கு உடனடியாகச் சம்பளம் கொடுக்க வேண்டும். சிறையில் இருப்பவர்களை உடனடியாக விடுதலை செய்து ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு கல்வி அமைச்சர்,

<u>*மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்களும், மாண்புமிகு திரு. சுந்தரதாஸ் அவர்களும், மாண்புமிகு திரு. லாரன்ஸ் அவர்களும், இங்கே எழுப்பி இருக்கிற பிரச்சினை குறித்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதியுடன் சென்ற ஆண்டிலேயே சட்டமன்றக் கூட்டத் தொடரில் இந்த ஆசிரியர்களுக்கான ஊதியத்தை வழங்குவது குறித்து அரசு முடிவெடுத்து அதை விரைவில் நிறை



வேற்றும் என்று அறிவித்தேன். அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதிலே உடனடியாக ஒரு முடிவு மேற்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதற்குக் காரணம் இந்தப் பிரச்சினை பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக இருக்கின்ற ஒரு குழப்பமான, சிக்கலான பிரச்சினை. முதலில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பதில் அளிப்பதன் மூலம் அங்கே போராட்டத்திலே ஈடுபடுகிற ஆசிரியர்கள், அல்லது போராட்டத்திலே ஈடுபடவேண்டுமென்று தூண்டுகிற அந்த ஆசிரியர்களுக்குப் பின்னாலே இருக்கின்ற சக்திகள், அதன் மூலம் விவரம் ஒன்றும் புரியாமல் இருக்கின்ற பொது மக்கள் ஆகியவர்களுக்கு ஒரு விளக்கத்தை முதலிலேயே தெரிவித்து விடுவது நல்லது என்று கருதுகிறேன்.

குறிப்பாக பள்ளிகள் தொடங்குகின்றபோது அரசாங்கத்தினுடைய அனுமதி பெற்றுத் தொடங்க வேண்டும். ஆனால் சிறுபான்மைப் பிரிவைச் சார்ந்தவர்கள் அரசியல் சட்டம் வழங்கி இருக்கிற உரிமையின்படி அரசினுடைய முன்னனுமதி பெறாமல் பள்ளிக்கூடம் தொடங்கலாம். அப்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசின் முன்னனுமதியைப் பெறாமல் பள்ளிகள் தொடங்கப்படுகின்றன. தொடங்கப்பட்ட பள்ளிகளில் ஆசிரியர்களையும் அவர்களே நியமித்துக் கொள்கிறார்கள். நியமித்துக் கொண்டதற்குப் பிறகு அரசாங்கம் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டுமென்ற உரிமை கொண்டாடுகிறார்கள். இங்கே இருந்துதான் பிரச்சினை தொடங்குகிறது. அரசினுடைய அனுமதி பெறாமல் ஆரம்பித்து, அரசினுடைய அனுமதி பெறாமல் ஆசிரியர்களையும் அங்கே நியமித்துவிட்டு, அவர்களுக்குப் பதவி கொடுத்துவிட்டு அதற்கான ஊதியத்தை அரசாங்கம் தரவேண்டுமென்று கேட்கிறபோது பிரச்சினை எழுகிறது. அப்படி எழுந்த பிரச்சினையின் மீது 75-ஆம் ஆண்டு என்று நான் கருதுகிறேன். முதல் முறையாக உயர்நீதிமன்றத்தில் ஒரு ஆணையைப் பெற்றார்கள். அரசாங்கம் இந்தச் சிறுபான்மைப் பிரிவினர் தொடங்குகிற பள்ளிகளுக்கு அனுமதி வழங்குவதோடு அங்கே அமர்த்தப்படுகிற ஆசிரியர்களுக்குரிய அந்த ஊதியத்தையும் வழங்க வேண்டுமென்று ஒரு முதல் உயர்நீதிமன்ற ஆணை பிறப்பிக்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து பல்வேறு பள்ளிகள் உயர் நீதிமன்றத்திற்குப் போய் ஆணைகளைப் பெற்றுக் கொண்டு தொடர்ந்து அரசாங்கத்திற்கும் அந்த நிர்வாகத்திற்கும் ஒரு போராட்டம் போன்று விவாதங்களும், கடிதப் போக்குவரத்துகளும் நடைபெற்று இதற்கு ஒரு முடிவு பெறாத ஒரு சூழ்நிலை இருந்தது. ஆகவே, கடந்த ஆளுநர் ஆட்சி இருந்தபோது இதைப்பற்றிப் பரிசீலிப்பதற்கு ஒரு குழு நியமித்து அந்தக் குழு சென்ற ஆண்டு 1—6—1991 முதல் இந்தப் பிரச்சினைகளை ஆராய்ந்து உரிய தகுதியுள்ள ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கலாம் என்று முடிவெடுத்தது. அந்த முடிவெடுத்தவுடன், இப்போது பொறுப்பேற்றுக்கொண்டுள்ள நம்முடைய அரசினரால், அதாவது சென்றஆண்டு மாண்புமிகு

முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதியோடு இந்த மன்றத்திலே அறிவித்தேன். அறிவித்தது என்பது, ஏதோ 10 லட்சம், 20 லட்சம், 30 லட்சம் என்ற செலவிலே முடியக்கூடிய காரியம் அல்ல. அவர்கள் கேட்கிற தொகையை வழங்கினால், ஆண்டு ஒன்றுக்கு 5 கோடி ரூபாய் வேண்டும். அதிலேதான் வருகிறது சிக்கல் அதைத் தான் மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்.

முற்பகல் 11-00

1991-ஆம் ஆண்டிலேயிருந்து நாம் இப்போது தருகிறோம் என்று ஒத்துக் கொண்டதற்கே ஆண்டு ஒன்றுக்கு சுமார் இரண்டு கோடியே 59 அலட்சம் ரூபாய் செலவாகும். நீங்கள் சொல்கிற கணக்குப்படி பின்னாலே போனால், ஆண்டு ஒன்றுக்கு ஐந்து கோடி ரூபாய் வேண்டும். ஐந்து கோடியா 50 கோடியா என்பது மட்டும் பிரச்சினை அல்ல. ஆனால் அரசைக் கேட்காமல், அரசின் அனுமதியைப் பெறாமல், தனிப்பட்டவர்கள் அவர்களாகவே நிறுவனங்களை உருவாக்கிக் கொண்டு, ஆசிரியர்களைப் பணியில் அமர்த்திக்கொண்டு, ' அரசாங்கமே, நீ சம்பளத்தைத் தருகிறாயா இல்லையா ?' என்று சொல்லி அரசாங்கத்தைக் கேட்பதும், அரசாங்கத்தை நிர்பந்தப் படுத்துவதும், இல்லையானால் வேலை நிறுத்தம் செய்வதும் என்ற போக்கிலே, மிரட்டுகிற போக்கிலே நடந்து கொள்வது, மாவட்ட ஆட்சித் தலைவர் போன்றவர்களைக் கேரோ, செய்வது இதற்கு தூண்டிவிடுகின்ற முறையில் சில அரசியல் கட்சிகள் பின்னாலே நிற்பது போன்றவை நியாயமான காரியமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலம் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும், சட்ட மன்றத்திற்கும் பொது மக்களுக்கும் தெரிவித்துக் கொள்ள, கடமைப் பட்டிருக்கிறேன்.

என்றாலும், அரசின் கல்வித் துறையும் நிதித் துறையும் இப்போது மிகத் தீவிரமாக பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. இப்போது இருக்கின்ற பிரச்சினை, அவர்கள் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு ஊதியம் வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். இன்றைக்கு துறை எடுத்திருக்கின்ற கணக்கின் படி சுமார் 746 ஆசிரியர்கள், 332 பள்ளிக்கூடங்களிலே பணியாற்றுகிறவர்கள், அவர்களுக்கு எப்படி ஊதியத்தைப் பிரித்து வழங்குவது. ஒரு ஆசிரியருக்கு எத்தனை மாணவர்கள் என்று நிர்ணயிப்பது என்ற பிரச்சினையை விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அநேகமாக மிக விரைவிலே முடிவெடுத்து அரசு அறிவிக்கும். "ஆக்கப் பொறுத்தது கொஞ்சம் ஆறப் பொறுக்க வேண்டும்" என்று மாத்திரம் கேட்டுக்கொண்டு, இந்த பிரச்சினை





யில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மிகத் தெளிவாக இந்த ஆசிரியர்களுக்கு ஊதியத்தை வழங்கலாம் என்று அனுமதி அளித்துவிட்டதற்குப் பிறகு அது முறைப்படி, நியாயப்படி, சட்டப்படி வழங்குவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. விரைவிலே அரசு ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : நான் இதிலே கொஞ்சம் சொல்லவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே வேண்டாம். நான் ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். இதிலே வேண்டாம். ஆணை வழங்கப்படும் என்று அமைச்சர் சொல்லிவிட்டார். அதற்கு அடுத்து நடைமுறைப் பிரச்சினை. இதில் நீங்கள் பேசிவிட்டீர்கள்.

## 3. தகவல் கோரல்

## உறுப்பினர் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம்வழுதி அவர்கள் நேற்றையதினம் என்னிடத்திலே ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொடுத்திருந்தார். அந்த உரிமைப் பிரச்சினை முறையாக இல்லை என்று நான் அனுமதி மறுத்திருந்தேன். அதற்கு மேற்கொண்டு சில விளக்கங்கள் இன்றையதினம் என்னிடத்திலே கொடுத்திருக்கிறார். அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி : ஸ்பீக்கர், சார்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, திரு. ம. சின்னசாமி,

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய தீர்ப்புக்கு மேலே பேச்சு கிடையாது. என்னுடைய ஆய்விலே இருக்கிறது. (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள் என்னுடைய ஆய்விலே இருக்கிறது. நீங்கள் அதிலே என்ன பேச வேண்டியிருக்கிறது? (குறுக்கீடு) திரு. இளம்வழுதி உட்காருங்கள்;

என்னுடைய ஆய்விலே இருக்குபோதும் நீங்கள் பேசுவதற்கு எந்த
அனுமதியும் இல்லை. என்னுடைய ஆய்விலே இருக்கிறது என்று
சொல்லும்போது, அதிலே பேசுகிறேன் என்று சொல்வதற்கு ஒரு
உறுப்பினருக்கு உரிமையில்லை. பேரவைத் தலைவருடைய
ஆய்விலே இருக்கிற பிரச்சினையில் ' நான் பேசவேண்டும் '
என்று சொல்வதற்கு யாருக்கும் எந்த உரிமையும் இல்லை என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அமருங்கள், திரு. ம.
சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே,

''திருச்சி மாவட்டம், மாயனூர் தமிழ்நாடு....(குறுக்கீடுகள்)

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் உரிமைப்
பிரச்சினை கொடுக்கிறபோது முறையாக எப்படிக் கொடுப்பது
என்று தெரியாமல் கொடுத்துவிட்டு, அதை நான் நிராகரிக்கும்
போது, அதற்கு பிறகு மறு விளக்கம் சொல்லவேண்டும் என்று
சொல்லிக் கொண்டிருப்பதற்கு என்ன இருக்கிறது ? ஒரு
உரிமைப் பிரச்சினையைக் கொடுக்கும்போதே நான் இன்னார்
மேலே கொடுக்கிறேன், அப்படி என்றுகூட கொடுக்காமல்
உரிமைப் பிரச்சினை என்று ஒன்றைக் கொடுத்து விட்டு அதை
நிராகரித்தால் அதற்கு நான் விளக்கம் கொடுக்கிறேன் என்று
திரும்ப வந்து கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய
ஆய்விலே இருக்கிறது என்று சொல்கிறேன். அதிலே நான்
பேசுகிறேன் என்று சொல்லிவிட்டு இந்த மாதிரி முரண்டு
பிடிப்பது சரியல்ல. ஒரு உறுப்பினர் (குறுக்கீடு) இருங்கள்.
என்னுடைய அறிவுரையை மீறி நீங்கள் பேசிக்கொண்டிருப்ப
தால் நடவடிக்கைக்கு ஆளாகவேண்டி வரும். ஏற்கெனவே
நீங்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறீர்கள். இதே முறையிலே
பேசித்தான் வெளியேற்றப்பட்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) திரு.
இளம்வழுதி, உட்காருங்கள். இளம் வழுதி, நீங்கள் உட்கார
முடியுமா முடியாதா உட்காரவேண்டும். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-05

4. உறுப்பினர் பேரவைப் பணிகளினின்றும் தற்காலிகமாக நீக்கி
வைக்கப்பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள்.

திரு. இளம்வழுதியும் திரு. தாமரைக்கனியும் உட்கா
வேண்டும். நான் நின்று கொண்டிருக்கிறேன், உட்காருங்கள்



திரு. தாமரைக்கனி உட்காருங்கள். நான் நின்றுகொண்டிருக்
கிறேன். திரு. இளம்வழுதி அவையை விட்டு வெளியேற
வேண்டும். திரு. இளம்வழுதி அவையில் குழப்பம் செய்ய
வேண்டும் என்கிற எதோ ஒரு தூண்டுதலின் பேரில்
தொடர்ந்து இங்கே குழப்பம் செய்து கொண்டிருக்கிற
காரணத்தால், அதை அனுமதிப்பதற்கில்லை. எனவே,
அமைதியாக உட்கார வேண்டும். என்றால் உட்கார
லாம். குழப்பம் செய்வேன் என்று சொன்னால் வெளியேற
லாம். (குறுக்கீடு) இல்லை, இல்லை, இதற்கு மேல் பேச்சு
இல்லை. திரு. இளம்வழுதி வெளியேற வேண்டும். திரு.
இளம்வழுதி வெளியேற வேண்டும். சார்ஜன்ட் அவரை வெளி
யேற்றலாம். (குறுக்கீடு) இரண்டாவது நாளும் இப்படிச் செய்
கிற காரணத்தால், சார்ஜன்ட் இப்பொழுது அவரை வெளி
யேற்றுவார். அவரை வெளியேற்றவும். (குறுக்கீடு) இல்லை,
இல்லை, வெளியேற வேண்டும். அவரை வெளியேற்றவும்.

(திரு. இளம்வழுதி பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்
பட்டார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு உரிமைப்
பிரச்சினையை நேற்றைய தினம் கொடுத்திருந்தார்.
உரிமைப் பிரச்சினையைக் கொடுக்கிறபோது, எந்தப் பிரச்
சினைப்பற்றி உரிமைப் பிரச்சினை கொடுக்கிறேன்
என்று தெளிவாகக் கொடுக்க வேண்டும். அவ்வாறு
கொடுக்காமல், யார் மீது கொடுக்கிறேன் என்பதும் இல்லா
மல், மொட்டையாக ஒரு உரிமைப் பிரச்சினை என்று என்னி
டத்தில் கொடுக்கப்பட்டு இருந்த காரணத்தால், யார்மீது
உரிமைப் பிரச்சினை வருகிறது என்பது தெளிவு இல்லாத
காரணத்தால், அந்த உரிமைப் பிரச்சினையை மறுத்திருக்
கிறேன் என்பதை அவருக்குக் கடிதம் வாயிலாகத் தெரிவித்திருந்
தேன். அதற்குப் பிறகு இன்று நான் அவைக்கு வருகிறபோது
9.17 மணிக்கு வந்து, அது யார் மீது என்று கேட்டிருக்கிறீர்கள்,
அது நான் இன்னார் மீது என்று கொடுக்கிறேன் என்று திரும்பக்
கொடுத்தார். உரிமைப் பிரச்சினை ஒன்று அவையில் கொண்டு
வரப்பட்டு, அதை அவைத் தலைவர் அனுமதி மறுத்ததற்குப்
பிறகு, திரும்ப அவைத் தலைவருக்கு விளக்கம் கொடுக்கிற
போது, அவைத் தலைவருக்கும், உறுப்பினருக்கும் மட்டும்
தான் அது தொடர்புடைய பிரச்சினையாக இருக்க முடியுமே
தவிர, அவைக்குத் தொடர்புடைய பிரச்சினையாக இருக்க
முடியாது. காரணம், அவைத் தலைவருடைய அனுமதி
மறுத்ததற்கு பிறகு, அந்தப் பிரச்சினையை மேற்கொண்டு
எழுப்ப முடியாதது ஆகிவிடுகிறது. எனவே, அவ்வாறு
ஆனதற்குப் பிறகு, இன்று திரும்பவும் வந்து, நான் ஒரு
பிரச்சினையை எழுப்புவேன் என்று திரும்பவும் முரண்டு
பிடித்துக் கொண்டிருக்கிற பழக்கமும், அடிக்கடி தலைவர்
எழுந்து நிற்கிறபோதும், அமரச் சொல்கிறபோதும்,
திரு. இளம்வழுதி தொடர்ந்து இப்படி உரத்த குரலில்

பேசிக் கொண்டிருப்பதும், அவைக் குறிப்பில் ஏதும் ஏறி டாது என்பதும் அவருக்குத் தெரியும், இருந்தாலும், அவைக்கு உள்ளே தினசரி குழப்பம் செய்வதற்கு ஒரு நபரை நாங்கள் வைத்திருக்கிறோம் என்று வெளியிலே ஒருவர் பேசிக்கொள்ள வேண்டும் என்பதற்காகச் செய்வதை போலத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இது எனக்குத் தோன்றுகிறது. அவையினுடைய விதியின்படி, 224-வது விதியின்படி பேரவைத் தலைவர் இசை வினை மறுத்தாலும் அல்லது அவையின் கவனத்தை ஈர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதினாலும், அறிவிப்பு அளித்த உறுப்பினருக்கு அத்தகவலை அளிப்பின் அதன் பிறகு அப்பொருள் குறித்து எவ்வகையிலும் பேரவையில் எழுப்பப் படக் கூடாது என்பது தான் பேரவையினுடைய 224-வது விதி. அதன்படிதான் நான் இசைவை மறுத்த பின்னரும், தொடர்ந்து அவர் நான் சொன்னதைப்போல, வெளியிலே இருக்கிற யாரையோ திருப்திப்படுத்துவதற்காகவும், தினமும் இந்த அவையிலே வந்து, தன்னாலே எதுவும் செய்ய முடியும் என்பதைக் காட்டுவதுபோலவும் அவர் பேசிக்கொண்டிருக்கிற காரணத்தாலே, தொடர்ந்து இரண்டாவது முறையும், இந்த ஒரு கூட்டத் தொடருக்குள்ளேயே அவர் வெளியேற்றப் பட்டிருக்கிற காரணத்தாலும் விதிகளின்படி எஞ்சி இருக்கிற இந்தக் கூட்டத் தொடருக்கு அவையில் அமரக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு, திரு. ம. சின்னசாமி (குறுக்கீடு) தயவு செய்து இதிலே ஒன்றும் வேண்டாம். (குறுக்கீடு).

(திரு. ஜி. பழனிசாமி, திரு. வே. தம்புசாமி, டாக்டர் தே. குமாரதாஸ், திரு. ச. இராமச்சந்திரன் ஆகியோர் குறுக்கீடுகள்).

ஒன்று என்னை விதிப்படி நடத்த விடுங்கள். உங்களுடைய அரசியல் கூட்டுகளுக்காக நான் இங்கே அவையை நடத்த முடியாது. (குறுக்கீடு) இங்கே விதிகளின்படி தான் அவையை நடத்த முடியும். (குறுக்கீடு) அவரை அமரச் சொல்கிற வாய்ப்பை நீங்கள் பெற்றிருந்தீர்கள். அமரச் சொல்லவும் இல்லை. அதன் பின்னர் நான் விதிகளின்படி ஒரு முடிவை அறிவிக்கிறபோது. அதன்மீது பேச வேண்டும் என்றால் ஒரு அவைத் தலைவரே உங்களுக்குத் தேவையில்லை என்று முடிவு செய்துவிடலாம். (குறுக்கீடு) நான் விதியைச் சொல்கிறேன். விதியைத் தவறு என்று வேண்டுமானால் சொல்லுங்கள், (குறுக்கீடு) இல்லை, இல்லை, இது விதி (சிரிப்பு). நான் விதியை மீற முடியாது. (குறுக்கீடு) எனகுகு நீங்கள் கொடுத்திருக்கிற விதி. (குறுக்கீடு) ஒரே கூட்டத்தொடரில் ஒரு உறுப்பினர் இரண்டாவது முறை யும் அவையிலிருந்து பேரவைத் தலைவரால் வெளியேற்ற நேர்ந்தால் அது விதி. (குறுக்கீடு)



முற்பகல் 11-10

எனக்கு நீங்கள் சில விதிகளைக் கொடுத்துதான் அவையை நடத்தச் சொல்லியிருக்கிறீர்கள். அந்த விதிப்படி தான் நான் நடத்த வேண்டியிருக்கிறது. இந்த விதிகளை மீறி நான் அவையை நடத்திக் கொண்டிருக்க முடியாது. (குறுக்கீடு) தயவுசெய்து இதிலே வேண்டாம். கவன ஈர்ப்புக்குப் போக லாம். (குறுக்கீடு) மற்ற மற்றப் பிரச்சினைகளை எல்லாம் கேட்கிறீர்கள். அவை பொதுமக்கள் பிரச்சினை, அதற்கு நான் அனுமதி அளிக்கலாம். (குறுக்கீடு) இதை ஒரு அரசியல் பிரச்சினை போலக் கொண்டு போக வேண்டியதில்லை. (குறுக்கீடு) உங்களுக்கு விதியை நான் சொல்லியிருக்கிறேன். விதிகளையும் நீங்கள்தான் எனக்குக் கொடுத்திருக்கிறீர்கள். இந்த விதிகளின் படி அவையை நடத்த வேண்டுமென்றுதான் நீங்கள் சொல்லி யிருக்கிறீர்கள். அதன்படி நான் சில நடவடிக்கைகளை மேற் கொண்டால், நீங்கள் திரும்ப இதிலே பேசுவது என்ன நியா யம்' (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். திரு. ம. சின்னசாமி.

## 5. கவன ஈர்ப்பு.

### திருச்சி மாவட்டம் மாயனூர் தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் பைப் கம்பெனி லே-ஆப் செய்யப்பட்டுள்ளது குறித்து.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி மாவட்டம், மாயனூர் தமிழ்நாடு ஆஸ்பெஸ் டாஸ் பைப் கம்பெனி லே-ஆப் செய்துள்ளது குறித்து" பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழி லாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழி லாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இந்தப் பிரச்சினை போகட்டும். இது ஒரு தொழிற்சாலை மூடியிருப்பது பற்றிய பிரச்சினை.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

### அறிக்கை

திருச்சி மாவட்டம் மாயனூரில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப் பரேஷன் நிறுவனத்தை சேர்ந்த தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் (பைப்ஸ்) தொழிற்சாலையில் சுமார் 261 தொழிலாளர்களு

வேலை செய்து வருகின்றனர். இந்த தொழிற் சாலையின் மொத்த உற்பத்தித் திறன் 36,000 மெட்ரிக் டன் ஆகும். ஆனால் 1991–92-ஆம் ஆண்டு 7,406 மெட்ரிக் டன் உற்பத்தி அளவுக்குதத்தான் ஆர்டர்கள் வந்தன என்பதால் உற்பத்தி செய்யப்பட்ட 6,603 மெட்ரிக் டன் பொருட்கள் விற்பனை ஆகாமல் தேங்கி விட்டதாகவும் இதன் மதிப்பு ரூ. 509.95 லட்சம் எனவும் தெரிய வருகிறது. இந்நிறுவனம் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வருவதாலும் 1990–91-ஆம் ஆண்டு வரை மொத்த நஷ்டம் ரூ. 1,282.02 லட்சம் ஏற்பட்டுள்ளதாலும் 173 தொழிலாளர்களை லே-ஆப் செய்ய அனுமதி கோரி நிர்வாகம் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 25-எம்-ன் கீழ் மதுரை தொழிலாளர் இணை ஆணையருக்கு மனு செய்துள்ளது. இந்த விண்ணப்ப மனு 27–1–1992 அன்று மதுரை தொழிலாளர் இணை ஆணையர் அவர்களால் பெறப்பட்டுள்ளது. தொழிலாளர் இணை ஆணையர் ஒரு நீதிமுறை சார்புடைய அதிகாரி ( Quasi Judicial Authority ) என்பதால் இந்த விண்ணப்பத்தின்மீது உரிய விசாரணைகள் நடத்தி 60 தினங்களுக்குள் தனது உத்தரவினைப் பிறப்பிப்பார். மதுரை தொழிலாளர் இணை ஆணையர் இப்பிரச்சினை குறித்து சட்டப்படி நடவடிக்கை எடுத்து வருவதால் அரசு தற்போது தலையிடு வதற்கில்லை.

தற்போதுள்ள சூழ்நிலையில் தொழிலாளர்களுக்கு வேலை எதுவும் இல்லை. எனினும் தொழிலாளர் எவரும் லே-ஆப் செய்யப்படவில்லை. அவர்கள் முழுச்சம்பளம் பெற்று வருகின்றனர். தொழில்துறை, தமிழ்நாடு குடிநீர் வாரியம் மற்றும் தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷனிடமிருந்து நிதியுதவி பெற்று இந்த நிறுவனத்தை மீண்டும் இயங்கிட நடவடிக்கை எடுத்து வருகிறது.

<u>திரு. ம. சின்னசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாயனூர் அஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலை தமிழ் நாடு சிமெண்ட் கார்ப்பரேஷனால் நடத்தப்படுகிற ஒரு தொழிற்சாலை. அங்கே மொத்த உற்பத்தி 36,000 மெட்ரிக் டன் என்று இருந்தாலும் 1991–92-ஆம் ஆண்டில் வெறும் 7,000-த்துச் சில்லரை மெட்ரிக் டன்கள்தான் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 5 கோடி ரூபாய்க்குமேலே மதிப்புள்ள பைப்புகள் தேங்கிக் கிடக்கின்றன. ஆகவே இந்த நிலைமையில் அந்த ஆலையை மூடுகிற ஒரு அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவைத் தலைவரால் வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் பேரவை லாபியில் பத்திரிகையாளர்களைச் சந்திப்பது மரபல்ல என்று நேற்றே நான் ஓர் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறேன்.



அதை வெளியேறி இருக்கிற உறுப்பினரும் கவனத்தில் சொள்ள வேண்டும். பத்திரிகையாளர்களும் அதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. ச. இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடிதோச்சி மெல்ல எறிக' என்பது தமிழ் மரபு.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இது நிறைய தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிற பிரச்சினை. நீங்கள் சொல்வது ஒருவர் பிரச்சினை. நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பற்றிய பிரச்சினை இது. திரு. ம. சின்னசாமி.

<u>திரு. ம. சின்னசாமி :</u> ஆகவே நட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிற ஆலையை நட்டம் ஏற்படாமல் நடத்துவதற்காக அதன்மூலம் தொழிலாளர்களுக்கு நிரந்தரமாக வேலை அளிப்பதற்காக, அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்காக அரசு ஏதேனும் முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையானது தமிழ்நாடு குடிநீர் வாரியம் மற்றும் தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் ஆகியவற்றிடமிருந்து நிதி உதவி பெற்று இந்த நிறுவனத்தினை மீண்டும் இயக்கிட நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்போது தொழிலாளர்கள் முழுச் சம்பளம் பெற்று வருகிறார்கள்.

## 6. அறிக்கை அளித்தல்.

### பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எ. ஏகாம்பர ரெட்டி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

<u>திரு. எ. ஏகாம்பர ரெட்டி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தாவது சட்டமன்றப் பேரவையின் 1991-92 ஆம் ஆண்டுக்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவராகிய நான் அக்குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. சட்ட முன் வடிவுகள்—அறிமுகம் செய்தல்
டாக்டர் எம்.ஜி.ஆர்., மருத்துவப் பல்கலைக் கழகம் சென்னை (திருத்த) சட்ட முன் வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர்., மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (திருத்த) சட்டமுன்வடிவு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை (திருத்த) சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை.)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம், நேற்றையதினம் பேசி, இடையில் நிறுத்தப்பட்டிருந்த திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் இப்போது தன்னுடைய உரையைத் தொடருவார்கள்.

3. உறுப்பினர் பேரவை பணிகளினின்றும் தற்காலிக நீக்கி வைக்கப்பெறுதல்— தொடர்ச்சி.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன பரிசீலனை? (குறுக்கீடு) . . . . . . யாராவது ஒருவர் பேசுங்கள்.





திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சட்டமன்ற உறுப்பினர் சொல்லியிருப்பதில் பெயரை மென்ஷன் செய்யாமல் கொடுத்திருக்கிறார். ஆகவே பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. இல்லை அதற்கு என்னால் இசைவு மறுக்கப்பட்டு, அதற்குப் பிறகு அவர் விளக்கம் ஒன்று கொடுத்திருக்கிறார். அதுவும் என்னுடைய ஆய்வில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். இசைவு மறுக்கப்பட்ட பிறகு இங்கே எழுப்பக் கூடாது என்று விதி இருக்கிறது. அதைத்தான் சொன்னேன். (குறுக்கீடு) அந்த விதிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று சொல்கிறீர்களா? வேண்டாம், அந்த விதியை விட்டு விடுங்கள் என்று சொல்ல வருகிறீர்களா?

திரு. ஜி. பழனிசாமி : விதியை மறுக்கவில்லை. சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர், முன்வரிசை உறுப்பினர் ஒருவர் தாக்கப்பட்டு, இன்றைக்கு மருத்துவமனையில் இருக்கிறார். அவர் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினைக்குள் போவது சரியல்ல. நேற்றையதினம், தான் தாக்கப்பட்டேன் என்று சொன்ன உறுப்பினருக்கும் பேச அனுமதி அளித்தேன். அவர் முறையாக தன்னுடைய வாதத்தை எடுத்து வைத்தார். தான் தாக்கப்பட்டதைப் பற்றிச் சொன்னார். அதை முதலமைச்சரும் ஒத்துக்கொண்டார். தாங்கள் தாக்கப்பட்டிருக்கிறீர்கள், அதைப்போல உங்கள் தரப்பினரால் இந்தத் தரப்பினரும் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற விபரத்தையும் சொன்னார்கள். அதற்குப் பிறகு நேற்றைய தினமும் இதே பிரச்சினையைப் பற்றிப் பேசுவேன் என்று சொல்லி, அவருடைய கட்சியின் தலைவர் வெளி நடப்புச் செய்ததற்குப் பிறகும் அவர் பேசிக் கொண்டிருந்தார். அவரை அமரச் சொன்னேன். அதற்குப் பிறகும் நேற்றும் விடுவதாக இல்லை, இன்றும் இன்னொரு பிரச்சினையைக் கிளப்புகிறார். அந்தப் பிரச்சினையைப் பற்றி நான் என்னுடைய விளக்கத்தைச் சொல்லாமலேயேகூட இருந்திருக்கலாம். ஆனால் அப்படி அவைக்குச் சொன்னதற்குப் பிறகும் நான் பேசுவேன் என்று முரண்டு பிடிவாதம் பிடித்துக்கொண்டிருந்த போது, உங்களால் அந்த நேரத்தில் தவிர்க்க முடியாமல், என்னை மறு பரிசீலனை செய்யுங்கள் என்று இப்போது சொன்னால், இந்த விதியைப் பற்றி மறுபரிசீலனை செய்யச் சொல்கிறீர்கள் என்றுதான் பொருள். அதை விதிக்குழுவில் உட்கார்ந்து விவாதித்து வேண்டுமானால் மாற்றுங்கள், அல்லது மறு பரிசீலனைசெய்யுங்கள். (குறுக்கீடு) இதிலே வேண்டாம்.

திரு. வே. தம்புசாமி : தொடர்ந்து வரக்கூடாது என்று . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு வெளியேற்றியது
சரி என்று சொன்னதற்குப் பிறகு, மேற்கொண்டு இரண்டாவது
முறையும் ஒரே கூட்டத்தொடரில் ஒருவரை வெளியேற்றி
னால், அவரை அவையின் எஞ்சிய காலத்திற்கும் வராமல் செய்ய
அறிவிக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. அவ்வாறுதான் செய்
யப்பட்டிருக்கிறது. அதுவும் விதியின் கீழேதான் வருகிறது.(குறுக்
கீடு) தாமரைக்கனி உட்கார வேண்டும். தாமரைக்கனியை
நான் அனுமதிக்கவில்லை. தாமரைக்கனி உட்கார வேண்டும்.
உங்களை நான் அனுமதிக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள். அவர்
என்னுடைய அனுமதி பெற்று பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள்
உட்காருங்கள். தாமரைக்கனி உட்கார வேண்டும். நான்
அவரை அனுமதித்திருக்கிறேன்.

(திரு. வே. தம்புசாமி, திரு. ஜி. பழனிசாமி, டாக்டர் தே.
குமாரதாஸ், திரு. ச. இராமச்சந்திரன் ஆகியோர் குறுக்கீடுகள்
என்னுடைய அனுமதி பெற்று பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள்
அனைவரும் உட்கார வேண்டும். நான் அனுமதித்து இருக்கிறேன்.
திரு. பழனிசாமி அவர்கள் (குறுக்கீடு) மறுபரிசீலனை என்று
ஆரம்பித்து, பிரச்சினைகக்குள் போகிறார். இது நன்றாக
இல்லை. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு
வந்துவிட்டோம். திரு. சிவசுப்பிரமணியம் பேசவேண்டும்.
டாக்டர் குமாரதாஸ் உட்காரவேண்டும்....

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையைச் சேர்ந்த
மாண்புமிகு உறுப்பினர்கள் எப்படிப்பட்ட பிரச்சினைகளை எந்தக்
கருத்தின் அடிப்படையில் எழுப்புகிறார்கள் என்பது அல்ல,
அது முறைப்படி இருக்க வேண்டுமென்பதுதான் மாண்புமிகு பேர
வைத்தலைவர் அவர்களின் குறிக்கோள். ஆகவே பேரவைத்
தலைவர் அவர்கள் விதிமுறைகளின்படி, தீர்ப்பு அளித்ததற்குப்
பிறகு அவையின் ஒழுங்கு விதிமுறைகளைக் கடைப்பிடிக்க மறுத்து
அந்த விதிமுறைகளை மீறி, ஒழுங்கு மீறி நடக்கின்றபோது,
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தீர்ப்பு சொல்ல வேண்
யிருக்கிறது. ஆகவே அது முறையல்ல என்று சொல்லியாகி விட்
டது, உட்காருங்கள் என்றும் சொல்லியாகிவிட்டது. மூன்று
முறை நான்கு முறை உட்காருங்கள் என்றும், அமைதி காப்பாற்
றுங்கள், விதியைப் பின்பற்றுங்கள் என்றும் சொல்லியாகிவிட்டது.
அதற்குப் பிறகும் விதியை மீறி வருகின்ற சமயத்தில்தான்
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தன்னுடைய அதிகாரத்
தின் அடிப்படையில் அவர்களை வெளியேற்ற வேண்டி வந்தது.
இரண்டாவது நாளும் வெளியேற்ற வேண்டிய அவசியம் வந்தது
அதைத்தான் தெளிவாக விதிகளிலும் குறிப்பிட்டிருக்கிறோம்.

முற்பகல் 11-20

''உறுப்பினர் ஒருவரது நடத்தை மிகவும் ஒழுங்கீனமானது
எனப் பேரவைத் தலைவர் கருதினால், அவரைப் பேரவையி
லிருந்து உடனடியாக வெளியேறுமாறு அவர் கட்டளை





யிடலாம். அவ்வாறு பணிக்கப்பெற்ற உறுப்பினர் உடனடியாக
பேரவையிலிருந்து வெளியேறிவிடுவதோடு அன்றைய கூட்டத்
திற்கு மீண்டும் வராமலும் இருக்க வேண்டும். ஓர் உறுப்பினர்
ஒரே கூட்டத் தொடரில் இரண்டாவது முறையாக அவ்வாறு
வெளியேறுமாறு பணிக்கப்பெற்றால், அக்கூட்டத் தொடர் காலத்
திற்கு மேற்படாதவாறு, அக்கூட்டத் தொடரில் நடக்க இருக்கும்
கூட்டங்களுக்கு வராமல் இருக்குமாறு பேரவைத் தலைவர் கட்
டளையிடலாம். அவ்வாறு பணிக்கப்பெற்ற ஓர் உறுப்பினர்
அதன்படி கூட்டங்களுக்கு வராது இருக்க வேண்டும். அந்த
உறுப்பினர் வெளியேற மறுப்பின், அவரை வலுக்கட்டாயமாக
அகற்றுமாறு ''பேரவை சார்ஜென்டிற்கு'' பேரவைத் தலைவர்
ஆணையிடலாம். அவ்வாறு ஆணையிடப்பெற்ற உறுப்பினரின்
வராமை, அரசியலமைப்புச் சட்டத்தின் 190-ஆவது பிரிவு (4)-
ஆவது உட்பிரிவின்படி வராமை குறித்துக் கணக்கிடுவதில் சேர்த்
துக் கொள்ளப் பெறமாட்டாது'' என்று விதியில் கூறப்பட்
டுள்ளது. இந்த விதிமுறைகளை மாண்புமிகு உறுப்பினர் பரிதி
இளம் வழுதி அவர்கள் நன்கு உணர்வார்கள். உணர்ந்தற்குப்
பிறகும் செய்கிறார்கள் என்றால் வேண்டுமென்றே செய்கிறார்
கள் என்றுதான் பொருள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை நான் உணர்த்தியும்
விட்டேன். ஒருவேளை அவர் அறியாமல் இருந்தால், இதெல்
லாம் விதி என்று நான் உணர்த்தியும் விட்டேன். (குறுக்கீடு)
தயவு செய்து இதிலே மேற்கொண்டு யாரும் பேச வேண்டாம்.
என்னுடைய தீர்ப்புக்கு மேலே இங்கே ஒரு மாறுபாடான கருத்து
நிலவுகிறது என்ற மாதிரி வரும். ஆகவே வேண்டாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேர
வைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
தொடர்ந்து இரண்டு நாட்களாக உங்களுடைய ஆணைகளை
ஏற்றுக்கொள்ளாமல் சபையிலே தொடர்ந்து முரண்டு பிடிக்
கின்ற காரணத்தால் சபையை விட்டு வெளியேறுமாறு இரண்டா
வது நாளாக கட்டளையிட்டிருக்கிறீர்கள். இரண்டாவது நாளாக
கட்டளையிடுகிற நேரத்தில் சபைத் தொடருக்கு அதிகப்படாத
அளவிற்கு வெளியேற்றும் அதிகாரம் உங்களுக்கும், பேரவைக்
கும் இருக்கிறது. எதிர் வரிசையில் என்னோடு வீற்றிருக்கிற
நண்பர்கள் மிகவும் அதிகப்படியான தண்டனை என்று சொல்லு
கிறார்கள். இருந்தாலும் ஏற்கெனவே இன்றைய தினம் நீங்கள்
வெளியேற்றி விட்டீர்கள். இன்று நாள் முழுவதும் அவர்
வெளியே இருக்கும் சூழ்நிலையில் அதற்கு மேல் தண்டனை வாங்
குவது சரியல்ல என்று நண்பர்கள் சொல்லுகிறார்கள். நீங்கள்
அதைப் பற்றி மறுபரிசீலனை செய்யலாம். ஆனால் அவர்கள்,
நண்பர்கள் ஒரு உத்திரவாதம் அளிக்க வேண்டும். நாளைய தின
மாவது சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் நேரத்தில் அவர்
பேரவைத் தலைவருடைய ஆணைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்து
கொள்வார் என்று உத்திரவாதம் அளிப்பார்களேயானால் நீங்கள்

இதை பரிவோடு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). மறு பரி
சீலனை செய்கின்ற அதிகாரம் உங்களுக்கும், பேரவைக்கும் நிச்
சயமாக உண்டு. அந்த உத்திரவாதம் அளிப்பார்களேயானால்
மறுபரிசீலனை செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பொறுப்பேற்று உத்திரவாதம்
அளிக்க முன் வராவிட்டாலும், மாண்புமிகு உறுப்பினர் பரிதி
இளம்வழுதியாவாது இனி இப்படி நடந்துக்கொள்ள மாட்டேன்,
வருந்துகிறேன் என்று எழுதிக் கொடுத்தால் இதைப்பற்றி நீங்கள்
பரிசீலிக்கலாம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்
னவர் அவர்கள் தெரித்ததைப் போல, எதிர்க்கட்சியில் உள்ள
தலைவர்கள் அந்த உத்திரவாதத்தை அளிப்பதற்குத் தயங்குவார்
கள் என்பது எனக்கும் தெரியும். அந்த உறுப்பினராவது
இன்றோ அல்லது நாளையோ, அவை கூடுவதற்கு முன்னரே என்
னைச் சந்தித்து, இனிமேல் அவைத் தலைவருடைய கட்டளைக்கு
பணிந்து நடப்பேன் என்று உறுதி அளிப்பாரேயானால் என்
னுடைய தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய நான் யோசிக்கிறேன்.

8. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது
விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் பேருரைக்கு நன்றி
கூறும் தீர்மானத்தின் மீது விவாதம் தொடர்ச்சி, திரு. கு. சிவ
சுப்பிரமணியன்.

*திரு. கு. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றத்தில் மேதகு ஆளுநர்
அவர்கள் அளித்த உரையின் மீது நடைபெறும் விவாதத்தில்
கலந்துகொண்டு என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு
அளித்தமைக்காக முதற்கண் என்னுடைய நன்றிகலந்த வணக்
கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை
ஏற்றுக்கொண்ட பிறகு தமிழகத்தின் ஏழையெளிய மக்களுக்காக
நல்லபல திட்டங்களை வகுத்து, அந்த திட்டங்களை செயலாற்
றிட வேண்டும் என்பதற்காக ஆளுநர் உரையின் வாயிலாக
பேரவையில் நல்ல உரையை உவந்து அளித்திருக்கிறார்கள். இதன்
மீது கருத்துக்களை அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை
பேரும் காங்கிரஸ் பேரியக்கத்தின் சட்டமன்ற உறுப்பினர்களும்.
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தி
னுடைய மாண்புமிகு உறுப்பினர்களும் பலவாறு எடுத்துரைத்
துள்ளனர்.





4. உறுப்பினர் பேரவைப்பணிகளின்றும் தற்காலிகமாக நீக்கி
வைக்கப் பெறுதல்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த உறுப்பின
ராவது இனிமேல் விதிப்படி, முறைப்படி அவைத்
தலைவருடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்பேன் என்று
சொன்னால் நான் அனுமதிக்கிறேன் என்று சொன்னேன்.
ஆனால் இதற்கு முன்னர், 1991 சனவரி 24 ஆம் தேதி, இதே
பேரவையில் முன்னாள் முதலமைச்சர், அன்றைய முதலமைச்சர்
அன்று ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சியின் காரணமாக அவையி
லிருந்து வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் பற்றி குறிப்பிடு
கிற போது அவர் சொன்ன கருத்தையும் இப்போது உங்களு
டைய நினைவுக்குக்கொண்டு வருவது எனது கடமை என்று
நான் கருதுகிறேன் அவா சொல்லியிருக்கிறார்.

''கேள்வி நேரம் முடிகிற நேரத்தில் திடீரென்று அமெரிக்கப்
படை விமானங்கள் ஈராக்கில் நுழைந்ததைப்போல் நுழைந்து
அதே போல் படபடவென்று உள்ளே நுழைவது, நுழைந்தவுடனே
ஒரு அமளியை ஏற்படுத்த வேண்டியது, ஒரு மணி நேரம்,
இரண்டு மணி நேரம் சட்டமன்றம் நடக்காமல் இருக்கிற
ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டியது. இவைகள் எல்லாம்
முறைதானா? இப்படி நாங்கள் செய்யமாட்டோம் செய்ததற்கு
'நாங்கள் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறோம்'' என்று எழுதித்
தருவார்களானால், அறிக்கை விடுவார்களானால், அதற்குப்
பிறகு அன்றையதினம் இன்றைக்கு எதிர்க்கட்சி தலைவர் அவர்கள்
கேட்டதைப்போல அன்றைய எதிர்க்கட்சி துணைத்தலைவர் ஒரு
கோரிக்கை விட்டபோது, 'எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்க
ளுடைய யோசனையை நாங்கள் ஆராய்வோம்' என்றுதான் தான்
சொல்லியிருக்கிறார்.

முற்பகல் 11·25

நான் 'மன்னிப்பு கேட்க வேண்டும், அறிக்கை விடவேண்டும்'
என்றெல்லாம் கூட சொல்லவில்லை. 'இனிமேல் கட்டுப்பட்டு
நடக்க வேண்டும்' என்று மட்டும் தான் கேட்டிருக்கிறேன்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும்
ஒலி) திரு. சிவசுப்பிரமணியன் தொடர்ந்து பேசலாம்.

8. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது
விவாதம்— தொடர்ச்சி.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட
வுடனே, எங்களுடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித்
தலைவி அவர்கள் போராளிகளையும், தீவிரவாதிகளையும் இனம்
கண்டு கொண்டு தீவிர நடவடிக்கைகள் மட்டுமல்லாமல், அதிரடி

நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாகத்தான் சட்டம்
ஒழுங்கு பாதுகாக்கப்பட்டு, தமிழகம் இன்று அமைதிப்
பூங்காவாகக் காட்சியளிக்கிறது. இதை நாட்டோரும் நல்லோ
ரும் பாராட்டுவதைப் பார்க்கிறோம். இது எங்கள் இதய
தெய்வத்திற்கு கிடைத்த முதல் வெற்றியாகும்.

எங்கள் இதய தெய்வம் கடந்த 7—1—1992 அன்று தென்
னாற்காடு மாவட்டத்திற்கு, விழுப்புரத்திற்கு, தான் முதலமைச்ச
ராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு பிற்படுத்தப்பட்ட மக்க
ளுடைய பிரதிநிதியென்பதை நிரூபிக்கும் வகையில் வருகை
தந்து எங்களுடைய மாவட்டத்தில் 1.20 கோடி ஏழை மக்களுக்கு
இலவச வேட்டி சேலைகளை வழங்கும் திட்டத்தையும்
பல்வேறு நலத்திட்டப் பணிகளையும் தொடங்கி வைத்ததற்கு
இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை எங்கள் இதய தெய்வத்
தினுடைய பொற்பாதங்களுக்கு அர்ப்பணித்து கொள்கிறோம்.
அடுத்து, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்
அவர்களும் அவர்களுடைய இலாக்கா மூலமாக தந்தை
பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளை குறிப்பாக
என்னுடைய தொகுதியில் கடலூரிலிருந்து குறிஞ்சிப்பாடிக்கும்,
கடலூரிலிருந்து பெரிய குப்பத்திற்கும், கடலூரிலிருந்து வாண்டி
யாம்பள்ளத்திற்கும், சிருபாலையூருக்கும் புதிய வழித்தடங்க
களை தொடங்கி வைத்ததற்கு அவர்களுக்கும், புரட்சித் தலைவி
அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றி கலந்த
வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேஷசாயி நிறுவனம் மூடப்பட்டு தி.மு.க. ஆட்சிக்
காலத்தில் கேட்பாரற்று கிடந்த நேரத்தில் நம்முடைய
புரட்சித் தலைவி அவர்களிடம் நாங்கள் கேட்டுக்
கொண்டதற்கிணங்க, நம்முடைய தொழிலாளர் நலத்துறை
அமைச்சர் அவர்களும் நானும் எடுத்துச் சொன்னதற்கிணங்க,
நம்முடைய இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் தாய்
உள்ளத்தோடு கருணைத்தொகை வழங்க முன்வந்து முத
லமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 400 ரூபாய்
என்று வடலூரில் இருக்கிற சேஷசாயி நிறுவனத்தில் பணியாற்று
கிற 1,500 தொழிலாளர்களுக்கு தீபாவளியை அவர்கள் மகிழ்ச்சி
யோடு கொண்டாடும் வகையில் கருணைத்தொகை வழங்கி
னார்கள். அவர்களுக்கு இந்த நேரத்தில் நான் நன்றி சொல்ல
கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற அரசியல் சூழ்நிலைகளைக்
கருத்திற் கொண்டு பார்க்கிறபோது இன்றைக்கு அரசியல்
மேடை வேறு, சட்டமன்றம் வேறு என்பதை உணர்ந்தவர்
கள் இங்கே டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பின்னால்
அணிவகுத்து நிற்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்க்கிற
போது காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் மத்திய அரசுக்கு
நன்றி தெரிவிக்கவில்லை என்று எங்களுடைய மாவட்டத்தைச்



சேர்ந்த, சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி மாண்புமிகு உறுப்பினர்
அழகிரி அவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள். கர்நாடகத்தில்
ஆளும் கட்சி காங்கிரஸ் கட்சி. அதற்கு முதலமைச்சராக
இருப்பவர், காங்கிரஸ் கட்சியினுடைய முதல்வர் பங்காரப்பா
அவர்கள் இந்திய ஒருமைப்பாட்டிற்கே வேட்டு வைத்து
தகர்க்கும் அளவுக்கு நிலைமை உச்சகட்டத்தை எட்டிய
போது, போராட்டம் நடைபெற்றபோது எங்கள் இதய தெய்வம்
புரட்சித் தலைவி அவர்கள் உரக்க குரல் கொடுத்தாரே....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: காங்கிரஸ் கட்சித்
தலைவர் பங்காரப்பா என்று சொல்லி இருக்கிறீர்கள்.
கர்நாடகா முதலமைச்சர் பங்காரப்பா என்று சொல்லுங்கள்.

<u>திரு. கு. சிவசுப்பிரமணியன்</u>: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். ஆளும் காங்கிரஸ்
கட்சியினுடைய முதலமைச்சராகப் இருக்கிற பங்காரப்பா அவர்
கள் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்
உரக்க குரல் கொடுத்த போது, தமிழ் மக்கள் இன்னலுற்று,
அல்லலுற்று துடிக்கிறார்களே என்று மத்திய அரசின் கதவு
களை ஓங்கி ஓங்கி தட்டிப் பார்த்தார்களே, அப்போது ஏன்
வாய்மூடி மௌனியானார்கள் என்பதை சிந்தித்துப் பார்த்து
மனதில் கைவைத்து, உள்ள சுத்தியோடு கூறுங்கள் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

''உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார் உறவு
கலவாமை வேண்டும்'' என்று குறிஞ்சிப்பாடி தொகுதியில்
இருக்கிற வடலூரில் வாழ்ந்த வள்ளலார் அவர்கள் சொல்லி
சென்றார்கள். அவர்கள் சொல்லி சென்றதற்கு பிறகு
இன்றைக்கு எந்த அளவுக்கு மத்திய மாநில அரசுகளுக்குடைய
கூட்டாட்சித் தத்துவம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது
என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரு கணம் அதை
சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில்
கேட்டுக் கொள்கிறேன்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட எங்களுடைய
புரட்சித் தலைவி அவர்கள் ஏழு மாத காலத்தில் இந்த
நாட்டினுடைய ஏழை எளிய மக்களுக்காக, வறுமைக் கோட்டிற்கு
கீழே இருக்கும் மக்களுக்காக, பின்தங்கிய மக்களுக்காக பிற்படுத்தப்
பட்ட மக்களுக்காக, எப்படிப்பட்ட காரியங்களைச் சிந்தித்து
செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள்
அறிவீர்கள்.

முற்பகல் 11-30

ஆனால், காவிரி நீர்த் தகராறு குறித்து நடுவ
மன்றம் இடைக்கால ஆணையைக் குறிப்பிட்ட பிறகும்,
கூறிய பிறகும், மத்திய அரசிதழிலே வெளியிட வேண்டு

என்ற நமது கோரிக்கையை வைத்த பிறகும், உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்புக்கு விடப்பட்டு, மீண்டும் தீர்ப்பு வந்த பிறகும்கூட, இன்றைக்குத் தொடர் நடவடிக்கை தேவையென வலியுறுத்தி, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையிலே குறிப்பிட்டு உள்ளதை, வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கர்நாடகத் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தியதைச் சுட்டிக் காட்டி, பாதிக்கப்பட்டவர்களையும், பாதிப்பை ஏற்படுத்தியவர்களையும் பகுத்து ஆராய்ந்து, இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கட்டாயத்தை உருவாக்கி, கூட்டாட்சித் தத்துவம் வலிவு பெற மத்திய அரசு நடந்து காட்டவேண்டும் என்றும், வழிகாட்ட வேண்டும் என்பதையும் வலியுறுத்தி உள்ளதை இந்த நேரத்திலே நான் வரவேற்கிறேன்.

மதுவிலக்குக் கொள்கை பற்றி குறிப்பிடும்போது, பூரண மதுவிலக்கு வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இதில் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்த புரட்சிகரமான நடவடிக்கையால்தான், இந்த கள்ளச்சாராயம் காய்ச்சுவதும் விற்பதும் ஒழிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதேநேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதைப்போல், எங்கெங்கு நம் உறுப்பினர்கள், திறந்த மனத்தோடு, உள்ளசுத்தியோடு மாவட்ட அளவிலே காவல்துறை அதிகாரிகளோடு ஒத்துழைப்பு தருகிறார்களோ, அங்கெல்லாம் சாராயம் ஒழிக்கப்பட்டு விட்டது என்பதுதான் உண்மை. இன்றைக்குத் தென் ஆற்காடு மாவட்டம், கடலூர் போலீஸ் மாவட்டம் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஏன் என்று சொன்னால், எங்களுக்குப் பக்கத்திலே இருக்கிற பாண்டிச்சேரி மாநிலம்—உங்களுக்கு நன்றாகத் தெரியும்—அங்கே மதுவிலக்கு கொள்கை அமுல்படுத்தப்படாத காலத்திலேகூட, எங்களுக்கு தென் ஆற்காடு மாவட்டம் கடலூரில் காவல்துறை கண்காணிப்பாளர்களுக்கு உட்பட்ட பகுதியிலே மிகச் சீரோடும் சிறப்போடும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், அதற்கு நம்முடைய ஒத்துழைப்புதான் காரணம் என்பதை, பொதுமக்களுடைய ஒத்துழைப்பும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஒத்துழைப்புதான் காரணம் என்பதை, இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்' என்பதற்கு ஏற்ப, உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும், தர வேண்டும்' என்பதுதான் எங்களுடைய புரட்சித் தலைவியினுடைய கொள்கையாகும். ஏழை எளிய மக்களுக்கு வசதி வாய்ப்பற்ற மக்களுக்கு, இன்றைக்கு பல்வேறு திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்திக் கொண்டு இருப்பதை இந்த நாடே



அறியும். இன்றைக்கு விலைவாசி ஏற்றம் என்று சொல்கிறார்கள். அரிசி விலையேற்றம், பால் விலை ஏற்றம், பஸ் கட்டணம் ஏற்றம் என்று சொல்கிறார்கள். அதே நேரத்தில் பெட்ரோல், டீசல், எரிவாயு, நிலக்கரி போன்ற பொருட்களின் விலையை கடுமையாக உயர்ந்துள்ளது என்பதை நாம் உணர்கிறோம். இதையெல்லாம் இன்றைக்கு மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து ஒன்றாக அவர்கள் கலந்து ஆலோசித்து நல்ல முடிவை எடுப்பார்களேயானால் அவைகளின் விலைகளை எல்லாம் படிப்படியாக குறைப்பதற்கு வாய்ப்புண்டு. ஆனால், என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, ஈரான்-ஈராக் சண்டையின் போது ஏற்பட்ட இந்த எரிபொருள் விலையேற்றம், டீசல் விலையேற்றம், பெட்ரோல் விலையேற்றம் போன்றவைகள் எல்லாம் குறைப்பதற்கு மாறாக, இன்றைக்கு மீண்டும் மீண்டும் ஏற்றப்பட்டு இருக்கிறது என்பதை இந்தத் நாடு அறியும். ஆகவே, திட்டச் செலவினைக் குறைப்பதா, வேண்டாமா என்ற முடிவைச் செய்ய உள்ளதாகவும், நம்முடைய கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மானியச் சுமை 503 கோடி ரூபாய்க்கு உயர்ந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டு உள்ளது. இன்றைக்கு மத்திய அரசினுடைய வழங்கல் விலையைத் திருத்தி அமைத்ததன் விளைவாகத்தான் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஏழை எளிய மக்களைத்தானே வாட்டும் என்பதை உணர வேண்டாமா? ஆனால், புரட்சி வெடிக்கும், ஏழை எளிய மக்களுக்கு அரிசி, எண்ணெய், பருப்பு விலைகளைக் குறைத்துக் கொடுக்காவிட்டால் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இந்த அவையிலே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கேட்கின்ற நிதி ஒதுக்கீட்டினை மறுக்காமல், மத்திய அரசு கொடுக்குமானால், இன்றைக்கு எந்தவித பிரச்சினையும் இன்றி, இந்த நாட்டை நல்வழிப்படுத்தி, நல்ல திட்டங்களைத் தீட்டி, இந்த நாட்டு மக்களுக்கு, ஏழை, எளிய மக்களுக்கு, நலிந்த பிரிவினருக்கு, வசதி வாய்ப்பற்றவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

5½ கோடி தமிழ் மக்களின் ஈடு இணையற்ற, ஒப்பற்ற தலைவியாக திகழும் எங்கள் புரட்சித் தலைவி, கடந்த மாதம் 41.56 கோடி செலவிலே, 1.20 கோடி ஏழை, நிலமற்ற விவசாயக் கூலி செய்வோர்களுக்கு இலவச வேட்டி சேலைகளை வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். 1991 நவம்பரில் புயல், மழை காரணமாக ஏற்பட்ட சேதங்களுக்கு உடனடி நிவாரணமாக 30 கோடி ரூபாயை செலவழித்து, போர்க்கால அடிப்படையிலே அமைச்சர்கள், அதிகாரிகளின் ஒத்துழைப்பின் பேரில், புரட்சித் தலைவியினுடைய அரசு மக்களுடைய குறைகளைக் கேட்டு, தீர்த்து வைத்தது என்பதை இந்த நாடே அறியும்.

]திரு. கு. சிவசுப்பிரமணியன்] [1992 பிப்ரவரி 5

வேளாண் விளைபொருட்கள். இடு பொருட்கள் ஆகியவை
களை உடனடியாக வழங்கியதன் விளைவாக இன்றைக்கு விளைச்
சல் எல்லாம், குறிப்பாக தென் ஆற்காடு மாவட்டத்திலே
மீண்டும் நல்ல முறையிலே உருவாகியிருக்கிறது என்பதை
நான் குறிப்பிட விரும்புகிறேன்.

1,000 எக்டேரில் இறால் மீன் பண்ணைகளையும், 2 ஆயிரம்
எக்டேர் பரப்பளவில் காடுகளை வளர்க்கும் திட்டத்தையும் பற்றி,
இந்த உரையிலே குறிப்பிட்டு இருப்பதை நான் வரவேற்கிறேன்.
மேலும், என்னுடைய குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதியிலே
நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் இருக்கிறது. அந்த நிலக்கரி
நிறுவனத்தின் சார்பாக இன்றைக்கு நெய்வேலியிலே மூன்றாம்
நிலக்கரிச் சுரங்கம் வெட்ட வேண்டும் என்று இந்த உரையிலே
குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இதை மனதாரப் பாராட்டி,
அதில் உடனடியாக மத்திய அரசு தலையிட்டு செய்து தர
வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11.35

அடுத்து நான்கு வழிப் பாதையாக தேசிய நெடுஞ்சாலை
மாற்றுவதில் எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்திடக்
கோரியுள்ளதை வலியுறுத்தி நான் வரவேற்று பாராட்டுகின்றேன்.

20 ஆண்டுகளுக்கு மேலாகப் புதியதாக பெரிய மத்திய
திட்டம் ஒன்று கூட தமிழ்நாட்டில் தொடங்கப்படாதது பற்றி
யும், இந்த ஆளுநர் உரையில் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது.
இதனை மத்திய அரசு கவனத்தில் கொள்ளும் என இந்த
மாமன்றத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்
டுள்ளேன்.

3 புதிய பெரிய தொழில் வளர்ச்சி மையங்கள் ஏற்படுத்திட
செயற் குறிப்பு அனுப்பியும் இதுவரையில் ஒப்புதல் அளிக்க
வில்லை. இதற்கு எப்போது அனுமதி கிடைக்கும் என்றும்
தெளிவாகத் தெரியவில்லை எனக் குறிப்பிட்டுள்ளதை எண்ணிப்
பார்த்திட வேண்டாமா? ஏதோ கூடினோம், பேசினோம்,
கலைந்தோம் என்றில்லாமல், இந்த மாமன்றத்தில் அமர்ந்திருக்
கின்ற அத்துணை மாண்புமிகு உறுப்பினர்களும் நம்மைத் தேர்ந்
தெடுத்து அனுப்பிய மக்களுக்கு உரிய காலத்தில் படைக்க
வேண்டிய நல்ல காரியங்களை விரைந்து பெற்றுத் தர வழிவகைக்
கண்டறிய வேண்டாமா? தேவைப்பட்டால் மத்திய அரசின்
அலட்சியப் போக்கினை மாற்றி, நம் பக்கம் அவர்கள் பார்வை
யைத் திருப்பிட வேண்டும் என்பதையும் அதற்கும் நாம் நமது
இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்
தலைவி அவர்கள் தலைமையில் தயாராக இருக்கவேண்டும்
என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஜெயங்கொண்ட சோழபுரத்தில் தனியார் துறை த்
துறைப்போடு நிலக்கரி வெட்டி எடுக்கவும், மின் உற்பத்தி
செய்யவும் ரூ. 7,000 கோடி செலவில் புதிய பெருந்திட்டம்



1992 பிப்ரவரி 5] [திரு. கு. சிவசுப்பிரமணியன்]

பாராட்டுகிறேன். அத்
உருவாக்கப்பட்டுள்ளதை வரவேற்று
துடன் இதன் மூலம் 1500 மெகாவாட் மின் விசை உற்பத்தி
செய்ய இயலும் என்பது மட்டற்ற மகிழ்ச்சியைத் தரும் செய்தி
யாகும். ஆனால் இதற்கும் மத்திய அரசின் இசைவைப் பெற
வேண்டியுள்ளது.

இந்த அரசு எடுத்துள்ள அனைத்து திட்டங்களையும்
சாலைகள், பராமரித்தல், பழுதுபார்த்தல், தரமுயர்த்துதல்
போன்ற நல்ல திட்டங்களையும் வரவேற்கிறேன். மாண்புமிகு
போக்குவரத்துத் துறை அமைச்சகத்தின் மூலமாக 1,000 மக்கட்
தொகைக்கும் அதிகமாக உள்ள எல்லா கிராமங்களுக்கும் பேருந்து
வசதி என அறிவிக்கப்பட்டுள்ளதையும், 1992 மார்ச் முற்றும்
இந்த ஆண்டின் இறுதிக்குள் எல்லா ஊர்களுக்கும் குடிநீர் வழங்
கப்படும் என்பதையும், அனைத்து ஆதிதிராவிட மக்களுக்கும்,
பழங்குடியினருக்கும் குடிநீர் வழங்கப்படும் என அறிவித்துள்ளதை
யும் சென்னை மாநகருக்கு கிருஷ்ணா நதிநீர் 1995
ஜூன் மாதத்திற்குள் கொண்டுவருதல் போன்ற நல்ல திட்டங்
களையும் வரவேற்று மனதார பாராட்டுகிறேன்.

ஏழு மாவட்டங்களில் ரூ. 11.95 கோடி செலவில் வயது
வந்த 18.35 இலட்சம் பேருக்கு எழுத்தறிவு புகட்ட ஏழை
மக்கள் சமுதாயத்தில் வசதியற்றவர்கள் தங்களது உடல், உள
அறிவாற்றலை மேம்படுத்திக் கொள்ளவே இத்திட்டம் என்று
குறிப்பிட்டுள்ளதை பெரிதும் பாராட்டி வரவேற்கிறேன்.

ஓராசிரியர் பள்ளிகளுக்குக் கூடுதலாக ஒரு ஆசிரியர்
நியமிக்கப்படுவார்கள் என்பதையும் வரவேற்கிறேன், பாராட்
டக் கடமைப்பட்டுள்ளேன். பள்ளிகளில், மாணவ மாணவி
யர்க்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்படும் என்பதனையும்
வரவேற்கிறேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சகத்தின் மூலம், புரட்சித்
தலைவி மருத்துவ நலத் திட்டம் புதிய திட்டம் ஆறு மாத காலத்
திற்குள் நாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில்
நம் தமிழகத்தில் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில்
இன்று துவங்கி வைக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.
ஏழை, எளிய கிராமப்புற, மீனவ சமுதாய, நெசவாளர்கள்
விவசாயிகள், தினமும் வேலைக்குச் சென்றால்தான் சாப்
பிட முடியும் என்கின்ற கீழ்த்தட்டில் உள்ளவர்களைத் தேடிச்
சென்று செயல்படுத்தும் இத்திட்டம் மாபெரும் திட்டமாகும்.
இதனை நான் மனமார உளமார வரவேற்கிறேன்.

ஒரு இலட்சம் மகளிருக்கு சுய வேலைவாய்ப்பு வசதி
அளிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த மகளிர்
மேம்பாட்டுத் திட்டத்தையும், வரவேற்று பாராட்டுகிறேன்.
விவசாயிகளுக்கு பட்டா பாஸ் புத்தகம் வழங்குதல்,
நிலப்பதிவேடுகளை 'கணினி' மயமாக்குதல், நிலப் பதிவேட்டு
மேலாண்மைத் திட்டம், போன்றவை பாராட்டத்தக்க

[திரு. கு. சிவசுப்பிரமணியன்] [1992 பிப்ரவரி 5

திட்டங்கள் என்பதுடன், விவசாயிகள் வருவாய்த் துறை அலுவலர்
களுக்காக காத்துக் கொண்டிராமல், கடன் வசதி மற்றும்
உரங்கள் பெறுதல், நீதிமன்றங்களில் சொத்து ஜாமீன் தரவும்
இயலும் என்பதனால் இதனை உளமார வரவேற்கிறேன்.
பாராட்டவும் கடமைப்பட்டுள்ளேன். (குறுக்கீடு) (மணி
யடிக்கப்பெற்றது)

கூட்டுறவுச் சங்கத் தேர்தலை உண்மையிலேயே சொல்
லப்போனால், கடந்த தி. மு. க. ஆட்சியில் சேர்க்கப்பட்
டுள்ள சம்பந்தமில்லாத போலி உறுப்பினர்களை நீக்கிவிட்டு
தேர்தலை நடத்துவதற்கான சட்டம் ஒன்றினைக் கொண்டு
வர புரட்சித் தலைவி அரசு எடுத்துள்ள முடிவினை தமிழ்
நாட்டிலுள்ள கூட்டுறவு இயக்கத்தில் நாட்டங்கொண்டுள்ள
பங்கு கொண்டுள்ள அத்துணை பேர்களும், உளமார
வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

மத்திய அரசிடமிருந்து நிதி உதவியினை எதிர்பார்க்கும்
இந்த நேரத்தில் புரட்சித் தலைவியின் அரசு அனைத்துத்
தரப்பு மக்களையும் திருப்தி படுத்தும் வகையில், அமைதி
வழியில், ஒருமைப்பாட்டினைக் காத்து, வெற்றி நடை
போட்டு வருவது கண்டு உளம் பூரிக்கின்றேன், வரவேற்கிறேன்.
பாராட்டுகின்றேன். இந்த வாய்ப்பினை அளித்த பேரவைத்
தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

## 9. பார்வையாளர் மாடத்திலிருந்து ஒருவர் குரல் எழுப்பியது குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர்
அறிவிப்பு. இன்று வினாக்கள்-விடைகள் நேரத்தின்போது
பார்வையாளர் மாடத்திலேயிருந்தது பரமக்குடி சட்டமன்ற
உறுப்பினர், திரு. சுந்தரராஜ் அவர்கள் மூலம் அனுமதிச்
சீட்டு பெற்று அனுமதிக்கப்பட்ட ராமசாமி எனும் ஒருவர்,
பார்வையாளர் மாடத்திலேயிருந்து 'வாழ்க முதல்வர், வாழ்க
முத்துராமலிங்கத் தேவர்' என்று குரல் எழுப்பியதைத்
தொடர்ந்து அவர் காவலர்களால் பிடித்து வைக்கப்பட்டிருக்
கிறார். பார்வையாளர் மாடத்திலிருந்து அவ்வாறு குரல்
எழுப்புவது குற்றத்திற்குரிய செயலாகும் என்பதால் இது போல்
கோஷம் எழுப்பியவரை அழைத்துச் சென்று விசாரிக்க வேண்டி
யுள்ளது. விசாரணையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்
களையும் எங்கள் பகுதியின் தலைவரான முத்துராமலிங்க
தேவர் படத்தையும் அவையிலே பார்த்தவுடன் உணர்ச்சி
வசப்பட்டு குரல் எழுப்பிவிட்டேன். அதற்காக என்னை மன்
னிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று அவர் கோரிக்கை
விடுத்துள்ளார். எனவே அவர் எத்தகைய உள் நோக்கமும்
இல்லாமல் உணர்ச்சிவசப்பட்டு குரல் எழுப்பிய காரணத்தால்



1992 பிப்ரவரி 5] [பேரவைத் தலைவர்]

குரல் எழுப்பியது குற்றம்தான் என்றாலும் அவர் உள்
நோக்கத்தோடு எதுவும் செய்யவில்லை என்ற காரணத்தால்
அவரை மன்னித்து விடுவிக்க காவலர்களை கேட்டுக் கொள்
கிறேன்

முற்பகல் 11-40

ஆனால் மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் பார்வையாளர்
களுக்கு அனுமதி சீட்டு வழங்குகிறபோது, அங்கேயிருந்து குரல்
எழுப்புவதோ வேறு விதிமுறைகளுக்கு எதிரான செயலோ செய்
யக்கூடாது என்று தனித்தனியாக தாங்கள் அனுமதி சீட்டு
கொடுக்கிற ஒவ்வொரு நபரிடத்திலேயும் அறிவித்து அத்தகைய
அறிவுரையின் பேரில் அனுப்ப வேண்டும். அத்தகைய விதி
முறையை மாண்புமிகு உறுப்பினர்கள் பின்பற்ற வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பிரச்சினை சம்பந்தப்பட்ட மட்டில் அவர் எத்
தகைய உள்நோக்கத்தோடும் கோஷம் எழுப்பாமல் உணர்ச்சி
வசப்பட்டு எழுப்பியதாக தெரிவிக்கின்ற காரணத்தால் அவரை
விடுவிக்குமாறு காவலர்களை கேட்டுக் கொள்கிறேன்.

8. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது
விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : ஆளுநர் பேருரைக்கு நன்றி
கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி அடுத்து டாக்டர்
அ. செல்லக்குமார்.

டாக்டர் அ. செல்லக்குமார் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டிற்கான ஆளுநர்
உரையின்மீது நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தில் பேவதற்கு
வாய்ப்பினை பெற்றமைக்காக முதலிலே நன்றி தெரிவித்துக்
கொள்கிறேன். கடுமையான நிதிநெருக்கடியிலேயும், மத்திய
அரசு தேசிய பொருளாதார மறு மலர்ச்சியை கொண்டு வந்
திருக்கிற இந்தக் காலகட்டத்தில், நடப்பு ஆண்டில்
வளர்ச்சி திட்டங்கள் எதுவும் இதில் குறிப்பிடப்படவில்லை என்
றாலும்கூட, வளர்ந்து வருகின்ற இளைய தலைமுறை
யினருக்கு வேலை வாய்ப்புப் பற்றி எந்த விதமான உத்திர
வாதத்தையும் தராவிட்டாலும், விஷம்போல் ஏறி வருகின்ற
விலைவாசியை கட்டுப்படுத்துவதில் அரசு என்ன முயற்சிகளை
மேற்கொண்டு வருகிறது என்பதை பற்றியெல்லாம்
குறிப்பிடப்படாவிட்டாலும்கூட, தேசிய நலன் கருதி இந்த
ஆளுநர் உரையை நான் வரவேற்பதற்கு கடமைப்பட்டிருக்
கிறேன்.

தமிழகத்தில் தலைவிரித்தாடுகின்ற தீய சக்திகளை இனிமேல்
ஒருபோதும் தலைதூக்கவிடாத அளவுக்கு கட்டுப்பாட்டிற்குள்
கொண்டு வந்ததோடு அவைகளை ஒரு முடிவிற்கு கொண்டு

வருகிற விதமாக காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக அரசு எடுக்கின்ற எல்லாவிதமான முயற்சிகளையும் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெண் உரிமை பாடிய பாரதி பிறந்த இந்த மண்ணில் ஒரு பெண் முதலமைச்சரை தமிழகம் இன்றைக்கு கொண்டிருக்கிற இந்த வேளையில், மாலை வேளைகளில் மங்கையர்கள் நகை அணிந்து வெளியிலே செல்ல முடியாத அளவிற்கு, இன்றைக்கு சென்னை மாநகரத்திலே கொலையும், கொள்ளையும், வழிப்பறியும் இன்றைக்கு தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது என்பதையும், அது இன்றைக்கு அன்றாட நிகழ்ச்சிகளாக நடந்துக் கொண்டிருக்கிறது என்பதையும் தமிழக அரசின் கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த வெள்ளிக்கிழமை அன்று மாண்புமிகு கோவை சட்டமன்ற உறுப்பினர் திரு. செல்வராஜ் அவர்கள், கோவைக்கு செல்வதற்காக சென்டிரல் ரயில் நிலையத்திற்கு சென்றபோது அங்கே மாலையிலே அவர் வைத்திருந்த பெட்டியை வழிப்பறி திருடர்கள் திருடிச் சென்று விட்டார்கள் என்பதையும், அதற்கு பிறகு அவர் காவல் துறை அதிகாரிகளைச் சந்தித்து, தான் சட்டமன்ற உறுப்பினர் என்பதையும் சுட்டிக்காட்டி, எனவே 2 மணி நேரத்திற்குள் என்னுடைய பெட்டியை நீங்கள் கொண்டு வந்தாக வேண்டும் இல்லையென்றால் நான் சட்டமன்றத்திலே எடுத்துரைப்பேன் என்று சொல்லிவிட்டு அவர் அறைக்கு வந்தபோது, 2 மணி நேரத்தில் அந்த பெட்டி மீண்டும் கைப்பற்றப்பட்டிருக்கிறது. இதை ஏன் நான் சொல்கிறேன் என்று சொன்னால், வேலியே பயிரை மேயும் என்று சொல்லுவார்கள். அதைப்போல இன்றைக்கு சமூக விரோதிகள் திருட்டுக் குற்றத்தை செய்து கொண்டிருப்பவர்கள், வழிப்பறியை நடத்திக் கொண்டு இருப்பவர்கள் இன்றைக்கு காவல் துறையினுடைய அதிகாரிகளுடைய ஆதரவோடுதான் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அரசு உணர வேண்டும். இதுபோன்ற திருட்டுக் குற்றங்கள் சென்னையிலே எங்கே பார்த்தாலும் நடக்கிறது. கடையிலே கொள்ளை அடிப்பதிலேயிருந்து தனியாக வியாபாரிகள் செல்ல முடியாத அளவுக்கு இன்றைக்கு தமிழகத்திலே நடந்துக் கொண்டிருக்கிறது என்பதை அரசு கவனத்திலே கொண்டு அதை தீர்ப்பதற்கு காவல் துறையை முடுக்கி விடவேண்டும். அதேபோல் தவறாக சமூக விரோதிகளுக்கு துணை போகின்ற காவல் துறையினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

கடந்த 2 மாதத்திற்கு முன்பு இயற்கையின் சீற்றத்தால் தமிழகத்திலே ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக வீடிழந்து, பொருள் இழந்து தவித்த எண்ணற்ற ஏழை எளிய



மக்களுக்கு தவித்த தாகத்திற்கு தண்ணீர் வழங்குவதுபோல தமிழக முதல்வர் அவர்கள் தொலைக்காட்சி மூலமாகவும், வானொலியின் மூலமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் வீடு இழந்தவர்களுக்கு 500 ரூபாயும் பாதிக்கப்பட்டவர்களுக்கு 300 ரூபாயும் வழங்குவதாக அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தோம் ஆறுதல் கொண்டிருந்தோம். ஆனால் நடந்தது என்ன என்பதை தமிழக அரசு புரிந்துக் கொள்ள வேண்டும். எனது சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்டிருக்கிற சில பகுதிகளை சென்று நான் பார்த்தபோது, இரண்டு மாத காலமாக அந்தத் தொகையை வாங்குவதற்கு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 20 முறை நடந்து சென்று அவர்கள் பெற்ற தொகை என்ன என்று சொன்னால் வெறும் 12 ரூபாய் 50 காசு கொடுக்கப்பட்டிருக்கிறது. சில பகுதிகளிலே 27½ ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் 20 முறை அந்த வட்டாட்சியாளருடைய அலுவலகத்திற்குச் செல்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு அவர்கள் செலவழித்திருக்கின்ற தொகை என்ன என்பதையும் 12-50 காசில் எவ்வாறு இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு அவர்கள் நிவாரணம் செய்ய முடியும் என்பதையும் இந்த அரசு புரிந்துக் கொள்ளவேண்டும். இந்த அரசு தமிழக முதல்வர் அவர்கள் வானொலி மூலம் சொன்ன அந்த 500 ரூபாய், 300 ரூபாய், தமிழக அரசு வாங்கிவிட்டு அது இடையிலே இடைத்தரகர்களால் கொண்டு செல்லப்பட்டு விட்டதா என்பதை இந்த அரசு கவனத்தில் கொண்டு, அப்படி அது தவறான வழியிலே கொண்டு சென்று விட்டால் அந்த திருடர்களை, இடைத்தரகர்களைத் தண்டிக்கின்ற பொறுப்பு அரசுக்கு உண்டு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வெள்ளம் எப்போது வருகின்றது தன்னுடைய வசதியைப் பெருக்கிக் கொள்ளலாம் என்று எண்ணுகின்ற எண்ணற்ற இடைத்தரகர்கள் இன்றைக்குச் சென்னையிலே இருக்கிறார்கள். தாசில்தார் அலுவலகத்தைப் பார்க்கின்றபோது அவர்கள் இயக்கத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, சமூகவிரோதிகளாக இருந்தாலும் சரி நடமாடிக் கொண்டிருக்கின்ற அவர்களை கடுமையாக கண்டிக்க வேண்டும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

முதல்வர் அவர்கள் செல்லுகின்ற இடமெல்லாம் 200 கோடி ரூபாய், 300 கோடி ரூபாய்க்கான திட்டங்களை அறிவிப்பதைப் பத்திரிகைகளிலே படிக்கின்றபோது நாங்கள் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகின்றோம். ஆனால் சென்னை மாநகரத்தை எழில்மிகு 2000 சென்னையாக அமைக்கப் போகின்றோம் என்று கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரிலே தமிழக அரசு அறிவித்திருக்கிறது. ஆனால் ஏழை எளிய மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலே ஒருபோதும் தெரு விளக்குகள் எரிவதில்லை என்பதை இந்த அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். மாநகராட்சி அதிகாரிகளைச் சென்று கேட்டால் விளக்குகள் வாங்குவதற்கு

காசு இல்லை என்று சொல்கிறார்கள். குப்பைகளை ஏன் வாரவில்லை என்று கேட்டால் அதனை வாருவதற்கு துப்புறவுப் பணியாளர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். இல்லை என்று சொல்வதற்கு ஒரு மாநகராட்சி தேவையில்லை என்பதை இந்த அரசு மனதிலே கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போன்று நகர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் எந்த ஒரு குறையாக இருந்தாலும் சரி மாநகராட்சிக்குத் தெரியப்படுத்திவிட்டால் 24 மணி நேரத்திற்குள்ளாக அவை நிவர்த்தி செய்யப்படும் என்று பத்திரிகை வாயிலாகச் சொன்னார்கள். 24 மணி நேரம் போக 24 நாட்களானாலும்கூட அந்தக் குறைகள் இதுவரை நிவர்த்தி செய்யப்படுவதில்லை என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதோடு நிதியமைச்சர் அவர்கள் சிலவேளை சென்னை மாநகரத்திற்கு ஓரவஞ்சனை காட்டுகின்றார்களோ என்று எண்ணுகின்ற அளவுக்கு நிதிப் பற்றாக்குறை மாநகராட்சியில் இருந்து வருகிறது என்பதையும், சாலைகள் முழுவதும் பழுதடைந்து இருக்கின்றன என்பதையும் ,சாக்கடைகள் எங்கும் தேங்கிக் கிடக்கின்றன என்பதையும், ஏழை எளிய மக்கள் வாழ்கின்ற பகுதிக்கு எந்தவிதமான திட்டத்தையும் அரசு தரவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு நிதியமைச்சர்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சரும் சென்னையிலேதான் வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்கள். நிதியமைச்சர் எந்த ஒரு திட்டத்திற்கும் நேரடியாக தன்னுடைய பையிலிருந்து பணத்தை எடுத்து கொடுப்பதில்லை. எந்த ஒரு திட்டமாக இருந்தாலும் அந்தத்துறையின் மூலமாக வருகின்ற திட்டத்திற்கு, இதற்கு பணம் ஒதுக்கிடலாமா, வேண்டாமா என்ற ஒரு பிரச்சினைதான் நிதியமைச்சருக்கு உண்டே தவிர தாராளமாக, ஏராளமாக கேட்பவர்களுக்கெல்லாம் எடுத்துக் கொடுக்கின்ற கணக்குப்பிள்ளை அல்ல நான். (சிரிப்பு)

<u>டாக்டர் அ. செல்லக்குமார் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் தாராளமாக ஏராளமாக எடுத்துக்கொடுக்கின்ற கணக்குப்பிள்ளை இல்லை என்று சொன்னார்கள். ஆனால் அரசு என்பது யார் இயலாதவர்களோ, எந்தச் சமுதாயம் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்றதோ அந்தச் சமுதாயத்தை தூக்கிவிடுவதற்காகத்தான், வலுவிழந்த தோள்களுக்கு வலிமை ஊட்டுவதற்காகத்தான் இந்த அரசு செயல்படுகின்றது என்று முதலிலே ஆளுநர் உரையின்போது சொன்னார்கள். அந்த முறையிலேதான் சொல



கின்றோம். இன்னும் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்
கின்ற அடிப்படைச் சுகாதாரம் என்றால் என்னவென்றே
தெரியாத ஏழை எளிய மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்ற
சேரிப்பகுதிக்குச் சென்று பாருங்கள். மாண்புமிகு நிதியமைச்
சர் அவர்கள் செல்கின்ற பகுதிகளிலே அதுபோன்ற சேரிப்
பகுதிகள் இல்லாத காரணத்தினாலே அவர்களுக்குத் தெரி
யாமல் இருக்கலாம். அமைச்சர் அவர்கள் செல்கின்ற பகுதி
களிலே சாலைகள், தெருவிளக்குகள் போடப்பட்டிருக்கின்றன.
ஆனால் உள்ளே செல்லுகின்றபோது ஏழை எளிய மக்கள்
வாழ்கின்ற பகுதிகளிலே செல்கின்றபோது குடிசைப் பகுதி
களில் வாழ்கின்ற மக்கள் செல்கின்ற இடங்களில் எல்லாம் தெரு
விளக்குகள் என்றால் என்னவென்றே தெரியாத நிலை இன்
றைக்கு இருப்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களு
டைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்றைக்கு வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கின்ற ஏழை
எளிய மக்கள் வாங்குகின்ற அந்த நியாயவிலைக் கடையின்
மூலம் விற்கின்ற அரிசியின் அளவு விலை உயர்வுக்கு மத்திய
அரசுதான் காரணம் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்.
ஆனால் உண்மை என்னவென்று நீங்கள் புரிந்துக்கொள்ள
வேண்டும். மத்திய அரசு எல்லா மாநிலத்திலும் அரிசி விலையை
உயர்த்தினாலும் கூட சில மாநிலங்கள்—அந்தந்த மாநிலத்து
அரசு தங்களுடைய தேர்தல் வாக்குறுதி மூலம், தாங்கள் தேர்
தலின்போது மக்களுக்கு என்ன வாக்குறுதிகளைத் தந்தார்
களோ அதன் மூலம் அந்தத் திட்டத்தை நிறைவேற்றி வரு
கின்றது. கேரள மாநிலத்தில் அங்கே இருக்கின்ற காங்கிரஸ்
அரசு அங்கும் அதே போல மத்திய அரசு விலையை உயர்த்திய
போதும் அந்த ஏழை எளிய மக்கள் வாங்குகின்ற நியாய விலைக்
கடைகளில் வாங்குகின்ற அரிசிக்குத் திணிக்காமல், அது மதுக்
கடைகளின் மூலம் அந்த வரியினைச் சுமத்தி, ஏழை எளிய
மக்கள் அந்த வரிச் சுமையைத் தாங்கக்கூடாது, அவர்கள்
தாங்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்பதை
உணர்ந்து அங்கே அரிசி விலையை உயர்த்தவில்லை என்பதை
நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

முற்பகல் 11-50.

அதேபோல் பாலுக்கு விலையை இந்த அரசு உயர்த்தி
யிருக்கிறது என்று சொன்னால்......

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

<u>மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :</u> மாண்புமிகு
உணவுத்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் :</u> மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, கேரளாவில் அரிசி விலை என்ன
என்பதை தெரியாமல் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன்.
அரிசி விலையை மத்திய அரசு உயர்த்துவதற்கு முன்பாக,

நாமும் அரிசி விலையை உயர்த்துவதற்கு முன்பாகவே கேரள அரசு சாதாரண அரிசியின் விலையை ரூ. 3-15 என்றும், சன்ன ரக அரிசியின் விலையை ரூ. 3-76 என்றும், மிக சன்ன ரக அரிசியின் விலையை ரூ. 3-97 என்றும் விற்றுக்கொண் டிருக்கிறார்கள். நாம் விலை உயர்வை ஏற்றிய பின்னாலும் ரூ. 3-50க்கு தான் விற்றுக்கொண்டிருக்கிறோம். ஏற்கனவே அவர்கள் ரூ. 3-76க்கும், ரூ. 3-97க்கும் விற்றுக்கொண் டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர் களின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

டாக்டர் அ. செல்லக்குமார் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலத்தில் அரிசி விலை உயர்வு என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இருந்தாலும் கூட அந்த அரசு இன்றைக்கு மத்திய அரசு ஏற்றிய அரிசி விலையை எப்படி மக்களின்மீது திணிக்காமல் எவ்வாறு அது திருப்பப்பட்டு வேறு ஒரு பகுதியில் இந்த மக்களுடைய பணத்தை ஏழை எளிய மக்களுடைய பணத்தை சுரண்டுகின்ற அந்த மதுபான கடைகளின் முதலாளிகளின் மீது திணிக்கப்பட் டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுவதற்காக நான் இதைத் தெரியப்படுத்தினேன்.

இன்றைக்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட் டில் மலிவு விலை மதுக்கடைகளை எல்லாம் மூடிவிட்ட பிறகு கள்ளச் சாராயம் ஒழிக்கப்பட்டுவிட்டது என்று நாம் பெருமையோடு இந்த மன்றத்தில் பேசிக்கொண் டிருக்கிறோம். ஆனால் உண்மை என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சென்னைக்கு மிக அருகில் அமைந் துள்ள அரும்பாக்கம் போன்ற பகுதிகளில் இன்றைக்கு கள்ளச் சாராயம் என்பது காவல் துறை அதிகாரிகளின் துணையோடு அது ஒரு குடிசைத் தொழிலாக இன்றைக்கு இருந்து வரு வதையும்; அங்கே காலையில் வேலைக்குச் செல்லுகின்ற வர்கள் 27பி போன்ற பஸ்களில் ஏறுபவர்கள் இதுபோன்ற கள்ளச் சாராயத்தைக் குடித்து விட்டு வருகின்றவர்களின் இன்னல்களுக்கு அவர்கள் ஆளாகிறார்கள் என்பதையும் அர சினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன்பு தமிழக முதலமைச்சர் அவர் கள் பேசுகின்றபோது இந்திய அரசு அரசியல் அமைப்புச் சட் டத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வருமானால் தமிழக அரசினுடைய மதுவிலக்குக் கொள்கையினை மறுபரிசீலனைச் செய்யலாம் என்று சொல்லியிருப்பதைப் பார்க்கின்றபோது ஏதோ அந்த மதுக் கொள்கையினை மீண்டும் மலிவு விலை மதுக் கடைகளை நீங்கள் கொண்டு வருகின்ற நாட்கள் வெகு தொலைவில் இல்லையோ என்று எண்ணுகின்ற அளவுக்கு இன் றைக்கு அவர்களுடைய பதில் அமைந்து இருக்கிறது. நான் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புவது எல்லாம்,





அயல்நாட்டு அறிஞர் ஒருவர் சொல்லியிருக்கிறார்; "Try to be a man of value rather than trying to be a man of success" என்று. எனவே, நீங்கள் கொள்கையின் அடிப்படையில் ஆட்சி அமைக்கத்தான் வேண்டுமே தவிர அது ஏழைகளின் மீது மத்திய அரசு பணம் தரவில்லை என்பதற்காக அந்த மலிவு விலை மதுக் கடைகளை மீண்டும் திறந்து விட்டு அதன் மூலம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள விரும்பக் கூடாது என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

இன்றைக்கு தமிழகத்திலே உள்ள ஓராசிரியர் பள்ளிகளில் இன்னும் ஒரு ஆசிரியரை நியமிக்க போவதாக தமிழக அரசு அறிவித்து இருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால் ஒன்றை நான் இங்கே சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். மறைந்த பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் கொண்டு வந்த புதிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் கொண்டு வந்த 'பிளாக் போர்டு ஆப்பரேஷன்' என்பதன் மூலம் தமிழகத்திற்கு 2 கோடி ரூபாய்க்கு புத்தகங்களும், ஏடுகளும் அனுப்பப்பட்டு இருந்தது. ஆனால் கடந்த 1, 2 ஆண்டு காலமாக அந்தப் புத்தகங்களையும், அந்த ஏடுகளையும் பள்ளி அறையிலே பூட்டி வைக்கப்பட்டு இருக்கிறது. அடி மட்டத்தில் இருக்கின்ற பள்ளி களுக்கு அதனைக் கொண்டு செல்வதற்கு 5 கோடி ரூபாய் போக்குவரத்துச் செலவு ஆகும் என்ற காரணத்திற்காக கடந்த 1, 2 ஆண்டு காலமாக அது பூட்டி வைக்கப்பட்டு, அந்தப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்கள் அவர்கள் வெளியில் அமர்ந்து படிக்கின்ற அளவில் சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தினுடைய கல்வி அமைச்சர் அவர்கள் அதிலே கடந்த சில நாட்களுக்கு முன்பாக தலையிட்டு அதனை சரிவர அந்தப் பள்ளிகளுக்குக் கொண்டு செல்வதற்குண்டான முயற்சிகளை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய முயற்சி யினை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணி யடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ச. காந்திராஜன்.

*திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீது எனக்கு இந்த அவையில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதலாவதாக தங் களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

நம்முடைய இதய தெய்வம் நாங்கள் எல்லாம் வணங்கு கின்ற மாண்புமிகு டாக்டர் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் இங்கே ஆட்சிக்கு வந்த பிறகு எப்படி தான் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளை தன்னுடைய கொள்கையாகக் கொண்டு எதிர்காலத்தில் நான் சட்டம்

*[திரு. ச. காந்திராஜன்] [1992 பிப்ரவரி 5

ஒழுங்கை நிலைநாட்டுவேன் என்று சொன்னார்களோ அதே
வழியில் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே, அந்த
சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக விரைந்து நடவடிக்கை
எடுத்து அதற்காக காவல் துறையினரை முடுக்கி விட்டு இன்
றைய தினம் குறுகிய காலத்திற்குள்ளாக இந்த தமிழ்நாட்டி
லிருந்து அந்த தீவிரவாதிகளை, அவரோடு சேர்ந்த தீவிர
வாத இயக்கத்தினரை ஒழித்து இருக்கிறார்கள் என்ற பெரு
மையை குறுகிய காலத்தில் பெற்று இருக்கிறார்கள் நம்முடைய
மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி
அவர்கள். நீங்கள் எல்லாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்
டும். இப்படிப்பட்ட தீவிரவாதிகளை ஒடுக்குகின்றபோது;
இதற்கு முன்னாலே இருந்த தி.மு.க. அரசினுடைய ஆட்சிக்
காலத்திலே எத்தனை கொள்ளைகள், எத்தனை கொலைகள்,
எத்தனை வழிப்பறிகள், எத்தனை கற்பழிப்புகளெல்லாம்
நடந்திருக்கின்றன என்கின்ற புள்ளிவிவரங்களையும் அதற்குப்
பின்னாலே இன்றைய தினம் தமிழகத்திலே நம்முடைய ஆட்சி
வந்த பிறகு, அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகம் ஆட்சியை ஏற்றபிறகு, அவைகளெல்லாம் எந்த அளவிலே
குறைந்து இருக்கின்றன என்கின்ற புள்ளி விவரங்களையெல்லாம்
பார்த்தால், நிச்சயமாக புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே
எந்த அளவிற்கு இங்கே தீவிரவாதிகளுடைய அட்டூழியச் செயல்
களெல்லாம், அதற்குப் பின்னாலே இருக்கின்ற சமூக விரோதச்
செயல்களெல்லாம் ஒடுக்கப்பட்டிருக்கின்றன என்கின்ற விவரம்
நல்லமுறையிலே தெரியும். இங்கேகூட நண்பர்களெல்லாம்
சொன்னார்கள்; பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன,
அவைகளைக் கட்டுப்படுத்த காவல்துறையை முடுக்கிவிட
வேண்டுமென்று சொன்னார்கள். நல்ல உள்ளம் கொண்ட அனை
வரும் நிச்சயமாக புரட்சித் தலைவியினுடைய கடந்த கால
நடவடிக்கைகளை உள்ளன்போடு நிச்சயமாக ஏற்றுக் கொண்டு
தான் ஆகவேண்டும், இதனை ஏற்றுக்கொள்ளாதவர்கள்,
நிச்சயமாக மாசு கற்பிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான்
சொல்வார்களே தவிர, நிச்சயமாக இதனை நாட்டு மக்கள்
ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் நான்
சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல,
காவல் துறையை நல்லமுறையிலே நவீனப்படுத்த வேண்டும்
என்பதற்காக இன்றைய தினம் ஆளுநர் உரையிலே 80 கோடி
ரூபாய்க்கு பக்கமாக நாங்கள் செலவு செய்ய இருக்கின்றோம்
என்று சொல்லி, அதற்கு பின்னாலே இந்த ஆண்டு மட்டும்,
ஆளுநர் உரையின் மூலமாக 10 கோடி ரூபாயை ஒதுக்குவதாக
மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருப்பதை நான் இந்த
அவையிலே உங்கள் சார்பாக வரவேற்கிறேன். நிச்சயமாகச் சொல்
வோம். இன்றைய தினம் தமிழ்நாட்டில் மட்டும் இப்படிப்பட்ட
நிலைமைகளை நாம் கட்டுப்படுத்தாமல் இருந்திருந்தால் நிச்சயம்
தமிழகம் அஸ்ஸாமைப்போல, பஞ்சாபைப் போல, காஷ்
மீரத்தைப்போல ஒரு மோசமான சூழ்நிலைக்கு போயிருக்கக்
கூடிய ஒரு நிலையை நாம் அடைந்திருப்போம். ஆனால் அப்படிப்



1992 பிப்ரவரி 5] [திரு. ச. காந்திராஜன்]

பட்ட தீய வழிகளிலிருந்து தடுத்து நம்மையெல்லாம் அமைதியாக
தமிழகத்தை அமைதிப் பூங்காவாக, மக்களையெல்லாம் அமைதி
யாக இருக்க செய்கின்ற, ஒரு நல்ல சந்தர்ப்பச் சூழ்நிலையை
ஏற்படுத்தி இருக்கின்றார்கள் நம்முடைய முதல்வர் அவர்கள்
என்று சொல்கின்றபோது, நிச்சயமாக, உலக சமாதானத்திற்
காக நோபல் பரிசுகளையெல்லாம் வழங்கியிருக்கின்றார்களே பல்
வேறு தலைவர்களுக்கு, அதேவழியிலே நம்முடைய புரட்சித்
தலைவி அவர்களுக்கு, இரும்பு கரம் கொண்டு ஒடுக்கிய அந்த
உத்தமத் தலைவிக்கு "பாரத ரத்னா" விருதை நிச்சயமாக
வழங்க, நமது அவையின் சார்பாக இங்கே இருக்கின்ற மாமன்ற
உறுப்பினர்கள் அனைவரும், பாரத ரத்னா விருதை தமிழக
முதல்வர் அவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று, ஒரு கோரிக்கை
யாக வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத்
தட்டும் ஒலி.)

அதுமட்டுமல்லாமல், சட்டம் ஒழுங்கு பிரச்சினையிலே வெற்றி
கண்ட நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித்
தலைவி அவர்கள் இன்றைய தினம் காவிரி நதி நீர்ப்பிரச்சினை
யிலே கூட, எவ்வளவு தூரம் வெற்றியைப் பெற்றிருக்கிறார்கள்
என்பதை நாம் புரிந்தாக வேண்டும். பன்னெடுங்காலமாக காவிரி
நதிநீர்ப் பிரச்சினையானது எவ்வளவு மோசமான சூழ்நிலையில்
இருந்தது என்பது நமக்கெல்லாம் தெரியும். குறுகிய காலத்
திற்குள்ளாக அதிலே பெரிய வெற்றியைக் கண்டிருக்கிறார்
கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த அளவிலே
ஏற்கனவே நடந்து முடிந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலே
மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி, இடைக்கால நடுவர்
நீதிமன்றத் தீர்ப்பினை மத்திய அரசு வெளியிட தீர்மானம் நிறை
வேற்றப்பட்டது. நடுவர் நீதிமன்றம் இடைக்கால உத்தர
வாகப் போட்ட அந்த 205 டி.எம்.சி. தண்ணீரை தமிழகத்திற்கு
வழங்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு இங்கே தமிழகத்தி
னுடைய சட்டசபையிலே ஒரு கோரிக்கையாக, ரெசல்யூஷனாகக்
கொண்டு வந்து, இன்றைய தினம் அதனை மத்திய அரசாங்கத்
தினுடைய கெசட்டிலே வெளியிடச் செய்திருக்கிறார்கள்.
அதற்காக, முதல்வருக்கும், மத்திய அரசாங்கத்திற்கும் நம்
முடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இருந்தாலும்
கூட, மத்திய அரசாங்கம் இதிலே ஏனோ தானோ என்று,
எப்படியாவது தமிழ்நாட்டிற்கு தண்ணீர் கிடைக்க வேண்டு
மென்று ஒரு நல்ல நோக்கத்தோடு இல்லாமல் அவர்கள் மெத்தனப்
போக்கிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். என்பதையும் நான்
இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காரணம்
1956-வது நதிநீர் தாவா பங்கீட்டு சட்டத்தினுடைய ஆறாவது
பிரிவின் கீழ் மத்திய அரசு கெசட்டிலே வெளியிட்டார்கள்.
அதற்குப் பின்னாலே, கர்நாடக அரசு, அங்கே ஒரு அவசரச்
சட்டத்தைக் கொண்டு வந்து, அதன் மூலமாக குழப்பம் விளை
வித்தபொழுது, அதற்குப் பின்னாலே, நம்முடைய குடியரசுத்
தலைவர் அவர்கள் அதனை சுப்ரீம் கோர்ட்டினுடைய தீர்ப்புக்கு

விட்டபொழுது, இதிலே மத்திய அரசாங்கமோ, சுப்ரீம்
கோர்ட்டோ எந்த உத்தரவையும் போடமுடியாது ; அதற்கான
சட்டங்களோ, அதிகாரமோ இல்லை ; எனவே ஏற்கனவே இருக்
கின்ற நடுவர் மன்றத் தீர்ப்பு சரியானதுதான் என்று சொல்லி,
உச்ச நீதிமன்றம் முடித்து உள்ளது. ஆனால், அதற்குப் பின்னாலே
முறையாக மத்திய அரசாங்கம் 6-ஏ என்கின்ற பிரிவின் கீழே
அந்த ஸ்கீமை ஃபிரேம் செய்து அதற்கு ஒரு அரசு ஆணையை
வெளியிட்டிருக்க வேண்டும். அந்த் பிரிவின்கீழ் அரசு ஆணையை
கெசட்டிலே வெளியிடாவிட்டால் அதற்குப் பின்னாலே வருகின்ற
செயல்களையெல்லாம் நிச்சயமாக அரசாங்கம் செய்ய முடியாது.
எனவே, 1956 ஆவது இன்டர்-ஸ்டேட் வாட்டர் டிஸ்பியூட் என்ற
சட்டத்தின் செக்ஷன் 6-ஏ-ல் சொல்லியுள்ள பிரகாரம் அவர்கள்
அந்த ஸ்கீமை ஃபிரேம் செய்து அதற்கென்று தனி அதிகாரிகளை
நியமனம் செய்தால்தான், அதனையெல்லாம் மத்திய அரசாங்கத்
தினுடைய அரசிதழிலே மறுபடியும் பிரசுரித்தால்தான் இனிமேல்
நடக்கின்ற நடைமுறைகள் செயல்படுத்தப்படும்.

ஆனால் இதிலே மத்திய அரசாங்கம்மெத்தனமாக இருக்
கின்ற காரணத்தாலே தமிழகத்திற்குத் தண்ணீர் வரக் கூடாது
என்கிற அந்த மெத்தனப் போக்கின் காரணமாகத்தான் மத்திய
அரசு கெஜட்டிலே இதனை இன்னும் வெளியிடாமல் இருக்
கிறார்கள் என்பதை நான் மெத்தப் டணிவுடன் சொல்லிக் கொள்
கிறேன்.

நண்பகல் 12-00

இறுதித் தீர்ப்பு வருகின்ற வரை இடைக்காலத் தீர்ப்புதான்
அங்கு நிலைத்து நிற்கும் என்பதை மத்திய அரசு கருத்திலே
கொண்டு, ஏற்கனவே செக்ஷன் 6-ல் அரசிதழில் வெளியிட்ட
படியும், 1956 வது சட்டம் 11 வது பிரிவின் கீழே அவர்கள்
இறுதித் தீர்ப்பில் ஏதும் மாற்றம் வந்தால் அதற்குப் பின்னாலே
அவர்கள் அந்தத் இறுதித் தீர்ப்பின் பிரகாரம் அந்தச் சட்டத்தை
மாற்றவோ, அமென்மெண்ட் செய்யவோ அல்லது புதிதாக
அவர்களுக்குத் தகுந்தவாறு மாற்றிக்கொள்ளவோ முடியும் என்
பதையும், கருத்திலே கொண்டு, இடைக்கால உத்தரவை உடனடி
யாக அமல் செய்வதற்கு மத்திய அரசாங்கம் செக்ஷன் 6-ஏ
பிரிவின் கீழே உடனடியாக மத்திய அரசாங்கத்தினுடைய
கெஜட்டிலே அதனைப் பிரசுரிக்க வெண்டுமென்று நான் இந்த
மாமன்றத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அந்த வதை
யிலே இன்றைய தினம் தொடர்ந்து இந்த அரசாங்கம் மத்திய
அரசாங்கத்தை வலியுறுத்தும், தண்ணீரைப் பெறுவதற்கான
எல்லா முறைகளையும் அது செய்யும் என்ற அந்தக் கருத்தைக்
கொண்ட இந்த ஆளுநருடைய உரையை நான் மனதார வர
வேற்கிறேன்.



அதற்கு மேலாக இன்றைய தினம் கர்நாடகத்தைப் பொறுத்த
வரையிலே எங்களுக்கு ஏற்பட்ட — கர்நாடகத் தமிழர்களுக்கு
ஏற்பட்ட இன்னல்களையெல்லாம் போக்குகின்ற வண்ணம், அங்கு
நிலங்களெல்லாம் பறிக்கப்பட்ட அந்த சூழ்நிலைகளைக் கருத்தில்
கொண்டு, மத்திய அரசாங்கம் அடித்தவர்களையும், அடி
வாங்கியவர்களையும் ஒரே கருத்திலே கொள்ளாமல், இன்றைய
தினம் அடி வாங்கியவர்களுக்கு, பாதிக்கப்பட்டவர்களுக்கு
நிவாரணம் தர வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் சார்பாக
நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்னும் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி
முடித்துக் கொள்கிறேன். விலைவாசியைப் பொறுத்தவரையிலே
இன்றையதினம் மத்திய அரசினுடைய புதிய பொருளாதாரக்
கொள்கையின் காரணமாக, இன்றைய தினம் அவர்கள் அந்த
இன்ப்ளேஷின் — பண வீக்கம் என்கிற அந்தப் பண மதிப்பைக்
குறைத்ததன் காரணமாகத்தான் விலைவாசி ஏறிக்கொண்டே
போகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட இந்த அவையில்
சொல்லி இருக்கின்றார்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்துகின்ற
அனைத்து அதிகாரங்களும் மத்திய அரசாங்கத்தின் கையிலே
வைத்துக்கொண்டு மாநில அரசாங்கங்களை அவர்கள் சுரண்டிக்
கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, அப்படிச் செய்கின்றபொழுது, அந்தச் சுமை
கள் எல்லம் மாநில அரசாங்கங்கள் ஏற்றுக் கொள்ளுகின்றன
என்கிற கருத்தையும், இந்த அவையிலே தெரிவித்திருக்கின்றார்
கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் 1975 முதல் 1984 ஆம்
ஆண்டுவரை மட்டும் சுமார் 73 சட்டங்களை மத்திய அரசாங்கம்
விலைவாசிக்காகப் போட்டு, இன்றைய தினம் தன்னிடத்திலே
அப்படிப்பட்ட சட்டங்களையெல்லாம் வைத்துக் கொண்டு,
மாநிலங்களுடைய கட்டுப்பாட்டில் எந்த அதிகாரத்தையும்
கொடுக்காமல் இன்றைய தினம் விலைவாசிக்குக் காரணமாக
இருக்கிறார்கள் என்கிற ஆணித்தரமானக் குற்றச்சாட்டை நான்
இந்த அவையிலே வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விரைவில்
முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ச. காந்திராஜன் : ஒன்றே ஒன்று, எனவே, அதோடு
மட்டுமல்லாமல், பெட்ரோல், டீசல் போன்ற பொருட்களெல்லாம்
இன்றைக்கு மத்திய அரசாங்கம் உயர்த்துகின்றது என்று
சொன்னால், அதனைச் சார்ந்ததுதான் மற்றப் பொருட்களி
னுடைய விலைவாசிகளும் கூடுகின்றன. இந்த விலைவாசி
யினுடைய ஏற்றங்களெல்லாம் தவிர்க்க முடியாததாகி விடுகிறது
என்ற கருத்தையெல்லாம் நான் இந்த அவையிலே சொல்லியாக
வேண்டும். எனவே, மத்திய அரசாங்கத்தினுடைய கட்டுபாட்
டின் கீழ் இருக்கின்ற அந்தச் சட்டங்களை யெல்லாம், சாதாரண

மாக ஒரு மாநில அரசு ஏதாவது விதிக்க வேண்டுமென்று சொன்னால் கூட மத்திய அரசாங்கத்தினுடைய ஒப்புதலோடு தான் அங்கே அந்தச் சட்டங்களை விதிக்க முடியும். அப்படியிருக் கின்ற சூழ்நிலையில், இந்த மாநிலத்தைப் பற்றி இங்கே குறை சொல்கிறார்கள் என்று சொன்னால், அது எந்தவகையில் பொருத்தமுடையதாக இருக்கும் என்று நான் இந்த மன்றத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே, இன்றையதினம் விலைவாசிக்குக் காரணம் நிச்சயமாக நீங்கள் சொன்னதைப் போல................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடியுங்கள்.

திரு. ச. காந்திராஜன் : திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னதைப் போல், விலைவாசி காரணத்திற்கு மாநில அரசு என்று நான் சொல்ல மாட்டேன் என்று சொன்னார்கள். பொருளாதாரம் தெரியாதவர்கள்தான் அப்படி சொல்லுவார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசாங்கம்தான் விலைவாசிக்குக் காரணம் என்று யாராவது சொன்னால் அவர் களைப் பொருளாதாரம் தெரியாதவர்கள் என்றுதான் சொல் வேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் யாரைக் குறிப் பிட்டார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் இப்படிப்பட்ட சட்டங்களை மத்திய அரசாங்கத்தினுடைய கையிலே வைத்துக் கொண்டு இன்றையதினம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால் நிச்சயமாக திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் புரிந்துதான் சொல்லியிருக்கிறார்கள் என்பதை மட்டும் ஒத்துக் கொண்டு, எனவே, விலைவாசிக்கு இந்த அரசாங்கம் எள்ளவும் காரணம் இல்லை என்பதோடு மத்திய அரசாங்கம் இன்றைய தினம் அரிசி விலையைக் கூட்டிக் கொடுத்தால் கூட இன்றைய தினம் 2 ரூபாய் அளவிலே அரிசியைப் பொதுமக்களுடைய, ஏழை மக்களுடைய நன்மைகளைக் கருதி, இந்த அரசாங்கம் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் நமது புரட்சித் தலைவிக்கு இந்த மாமன்ற உறுப்பினர்கள் வாயிலாக எங்க ளுடைய நன்றிகளையெல்லாம் தெரிவித்துக் கொண்டு இந்த மாமன்றத்திலே பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து முடிக்கின்றேன்.

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் 13 உறுப்பினர்கள் உரையாற்ற வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு வருக்கும் 7 நிமிடங்கள் என்ற அளவில்தான் தரப்படுகின்றன. எனவே, விரைவில் முடிக்கக் கேட்டுக் கொள்கிறேன். திருமதி கவிநிலவு தர்மராஜ்.

(திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, கற்பகத்தின் பூங்கொம்பாய், கண்ணியத்தின் பெருங்குன்றாய், கூட்டிய புண்ணியத்தின் புண்ணியமாய் புகழ்





சுமந்து, விற்குவளை பவளமலர் மதிபூத்த பண்பின் பரணாகி, வானாகி, ஒளியாகி, ஊணாகி, மாசில் வீணையும், மாலை மதியமும், வீசுதென்றலும், வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போற்றிட பைந்தமிழ் பாசறையாய், தெள்ளுத் தமிழ் திரவிய மாய், நாடகத் தமிழின் நடுநாயகமாய், இந்த அவனியை கவனிக்க பவனி வந்து, நம்முடைய நெஞ்சமெனும் மஞ்சத்திலே நீங்கா தஞ்சம் புகுந்திருக்கிற சரித்திர தேவதை, நான் வணங்கும் நடமாடும் தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவியின் பொன்னான பாதங்களைப் பணிந்து, நான் துதிக்கும் சன்னி தானம் உன் தாள் ; நான் என்றும் உமக்காகப் போராடும் வாள் ; உமக்கு முன்னால் உலகமே தூள், தூள் என்று சொல்லி, ஆளுநர் உரையின் மீது நன்றி கூறுவதற்கான வாய்ப் பினை எனக்கு அளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவிக்கு நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி, ஆளுநர் உரை யைப் பொறுத்தவரை, இது மகிழ்ச்சியின் ஆரம்பம் என்று நான் சொல்ல மாட்டேன் ; நீங்கள், 'ஆ' ரம்பமா ? என்று அலுத்துக் கொள்வீர்கள். அப்படி என்றால், இது மகிழ்ச்சியின் ' மதுரங் கள் ' என்றும் நான் சொல்ல மாட்டேன் ; மதுவிலக்கைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிற இதய தெய்வத்தினுடைய ஆட்சியிலே, ' மது, ரம், கள்ளா ? ' என்று நீங்கள் மருண்டு போவீர்கள் ஆக, இந்த ஆளுநர் உரை, முத்தமிழை வடித்தெடுத்த தேனாறு ; பைந்தமிழ் பாலாறு ; நல்லபல கருத்துக்களின் கருத்துப் பெட்டகம் என்ற அளவிலே ஆளுநரின் உரை அற்புதமாய் அமைந்திருக்கிறது.

வீட்டுப் புளியினை கரைப்பதற்கு பயப்படக்கூடிய பெண் களைப் பார்த்திருக்கிறோம். காட்டுப் புலிகளை விரட்டி அடித்த புறநானூறு பெண்டிரையும் பார்த்திருக்கிறோம ஆனால், விடுதலைப் புலிகள் என்று சொல்லக்கூடிய தறுதலை களின் மாறுதலை அடக்கி, இந்தத் தமிழகத்திலேயிருந்து விரட்டியடித்து, மக்கள் மனதிலே தேறுதலை, மாறுதலை, ஆறுதலை உருவாக்கிய இதய தெய்வம் புரட்சித் தலைவியி னுடைய அஞ்சா நெஞ்சத்தை ஆளுநர் உரையிலே குறிப்பி டிருப்பது, மிகவும் பாராட்டுதற்குரியதாக இருக்கிறது.

" தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை " என்று சொல்வதற்கேற்ப,

" எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு "

என்று சொல்லக்கூடிய வள்ளுவனின் வாய்மொழிக்கேற்ப, இந்தத் தெள்ளுதமிழ் நாட்டை, வள்ளுவன் பாதையில் நடத்திக் கொண்டிருக்கக்கூடிய இந்த ஆட்சியிலே, சட்டமா ? ஒழுங்கா ? சட்டம் என்ன, அது எங்களைத் திட்டுமா ? ஒட்டுமா ? உரசுமா ? என்றெல்லாம் கேலிப் பேசிக் கொண்டு, சிதறிக் கொண்டிருந்த, உளறிக் கொண்டிருந்தவர்களுடைய உள்ளத்தின் தடுமாற்றத்

[திருமதி கவிநிலவு தர்மராஜ்] [1992 பிப்ரவரி 5

தைப் போக்கி, அவர்களெல்லாம் அலறி, பதறி, சிதறி, ஓடக்
கூடிய விதத்திலே காவல்துறையினருடைய ஆக்கத்தையும்,
ஊக்கத்தையும் பெருக்கி, 80 கோடி ரூபாயை காவல் துறைக்
கென்று ஒதுக்கி, அதற்கு முத்தாரமாய், வித்தாரமாய் 10
கோடி ரூபாயை பட்டென்று வழங்கிய இதய தெய்வம் புரட்சித்
தலைவியினுடைய பொன்னான கருணை உள்ளத்தை, ஆளுநர்
உரையிலே குறிப்பிட்டிருப்பது, வியக்கத்தக்கதாக இருக்கிறது.
அதுமட்டுமல்லாமல்,

'' எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே ? அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணங்கள் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே? அவர்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே . . . ''

என்று சொல்லக்கூடிய இந்தத் தமிழ்த் திருநாட்டிலே,

'' யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதா
வதெங்கும் காணோம் '' என்று சொல்லக்கூடிய
இந்தத் தமிழ் மொழியினுடைய சிறப்பை உணர்ந்து, தமிழ்த்
தாயினுடைய மறுவடிவமாக ஆட்சி செய்யக் கூடிய புரட்சித்
தலைவியினுடைய பொன்னான ஆட்சியிலே காவிரிப் பிரச்சினை
யின் மூலம் கதிகலங்கிப் போய், வெந்து, நொந்து, மடிந்து
கொண்டிருந்த விவசாயப் பெருங்குடி மக்களினுடைய வேதனை
யைத் தீர்த்து, அவர்களுக்கு பரிவையும், சலுகையையும்
சாதனையாக வழங்கக் கூடிய ஆட்சித் திறம் படைத்த புரட்சித்
தலைவி அவர்கள் கர்னாடக அரசோடு காவிரி நீர்ப் பிரச்சி
னையில் நேரடியாகத் தலையிட்டு, 1924 ஆம் ஆண்டிலிருந்து
கேட்பாரற்றுக் கிடந்ததை, அருமையானதொரு திட்டத்தி
னுடைய வடிவரைவை தன்னுடைய ஆட்சிக் காலத்திலே,
மேலான தன்னுடைய செயற்பாட்டினால், செயற்பாட்டுத்
திறனுக்குள் கொண்டுவந்து, காவிரியைக் கொடுத்த கடவுளாக
இன்று நடமாடிக் கொண்டிருப்பதை, ஆளுநர் உரையிலே
குறிப்பிட்டிருப்பது பாராட்டிற்குரியதாக இருக்கிறது.

மலிவு விலை மது என்று சொல்லக்கூடிய அரக்களின்
கொட்டத்தை அடக்கி, 400 கோடி ரூபாய், எங்களைத் தேடி
வரக்கூடிய ரூபாய் ஓடிப் போனாலும் பரவாயில்லை ; பெண்
களின் தாலி அறுந்த நிலையிலும், அவர்களை மூளியாய்
பார்க்கக்கூடிய கேலித்தனமான அந்த மலிவு விலை மது என்று
சொல்லக்கூடிய அரக்கன் எங்களுக்குத் தேவையில்லை என்று
சொல்லி, வருமானத்தைப் பார்க்காமல், லட்சங்களைப்
பார்க்காமல், இலட்சியத்திற்காகப் பாடுபடக்கூடிய இதய
தெய்வம் புரட்சித் தலைவியின் அருமையான சேவையை,
ஆளுநர் மனம் திறந்து பாராட்டியிருப்பதை நாங்கள் மிக மிக
வரவேற்கிறோம்.



1992 பிப்ரவரி 5] [திருமதி கவிநிலவு தர்மராஜ்]

விவசாயப் பெருங்குடி மக்களின் குறையைத் தீர்க்கக் கூடிய
அதே நேரத்திலே, நெசவாளர்களுக்கு — ஆடையில்லாத
மனிதன் அரை மனிதன் என்று சொல்லக்கூடிய விதத்திலே—
மனிதனுக்கு மதிப்பையும், பாராட்டையும் கொடுக்கக்கூடிய
நெசவாளர் சமுதாயத்தினுடைய வறுமையைத் தீர்க்கவும்
பொங்கல் பண்டிகையை ஏழை எளிய மக்கள் சிறப்புற
கொண்டாட வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக 41 கோடி
ரூபாய்க்கு வேட்டி, சேலைகளை வாங்கி, ஏழைகள் மனங்
குளிர வைத்த, ஏழைகள் போற்றக்கூடிய ஏந்தலாக இருக்கக்
கூடிய இதய தெய்வம் புரட்சித் தலைவியின் கருணை
உள்ளத்தை ஆளுநர் உரையிலே பாராட்டி இருப்பதை நான்
பாராட்டுகிறேன். அதுமட்டுமல்ல மொடக்குறிச்சி தொகுதியைப்
பொறுத்தவரை கொடுமுடி கோவில் 19 ஆண்டுகளாக
கும்பாபிஷேகம் நடத்தப்படாமல் சீர்கெட்ட நிலையிலே
இருக்கிறது. அறநிலைய துறையினுடைய நிரந்தரத் தலைவர்
இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய கருணை உள்ளத்தை
இந்த நேரத்திலே நாங்கள் தொட்டு, இதய தெய்வம் புரட்சித்
தலைவியினுடைய கடைக் கண் பார்வை கொடுமுடி மகுடேஸ்வர
கோவிலின் மீது சென்று கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற
அவர்கள் உதவி செய்ய வேண்டுமென்று மொடக்குறிச்சி
மக்களின் சார்பாக இந்த விண்ணப்பத்தை அவர்களுடைய
பொன்னான பாதங்களில் சமர்ப்பிக்கிறேன். நெடுஞ்
சாலைத் துறையின் மூலமாக . . . (மணியடிக்கப்
பெற்றது).

பிற்பகல் 12-10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடியுங்கள்.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : நெடுஞ்சாலைத்
துறையின் மூலமாகப் பல்வேறு திட்டங்களை அறிவித்து,
அதிலே சிறப்புச் செய்வதற்குரிய வகையில் புரட்சித் தலைவி
அவர்கள் ஆட்சியில் கொடுமுடியிலிருந்து, பிலிக்கல் பாளையத்
திற்கு ஒரு மேம்பாலத்தைக் கட்ட ஒரு திட்டத்தை அறிவிக்க
வேண்டுமாய் பணிவன்புடன் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், ஆளுநர் உரையிலே புரட்சித் தலைவியினுடைய
பள்ளித் திட்டங்களை அறிவித்து, பள்ளிக்கூடக் கட்டிடங்
களையும், கழிப்பிட வசதிகளையும் செய்து கொடுப்பதாக
எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதையும் நான் பாராட்டு
கிறேன். சென்னைப் பல்கலைக் கழகத்திலே பல்வேறு குளறு
படிகள் நடந்து கொண்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சியில் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடியங்கள் :
திரு. மனோகரன் அவர்கள். அடுத்த உறுப்பினரை
அழைத்து இருக்கிறேன். தயவு செய்து அமருங்கள்.
திரு. மனோகரன்.

<u>திரு. கே. ஏ. மனோகரன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டிற்கான மேதகு ஆளுநர்
உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்திலே நான் பங்கு
கொள்கிற வாய்ப்பினைக் கொடுத்தமைக்கு நன்றி.

காவிரி நீர்ப் பங்கீடு நடுவர் மன்றத் தீர்ப்புக்கு எதிராகக்
கர்நாடக மாநிலத்திலே நடந்த கோரச் சம்பவத்தினால் பாதிக்
கப்பட்ட தமிழர்களின் அவல நிலையை நான் பக்கத்துத்
தொகுதிக்காரன் என்ற முறையிலே கண்டேன். பாதிக்கப்
பட்ட மக்கள் சாரிசாரியாகத் தங்களுடைய கால்நடைகளை
யும், தங்களுடைய வளர்ப்புப் பிராணிகளையும், தங்களுடன்
எடுத்து வரக்கூடிய அளவுக்கு உடைமைகளையும் எடுத்து
தமிழகத்தை நோக்கி வந்தார்கள். அவர்கள் பட்ட இன்னல்
கள் சொல்லி முடியாது. அதை விவரிக்க முடியாது. கடந்த
30, 40 ஆண்டுக் காலத்திலே அவர்கள் உழைப்பால் கிடைத்த
உடைமைகளை இழந்து, இன்றைக்குத் தாளமுடியாத வேத
னைக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். கர்நாடக மாநிலத்திலே
உள்ள இரண்டு மாவட்டங்களிலே வாழ்கின்ற தமிழர்களுடைய
சூறையாடப்பட்ட சொத்தின் மதிப்பு சுமார் 200 கோடிக்கு
மேலாகும். ஆனால் அந்த அரசு பொங்கலுக்கு மக்கள்
போனதாகவும், சேதமான உடைமைகளின் மதிப்பு 4 கோடி
தான் என்றும் அறிக்கை விடுக்கிறார்கள். அங்கே வாழும்
தமிழர்களுக்கு எதிராக இன்றும் பல வன்முறைப் பிரச்சாரங்கள்
நடைபெற்று வருகின்றன. இந்தக் கலவரத்திற்குக் காரணம்
காவிரி நதிநீர்ப் பங்கீடு மட்டுமல்ல ; பெங்களூர் நகரிலே
வள்ளுவர் சிலை அமைக்க வேண்டுமென்று ஆரம்பித்ததில்
இருந்து பெங்களூர் நகரத்திலே அங்கே உள்ள தமிழர்களுக்கு
எதிராக பலவிதமான வன்முறைகள் நடைபெற்று வருகின்றன.
இதுபற்றி எல்லாம் நாங்கள் கர்நாடக அரசுக்குத் தெரிவித்தும்
எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பாதிக்
கப்பட்ட தமிழர்களுக்கு நிவாரணம் சரியான முறையிலே
கிடைக்கவில்லை. ஆகவே, நாங்கள் மத்திய அரசு பிரதிநிதி
தர்மபுரி மாவட்டம் வந்த போது, நடுவண் அரசு இதில் தலை
யிட்டு இந்த மாநிலத்திலே இரு மாநிலத்திற்கும் பொதுவான
அரசு அதிகாரியின் மூலம் நிவாரணத் தொகை வழங்க ஏற்பாடு
செய்ய வேண்டுமென்று கேட்டிருந்தோம். ஆனால், இது
வரை அந்த மாதிரி ஏற்பாடு செய்யப்படவில்லை. இது
போன்ற அமைப்பு ஏற்பட்டால்தான் பாதிப்புக்குள்ளான
தமிழர்களுக்கு நிவாரணம் கிடைப்பது நிச்சயமாகும்
அல்லாமல், அங்கேயுள்ள அதிகாரிகளை நம்பி, எந்தவிதமான
நிவாரணமும் கிடைக்க வாய்ப்பு இல்லை என்று நாங்கள்
கருதுகிறோம். அங்கேயுள்ள போலீஸ் துறை நடவடிக்கை



எடுத்திருந்தால் இந்தக் கலவரமே ஏற்பட்டிருக்காது. அப்படி
இருக்க, அவர்களிடமே போய் நிவாரணம் கொடுக்க வேண்டு
மென்று சொல்வது எந்த வகையிலே நியாயம் என்று
எங்களுக்குத் தெரியவில்லை. இது ஒரு கண் துடைப்பு
அறிவிப்பு என்று தான் நாங்கள் நம்புகிறோம். நடுவண்
அரசு இதன் மீது ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று
இந்தப் பேரவை மூலம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

பல கர்நாடக மாநில வாழ் தமிழர்கள் தற்போது ஏற்பட்டுள்ள
சூழ்நிலையின் காரணமாகத் தமிழகத்திலே தொழிலை அமைக்க
வேண்டுமென்று நம்மை நாடுகிறார்கள். அவர்களுடைய
கோரிக்கையை இந்த அரசு தாயுள்ளத்தோடு பரிசீலிக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

கூட்டுறவுத் தேர்தல்களை நடத்த இருப்பது உள்ளபடியே
மகிழ்ச்சிக்குரிய செய்தி. ஆனால், அரசு அதிலே சிறப்பான
கவனத்தைச் செலுத்தி, கடந்த காலச் சீர்கேட்டினைக் களையும்
வண்ணம் மிகவும் விழிப்பாகத் தேர்தல்களை நடத்த வேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்கிறேன். எங்கள் மாவட்டத்திலே
மாவட்ட ஆட்சித் தலைவர் பொங்கலுக்குள்ளே அனைத்து
ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சிகளில் எல்லாம், எரியாத
மின் விளக்குகள் எரியும் என்று அறிவித்திருந்தார்.

ஆனால் இதுவரை இந்த அறிவிப்பு அறிவிப்பாகத்தான்
இருக்கிறதே தவிர செயல்படவில்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். இந்த அரசின் மீது அவநம்பிக்கை ஏற்படும்
படியாகச் செயல்படும் அரசு அதிகாரிகள் மீது அரசு கடுமையான
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.
நமது அரசு மக்களுக்கு அளிக்கும் திட்டங்கள் பல சரிவர மக்
களைச் சென்றடையவில்லை. ஆகவே இதைக் கண்காணிக்க
சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழு அமைத்து கண்
காணிக்க வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்
கிறேன்.

உள்ளாட்சி நிர்வாகம் சரிவர இயங்காத காரணத்தால் உள்
ளாட்சியில் பல குறைபாடுகள் இருக்கின்றன. ஆகவே உடனடி
யாக உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டுமென்று நான்
கேட்டுக் கொள்கிறேன். முந்தைய காலத்தில் ஏற்படுத்தப்பட்ட
பல குழுக்கள் இன்னும் செயல்பாட்டில் உள்ளன. ஆகவே
அவை நமது அரசுக்கு எதிரான முடிவுகளை எடுப்பதற்குரிய
சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. உதாரணமாக சட்டத்
துறையிலே இன்னும் பல இடங்களில் அரசு வழக்கறிஞர்கள் நிய
மிக்கப்படவில்லை. அதன் காரணமாக அரசு தொடுத்த பல
வழக்குகளில் அரசுக்கு எதிராக தீர்ப்பளிக்கப்பட்டு வருகின்றன
உதாரணமாக ஹரிஜன் வெல்பேர் என்ற அடிப்படையில் மேகு
கொள்ளப்பட்ட பல நில ஆர்ஜிதங்களில் இன்று அரசுக்கு.

[திரு கே. ஏ. மனோகரன்] [1992 பிப்ரவரி 5

எதிராக வந்து அந்த வழக்குகளில் எல்லாம் அரசு தோற்றுக்
கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை
உடனடியாக அரசு கவனத்தில் கொண்டு இவைகளை எல்லாம்
மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மதுவிலக்கைப் பொறுத்தவரையில் எல்லா போலீஸ் அதி
காரிகளும் நல்ல முறையில் செயல் பட்டால் இன்னும் நன்றாக
இருக்கும் என்று கருதுகிறேன். புரட்சித் தலைவி அவர்களு
டைய தொகுதியில் இன்றைக்கு கள்ளச் சாராயமே இல்லை
என்ற அளவுக்கு அங்கே இருக்கும் சப் இன்ஸ்பெக்டர் நல்ல
முறையில் வேலை செய்து கொண்டிருக்கிறார். அவர் நன்றாக,
சுறுசுறுப்பாக, சட்டத்தில் உள்ள குறைகளை, ஓட்டைகளைக்
களைந்து நல்ல முறையில் வேலை செய்கின்ற காரணத்தால்
தான் இன்றைக்கு அந்தச் சூழ்நிலை இருக்கிறது. அது போல்
அனைத்து காவல் துறை அதிகாரிகளும் இருந்தார்களானால் இன்
றைக்கு தமிழகத்திலே முழுமையான மதுவிலக்கு இருக்கக் கூடிய
சூழ்நிலை இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது அரசு சமீபத்திலே தொழிற் கொள்கைகளை அறி
வித்தது. அதற்கான ஆயத்தப் பணிகளில் மூத்த தொழிற்
சங்க வாதிகளைக் கலந்தாலோசிக்கவில்லை என்ற குறை இருக்
கிறது. அவர்களுடைய அனுபவங்களையும் கேட்டு, தொழிற்
கொள்கையை வகுத்திருக்கலாம் என்று நான் கருதுகிறேன். சமீ
பத்திலே ஏற்பட்ட வெள்ளத்தாலே பாதிக்கப்பட்ட பல சாலை
களும், பாலங்களும் இன்னும் சீர் செய்யப்படவில்லை. எனது
தொகுதியில் உள்ள தண்டரைப் பாலத்தை உடனடியாகச் சீர்
செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். பல
நெடுஞ்சாலைகள் மோசமான நிலைமையில் இருக்கின்றன.

மின் அழுத்தம் சரியாக இல்லாத காரணத்தால் ஜோலார்பேட்டை,
பாச்சூர், சூளகிரி போன்ற பகுதிகளிலே இரவு 9 மணிக்கு
மேல் தான் நல்ல வெளிச்சம் வருகிறது. பொது மக்களும்
மாணவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே இதை உடனடி
யாகச் சீர் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மால்கோ நிறுவனத்திலே வேலை செய்யும் 1,500 தொழி
லாளர்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் அரசு
தனிக் கவனம் செலுத்தி அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று
நான் கேட்டுக் கொள்கிறேன். எனக்கு அளித்த வாய்ப்புக்கு
நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். ஜெய் ஹிந்த்.

__மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :__ திரு. ஜி. பழனி
சாமி.

__திரு. ஜி. பழனிசாமி :__ மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய
உரையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக



1992 பிப்ரவரி 5] [திரு ஜி. பழனிசாமி]

என்னுடைய கருத்தினைச் சொல்ல நான் விழைகிறேன். பொது
வாக ஆளும் கட்சியினுடைய கொள்கை நிலைகளை விளக்குகிற
வகையில் இன்றைய தினம் நம்முடைய ஆளுநர் உரை அமைந்
திருக்கிறது. அனேகமாக இதிலே பல்வேறு நல்ல திட்டங்கள்
அறிவிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறேன். காவல் துறை,
புதிய தொழில் கொள்கை, பட்டா பாஸ் புத்தகம், வழங்குவது
இலவச வேட்டி, சேலை, சாலைகள், குடிநீர் இப்படிப்பட்ட
பல்வேறு திட்டங்கள் இதிலே அறிவிக்கப்பட்டிருப்பதை நான்
பார்க்கிறேன். ஆனால் குறிப்பாக நான் ஆளுநர் உரையைத்
திரும்பத் திரும்பப் பார்க்கிறபோது, அனேகமாக பழைய கள்
ளும், புதிய மொந்தையுமாகவேதான் அமைந்திருக்கிறது.
இதிலே புதிய திட்டங்களை என்னால் காண முடியவில்லை.
காரணம் அனேகமாக 40 ஆண்டு காலமாக ஆட்சிப்
பொறுப்பில் உள்ளவர்கள் தொடர்ந்து இது போன்ற கொள்கை
நிலைகளை அறிவித்தும், அவற்றை நிறைவேற்ற முடியாத ஒரு
சூழ்நிலையைக் காண முடிகிறது. அதே போன்றுதான் அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்
பேற்ற பின்னால் 6 மாதங்களுக்கு முன்பு பல்வேறு திட்டங்கள்
தமிழக அரசால் அறிவிக்கப்பட்டிருந்தன.

பிற்பகல் 12.20.

ஆனால் நடைமுறைக்கு சாத்தியம் இல்லாத வகையில் இன்
றைக்கு அமைந்து கொண்டிருக்கிறது. அநேகமாக,
புதிய தொழில் கொள்கைகளை இன்றைக்கு அறிவித்திருக்கிறார்
கள். குறிப்பாக மத்திய அரசின் தொழில் கொள்கையை
பின்பற்றுகிற வகையில், அப்படியே முழுமையாக தமிழக
அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அதே போன்று, இன்றைக்கு தமிழக அரசு அநேகமாக பின்
தங்கிய தொழில் கொள்கையில், மத்திய அரசில் வழங்கிக்
கொண்டு இருக்கின்ற இந்த 10 சதவிகிதம் என்பது இன்றைக்கு
5.21 சதவிகிதமாக தொடர்ந்து மத்திய அரசால் குறைக்கப்
பட்டிருக்கிறது. அதனைப் பெறுவதற்கு மாநில
அரசு சார்பாக அதற்காக முயற்சிகளை எடுத்ததாக எனக்குத்
தென்படவில்லை. மாநில அரசு குறிப்பிடுகிறபோது, நம்
பிக்கை இருக்கிறது, வழங்குவார்கள் என்ற வார்த்தையோடு
அது முடிந்துவிடுகிறது.

அதே போன்று தான் 1992, 1993 ஆண்டிற்கான
திட்டக் குழுவிடத்திலே நிதி பெறுவதற்கு தமிழகத்தினுடைய
முதல்வர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் கலந்து
கொண்டு பேசி வந்திருக்கிறார்கள். குறிப்பாக தொடர்ந்து தமிழ
நாடு அரசுக்கு வழங்கக் கூடிய அந்த நிதிநிலை இன்றைய தினத்
திலே தமிழக அரசுக்கு 120 கோடி ரூபாய் குறைக்கப்
பட்டிருக்கிறது. அருகாமையிலே இருக்கிற கர்நாடக அரசுக்கு
415 கோடி ரூபாயை கேட்காமலேயே வழங்கப்பட்டிருக்
கிறது. கேரளாவிற்கு 120 கோடி ரூபாயை அதிகரித்திருக்
கிறது.

[திரு. ஜி. பழனிசாமி] [1992 பிப்ரவரி 5

இருக்கிறது. ஆனால் மாநில அரசிடம் மத்திய அரசு இன்
றைக்கு மாற்றாந்தாய் போக்கை தொடர்ந்து கொண்டு இருக்
கிறது. ஆனால் மத்திய அரசிடமிருந்து மாநில அரசு எதிர்
பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால் மாநில அரசு 'மயிலே,
மயிலே என்று சொன்னால், மத்திய அரசு இறகுகளை போடாது.
வலை வீசியாக வேண்டும். இல்லையென்று சொன்னால் கண்ணி
கள் போட்டாக வேண்டும். ஆனால் மத்திய அரசோடு நெருக்க
மான உறவு கொண்டிருக்கின்ற மாநில அரசு, தமிழகத்தினுடைய
வளர்ச்சி நிலைக்காக அதற்கான நிதி நிலைகளைப் பெறுவதற்கு
மாறாக நம்புகிறோம்., கொடுப்பார்கள், என்று சொல்லி எதிர்
பார்க்கிற நிலையோடு இருக்கிறது. நான் குறிப்பாகச் சொல்ல
கடமைப்பட்டிருக்கிறேன்.

__திரு. ஆர். சிங்காரம்__ : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்......

__மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்__ : 'ஆன் ஏ
பாயிண்ட ஆப் ஆர்டர்? கேட்கிறீர்களா ' இதில் ' பாயிண்ட்
ஆப் ஆர்டர்? ஒன்றுமில்லை. அவையின் நடைமுறையில்
ஏதாவது பிரச்னை அல்லது மாற்றம் இருந்தால் தான் பாயிண்ட்
ஆப் ஆர்டர், நீங்கள் கேட்பது ' பாயிண்ட் ஆப் கிளாரிபி
கேஷன் என்றால் கேளுங்கள். திரு. ஆர். சிங்காரம்.

__திரு. ஆர். சிங்காரம் :__ மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, ஆன் ஏ பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன்
தான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
மத்திய அரசு மாற்றாந்தாய் மனப் பான்மையோடு நடந்து
கொள்வதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்.
நேற்று நம்முடைய மாண்புமிகு அவையின் முன்னவர் நாவலர்
அவர்கள் இங்கே ஒரு செய்தியை அறிவித்தார்கள். திரு.
பிரணாப் முகர்ஜீ அவர்கள் நம்பிக்கைத் தரக் கூடிய வகையில்
நிதியை உயர்த்தித் தருவதாக செய்திவந்திருக்கிறதென்று
இங்கே சொல்லியிருக்கிறார்கள். அப்படி வந்ததற்குக் பிறகும்,
மாற்றாந்தாய் மாற்றாந்தாய் என்று சொல்வது முற்றிலும்
மாறான கருத்தாகும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

__மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்__ : உறுப்பினர்
அவர்கள் சொல்வதற்கு முன்பு 'மாற்றாந்தாய் மனப்பான்மை
என்று வரும்.

__திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் :__ மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, 1990—91 ஆம் ஆண்டுகளிலே
எல்லாம் மத்திய அரசு ஒதுக்கிய பணங்கள் சரிவர செலவு



1992 பிப்ரவரி 5] [திருமதி ஏ. எஸ். பொன்னம்பாள்]

செய்யப்படவில்லை. மத்திய அரசு ஒதுக்குகிற பணங்கள் சரிவர
செலவு செய்யப்படவில்லை என்ற காரணத்தினாலே தான் இப்
போது நமக்கு பணம் குறைந்திருக்கிறது என்று எங்களைப்
பொறுத்த வரையில் நினைக்கிறோம். அதோடு நம்முடைய
மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த அந்த பகுதிக்கு இந்த
பணத்தை யெல்லாம் நாங்கள் செலவு செய்கிறோம் என்கிற
உத்தரவாதத்தை கொடுத்திருக்கிறார்கள். அப்படி வரும்போது
அவர்கள் கேட்கக் கூடிய தொகை முழுமையும் மத்திய அரசு
கொடுக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்
கொள்கிறேன். எப்போது பார்த்தாலும் இந்த சிண்டு முடிகிற
வேலையை செய்து கொண்டிருந்தால் நன்றாக இருக்காது.

__மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :__ மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு பணம்
ஒதுக்கி அதை செலவழிக்காத நிலை ஒன்றும் இல்லை.

__திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் :__ நான் சொல்வது
1990—91-ல்.

__மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :__ மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய
பங்கு ஓரளவுக்குத்தான் இருக்கும். மாநில அரசினுடைய பங்கு
தான் பெரும் பகுதி இருக்கும். பெரும் பகுதி ஏற்று நடத்த
முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டதற்குண்டான காரணங்களை
நேற்று நான் விளக்கிக் காட்டினேன். எப்படியும் இந்த ஆண்டு
முடிவிற்குள்ளாக 7-வது ஐந்தாண்டு திட்டத்தினுடைய இறுதியை
முடிப்பேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரி
வித்திருக்கிறார்கள். 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தைப்
பொறுத்த வரையில் எவ்வளவு தேவை என்று எடுத்துச் சொல்லி
இருக்கிறோம். கூடுதலாக ஒதுக்க வேண்டியதற்கான காரணங்
களை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அவர்கள் எவ்வளவுக்
கெவ்வளவு கூடுதலாக ஒதுக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு
நாமும் நிதி ஆதாயத்தைத் தேடி அந்த இடத்திற்குப் போக
வேண்டும். அந்த இடத்திலேதான் நாங்கள் பேசிக்கொண்
டிருக்கிறோம். நம்பிக்கையான ஒரு நிலை வரும் என்று எதிர்
பார்க்கிறோம். அதைக் கெடுத்து விட வேண்டாம்.

__திரு. ஜி. பழனிசாமி:__ மரியாதைக்குரிய திருமதி எஸ்.ஆர்.
பொன்னம்மாள்......

__திருமதி எ.எஸ். பொன்னம்மாள் :__ பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, 'ஏ.எஸ்.' அது கூட தெரியவில்லை.

பிற்பகல் 12-25

__திரு. ஜி. பழனிசாமி__ : 1989 ஆம் ஆண்டு, அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகம் இடையிலே கலைக்கப்பட்டு, கவர்னருடைய
ஆட்சி அமல்படுத்தப்பட்டு, அன்றைய மத்திய நிதியிலிருந்து

அறிவிக்கப்பட்ட நிதியைதிருப்பி அனுப்பியதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், நானும் அப்போது இதே அவையில் உறுப்பினர்களாக இருந்த போது அறிவிக்கப்பட்டது. ஆக, 1990-91 ஆம் ஆண்டில் இந்த நிதி தமிழகத்திலிருந்து திருப்பி அனுப்பப்படவில்லை என்பதை தான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

<u>திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பி அனுப்ப முடியாது. அந்தப் பணத்தை ரிசர்வ் வங்கியில் தான் கட்ட வேண்டும். அதையும் நாமாக எடுக்க முடியாது. பிறகு அதிலே அப்ராபிரியேசன் பில் பாஸ் பண்ணப்பட்ட பிறகு தான் எடுக்க முடியும் என்பதை உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக சொல்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்:</u> உங்களுக்குள்ளேயே விவாதம் நடத்தக் கூடாது. தொடர்ந்து உறுப்பினர் ஆளுநர் உரைமீது பேசலாம்.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருந்தாலும், தமிழ்நாட்டுக்கு அந்தப் பணம் செலவழிக்கப்படவில்லை என்பதுதான் உண்மை.

அடுத்து, காவிரி நதி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரை, தமிழகத்திற்கு அதன் முழுமையான விவரங்களுக்குள் நான் செல்லவில்லை. காரணம், இந்த சட்டமன்றத்திலே காவிரி நதி நீர் பிரச்சினை சம்பந்தமாக தொடர்ந்து பல்வேறு விவாதத்திற்கு இடையிலே நடுவர் குழு அமைக்கப்பட்டது. நடுவர் குழு பல்வேறு சட்ட ஆலோசனைக்குப் பிறகு இன்றைக்கு காவிரி நதி நீரை வழங்க வேண்டும் என்பதற்காக, தமிழகத்தின்பால், இருக்கக் கூடிய நியாயத்தை உணர்ந்து, நீதியை கணக்கில் எடுத்து சுப்ரீம் கோர்ட் அனுமதியோடு 205 டி.எம்.சி. தண்ணீரை காவிரி நீரிலிருந்து வழங்க வேண்டுமென்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது. ஆனால் மத்திய அரசு காலம் கடத்த வேண்டும் என்பதற்காக தொடர்ந்து கர்நாடக அரசை அவர்கள் நீதிக்கு தலைவணங்க வேண்டும், நீதிக்கு கட்டுப்பட வேண்டும், தேசிய ஒருமைப்பாட்டை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக ஒரு வார்த்தையை கூட இதுவரையிலும் அறிவிக்காத போக்கு இருக்கிறது. இதை நிச்சயமாக கண்டனத்திற்குரிய விஷயமாக தமிழக அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். அதோடு காவிரி நதிநீர் பிரச்சினையைப் பொறுத்த வரையில், தமிழகத்தில் இருக்கிற அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றாக கூடி, ஒத்த கருத்



தோடு தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டு
இருக்கிற நடவடிக்கையை நான் வரவேற்க கடமைப் பட்டிருக்
கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இன்றைய தினம் அநேகமாக
ஆட்சிப் பொறுப்பை ஏற்று 6 மாதத்திற்குள்ளாக, மத்தியில்
இருக்கிற காங்கிரஸ் ஆட்சி 100 நாட்களில் விலைவாசியைக்
குறைப்போம் என்று கூறினார்கள். இல்லை,இல்லை தமிழகத்தில்
ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற அ.தி.மு.க. ஒரு மாதத்தில்
கட்டுப்படுத்தும் என்று கூறினார்கள். ஆனால், இவை இரண்
டுக்கும் மாறாக இந்த 6 மாதத்தில், அநேகமாக மாதந் தோறும்
மத்திய அரசும், மாநில அரசும் போட்டிப் போட்டுக்கொண்டு
இன்றைக்கு விலைவாசியை, விலைகளை ஏற்றி கொண்டிருப்
பதை, ஏழை எளிய மக்களின் குரல்வளையை நெறிக்கும்
நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.
குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், அநேகமாக அரிசி
விலை உயர்ந்து விட்டது, பால் விலை உயர்ந்து விட்டது,
சர்க்கரை விலை உயர்ந்து விட்டது, அது மட்டுல்லாமல் சமையல்
எண்ணெய் விலை உயர்ந்து விட்டது. பஸ் கட்டணம் உயர்ந்து
விட்டது, மின்சார கட்டணம் உயர்ந்து விட்டது. அநேகமாக
எல்லாவற்றையும் மாநில அரசு உயர்த்தியிருக்கிறது. அதுமட்டு
மல்லாமல், 100 நாட்களில் விலையைக் குறைப்போம் என்று
சொன்ன மத்திய அரசு தொடர்ந்து உர விலையை உயர்த்தினார்
கள், பெட்ரோல் விலையை உயர்த்தினார்கள், டீசல் விலையை
உயர்த்தினார்கள், மண்ணெண்ணெய் விலையை உயர்த்தினார்
கள், கியாஸ் விலையை ஏற்றினார்கள், தொடர்ந்து மக்களை
பழி வாங்குகின்ற போக்கில் இன்று விலைவாசி தொடர்ந்து
உயர்ந்து கொண்டிருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு
உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் :</u> மாண்புமிகு பேரவைத்
துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
கட்சி ஆட்சி செய்து கொண்டிருக்கிற மேற்கு வங்க மாநிலத்தில்
தான் இந்தியாவிலேயே அதிகமான விலைக்கு அரிசி விலையை
உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). தமிழ்நாட்டிலே
2 ரூபாய்க்கு விற்கிற அரிசி மேற்கு வங்கத்தில் ரூ. 4.61-க்கு
விற்கப்படுகிறது. நாம் இங்கே விலையை ஏற்றிய பின்னர்
ரூ. 3.50-க்கு நாம் விற்கிற அரிசியை அவர்கள் ரூ. 4.99 என்றும்,
ரூ. 5.20 என்றும் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதை
மனதில் வைத்துக் கொண்டு பேச வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

[1992 பிப்ரவரி 5

பிற்பகல் 12-30.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள். இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலே அரிசியைக் குறைந்த விலைக்கு விற்றால், அது தமிழ்நாட்டு மக்களைப் பெருமைப்படுத்தக் கூடிய தாகும். தமிழ்நாட்டு மக்களைப் பசியிலிருந்து, பட்டினி யிலிருந்து, வறுமையிலிருந்து போக்கக் கூடிய நல்ல திட்டமாக அது அமையும். ஆனால் இன்றைய தினம் மத்திய அரசு தான் விலயை உயர்த்தி இருக்கிறது. விலைவாசியை கட்டுப்படுத்துவது மத்திய அரசினுசைடய பொறுப்பு என்று மாநில அரசு குற்றம் சாட்டுகிறது. ஆனால் தமிழ்நாட்டில் உள்ள காங்கிரஸ் கட்சியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய எதிர் கட்சித் தலைவர் அவர்களும், ''இல்லை, இல்லை, இது மாநில அரசினுடைய விலை ஏற்றம்'' என்று குற்றம் சாட்டுகிறார்கள். இவ்வாறு ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டுகிற நிலையில், விலைவாசி மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது. பூனைக் கண்ணை மூடி விட்டால் நாடே இருண்டுவிட்டதென்று நினைத்துக் கொள்ளுமாம். அந்த வகையில் விலைவாசியை உயர்த்தினால், நாட்டு மக்கள் உங்களை மன்னிக்க மாட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதோ நாம் தவறாக குற்றச் சாட்டை மத்திய அரசு மீது சொல்வது மாதிரி மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உண்மை நிலையை அவர்கள் அறிய வேண்டுமென்பதற்காக உங்கள் மூலமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 1—1—1981-ல் இருந்து 1992 வரை அரிசியின் விலையை மத்திய அரசு 128.5 சதவிகிதம் உயர்த்தி இருக்கிறது. அதாவது 165 ரூபாயில் இருந்து 377 ரூபாயாக அவர்கள் உயர்த்தி இருக்கிறார்கள். அதனுடைய சதவீதம் 128.5. ஆனால் அதே நேரத்தில் 65 சதவிகிதம் தான் தமிழ்நாடு அரசு அரிசியின் விலையை உயர்த்தி இருக்கிறது. எனவே தான் அரிசி விலை ஏற்றத்தை அதிகமாக மத்திய அரசு செய்கிறதென்று சொல்கிறோம். அதை ஒரு குற்றச்சாட்டாக நாம் சொல்லவில்லை.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர், மரியாதைக்குரிய எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த போது மத்திய அரசு பல தடவை அரிசியின் விலையை உயர்த்தியது.



1992 பிப்ரவரி 5] [திரு. ஜி. பழனிசாமி]

இருந்த போதிலும் கூட மக்களுடைய நலன்களைக் கருதி, மக்களை மதித்து அவர் ஆட்சி நடத்தியதன் காரணமாகத் தான், அரிசியின் விலையை உயர்த்தாமல் இருந்தார்கள். அரிசியின் விலை மூலமாகத்தான் காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சி விழ்த்தப்பட்டது. அரிசியின் விலை மூலமாகத் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிகள் வீழ்த்தப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி சென்ற தடவை கூட நடத்திய போது 25 பைசா அரிசியின் விலையை ஏற்றிய போது கூட இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், நாணும் கூட அரிசியின் விலையை உயர்த்தக் கூடாது, அதை வாபஸ் வாங்க வேண்டுமென்று சொல்லி, கடுமையான எதிர்ப்புகளைத் தெரிவித்தோம். அரிசியின் விலை கிலோ விற்கு ஒரு ரூபாய், பாலின் விலை லிட்டருக்கு ஒரு ரூபாய், சீனியின் விலை கிலோவிற்கு 60 பைசா ஏறியிருக்கிறது. ஏழை எளிய மக்கள், குழந்தைகள் இன்றைக்கு பிஸ்கட் வாங்கிச் சாப்பிட முடியாத நிலைமை இருக்கிறது. ஒரு மாதத்தில் மைதா மூட்டை 450 ரூபாய் விலை உயர்ந்திருக்கிறது. இன்றைக்கு விலைவாசி என்பது எட்டிப் பிடிக்க முடியாத அளவுக் குச் சென்று கொண்டிருக்கும் நிலையைப் பார்க்கிறோம். (மணி அடிக்கப் பெற்றது).

அடுத்து இலவசத் திட்டங்கள். கடையிலே இருக்கிற தேங் காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது போல இது இருக்கிறது. ஏழை எளிய மக்கள் மீது வரியைப் போட்டுக் கொண்டு, இலவசத் திட்டம் என்று சொல்லி 41 கோடி ரூபாய்க்கு வேட்டி, புடவைகளை வழங்குறோம் என்று சொல்லுகிறார் கள். இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பல பேர்கள் இருக்கிறார்கள். நான் 3 நாட்கள் இடைவெளியில் என்னுடைய தொகுதியில் உள்ள பல்வேறு கிராமங்களுக்குச் சென்ற போது, எந்த ஊரிலும் உள்ளே நுழைய முடியவில்லை. வேட்டி, புடவை வழங்குவதில் முறைகேடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது ஒரு ஏமாற்றுத் திட்டமாக இருக்கிற தென்று சொல்லி, இன்றைக்கு கேரோ பண்ணும் அளவுக்கு நிலைமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் பற்றி அவருடைய கருத்துக்களைச் சொல் லிக் கொண்டிருக்கிறார்கள். இது தவறான கருத்து என்பது மட்டுமல்ல. நம்முடைய தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் அன்றைக்குக் குறிப்பிடுகிற நேரத்தில் 60 மீதமுள்ள 59 லட்சம் பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

லட்சம் பேர்களுக்கு பிப்ரவரி கடைசிக்குள் வழங்கப்படும் என்று
குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே உறுப்பினர் அவர்களுடைய
தொகுதியிலே ஓரிரு இடங்களிலே தவறு இருந்தால் அதைச்
சுட்டிக் காட்டலாம். பொதுவாக எதை எடுத்துக் கொண்டாலும்
வேறு மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற போது, பஸ் கட்டண
மாக இருந்தாலும் சரி, பால் விலையாக இருந்தாலும் சரி,
அரிசி விலையாக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும் சரி,
நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற தமிழகத்தின்
முதல்வரவர்கள், புரட்சித் தலைவி அவர்கள் குறைந்த விலைக்கு
வழங்கிக் கொண்டிருக்கும் பாங்கினைப் பார்க்கிறாம்.
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்கு வங்கத்தை நீண்ட
நெடுங்காலம் ஆண்டு கொண்டிருக்கும் இயக்கத்தைச் சேர்ந்தவர்
கள். ஆகவே அதையும் குறிப்பிட வேண்டும்.

பிற்பகல் 12.35.

ஆகவே நீண்ட நெடுங்காலமாக ஆட்சியில் இருக்கிற மேற்கு
வங்கத்தையும், ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். கேரள மாநிலத்
திலும் அவர்கள் ஆட்சி செய்திருக்கிறார்கள். அதையும் ஒப்
பிட்டுப் பார்க்க வேண்டும். அவர்கள் ஆளுகிற மாநிலத்தில்
விலைவாசி ஏறினால் என்று அவர்கள் குறிப்பிடுவதில்லை. தமிழ்
நாட்டைப் பொறுத்த வரையில் தவிர்க்க முடியாமல் இன்றைக்கு
விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் அதைக் குறிப்
பிட்டுக் காட்டி, தமிழக மக்கள் பூனையைப் போல் கண்ணை
மூடிக் கொண்டு இருக்கமாட்டார்கள் என்றெல்லாம் குறிப்பிடுவது
உண்மையிலேயே வேதனையாக இருக்கிறது. ஆகவே உறுப்
பினர் அவர்கள் பேசுகிற போது, வேறு மாநிலங்களையும் ஒப்
பிட்டுப் பார்த்துப் பேசினால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, ஒரு சின்ன விளக்கம் அவரிடம் கேட்க
வேண்டுமென்று கருதுகிறேன். இலவசமாகக் கொடுப்பதை
வேண்டாம் என்பதைப் போல பேசினார்கள். அதிலே குறைகள்
இருக்கின்றன என்று சொன்னால் திருத்திக் கொள்ளலாம். ஒரு
வேலை திட்டமே வேண்டாம் என்று சொல்கிறார்களா என்
பதைப் பற்றி தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்க விரும்பு
கிறேன். வேட்டி, சேலை கொடுப்பதில் தவறு நடக்கிறது
என்று சொன்னார்கள். திட்டமே வேண்டாம் என்று சொல்லி
விட்டு, ஊருக்குள் போக முடியவில்லை என்றும் சொல்வது
எப்படி என்று புரியவில்லை. விளக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்
களே, இலவசத் திட்டம் என்பதை வேண்டாம் என்று நான்
சொல்லவில்லை. ஆனால் மாநிலத்தில் நிதிப் பற்றாக்குறை
இருக்கிற போது, போட்டிருக்கிற திட்டங்களை நிறைவேற்றப்பட





முடியாத நிலையில், விலைவாசியை உயர்த்தியதற்குக் காரணம்
மத்திய அரசிடம் நிதி பெற முடியவில்லை, மாநில அரசிடம்
நிதி இல்லை என்ற இந்த நிலையில், ரூ. 41 கோடி செலவில்
இந்தத் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமா என்று தான்
கேட்கிறேன். மனிதன் ஒரு கந்தல் துணியைக் கூட
கட்டிக் கொண்டு இருந்து விடலாம். ஆனால் பசி பட்டினி
யோடு வாழ முடியாது. ஒரு ரூபாய் இல்லையென்றால் ஒரு
கிலோ அரிசி வாங்க முடியாது. ஆகவே இந்த சூழ்நிலையில்
விலைவாசி உயர்வை மறைப்பதற்காக இதைப் போன்ற இலவச
திட்டங்களை மாநில அரசு அறிவித்திருக்கிறது என்பது தான்
இன்றைக்கு இருக்கக் கூடிய நிலை. (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : இலவச
வேட்டி, சேலை வழங்கும் திட்டம் வேண்டுமா, வேண்டாமா
என்ற கேள்விதான் எழுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு பதில்
சொன்னால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : ஆடையில்லாதவன்
அரை மனிதன் என்று சொல்வார்கள். ஆடையே வேண்டாம்
என்று இங்கே உறுப்பினர் சொல்கிறார். உணவு இல்லாவிட்டா
லும் எத்தனையோ நாட்களுக்கு இருந்துவிட முடியும். ஆனால்
ஆடை இல்லாவிட்டால் ஒரு நிமிடம் கூட இருக்க முடியாது
என்பதை உறுப்பினர் அறிவாரா என்று கேட்க விரும்புகிறேன்.
உணவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைப் போல உடைக்கும்
முக்கியத்துவம் கொடுத்தாக வேண்டும். அரிசியைக் குறைந்த
விலையில் கொடுக்க வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் சொல்
கிறார்கள். அதனால் அரசுக்கு எவ்வளவு நஷ்டம் என்று
அவருக்கே தெரியும். இப்போதே ஏராளமான சப்சிடி கொடுத்
துக்கொண்டு இருக்கிறோம். அதைப் போல உடைக்கும், அதா
வது மானத்தைக் காக்கும் வேட்டி, சேலைக்கும் செலவழிக்கப்
படுகிறதே தவிர, ஏழை எளிய மக்களுக்குத் தான் செலவழிக்கப்
படுகிறது என்பதை நினைவில் வைக்க வேண்டும். இல்லாதவர்
களுக்குத் தான் நம்முடைய புரட்சித் தலைவி அரசு கொடுத்துக்
கொண்டிருக்கிறது. திட்டம் நல்ல திட்டம். அதை அவர்கள்
வரவேற்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. சென்ற
பட்ஜெட் கூட்டத்தின் போது ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு
கோடி ரூபாயை வழங்குகிறோம் என்று ஒரு திட்டத்தை இங்கே
அறிவித்தார்கள். அநேகமாக 6 மாதம் ஆகிவிட்டது. ஊராட்சி
ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் என்ற அந்தத் திட்டத்தின்கீழ்
ஒரு பைசா கூட ஊராட்சி ஒன்றியங்களுக்கு வந்து சேரவில்லை.
அது பொய்யான திட்டம். அது புஸ்வாணமாக மாறிவிட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : உறுப்பினர் அவர்கள் தவறான தகவலையே கொடுத்துக் கொண்டிருக்கிறார் கள். எதற்காக அப்படி பேசுகிறார் என்று புரியவில்லை. ஒரு புறத்தில் தஞ்சை மாவட்டத்தில் பேசுகிறபோது விவசாயிகளுக்கு விலை உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று அவர் பேசுவார். இங்கே வந்தால் உடனடியாக விலையை குறைத்துக் கொடுத்து அரிசி வழங்கவேண்டுமென்று பேசுகிறார். ஆகவே முன்னுக்குப் பின் முரணாகப் பேசிக்கொண்டிருக்கும் அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். இன்றைக்கு ஒரு கோடி ரூபாய் ஊராட்சி ஒன்றியத் திற்கு என்று வழங்கும் திட்டத்தைப் பொறுத்த வரையில், படிப்படியாக நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பது, எங்க ளைப் போன்றவர்களுக்கு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தெரி கிறது. உங்களுக்கு ஏன் தெரியவில்லை என்பதை அறிய விரும்பு கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : அப்படியென்று சொன்னால் என் னுடைய தொகுதிக்கு அந்த ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட வில்லை என்று நான் கருதுகிறேன். அனேகமாக எல்லாத் துறை களிலும், ஹைவேஸ், பொதுப்பணித்துறை போன்ற பல்வேறு துறைகளில் ஒதுக்கியிருக்கக்கூடிய நிதியில் இருந்துதான் அந்த ஒரு கோடி ரூபாயைக் கணக்காகக் காட்டவேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறதே தவிர, ஒரு பி. டி. ஓ-க்கு ஒரு கோடி ரூபாயைக் கொடுத்து அந்த திட்டங்களை அதாவது சாலை, மின்சாரம், குடிநீர் போன்றவற்றுக்கு அனுமதித்ததாகத் தெரிய வில்லை. இதுபோன்றுதான் . . . . . . . .

பிற்பகல் 12-40

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு கோடி ரூபாய்த் திட்டம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் என்றால், ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள பல்வேறு திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், குடிநீர்த் திட்டங்கள், சாலைத் திட்டங்கள், பள்ளிக்கூட வசதி திட்டங்கள் ஆகியவற்றை நிறைவேற்றுவ என்று பொருளே தவிர, ஒரு கோடி ரூபாயை மாற்றி பணமாகப் பெற்று பீ.டி.ஓ., கையில் கொடுப்பது என்று பொருள் அல்ல. ஆகவே, இந்த ஆண்டு இந்த 6 மாதங்களுக்கு ரூபாய் 192 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் நிறைவேற்றுவதும், அடுத்த 6 மாதங் களுக்கு ரூபாய் 192 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் போட்டு நிறைவேற்றுவதும் என்பதுதான். அந்த அளவிற்கு ஒவ்வொரு ஊராட்சியத்தினுடைய ஆணையாளரைப் போய்ப் பார்ப்பீர் களேயானால், அவர்கள் அந்த ஒன்றியத்தைப் பொறுத்த வரை யில் என்னென்ன திட்டங்கள் இந்த ஒரு கோடி ரூபாய் திட்டத் தின் கீழ் எடுக்கப்பட்டிருக்கின்றன என்ற முழு விவரங்களையும் தருவார்கள். அப்படி அவர்கள் தராவிட்டால், நாங்கள் உங்க ளுக்குத் தரும்படி சொல்லுகிறோம்.





டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். ஆனால் அந்த ஒரு கோடி ரூபாய் திட்டத்தின் கீழ் எந்தப் பணமும் ஒதுக்கப்பட வில்லை என்கிற குற்றச்சாட்டை நான் வலியுறுத்தியாக வேண்டும் காரணம், எந்த பஞ்சாயத்துக்குட்பட்ட பகுதியானாலும் சரி, அங்கே ஒரு கோடி ரூபாய்த் திட்டத்தின் அடிப்படையில் அரசின் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா என்று கேட்கிற நேரத்தில் "டுவார்ட்" போர்டிலிருந்து அல்லது பி. டபிள்யூ.டி. யிலிருந்து அல்லது எலக்ட்ரிசிட்டி போர்டிலிருந்து—இப்படி பல் வேறு துறைகளின் சார்பாக எவ்வளவு பணம் செலவு செய்யப் பட்டு வருகிறதோ அதுதான் அந்த ஒரு கோடி ரூபாய்க்கு உட் பட்ட கணக்குக்குள் கொண்டு வருகிறார்கள் என்று சொல்லு கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் கொடுக்கும் நேரத்தில், நம்முடைய நெடுஞ்சாலைத் துறைக்காக இருந்தாலும் சரி, மின் சாரத் துறைக்காக இருந்தாலும் சரி, பொதுப்பணித் துறைக்காக இருந்தாலும் சரி, ரெகுலர் அலாட்மெண்ட் தவிர தனியாக கூடுதலாக கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உதாரணத்திற்கு நெடுஞ்சாலைத் துறையிலே இந்த ஆண்டு ரூபாய் 114 கோடி என்று தனியாக ஒதுக்கிக் கொடுத்திருக்கி றோம். அது போக ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஒரு கோடி ரூபாய் திட்டத்திலே உள்ள வேலைகளை, தரம் கருதி, இனி நெடுஞ்சாலைத்துறை மூலம் சாலைகள் போடும் முறைக்கு பணியைச் செய்துக் கொண்டிருக்கிறோம். ரெகுலர் அலாட் மெண்டுக்கும், இந்த அலாட்மெண்டுக்கும் தனித்தனியாக ஒதுக் கப்படுகிறதே தவிர, அதை நாங்கள் "மிங்கிள்" செய்யவில்லை என்பதை நண்பர் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று தெரிவித் துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி, விரைவில் முடிக்க வேண்டும்.

திரு. ஜி. பழனிசாமி : நான் கேட்டறிந்த வரையிலும் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாகத்தான் ஊராட்சி ஒன்றியத்தில் வேலை நடைபெறுகிறதே தவிர மாநில அரசால் ஒதுக்கக் கூடிய அந்த ஒரு கோடி ரூபாய் திட்டத்திலே வேலைகள் நடைபெறவில்லை என்றுதான் அங்கேயுள்ள ஆணையாளர்கள் சொல்லுகிறார்கள். அப்படியென்றால், அந்த அதிகாரிகள் தவறாக என்னிடத்திலே சொன்னார்கள் என்றால், நீங்கள் அவர் மீது உரிய நடவடிக்கையை எடுங்கள். என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மீது, கோட்டூர்

[திரு. ஜி. பழனிசாமி] [1992 பிப்ரவரி 5

ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மீது, முத்துப்பேட்டை
ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மீது நீங்கள் நடவடிக்கையை
எடுங்கள். ஏன் பொய் சொன்னார் என்று சொல்லுங்கள். அது
தான் நாட்டு மக்களுக்கு .. .. ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எதிர்க் கட்சித்
தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் எப்படி புரிந்து
கொண்டார் என்று எனக்குத் தெரியவில்லை. ஜவகர் வேலை
வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படுகிற நிதியும் இந்தக்
கணக்கிலேதான் வரும். தன்னிறைவுத் திட்டமாக இருந்தாலும்,
ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்திலே ஒதுக்கப்படுகிற நிதியாக
இருந்தாலும், ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படு
கிற நிதியாக இருந்தாலும் அனைத்தும் சேர்ந்ததுதான் ஒவ்
வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய்த் திட்டம். இதைத்
தான் நிதியமைச்சர் அவர்களும் குறிப்பிட்டார்கள். இதிலே
ஒரு வேளை போதிய அளவு வரவில்லை என்றால் சுட்டிக்காட்ட
லாம். சுட்டிக்காட்ட வேண்டாம் என்று சொல்லவில்லை.
தாராளமாக சுட்டிக்காட்டுங்கள். ஆனால் அனைத்தும் சேர்ந்தது
தான் அந்த தன்னிறைவுத் திட்டம்.

திரு. ஜி. பழனிசாமி : அதைத்தான் நான் சொல்லுகிறேன்.
ஆரம்பத்திலே அப்படி அறிவிக்கப்பட்டிருந்தால் இந்தக் கேள்விக்கு
இடமேயில்லை ; இந்தக் கேள்வி கேட்டிருக்க வாய்ப்பே இல்லை.
ஆனால் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் என்று
அறிவிக்கப்பட்ட பிறகு, அந்த ஒரு கோடி ரூபாய்க்கான திட்டம்
என்ன, எந்தெந்த ஊரில் குடிநீர்த் திட்டம் எடுக்கப்பட்டிருக்
கிறது, எங்கே சாலை போடப்பட்டிருக்கிறது, மின்சாரம்
இல்லாத எந்த ஊர்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்
கிறது என்று கேட்கும் போது நடைமுறையிலே உள்ள திட்டங்கள்
தானே தவிர இதற்கு தன்னிறைவுத் திட்டம் இல்லை என்று
அறிவித்தவுடனேதான் நான் இந்தக் கேள்வியைக் கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
நிதியமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்
கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்றுதான்
உள்ளபடியே வழக்கமாக ஒவ்வொரு ஊராட்சி மன்றங்களிலேயும்
ஊராட்சி ஒன்றியங்களிலேயும் வழக்கமாக செய்யப்படுகிற பணி
கள் இருக்கின்றன. வழக்கத்திற்கு மேலாக எக்சஸ்ஸாக செய்யப்
படுகிற பணிகளைப் பொறுத்து ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்
தின் கீழும் பணிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ஜவகர்
வேலை வாய்ப்புத் திட்டத்தை மட்டுமே நிறைவேற்றி இதுதான



1992 பிப்ரவரி 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஒரு கோடி ரூபாய்த் திட்டம் என்று சொல்லவில்லை. ஆகவே,
அந்தத் திட்டங்களில் ஒரு கோடி ரூபாய் அளவுக்கு ஓராண்டு
காலத்திற்குள்ளாக ஒவ்வொரு ஒன்றியமும் வசதிகள் பெறும்.
அந்த வசதிக்கு எங்கேயிருந்து பணம் வருகிறது என்பது ஜவகர்
வேலைத் திட்டத்தையும், அரசாங்கம் கூடுதலாக ஒதுக்கும்
பணத்தையும் குறிப்பதாகும். சேர்த்து ஒரு கோடி ரூபாய்க்கு
ஓராண்டு காலத்திற்குள்ளே திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்ற
கருத்திலேதான் சொல்லப்பட்டது. அதைத் தான் நிறைவேற்றி
வருகிறோம்.

பிற்பகல் 12-45

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களு
டைய கவனத்திற்கு ஒரு சிறிய பிரச்சினையை கொண்டு வரு
கிறேன். மின்சார வாரியத்தைப் பற்றி சொன்னார்கள். உதார
ணமாக வழக்கமாக 40 ஆயிரம் புதிய விளக்குகள் போடுவ
தென்றால் அது வழக்கமாக இருக்கிற திட்டம். ஆனால்
ஊராட்சி ஒன்றியத்தில் இந்த புதிய திட்டத்தின் கீழே, புரட்சித்
தலைவி அவர்கள் அறிவித்த திட்டத்தின் கீழே இந்த ஆண்டு
இரண்டு இலட்சம் புதிய விளக்குகள் போட இருக்கிறோம்.
ஆகவே, 40 ஆயிரத்திற்கு பதிலாக ஒரு இலட்சத்து 60 ஆயிரம்
புதிய விளக்குகள் மின்சார வாரியத்தின் மூலம் போடப்படுகின்ற
திட்டம் இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் வருகிறது.
ஆகவே, அந்த 2 இலட்சம் விளக்குகளில் 40 ஆயிரம் விளக்குகள்
தான் ரெகுலராகப் போடுகிற திட்டம். ஆனால், இந்த ஆண்டு
புதிய திட்டத்தின் கீழே இரண்டு இலட்சம் விளக்குகள் போட
இருக்கிறோம். ஆகவே, அந்தத் திட்டம் என்பது வேறு. இந்த
புதிய ஊராட்சி ஒன்றியத்திற்கு கொடுக்கிற ஒரு கோடி ரூபாய்
திட்டம் என்பது வேறு என்பதை மாண்புமிகு உறுப்பினர் புரிந்து
கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, இன்றைக்கு மருத்துவ நல இலவசத் திட்டம் என்ற
பெயரிலே 10 ஆயிரம் பேர்களுக்கு மருத்துவ உதவி வழங்க
நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, அந்த மருத்துவ
நடவடிக்கை என்பது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குறிப்
பாக மாவட்ட மருத்துவமனை, தாலுக்கா மருத்துவமனை,
ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்து வாங்க சென்ற பட்ஜெட்
கூட்டத்தில் 10 ஆயிரம் ரூபாய் உயர்த்திக் கொடுப்பதாக அறி
வித்தீர்கள். ஆனால் எந்தவொரு மருத்துவமனையிலும் போது
மான மருந்துகள் இல்லை. அங்கேயிருக்கக்கூடிய நோயாளிகளுக்கு
போதுமான மருந்துகள் வழங்கப்படவில்லை. நீண்ட கியூக்கள்
இருக்கின்றன. அநேகமாக தமிழகத்தில் இருக்கக்கூடிய மருத்து
வர்கள் இன்று தனியாக தங்கள் மருத்துவமனையை துவங்கி
அங்கே பணியாற்றுகிறார்களே தவிர, மருத்துவமனைகளில்
மருந்து இல்லாத சூழ்நிலையைத் தான் காண முடிகிறது. அது

[திரு. ஜி. பழனிசாமி] [1992 பிப்ரவரி 5

போன்று ஏதோ ஒரு இடத்தில் முகாம் நடத்தி அந்த ஊர்மக்க
ளுக்கு எல்லாம் மருத்துவ உதவி செய்வதன் மூலமாக நிரந்தர
மாக நோயாளிகளின் நோய்களைத் தீர்க்க முடியாது. நோயாளி
கள் மருத்துவமனைகளுக்கு வந்து அவர்களுடைய நோய்களை
தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னால் தாலுக்கா
மருத்துவ மனைகளில் மருந்துகள் இருக்கவேண்டும்.

நம்முடைய மாநில அரசிலே இன்றைக்கு மருந்துகள் வாங்கு
வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்று நேற்றையத்
தினம் நம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு
தாலுக்கா மருத்துவமனையில் ஆயிரம் ரூபாய்க்கு மருந்துகள்
வாங்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆயிரம் ரூபாய்க்கு மருந்து
வாங்குவதென்றால் அவர்கள் 40 சலைன் பாட்டில்கள் மட்டும்
தான் வாங்க முடிகிறது. வாரத்திற்கு இரண்டு பேர்களுக்கு
குடும்பக் கட்டுப்பாடு ஆப்பரேஷன் செய்யவேண்டுமென்று சொல்
கிறார்கள். இங்கே டாக்டர்கள் பலபேர் உறுப்பினர்களாக
வந்திருக்கிறார்கள். ஒருவருக்கு ஆப்பரேஷன் என்றாலும் 20
சலைன் பாட்டில்கள் வேண்டும். ஆயிரம் ரூபாய்க்கு மருந்து
வாங்கி அவர்கள் எப்படி மருத்துவமனையில் நிர்வாகம் பண்ண
முடியும் ? எனவே, மூடுகிற நிலையில் தான் இன்றைக்கு தாலுக்கா
மருத்துவமனைகள் இருக்கின்றன. ஆகவே, மருந்து வழங்குவதை
உடனடியாகச் செய்ய வேண்டும். (மணியடிக்கப் பெற்றது).

இன்னொன்றையும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.
அருகில் இருக்கின்ற கேரளா போன்ற மாநிலங்களில் இரண்டு
மாவட்டங்களுக்கு ஓரிடத்தில் சலைன் பாட்டில் பண்ணக்கூடிய
யூனிட்டுகளை வைத்து தயார் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.
அதைப்போல தமிழ் நாட்டில் செய்தால் நிச்சயமாக இதில்
போட்டியும் நன்றாக இருக்கும். நிச்சயமாக மருந்து பற்றாக்
குறை இல்லாமல் கிடைப்பதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்த
முடியும். அதை உடனடியாகச் செய்யவேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. க. முத்துசாமி :</u> மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, நேற்றைக்கே இதுசம்பந்தமாக கொஞ்சம்
விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். மருந்து பற்றாக்குறை
என்பது இருந்தது உண்மைதான். அதற்கு என்ன காரணம் என்
றால்,—தமிழகத்தில் முதலமைச்சராக புரட்சித் தலைவர் அவர்
கள் இருந்தபோது 10, 11 ஆண்டுக்காலம் இதுபோன்ற ஒரு
பிரச்சினையே இல்லாத அளவுக்கு அன்று மருந்துகள் ஒழுங்காக
வாங்கிக் கொடுக்கப்பட்டு வந்தன—ஏதோ ஒரு புதிய மாற்றத்தை
ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடோ, புதிய மாற்றத்தை
ஏற்படுத்துவதன் மூலமாக பெரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்த
முடியும் என்று நம்பியோ, ஏற்கெனவே இருந்த நல்ல முறையை



1992 பிப்ரவரி 5] [திரு. க. முத்துசாமி]

பிற்பகல் 12.50

மாற்றிய காரணத்தால் கடந்த மூன்றாண்டுக்காலமாக இப்படிப்
பட்ட பிரச்சினையை நாம் சந்திக்க வேண்டிய அவசியம் ஏற்
பட்டிருக்கிறது. இந்த அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கின்ற பிரச்
சினை என்னவென்றால் நாங்கள் பொறுப்பை ஏற்று ஏழு மாதக்
காலம்தான் ஆகிறது. ஆனால் மருந்து வாங்குவதற்காக
டெண்டர் போடுகிற நேரம் என்பது பிப்ரவரி 28 ஆம் தேதி.
மத்தியிலே, பாராளுமன்றத்திலே பட்ஜெட் முடிந்த பின்னாலே
டெண்டர் போட்டால்தான் அவர்கள் ரேட்டை ஒழுங்காகக்கொடுக்
கிறார்கள். இடையிலே என்ன செய்தாலும், சரியான முறையாக
மருந்துகளை வாங்குவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது.
இதற்கு முன்னாலே ஒரு முறையைச் சரியாக கடைப்பிடிக்காத
காரணத்தால் எந்த நேரத்திலே வேண்டுமானாலும் டெண்டர்
போட்டார்கள், எந்த நேரத்திலே வேண்டுமானாலும் அவர்கள்
முடிவு எடுத்தார்கள். இப்போது ஒரு கமிட்டியை அதற்காக
அமைத்து—1,200 மருந்துகள் இருக்கின்றன. இதுவேகூட
அதிகமான அளவிலே இருக்கிற காரணத்தால் தேவையில்லாத
மருந்துகளை எடுத்துவிட்டு, மிக அத்தியாவசியமான தேவை
யான மருந்துகளை முறையான, நல்ல மருந்துகளை எல்லாம்
அந்த லிஸ்டிலே கொண்டுவரவேண்டும் என்று சொல்லி, ஒரு
கமிட்டியை ஏற்படுத்தி—அந்த கமிட்டி முடிவை இப்போது
கொடுத்து இருக்கிறது. நாங்கள் என்ன முடிவு செய்திருக்கிறோம்
என்று சொன்னால், ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் 1
15 ஆம் தேதி டெண்டர் கால்ஃபார் செய்யவேண்டும். மார்ச்
காலம், அதாவது மார்ச் 15 ஆம் தேதி வரை, அதற்குக் கால
அவகாசம் கொடுக்கவேண்டும். மார்ச் 15 ஆம் தேதியிலிருந்து
ஏப்ரல் முடிவிற்குள்ளாக, ஏப்ரல் 30 ஆம் தேதிக்குள்ளாக அதை
முடிவு செய்துவிடவேண்டும். அதற்குப் பின்னால், ஆர்டர்
கொடுத்தால், ஒரு மாத காலம் ஆகிறது. அவர்கள் நமக்கு
சப்ளை செய்வதற்கு. எனவே, இப்படி ஒரு திட்டத்தை நாங்கள்
வகுத்திருக்கிறோம். எனவேதான், கடந்த காலத்திலே, ஏற்
கனவே இருந்த இந்தப் பிரச்சினையை நாங்கள் சரி செய்து
கொண்டு வந்து கொண்டிருக்கிறோம். இந்த 15 ஆம் தேதி
டெண்டரை கால்ஃபார் செய்ய இருக்கிறோம். இந்த ஆண்டு
இதை முடிவு செய்துவிட்டால், அதற்குப் பின்னாலே, இந்தத்
திட்டத்திலே அநேகமாக எந்தப் பிரச்சினையும் வராத அளவிற்கு
மருந்துகளை நம்மால் பெற்றுவிட முடியும்.

குறிப்பாக, ஐ.வி.யு.பி.-யைப் பொறுத்தவரையில்,
கம்பெனி ஸ்ட்ரைக்கிலே இருந்த காரணத்தால், எங்களுக்குப்
போதிய அளவு கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.
இன்னும்கூட இந்தப் பிரச்சினை தொடர்ந்து இருந்து கொண்டு
தான் இருக்கிறது. இருந்தாலும், நாங்கள் கம்பெனியிடத்திலே
நேரடியாகப் பேசி, அதைச் செய்து கொண்டிருக்கிறோம்.
இதற்கு என்ன காரணம் என்று சொன்னால், ஒரே ஒரு

16234
600 008
V211,3 N92.15

கம்பெனிக்கு மருந்து ஆர்டர் கொடுத்து விடுகிறார்கள். இப்
போது அந்த நிலைமையை மாற்றியிருக்கிறோம். லோயஸ்ட் பிரைசை
யார் கொடுத்திருக்கிறார்களோ, அவர்களோடு சேர்த்து,
மேலும், 3, 4 நபர்களைச் சேர்த்து, அந்த லோயஸ்ட் பிரைசுக்கு,
அவர்களுக்குச் சமமாக அந்த பிரைசுக்குக் கொண்டுவரச் செய்து,
எல்லோருக்கும் கொடுப்பதற்கான ஒரு நடவடிக்கை எடுக்கப்
பட்டு இருக்கிறது. இப்படி ஒரு மிகப் பெரிய ஆய்வை செய்து
நிபுணர்களை எல்லாம் போட்டு, இந்த ஆய்வைச் செய்து,
இப்போது முடித்து இருக்கிறோம். விரைவாக இதற்கு நட
வடிக்கை எடுக்க இருக்கிறோம்.

எனவே, திடீரென்று அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக அரசாங்கம் வந்த பின்னால், மருந்துகள்
இல்லாமல், ஏதோ மிகப் பெரிய தொந்தரவைக் கொடுத்து
விட்டதைப் போல, திரு. பழனிசாமி அவர்கள் நேற்றும் சொன்
னார்கள். இன்றைக்கும் சொல்கிறார்கள். அப்படியல்ல.
நீங்கள் ஏற்கனவே உங்களுடைய தோழமைக் கட்சி என்று விட்டு
விட்ட காரணத்தால், ஏற்பட்ட கஷ்டங்களை இப்போது
நாங்கள் தாங்கிக் கொள்ளக்கூடிய ஒரு கட்டாயம் ஏற்பட்டு இருக்
கிறது. எனவே, இதை விரைவாக தீர்த்துத் தருவதற்கான
நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்
துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இலவச முகாம்களைப் பற்றி இங்கே சொன்னார்கள்.
இலவச முகாம் நடத்துவது என்பது, ஏதோ, இருக்கிற நோயாளி
களை எல்லாம் ஒரு இடத்திற்குப் பிடித்துக் கொண்டு வந்து,
அன்றைக்கே, அவர்களுடைய நோயைக் குணப்படுத்தி அனுப்ப
வேண்டும் என்ற நோக்கத்தோடு போடப்பட்ட திட்டமல்ல.
இதனுடைய நோக்கம், வருகிற நோயை எப்படித் தடுப்பது ?
ஏன் நோய் வருகிறது ? என்ன சொன்னாலும் சில பேர்
களைப் போல் கேட்காதவர்கள், இந்த நாட்டிலே இருக்கிறார்
கள். எனவே, அவர்களைச் சொல்லித் திருத்த வேண்டும்.
அவர்களுக்கு இதைப் புரிய வைக்கவேண்டும் என்பதற்காக அந்த
முகாமிலே இதையெல்லாம் சொல்லித் தருவதற்காக இந்த
முகாம்கள் நடத்தப்படுகின்றன. இதுதான் முதல் நோக்கம். அதிலே
என்ன என்ன நோய், எப்படி எல்லாம் வருகிறது, எந்தெந்தப்
பகுதியிலே என்ன நோய் அதிகமாக இருக்கிறது, அதைக் கட்டுப்
படுத்துவதற்கு என்ன செய்யவேண்டும் என்ற ஆய்வைக் கூட
அங்கே செய்கிறார்கள்.

எனவே, பொதுமக்களிடத்திலே இந்த ஹெல்த்தைப் பற்றி
ஒரு பெரிய மறுமலர்ச்சியை, விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த
வேண்டும் என்பதற்காக இது நடத்தப்படுகிறது. எனவே,
அந்த நோக்கத்திலே தயவுசெய்து நீங்கள் பார்க்கவேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனவே, நீங்கள் அந்தப்
பக்கமாக போகிறபோது, அந்த முகாம் எப்படி நடக்கிறது,



மருந்து கொடுக்கிறார்களா என்று பார்ப்பதைவிட, அங்கே
யிருக்கிற மக்களுக்கு முறையாக அது சொல்லித்தரப்படுகிறதா
என்பதை நீங்கள் பாருங்கள். நாங்கள் இன்றைக்குச் சொல்
கிறோம். உங்களைப் போன்றவர்கள், சத்துணவுத் திட்டம்
வந்த நேரத்திலே, எதிர்க்கட்சியிலேயிருந்தவர்கள் எல்லாம்
எதிர்த்தார்கள். இன்று இந்தத் திட்டத்தை உலகமே பாராட்டிக்
கொண்டிருக்கிறது. இந்தத் திட்டமும் தொடர்ந்து ஒரு 5 ஆண்டுக்
காலத்திற்கு நடத்தப்பட்டால், அதற்குப் பின்னாலே, தாலுக்கா
மருத்துவமனைகள் தேவையா என்ற அளவிற்கு ஒரு மறுமலர்ச்சி
யை உருவாக்கிவிட முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.
எனவே, உங்களைப் போன்ற எதிர்க்கட்சித் தலைவர்கள்,
அதற்கு ஒத்துழைப்பு தந்து, இந்தத் திட்டத்தை சிறப்பாக
நடத்துவதற்கு ஆதரவு தரவேண்டும். ஆரம்பத்திலேயே
அதற்கு மூடுவிழா செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ள
வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த அரசு நல்ல திட்டங்களைத் கொடுக்
கிறபோது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கும், மக்களுக்கு
விரோதமாக எடுக்கக்கூடிய சட்டம் வருகிறபோது கண்டிப்பாக
எதிர்ப்போம், அதேபோல் இன்றைக்கு கர்நாடகத்திலிருந்து
தமிழகத்திற்கு தண்ணீர் கொடுப்பதற்கு மறுக்கக்கூடிய கர்நாட
கத்தோடு ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கிறது. இன்றைக்கு
ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதனுடைய மின்சார சப்ளைக்குத்
தேவையான அனைத்துப் பொருட்களையும் வாங்குவதற்கு
மைசூரிலே ஒப்பந்தம். பல மாதமாக பணம் கட்டியும், இது
வரையிலே கிராமப்புறங்களுக்கு, பஞ்சாயத்துக்களுக்கு ஊராட்சி
ஒன்றியங்களுக்கு மின்சார சப்ளை கிடைக்கப்படவில்லை. என்ன
மாதிரியான கொடுமை. தமிழகத்திற்குத் தண்ணீர் கொடுக்க
முடியாத அந்த மாநிலத்தோடு ஒப்பந்தம். இப்படிப்பட்ட
நிலையிலிருந்து மீண்டு, நமது மாநில அரசு இங்கே இருக்கக்கூடிய
நல்ல கம்பெனிகளாக, தரமான கம்பெனிகளாக இருந்தால்,
அந்தக் கம்பெனியிடத்திலே பொருட்களைப் பெற்று;—இங்கே
இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு மின்சார சப்ளை
செய்வதற்கு—மின்சாரப் பொருட்களை வாங்கிக் கொடுப்பதற்
கான முயற்சிகளை நீங்கள் எடுக்க வேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு
போக்குவரத்துத் துறை அமைச்சர்.

பிற்பகல் 12-55

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் தவறான தகவலைத் தந்துகொண்டிருக்கிறார்கள்.
தொடர்ந்து தவறான தகவலையே அவர்கள் தந்துகொண்டிருக்

[திரு. கே. ஏ. செங்கோட்டையன்] [1992 பிப்ரவரி 5

கிறார்கள். கர்நாடக மாநிலத்திலிருந்து மின்சாரத் துறைக்குச்
சொந்தமாக 'மெட்டீரியல்ஸ்' என்று சொல்லப்படுகிற உப
பொருட்கள் வாங்கப்படுகின்றன என்ற தவறான தகவலைச்
சொல்கிறார்கள். இது தவறானது என்று தெரிவித்துக் கொள்
கிறேன்.

<u>திரு. ச. அழகிரி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்
பிட்டதைப்போல..........

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு
பொதுப்பணித் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை நிறுவனங்
களிலே அவை வாங்கப்படுகின்றன. ஏற்கெனவே கவிதா என்ற
கம்பெனியிலே பழைய அரசு வாங்கி மோசடி செய்ததற்காகத்
தான் இப்போது மாற்றப்பட்டு, நல்ல தரமான கம்பெனியைத்
தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அது தேசிய அளவிலே இருக்கிறது
என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்
தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு
உறுப்பினர் பழனிசாமி அவர்கள் 40 நிமிடங்களை எடுத்து
விட்டார்கள். நீங்கள் கூறக்கூடிய கருத்தை விவாதப் பொருளாக
ஆக்காமல் விவாதம் செய்தால் நல்லது. இன்னும் ஒரு நிமிடத்தில்
நீங்கள் முடித்துக்கொள்ள வேண்டும்.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> அங்கே எச்.எம்.டி. கம்பெனியிலே
ஒப்பந்தம் செய்யப்பட்டதாகச் சொல்கிறார்கள். அப்படி
அரசாங்கத்தின் கம்பெனியிலிருந்து ஒப்பந்தம் செய்தால் எந்த
நிறுவனத்திலிருந்து வேண்டுமானாலும் வாங்கட்டும். அது
வெளியார் கம்பெனி என்று நினைத்துதான் நான் சொல்ல
வந்தேன்.

அடுத்து, இன்றையதினம் பட்டா பாஸ் புத்தகம் வழங்கு
வதாக ஒரு திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். உண்மை
யிலே அது வரவேற்கக்கூடியது. இதேமாதிரிதான் முன்னால்
நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிற
போது தஞ்சை மாவட்டத்திலே இப்படிப்பட்ட ஒரு தீவிரமான
திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதிலே பல்வேறு முறைகேடு
கள் நடைபெற்றன. காரணம், விவசாயிகளுக்குள் இருக்கக்
கூடிய கருத்து முரண்பாடுகளைப் பயன்படுத்திக்கொண்டு,
தனக்கு இருக்கிற நிலத்தை அடுத்தவர் பெயருக்கு பட்டா பாஸ்
புத்தகத்தில் பதிவு செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டு, அதிலே
மிகப் பெரும் பாதிப்பும் கலவரமும் ஏற்பட்டு, கோர்ட் வழக்கு



1992 பிப்ரவரி 5] (திரு. ஜி. பழனிச்சாமி)

களை சந்திக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது. மீண்டும் அம்
மாதிரியான நிலைமை ஏற்படாமல் பாதுகாத்துக்கொள்வதோடு,
தஞ்சை மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான குத்தகை
விவசாயிகள் இருக்கிறார்கள் ; அவர்களுக்கு குத்தகை உரிமை
பாஸ் புத்தகம் வழங்க இந்த அரசு முன்வரவேண்டுமென்று
கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போன்றுதான் இன்றைக்கு கரும்பு விவசாயம்
இருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு
வருவாய்த் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, இதிலே நான் குறுக்கிடுவதற்குக்
காரணம், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பதிலுக்கு
நான் மறுப்பு சொல்வதற்காக அல்ல. நிலவுடைமை மேம்பாட்டுத்
திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவர், இதயதெய்வம்
எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கும்போது கொண்டுவரப்பட்டது.
நல்ல நோக்கத்தோடுதான் அது கொண்டுவரப்பட்டது. அது
எல்லா இடங்களிலும் நடைபெற்றது. அதை மீண்டும் ஆய்வு
செய்வோம் என்றுதான் இன்றைக்குச் சொல்லியிருக்கிறோம்.
நான் இதைச் சொல்வதற்குக் காரணம் அவர்களுக்கு மட்டுமல்ல.
இங்கே இருக்கிற எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மற்ற
வர்களுக்கும் இந்த அவையின் மூலம் தெரிவிக்க வேண்டும்.
எங்கெங்கே இந்தத் தவறு நடந்திருக்கிறது என்பதை அவர்கள்
தெரிவிக்க வேண்டும். பட்டா பாஸ் புத்தகம் கொடுப்பதற்கு
முன்பாக ஒரு 'டைட்டில் டாக்குமெண்ட்' ஆகக் கொடுக்கவிருக்
கிறோம். அதிலே எந்தவிதமான தவறும் இல்லாமல் கொடுக்க
விருக்கிறோம். அதைப்பற்றி இப்போது நான் விளக்கமாகச்
சொல்லப் போவதில்லை. நீங்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்
பினர்கள் என்பதால் உங்களுடைய சமுதாயப் பணியாக இதை
எடுத்துக்கொண்டு எந்த எந்த இடங்களிலே தவறு நடக்கிறது
என்று நீங்கள் என்னிடம் சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட
தவறு எங்கெங்கே நடக்கிறது என்று ஆராய்வதற்காகத்தான்
நீங்கள் இருக்கிறீர்கள். எனக்கு நீங்கள் உதவியாக இருக்க
வேண்டும். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் குறைந்தது
ஒன்று அல்லது இரண்டு கிராமங்களுக்குச் சென்று எந்த எந்த
தவறு நடைபெற்றிருக்கிறது, அதற்கு என்ன காரணம், அதை
எப்படி திருத்த வேண்டும் என்கிற அளவுக்கு ஒவ்வொரு சட்ட
மன்ற உறுப்பினரும் ஒரு கிராமத்திற்காவது சென்று, நீங்கள்
எனக்குத் தெரிவிக்க வேண்டும். அதை நீங்கள் உங்களுடைய
தொகுதிப் பணியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச்
சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்
கிறேன்.

[1992 பிப்ரவரி 5

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்
பினர் பழனிசாமி அவர்கள் நேரத்தைத் தனிவுடைமையாக்கிக்
கொள்வது சரிதானா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.
உங்களுடைய உரையை 12-17-க்குத் தொடங்கினீர்கள். இப்
போது மணி 12-59. இன்னும் ஒரு நிமிடத்தில் தயவுசெய்து
முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, நான் எப்போதும் நேரத்தைக் கருதி, இந்தச் சபையி
னுடைய முக்கியத்துவத்தைக் கருதி, தேவையற்ற முறையில்
நான் பேச மாட்டேன் என்பதைத் தாங்கள் நன்றாக
அறிவீர்கள்.

அதேபோல் தான் இன்றைக்கு விவசாயிகள் கரும்பு விலை
அறிவிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக சென்ற ஆண்டைவிட
இன்றைய தினத்திலே ரூ. 10 குறைக்கப்பட்டிருக்கிறது. சென்ற
ஆண்டு ரூ. 270 ஒரு டன்னுக்கு கரும்பு விலை அறிவிக்கப்பட்
டிருந்தது. மாநில அரசு ரூ. 40 கூட்டிக் கொடுத்தார்கள்.
மேற்கொண்டு போனஸ் ரூ. 10-ஐ கொடுத்தார்கள்.
ரூ. 310 விவசாயிகளுக்கு கரும்புக்கு ஒரு டன்னுக்கு வழங்கப்
பட்டது. ஆனால் இன்றைய தினம் ரூ. 270-தோடு சேர்த்து
ரூ. 30 மாநில அரசும் போனசாக ரூ. 10-ம் அறிவிக்கப்பட்டு,
இன்றைக்கு ரூ. 10 குறைக்கப்பட்டிருக்கிறது. இதை நமது
அமைச்சரவர்கள் மறு பரிசீலனை செய்து, சென்ற ஆண்டு
கொடுத்த விலையையாவது கொடுக்க வேண்டும். அதற்கு
மாறாக இன்னொரு கணக்கெடுப்பு நடத்துவார்கள். இந்த
ஆண்டு தரமான கரும்புகளை உற்பத்தி செய்து ஆலைகளுக்கு
கொடுத்தால், இதிலே எவ்வளவு சர்க்கரை சதவீதம் வருகின்றது
என்று அந்த நிகர லாபத்தைக் கணக்கிட்டு, விலைகளை கூட்டிக்
கொடுப்பதுதான் வழக்கமாக இருக்கிறது. அதேபோன்று
தஞ்சாவூர் மாவட்டத்தில், காயிதேமில்லத் மாவட்டத்தில்,
மயிலாடுதுறையில் இருக்கின்ற சர்க்கரை ஆலைகள் ஒரு டன்
கரும்புக்கு ரூ. 32 போனசாக வழங்கியிருக்கிறார்கள். அதே
போன்று ஆரூரான் சர்க்கரை ஆலையில், வடபாதிமங்கலத்தில்
வழங்கப்படாமல் இருக்கின்ற போக்கு இருக்கிறது. அதே
போன்று அரிசி ஆலைகளிலே வழங்கப்படுகிறது. எல்லா ஆலை
களுக்கும் அந்த உத்தரவை வழங்க வேண்டுமென்று கேட்டு,
வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே.பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் மேதகு ஆளுநர்
அவர்களுடைய உரையை முன்மொழிந்து வரவேற்றுப் பேச
இன்ற வாய்ப்பு தந்தமைக்காக உங்களுக்கு நன்றி கூற



1992 பிப்ரவரி 5] (திரு. கே. பி. ராஜு)

கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆளுநர் உரையை நான்
மனதார வரவேற்கிறேன் போற்றுகிறேன். ஆளுநர் உரை என்
பது ஒரு கற்பக விருட்சம் போல் அருமையாக அமைந்திருக்
கிறது. ஆகவே இதை நான் வரவேற்கிறேன். சட்டம்,
ஒழுங்கு என்று சொல்லி சட்டம் ஒழுங்கை காப்பாற்றுவதில்
எங்களுடைய தானைத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள்
இந்த நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள், எவ்வளவு சிறப்
பாக செயல்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கின்ற போது
நாங்கள் பெருமைப்படுகின்றோம். விடுதலைப் புலிகளை தமிழ்
நாட்டைவிட்டே ஓடோட விரட்டிய பெருமை எங்களுடைய
புரட்சித் தலைவியைத்தான் சாரும். விடுதலைப்புலிகள்
ஆங்காங்கே மெஷின்கன்களை வைத்துக்கொண்டு சுற்றிக்
கொண்டிருந்தார்கள். இப்போது அவர்கள் எல்லாம் அண்டை
மாநிலத்திற்கு ஓடி பதுங்குகின்ற சூழ்நிலையை உருவாக்கியவர்
எங்களுடைய முதலமைச்சர்தான் என்பதை இந்த நேரத்திலே
தெரிவித்துக்கொள்கிறேன். அண்டை மாநிலத்திற்கு மட்டு
மல்ல, அண்டை நாடுகளுக்கும் ஓடுகிறார்கள். அவ்வளவு தூரம்
ஒரு சிறப்பான சட்டம் ஒழுங்கைக் கொண்டு வந்தவர் எங்களு
டைய முதல்வர் என்பதை நாங்கள் இந்த நேரத்தில் கூறிக்கொள்
வதில் பெருமைப்படுகின்றோம்.

அதேபோன்று அந்த விடுதலைப் புலிகளை விரட்டுவதற்காக
நம்முடைய காவல் துறையைச் சேர்ந்தவர்கள் எத்தனையோ
கஷ்டப்பட்டிருக்கிறார்கள். எத்தனையோ பேர்கள் தங்களு
டைய உயிர்களை இழந்திருக்கிறார்கள். அந்த காவல் துறை
யைச் சீர்திருத்துவதற்காக ரூ. 80.45 கோடியில் திட்டங்களைப்
போட்டு, நிறைவேற்றுகின்ற பாங்கினைப் பார்க்கின்றபோது
நாங்கள் பெருமைப்படுகின்றோம். பூரிப்பும் அடைகின்றோம்.
ஆகவே காவல்துறையை சீர்திருத்துகின்ற சட்டத்தை கொண்டு
வந்த, இந்த மேதகு ஆளுநர் உரையைப் படிக்கின்றபோது
நான் பெருமைப்பட்டேன், பூரிப்பும் கொண்டேன்.

அதேபோல்தான் சட்டம், ஒழுங்கும். இது நாட்டிலே ஏழை
எளிய பாட்டாளி மக்களுக்கு நன்மைகள் போய்ச் சேரவேண்டும்
என்பதற்காகவே சட்டம் ஒழுங்கை போட்டிருக்கிறார்கள்.
இவ்வாறு எத்தனையோ முதலமைச்சர்கள் இருந்தார்கள். இதற்கு
முன்னாலே எங்களுடைய தலைவர், தானைத் தலைவர் புரட்சித்
தலைவர் ஆட்சி செய்தார். அவர் ஆட்சி செய்கின்றபோதும்
இதே திட்டங்களை இதே போல ஏழைகளைப் போய் தொட
வேண்டுமென்பதற்காகவே திட்டங்களைப் போட்டவர்.
அதற்கு முன்னாலே ஆட்சி செய்தவர்கள், இடையிலே ஆட்சி
செய்தவர்கள், திட்டங்களைப் போட்டார்களோ, வட்டங்
களைப் போட்டார்களோ தெரியவில்லை. நாட்டிலே என்ன
நடந்தது என்று இரண்டு ஆண்டுகள் இருந்தும் தெரியவில்லை.
ஆனால் எங்களுடைய தலைவி அவர்கள் வந்த உடன் ஏழை
களுக்காக திட்டங்களைப் போட்டார்களே, அதை உள்ளபடியே
பாராட்ட வேண்டும். எத்தனையோ திட்டங்களைப் போடலாம்.

(திரு. கே. பி. ராஜு) [1992 பிப்ரவரி 5

இங்கே அருமை நண்பர்கள் சொல்வது போல் வேஷ்டி.
சேலை கொடுப்பது சாதாரண சமாச்சாரம் இல்லை. இன்
றைக்கு வேட்டி, சேலை என்பது ஏழை எளிய பாட்டாளி
மக்கள் ஒரு ஆட்சியில், முந்தானியை கசக்கிப் போட்டு
காயப்போட்டு, அந்த முந்தானியை எடுத்துக் கட்டிக்கொண்டு,
மறு முந்தானியை துவைத்துப் போட்டு, அதைக் காயப்போடு
கின்ற காலம் இந்த நாடு. அவ்வளவு பெருமை, கீர்த்திமிக்க
நாடு. 40, 50 வருஷமாகி விட்டது சுதந்திரம் இடைத்து.
** வெளிநாடுகளிலே **
நினைக்கிறார்கள். ** ** என்றுதான்
கிறார்கள். வறுமை கோட்டிற்கு கீழே நினைக்
நிறைந்த நாடு இது. சாப்பாட்டிற்குகூட வழி இல்லாமல் இருக்கும் மக்கள்
கிறோம். அவ்வளவு ஏழ்மையான நாடு நம் நாடு.

பிற்பகல் 1-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துக்களிலே * *
என்று வந்ததை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன்.

திரு. கே. பி. ராஜு : 40 ஆண்டுகள் ஆகிறது சுதந்திரம்
கிடைத்து, இன்னும் நாட்டிலே சாப்பாட்டு பிரச்சினையே
திராமல் இருக்கிறது. அரிசி பிரச்சினை. எல்லா அரசியல்
கட்சிகளும் அரிசியை வைத்துதான் அரசியல் நடத்துகின்ற சூழ்
நிலையில் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன.
இந்திய நாட்டினுடைய பொருளாதாரமே சரியில்லை. இந்திய
நாட்டினுடைய இந்திய சர்க்காருடைய பொருளாதாரம் சரி
யில்லை. அவங்க சரியாக இருந்தால் இந்த நாடு இந்த நிலை
மைக்கு ஆளாகியிருக்காது. இன்றைக்கு அரிசி விலை உயர்ந்த
தற்குக் காரணம் மத்திய சர்க்கார். மத்திய சர்க்கார் அரிசி
விலையை உயர்த்திப் போட்டிருக்க மாநில சர்க்கார்தான்
உயர்த்தியது என்று இங்கே எல்லோரும் பேசிக் கொண்டிருக்
கிறார்கள். மத்திய சர்க்கார் உயர்த்தியது பற்றி யாரும் பேச
வில்லை. மத்திய சர்க்கார்தான் எல்லா விலைகளையும் உயர்த்தி
னார்கள். பெட்ரோல் விலையை உயர்த்தினார்கள். டீசல்
விலையை உயர்த்தினார்கள். சிமெண்டைய் விலையையும்
உயர்த்தியிருக்கிறார்கள். ஏழைகளை பாதிப்பதே மத்திய
சர்க்கார்தான். இங்கேயிருக்கிற தலைவர்கள் எல்லாம் ஓடிப்
போய் அங்கே அவர்களிடம் சொல்லி காசு பணம் அதிகம் வாங்கி
கொடுக்க வேண்டும். எங்கள் தலைவி 120 கோடி ரூபாய் கேட்
கிறார்கள். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.



1992 பிப்ரவரி 5]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். அடுத்துப் பேசுகின்ற
காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் இதற்கு பதில்
சொல்வார்கள். இடைஇடையே திரு. ஞானசேகரன் அவர்கள்
குறுக்கிட வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. பி. ராஜு : 120 கோடி ரூபாய் வேண்டுமெனக்
கேட்டிருக்கிறார்கள். அந்த ரூபாய் 120 கோடியை எங்கள்
அம்மாவிற்கு, முதலமைச்சருக்கு நீங்கள் அவர்களிடமிருந்து
கேட்டு வாங்கிக் கொடுக்கலாம் இல்லையா? இங்கே இருக்கிற
தலைவர்கள் அதை கேட்டு வாங்கிக் கொடுத்தால் இன்னும்
சிறப்பாக இருக்கும். (மணியடிக்கப் பெற்றது). ஒரு நிமிஷம்
கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆளும் கட்சி
யிலே இன்னும் அதிகம் பேர் பேச வேண்டியிருக்கிறது. நேரம்
பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு நிமிஷத்திலே முடிக்க
வேண்டும்.

திரு. கே. பி. ராஜு : முடித்து விடுகிறேன். முடித்து
விடுகிறேன். ஆகவே, மத்திய சர்க்கார் கட்சியைச் சார்ந்த
வர்கள் தயவுசெய்து அவர்களிடத்திலே சொல்லி வாங்கிக்
கொடுக்க வேண்டும். கர்நாடக மாநிலத்திற்கு ஒரு நிலைமை
தமிழ் நாட்டிற்கு ஒரு நிலைமை என்று இருக்கக்கூடாது.
ஏனென்று கேட்டால் உங்களுடைய கட்சி ஆளுகிறது
என்றால் கேட்காமலேயே 200 கோடி கொடுக்கிறார்கள்.
ஆனால் நாங்கள் தோழமை கட்சிதானே. எங்கள் அம்மா
முதலமைச்சர் அவர்கள் உங்களுக்கு எல்லாவற்றிலும்
சப்போர்ட்டாக இருக்கிறார்கள். எங்கள் தலைவரும் ஆரம்
பத்திலேயிருந்து உங்களுக்கு சப்போர்ட்டாகவே இருந்
தார். இன்னும் 11 எம்.பி.-க்கள் உங்கள் கட்சிக்கு, ஆட்சிக்கு
ஆதரவாகத்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதனால்
எங்களுக்குத் தானே முதலில் நீங்கள் நிறைய கொடுக்க வேண்டும்.
(மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே நிறைய கொடுத்தால்
அதிலே சிறப்பு இருக்கிறது. அதை விட்டுப் போட்டு, போன
தடவை கொடுத்ததை நீங்கள் செலவழிக்கவில்லை, அதனால்
இந்த தடவை கொடுக்கவில்லை என்று சொல்வதில் என்ன
நியாயம் இருக்கிறது. இந்தியாவிலேயே எங்கள் முதலமைச்ச
ரைப்போல் நீங்கள் எங்காவது பார்த்திருக்கிறீர்களா? செலவு
பண்ணுவதில் ஆகட்டும், திடமான முடிவு எடுப்பதில் ஆகட்டும்,
காவிரி நீர்ப்பிரச்சினை ஆகட்டும். மதுவிலக்கு பிரச்சினை ஆகட்
டும், எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் இந்தியாவிலேயே
இது மாதிரியான முதலமைச்சரை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?
அப்போது ஏன் நீங்கள் நிதியை அதிகம் ஒதுக்கி கொடுக்கக்கூடாது?

(திரு. கே. பி. ராஜு) [1992 பிப்ரவரி 5

சாராயம் விற்கப்படுவதாக பக்கத்திலே இருக்கிற உறுப்பினர்
சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆனால் எங்கள் பக்கத்திலே
சாராயமே காணவில்லை. இவர் என் பக்கத்திலே உட்கார்ந்துக்
கொண்டு கள்ளச்சாராயம் இருக்கிறது, இருக்கிறது என்று
சொல்லிக்கொண்டிருக்கிறார். ஆனால் எங்கள் தொகுதியிலே
சாராயமே எங்கேயும் கிடையாது. சந்திரசேகர் அவர்கள்கூட
அதுபற்றி பேசும்போது சொன்னார்கள். ஒரு நல்லது பொல்லா
ததற்குகூட சாராயம் கிடைப்பது இல்லை என்ற நிலைமை
இருக்கும்போது கள்ளச் சாராயம் இருக்கிறது என்று சொல்லிக்
கொண்டிருக்கிறார்கள். கள்ளச் சாராயம் எங்கே இருக்கிறது
என்று எனக்குத் தெரியவில்லை. எங்கள் பகுதியிலே கிடை
யாது. போலீஸ்காரர்கள், மணியக்காரன், தண்டல்காரன்,
கணக்குப் பிள்ளை எல்லோரும் விடியற்காலையில் எழுந்துசென்று
சாராய வேட்டையாடி கேஸ் பிடித்துக் கொண்டு வருகிறார்கள்.
இல்லையென்றால் அவர்களுக்கு வேலை போய்விடும். திட்டத்தை
அப்படி கொண்டு வந்திருக்கிறார்கள் அம்மா அவர்கள். ஆனால்
வேண்டுமென்றே கள்ளச்சாராயம் இருக்கிறது, கள்ளச் சாராயம்
இருக்கிறது என்று சொல்லி எங்கள் அம்மாவிற்கு கெட்ட பெயர்
உண்டாக்க நினைக்கிறார்கள்.

நம்முடைய அமைச்சர்கள் எல்லாம் இங்கே இருக்கிறார்கள்.
கோவை மாவட்டத்திலே குடிதண்ணீருக்கு மிகவும் கஷ்டப்
பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எல்லா மாவட்டங்களிலேயும்
மழை பெய்திருக்கிறது. எங்கள் மாவட்டத்திலே மட்டும்
மழை இல்லை. மழை இல்லாமல் தென்னை மரங்கள் எல்லாம் காய்
கிறது, குடி தண்ணீர் கிடையாது. ஒருநாள் தொகுதியாளர்கள்
என்னை வந்து 5 மணிக்கு கூட்டிக் கொண்டு போனார்கள். போர்
வேண்டுமானால் சொல்கிறேன். எழுதிக் கொள்ளுங்கள்.
திருமலைப்பாளையம். அங்கேபோகும் போது ஒரு பெண்
எதிரே குடத்தை எடுத்துக்கொண்டு வந்தார்கள். எங்கே அம்மா
போகிறீர்கள் என்றால் தண்ணீருக்கு என்றார்கள். சொட்டு
சொட்டாக விழுகிற தண்ணீர் தேங்கியிருக்கும் குட்டையிலே
இருந்து எடுக்கவேண்டும்.

பிற்பகல் 1-10

நான் வருவாய்த் துறை அமைச்சருக்குச் சொல்லிக் கொள்கின்
றேன், முதலமைச்சர் அவர்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன்.
தயவுசெய்து அந்த மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவியுங்
கள். இரண்டாவது குடிதண்ணீருக்கு கோவை மாவட்டத்திற்கு
உடனடியாக நீங்கள் ஒரு தீர்வு காணவேண்டும். (மணியடிக்கப்
பெற்றது)** ஒரு நிமிஷம். அதே மாதிரி மக்கள் நல்வாழ்வுத்
துறை சார்பிலே முகாம் நடத்துகிறோம். அது அருமையான
திட்டம். நானே போய் பார்த்தேன். வயசான ஒரு அம்மா அந்த

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.



1992 பிப்ரவரி 5] (திரு. கே. பி. ராஜு)

முகாமிலிருந்து திரும்பி வந்தார்கள். என்ன அம்மா என்று கேட்
டேன். அங்கு கூட்டமாக இருக்கிறது; என்னால் நிற்க முடிய
வில்லை. தலை சுத்துகிறது. அதனால் நான் போகவில்லை.
என்று சொன்னார்கள். நானே கூட்டிக்கொண்டு போய்
பக்கத்திலே உட்கார்ந்து வைத்தியம் செய்யச்சொல்லி மருந்து
எல்லாம் வாங்கிக் கொடுத்துவிட்டு வந்தேன். இப்படி இன்னும்
லட்சக்கணக்கான தாய்மார்கள் ஆஸ்பத்திரிக்குப் போக முடி
யாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அங்கேயே
அவர்கள் வீட்டைத் தேடிப்போய் மருந்து கொடுக்கின்ற அரசு
எங்களுடைய புரட்சித் தலைவியினுடைய அரசுதான் என்று கூறி
இந்த ஆளுநர் உரையை வரவேற்று முடிக்கின்றேன். நன்றி.
வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்பு
மிகு உறுப்பினர்** உறவு முறைகளைக்
குறிக்கும் சொற்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.
திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

*திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்த ஆளுநர் உரையின்மீது நன்றி தெரிவிக்கின்ற
தீர்மானத்திலே உரையாற்றுவதற்கு அனுமதி அளித்த உங்க
ளுக்கு என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரை வெறும் சம்பிரதாயமாக இல்லாமல்
ஒரு புதிய பார்வை உள்ளது போல, புரட்சித் தலைவி அவர்கள்
லட்சியங்களின் வெளியீடுதான் இந்த ஆளுநர் உரை என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், ஆட்சிப்
பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே, ஆளுநர் உரையிலே குறிப்
பிட்டதைப் போல ஏழை நிலமற்ற விவசாயிகளுக்கு கடந்த
பொங்கல் திருநாளிலே இலவச வேட்டி சேலை கொடுத்தார்கள்.
அந்த வேட்டி சேலை திட்டத்தைவிட, அரிசி விலையைக் குறைப்
பது நல்லது என்றுகூட இங்கே பேசினார்கள். அதற்கு அடிப்
படைக் காரணம் யார் என்பது குறித்தும் இங்கே எல்லோரும்
பேசினார்கள். இந்த அரிசி விலையைப்பற்றி பேசுகின்ற
நேரத்தில், மத்திய தொகுப்பிலிருந்து ஒதுக்கப்படுகின்ற அரிசிக்கு
கூடுதலாக விலை ஏற்றியதினுடைய விளைவுதான் இந்த விலை
ஏற்றத்திற்கு அடிப்படைக் காரணம் என்பதை இங்கே பேசு
கின்றவர்களும், மற்றவர்களும் தெரிந்து கொள்ள வேண்டும்
என்பதற்காகச் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்
கள் தமிழகத்திலே ஒரு பெரிய தொழில் புரட்சியை ஏற்படுத்த
வேண்டும் என்று மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்
கிறார்கள். இது தொழில் தொடங்குவதற்கு ஆக்கப்பூர்வமான
முறையில் உதவி புரிவதற்கு வாய்ப்பாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

(திரு. காஞ்சி பன்னீர்செல்வம்) [1992 பிப்ரவரி 5

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இருந்த காலத்தில் சத்
துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து பசிப் பிணியைப் போக்கி
னார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு
மருத்துவ திட்டத்தின் மூலமாக பிணியைப் போக்குகின்ற ஒரு
நல்ல திட்டத்தைக் கொண்டுவந்து ஏழை எளிய மக்களுக்கு நிறை
வேற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு விலைவாசி உயர்வுக்கு அடிப்படைக் காரணம்
என்னவென்று எல்லோரும் சொன்னார்கள். பொருளாதார
அடிப்படையிலே மத்தியிலே இருக்கின்றவர்கள் சொல்லியிருக்
கிறார்கள். இங்கேகூட நேற்றைய தினத்திலே மாண்புமிகு
உறுப்பினர் அல்போன்ஸ் பேசுகின்ற நேரத்தில் இணைந்து
செல்லும் தண்டவாளங்களைப் போல் இணைந்து செயல்படு
வோம் என மத்தியிலே தெளிவாக குறிப்பிட்டுவிட்டார்கள்.
உயர்வான பொருளாதார குறிக்கோளை அடைய பொருளாதார
அடிப்படையிலே இன்றைக்கு விலைவாசி ஏற்றம் உண்மை என்று
சொல்லியிருக்கிறார்கள். அதற்கு அடிப்படைக் காரணம்
யார்? மத்தியிலே நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த இயக்
கத்தைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள், எங்கள் இயக்கத்
தைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். நாடாளுமன்றத்திலே
இதுகுறித்து அவர்கள் பேச இருக்கிறார்கள். இதய தெய்வம்
புரட்சித் தலைவர் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த
நேரத்தில் மத்திய தொகுப்பிலிருந்து எந்த அளவுக்கு உதவி
செய்தார்கள் மறைந்த மரியாதைக்குரிய அன்னை இந்திராகாந்தி
அவர்களும், மறைந்த மரியாதைக்குரிய இராஜீவ் காந்தி அவர்
களும் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும்.

இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்
ஒரு இக்கட்டான நேரத்திலே ஆட்சிப் பொறுப்பை நடத்திக்
கொண்டிருக்கிறார்கள். மத்தியிலே இருக்கின்ற மரியாதைக்குரிய
பிரதமர் அவர்களை முன்பு தமிழகத்திலே ஆட்சி நடத்தியவர்
களுக்கு எந்த அளவிற்கு உதவி செய்தார்களோ அந்த அளவிற்கு
உதவி செய்ய வேண்டும் என்று சொல்லியிருந்தால் இன்றைக்கு
இந்த அளவிற்கு நிலைமை ஏற்பட்டிருக்காது என்பதை நீங்கள்
புரிந்துகொள்ள வேண்டும். எந்தச் சூழ்நிலை வந்தாலும்,
மலிவு விலை மதுக்கடைகளை நான் நிச்சயமாகத் தடுப்பேன்
என்ற உணர்வோடு இன்றைக்கு ஆட்சி நடத்திக்கொண்டிருக்
கிறார்கள் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்.

பிற்பகல் 1-15

நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சாராயம்
ஆறாக ஓடுகிறது என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு
எல்லாம் பணிவோடும் துணிவோடும் சொல்லுவேன், என்னு
டைய தொகுதியில் இன்றைக்கு குடிக்கின்ற அந்த வர்க்கத்
தையே தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். ஒரு பெரிய குடிப்பழக்
கத்தை தடுத்து நிறுத்தியது மட்டுமல்ல அந்த காய்ச்சுகின்ற



1992 பிப்ரவரி 5] [திரு. காஞ்சி பன்னீர்செல்வம்]

தொழிலாக நடத்திக்கொண்டு இருந்த ஒருவர் இன்றைக்கு
முழுமையாக நிறுத்தியிருக்கிறார். இது என்னுடைய தொகுதியில்
நடந்து இருக்கிறது. ஆக இப்படி அந்த நிலையைத் தடுப்பதற்கு
அடிப்படைக் காரணமாக இன்றைக்கு மாண்புமிகு டாக்டர்
புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள்
என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன்.

அதேபோல் கிட்டத்தட்ட 2 ஆயிரம் தொழிலாளர்கள்
வாழ்ந்து கொண்டிருந்த நம்முடைய ஸ்டாண்டர்டு மோட்டார்
தொழிற்சாலை கிட்டத்தட்ட 2 ஆண்டு காலமாக, 3 ஆண்டு
காலமாக மூடிக் கிடந்த தொழிற்சாலை அது. அந்த தொழிற்
சாலையிலே வேலை செய்து கொண்டிருந்த நிறைய தொழிலாளர்
குடும்பங்கள் வாழ முடியாமல் விஷம் அருந்தி இறந்து இருக்
கிறார்கள்; அது மட்டுமல்லாமல் தூக்கில் தொங்கிய குடும்பங்கள்
நிறைய உண்டு. அதேநேரத்தில் அன்றைக்கு ஆட்சியில் இருந்த
வர்களைக் கேட்டோம், அவர்கள் அதை செவி சாய்த்து
செய்யவில்லை. அதேபோல் அன்றைக்கு மத்தியில் சொன்னோம்
அவர்களும் செய்யவில்லை. ஆனால் இன்றைக்கு தாயுள்ளம்
கொண்ட ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற தமிழக
முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய
திறமையின் மூலமாகவும், தன்னுடைய திறமையின் அடிப்படை
யிலும் எல்லோரையும் அழைத்துப்பேசி இன்றைக்கு அந்த
ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலையைத் திறந்து இருக்
கிறார்கள் என்று சொன்னால் நாட்டில் இருக்கின்ற ஏழை
எளிய மக்கள், தொழிலாளர் நண்பர்கள் தன் வாயார வாழ்த்
திக் கொண்டிருக்கிற வரலாறுகளை தமிழக மக்கள் இன்றைக்கு
பார்த்து பாராட்டிக்கொண்டு இருக்கிறார்கள்.

அதேபோல் நேற்றைக்கு ஒரு அறிக்கையில் சொல்லியிருக்
கிறார்கள் பி. அண்டு சி. மில்லைத் திறப்பதற்கு வழிவகை
செய்கிறோம் என்று (மேசையடிக்கப்பெற்றது). நான் ஒரே
ஒரு கருத்தைச் சொல்லி விடைபெறுகிறேன், என்று மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களிடம் மிக பணிவன்போடு
கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் இன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையில்
இருப்பவர்கள் எப்படியாவது இந்த அரசு மீது பழி சுமத்த
வேண்டும்; மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்மீது காழ்ப்
புணர்வு கொண்டு இதைச் சொல்லவேண்டுமென்ற உணர்வோடு
தமிழ்நாட்டில் தடா சட்டம் தவறாக பயன்படுத்துவதாகச்
சொல்லுகிறார்கள். தவறாக பயன்படுத்துவதாக தி.மு.க.வைச்
சேர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள். தடா சட்டத்தை தமிழக
அரசோ, இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி
அவர்களோ தவறாக பயன்படுத்தவில்லை. எஸ்.ஐ.டி.,
சிறப்பு புலன் ஆய்வு போலீஸ் யார், யாரை குற்றவாளிகள்
என்று தமது ஆய்வில் தெரிவிக்கிறதோ அவர்களைக் கைது

[திரு. காஞ்சி பன்னீர்செல்வம்] [1992 பிப்ரவரி 5

செய்கிறார்கள். தி.மு.க. வில் உள்ள அத்தனை பேருமா தடாவில்
கைது செய்யப்படுகிறார்கள்? முன்னாள் இந்தியப் பிரதமர்
மரியாதைக்குரிய ராஜீவ் காந்தி அவர்கள் தமிழ் மண்ணில் வெடி
குண்டுக்கு பலியாக்கப்பட்ட நிகழ்ச்சியை தன் கண் முன் நிறுத்திப்
பார்க்கும் எவரும் தடா சட்டத்தில் கைது செய்பவர்களுக்கு
வக்காலத்து வாங்குவார்களா என்பதை சிந்தித்துப் பார்க்க
வேண்டும். (மணியடிக்கப்பெற்றது).

ஒரே ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். சென்னை நகரில்
பட்டப்பகலில் பத்மநாபா உட்பட 16 பேர்களைச் சுட்டுக்
கொன்ற குற்றவாளிகள் தப்பிச் செல்லும் அளவுக்கு கொலை
யாளிக்கு தைரியம் தந்தவர்கள் தண்டிக்கப்படுவதில் என்ன
தவறு? இந்திய குற்றவியல் சட்டத்தில் இருக்கின்ற 302, 307
பிரிவுகள் எல்லோர் மீதும் போடப்படுவது இல்லை. குற்ற
வாளிகள் என்று கருதப்படுபவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்
படுகிறது; தீர்ப்பை நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. தடா
சட்டம் எங்கே தன் மீது வந்துவிடுமோ என்று குற்றவாளிகள்
பயப்படுவது நியாயம்தான். அதற்காக ஜனநாயக அரசின் மீது,
புரட்சித் தலைவியின் அரசின் மீது பழி சுமத்துவதால் அவர்கள்
மீதுள்ள கறை அழிந்து போகாது என்பதை நீங்கள் சிந்தித்துப்
பார்க்கவேண்டும் (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம்
முடியுங்கள்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : சீக்கிரம் முடித்து விடு
கிறேன். தடா சட்டத்தின் மூலமாக யார் எந்த வழியிலே சொன்
னாலும் அதற்கு சம்பந்தப்பட்டவர்கள் யார்? யார்? எப்படிப்
பட்டவர்கள், என்று பார்த்து ஏற்கனவே அன்னை இந்திரா
காந்தி இருந்த நேரத்திலே இதே குற்றவாளிகள் தான் மதுரை
யில் இப்படி செய்தார்கள். அதேபோல் இந்த குற்றவாளிகளுக்கு
யார் உடந்தையாக இருந்தாலும் அவர்கள் மீது மாண்புமிகு
இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை
எடுக்கவேண்டுமென்று இந்த அவையின் மூலமாக கேட்டு
எனக்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவருக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி,
வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. உ. பல
ராமன்.

பிற்பகல் 1-20

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு உ. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஆளுநர் உரைமீது பேசுகின்ற வாய்ப்பினை தந்த
மைக்காக என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்



1992 பிப்ரவரி 5] [திரு. உ. பலராமன்]

துக்கொள்கிறேன். இந்த ஆளுநர் உரையில் பல்வேறு நலத்
திட்டங்கள் இருப்பதாக இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள்
பேசிக்கொண்டு இருக்கிறார்கள். அதிலே எந்த அளவுக்கு சிறப்பு
உள்ளதாக இருக்கும் என்பதை வருகிற பட்ஜெட் கூட்டத்திலே
தான் அது தெரியும் என்றுகூட எனக்குத் தெரிகிறது. ஏனென்
றால், இந்த உரையில் இந்திய நாட்டினுடைய பொருளாதாரம்
தடுமாற்றத்திற்கு ஆளானது என்று நாம் அனைவருமே ஒரு
நேரத்தில் ஒத்துக்கொண்டு இருக்கிறோம். அதனுடைய எதி
ரொலியாக இந்த உரையிலும் இருக்கிறது என்பதை பொது
வாகவே நான் சொல்லி வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.
இதிலே முதலாவதாக சொல்லப்பட்டதில் வெளிநாட்டுப்
போராளிகள் தமிழகத்தில் ஊடுருவி, தமிழ்நாட்டின் சட்டம்
ஒழுங்குக்கு சவாலாக அமைந்திருந்த நிலையினை மாற்றி இந்த
ஆட்சிக்கு பாராட்டு தெரிவிக்கின்ற அளவில் முதலமைச்சர் அவர்
கள் நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை நன்றியோடு
நான் நினைத்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். முந்தைய
இருண்ட ஆட்சியில் இந்த தீய சக்திகளுக்கு அளிக்கப்பட்ட
சலுகைகள், உன்னதத் தலைவன் ராஜீவ் காந்தியின் உயிரையே
பலிகொடுக்கின்ற அளவிற்கு அமைந்திருந்ததை இந்த அவை
மறக்கவில்லை. அந்த கொடிய நச்சு நாகங்களின் பற்களை
இந்த ஆட்சி பிடுங்கியது. ஆம்: இந்த முதலமைச்சர் பிடுங்கி
னார் என்பது உண்மை. அதற்காக மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல்துறைக்கு சலுகை அளித்து இருக்கிறார்கள். கைகட்டி
நின்ற காவல் துறை கை வீசி நடக்கின்ற அளவிற்கு நவீனப்படுத்து
வதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து உள்ளது.
அதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் அதே
நேரத்தில், காவல் துறை கையை அதிகமாக நீட்டுவதால் ஏற்
படுகின்ற விளைவுகளைச் சுட்டிக்காட்ட வேண்டிய கடமை
எனக்கு இருக்கிறது. காவலர்களால் விசாரணைக்கு
அழைத்து வரப்படுகின்ற கைதிகள் காவல் நிலையங்
களில் மரணம் அடைவதும் அதற்கு காவல் துறையினர் அளிக்கும்
விளக்கங்களும் நம்பத்தகுந்ததாக இல்லை.

என்னுடைய தொகுதியில் காவலர்களால் விசாரணைக்கு
அழைத்து வரப்பட்ட ஒரு கைதி சாக அடிக்கப்பட்டு இருக்கிறார்.
அதற்காக ஏற்பட்ட கலவரத்தில் போலீஸ் துப்பாக்கி சூடு
நடத்தி இருக்கிறது. அதில் அப்பாவி மக்கள் குண்டடிபட்டார்
கள். அந்த குண்டடிபட்டவர்களுக்கு எந்த நிவாரணமும் இந்த
அரசு வழங்கவில்லை. அந்த குண்டடிபட்டதில் 14 வயது
சிறுவன் ஒருவன் பலியானான். அப்படி குண்டடிபட்டவர்
களுடைய பட்டியலில் தேவராஜ் என்பவன் 18 வயது; சசிகுமார்
என்பவன் வயது 16; இறந்துபோன ராஜா என்கிற சிறுவன்
வயது 14; மணி என்பவருடைய வயது 28; சுரேஷ் என்பவ
னுடைய வயது 16; துரை என்பவருடைய வயது 22; சுகவள்ளி
என்கிற ஒரு அம்மையாரின் வயது 65; ருக்மணி என்பவருடைய

வயது 40; விஜி என்கிற சிறுவன் வயது 6; ஆண்டாள் என்பவர்
வயது 47; ரமேஷ் என்பவனுடைய வயது 16; அந்தக் காவல்
நிலையத்திற்கு, கைதாகி வந்து இறந்துபோனவனுடைய வயது
27.....

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்:</u> மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவர் சில விஷயங்களைச்
சொல்லிக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர்கள் ஏதா
வது சில முக்கியமான விஷயங்களுக்கு குறுக்கிடு செய்தால் பரவா
யில்லை. சின்ன சின்ன விஷயங்களுக்கு நீங்கள் குறுக்கிடு செய்தால்
நேரம் இல்லாமல் போய்விடும்.

பிற்பகல் 1-25

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் :</u> மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இத்தகைய நிகழ்ச்சி ஏன் ஏற்பட்டது?
எப்படி ஏற்பட்டது என்பதனைத் தீவிர விசாரித்து விளக்கி
விட்டுப் பேசினால் சாலச் சிறந்ததாக இருக்கும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு அமைச்சரவர்
கள், அவர் பேசியதையே நான் இன்னும் கொஞ்சம்
சுருக்கமாகப் பேசுங்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறேன்.
நீங்கள், இதில் விரிவாகப் பேசுங்கள் என்று வேண்டுகோள்
விடுக்கிறீர்கள். நேரத்தின் அருமையைக் கருதி நான்
அவரிடத்திலே இப்போது நான் தெரிவிக்க இருந்தேன். அதற்
குள்ளே ரொம்ப உள்ளே போய் விரிவாகச் சொல்ல வேண்டாம்.
அதற்குரிய விளக்கம் மட்டும் சொன்னால் போதும் என்று
சொல்ல இருந்தேன். தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் :</u> பேரவைத் தலைவரவர்
களே, நடந்த சம்பவங்கள் திட்டமிட்டு, தூண்டுதல் காரணமாக,
ஒரு கட்சியைச் சார்ந்த சில சமூக விரோதிகள் திட்டமிட்டு
தூண்டப்பட்டு, காவல் நிலையத்திற்கு அருகாமையில் நடத்த
நிகழ்ச்சியாகும் இது. இது, வட சென்னை மாவட்டத்தில் இருக்
கிற காரணத்தினால் எனக்கு நன்றாகத் தெரியும். இது சில
சமூக விரோதிகள், கள்ளச்சாராயப் பேர்வழிகளால் தூண்டி
விடப்பட்டு, ஒரு கும்பலை காவல் நிலையத்திற்கு அருகாமையி
லேயே அழைத்து வந்து, காவல் நிலையத்திலே உள்ளவர்களைத்
தாக்க முயற்சித்ததன்பேரில் ஏற்பட்ட நிகழ்ச்சி என்பதைச்
சட்டமன்ற உறுப்பினரும் நன்கு உணர்வார். ஏனோ, பாவம்,
தேர்தலில் ஓட்டு வாங்கலாம் என்பதற்காகச் சில உண்மைகளை
மூடி மறைக்கக் கூடாது என்பதை நான் இந்த அவைக்குத்
தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.



<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு அமைச்ச
ரவர்கள் குறுக்கிடு செய்கிறபொழுது, அதில் ஏதாவது சில
குறிப்புகள் விவாதத்திற்குப் பயன் உள்ளதாகத் தெரிவிக்க
விரும்பினால், அவ்வப்பொழுது தெரிவித்தால் நல்லதாக இருக்
கும். விரிவாக ஒவ்வொன்றுக்கும் பதில், ஒவ்வொன்றுக்கும் விமர்
சனம் என்று போகிறபொழுது அந்த உறுப்பினருக்குக் கொடுத்த
நேரத்திற்குள் அதை முடிக்க முடியாமல் போகிறது. எனவே
அந்த முறையைப் பின்பற்ற வேண்டுமென்று மாண்புமிகு அமைச்ச
ரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். திரு. பலராமன் கொஞ்சம்
வேகமாகப் பேசி முடியுங்கள். இந்தப் பிரச்சினை விசாரணையில்
எல்லாம் இருக்கிறது. அதனாலே ரொம்ப அதற்குள்ளே
போவது நன்றாக இருக்காது.

<u>திரு. உ. பலராமன் :</u> அமைச்சரவர்கள் குறுக்கிட்டதனாலே
நியாயமாக எனக்குக் கொஞ்சம் அதிக நேரம் கொடுப்பது நியாயம்
என்று நான் கருதுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் 1.20-க்கே ஆரம்
பித்து விட்டீர்கள். ஆகவே, சீக்கிரம் முடியுங்கள்.

<u>திரு. உ. பலராமன் :</u> நான் சொல்ல வந்தது, அதற்குள்ளே
இருக்கிற பிரச்சினை அல்ல. பாதிக்கப்பட்டவர்களுடைய பட்
டியல்—இன்னும் கேட்டால் இந்தப் பட்டியலைவிட அதிகமான
பேர் பாதிக்கப்பட்டார்கள். மூன்று வயது குழந்தை கூட அதில்
பாதிக்கப்பட்டிருக்கிறது. நான் சொல்ல வந்தது, ஏன் அந்தக்
கலவரம் நடந்தது என்பதல்ல. அந்தக் கலவரம் நடக்காமல்
துப்பாக்கிச் சூடு நடக்காமல் தடுக்கப்பட்டிருக்கலாம் என்பதை
நான் நேரடியாக அந்த இடத்திலே சென்றவன் என்கிற கார
ணத்தினால் தெரிவிக்க வேண்டியது கடமை. நான் அதைக்கூட
விட்டு, இங்கே அவைத் தலைவரிடத்திலே, நான் கேட்டுக்
கொண்டதற்கிணங்க மிகச் சுருக்கமாக இந்த அரசுக்குக் கவனத்
திற்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்கிற கருத்துக்காக நான்
தொடங்கினேன். இந்த அரசு அவர்களுக்கு எந்த நிவாரணமும்
அளிக்கவில்லை. அதைவிட, அவர்கள் பாதிக்கப்பட்டு, மருத்
துவ மனையின் இருந்தபொழுது ஒரு சரியான சிகிச்சைகூட
இல்லை என்பதை நான் நேரில் பார்த்து மெத்த வருத்தப்பட்ட
வன், வேதனைப்பட்டவன். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன்
என்று சொன்னால் இந்த ஏழை எளியவர்கள் அத்துணை
பேரும் மிரட்டலுக்கு, உயிருக்கு அஞ்சாமல் வாக்களித்த இந்த
அவை என்பதை, அவர்கள் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்
களால் அமைக்கப்பட்ட அவை என்பதைச் சுட்டிக் காட்டுவது
என்னுடைய கடமையாகும். அந்த இறந்தவனுடைய குடும்பத்
திற்கும், பாதிக்கப்பட்ட மிக ஏழையாக இருக்கிற அவர்களுடைய
குடும்பத்திற்கும் இந்த அரசு உதவி செய்யலாமே என்பதுதான்
என்னுடைய கருத்தாகும்.

[திரு. உ. பலராமன்] [1992 பிப்ரவரி 5

இதுவரை இந்த அரசு அந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட
வர்களுக்கு அவர்களின் குடும்பத்திற்கு எந்தவித உதவியும் அளிக்
காதது வேதனைக்குரிய செய்தியாகும். கோபி துப்பாக்கிச் சூட்
டில் இறந்தவர்களின் குடும்பத்திற்கு நிதி அளிக்கப்பட்டிருக்கிறது.
இறந்தவரின் மனைவிக்குக் கல்லூரியில் படிக்க உதவி என்று
செய்திகள் வருகின்றன. மிக்க நன்றி. புளியந்தோப்பு துப்பாக்
கிச் சூட்டில் இறந்தவனும் மனிதன்தானே. அவன் குடும்பத்
தில் இருப்பவர்களும் மனிதர்கள்தானே, ஏன் இந்த அரசு இதில்
பாரபட்சம் காட்டுகிறது என்பதுதான் எனக்குப் புரியவில்லை.
காவலர்களால் அழைத்துவரப்பட்ட கைதி எப்படிச் செத்தான்,
கலவரம் ஏற்படுகிறவரை காவல் துறை என்ன செய்தது?
துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயம்தானா? துப்பாக்கிச் சூட்
டில் அடிபட்டவர்கள் கலவரம் செய்தவர்களா? இறந்தவன்
கலவரம் செய்ய வந்தவனா? மூன்று வயது, ஆறு வயதுக்
குழந்தைகள் குண்டடிபட்டனவே அந்தக் குழந்தைகள் காவல்
நிலையத்தைத்தாக்க வந்தனவா என்பதையெல்லாம் விசாரணை
செய்து நியாயம் வழங்குவதுடன் அந்தச் சிறுவனின் குடும்பத்
திற்கு முதலமைச்சர் நிதியிலிருந்து நிவாரணம் அளித்திட
வேண்டுகிறேன்.

பிற்பகல் 1.30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன்னனுமதி
யோடு, அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. உ. பலராமன்: அமைச்சருடைய குறுக்கீட்டில் ஒரு
கருத்தினைச் சொன்னார்கள். வேதனையோடு தெரிவித்துக்
கொள்கிறேன். அடிபட்ட அத்தனைப் பேர்களும் அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்
என்பதை அழுத்தமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினையில் இந்த அரசின் நிலையை நாங்கள்
முழுமையாக ஆதரித்தோம்; ஆதரிக்கிறோம். வந்தாரையெல்
லாம் வாழவைக்கும் தமிழ் இனம் இருக்கும் இந்த செந்தமிழ்
நாட்டிலே, அகதிகளாக இருக்கின்ற கொடுமையை யாராலும்
மன்னிக்க முடியாது. மத்திய அரசு, தமிழர்களுக்கு அனைத்து
உதவிகளையும் அளிக்க உத்திரவிட வேண்டுமென்று, இந்த
அவையின் மூலம் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன். ஆயிரம் கோடியில் சென்னை நகரை அழகு படுத்து
கிறோம் என்று சென்ற முறை தெரிவிக்கப்பட்டது. ஆனால்,
இன்னமும் சாக்கடை நீர், ஆறாகப் போகிற நிலைமையும், குடி
நீரில் சாக்கடை நீர் வருகிற கொடுமையும் மாறவில்லை. எரி
கிற தெரு விளக்குகளை எண்ணாமல் எண்ணி விடலாம். அந்த
நிலைதான் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களிடம் வருகிற
முதல் பிரச்சினையே, கால்வாய், குடிநீர், கொசு, விளக்கு இவை
தான். ஆகவே, நகராட்சி நிர்வாகத்தைச் சீரமைத்து நடத்



1992 பிப்ரவரி 5] [திரு. உ. பலராமன்]

துவது மட்டுமல்ல; நகரசபைக்கு உடனடியாக தேர்தலை நடத்
துங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்
பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கரூர் சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னவன் அவர்கள்
ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்
ததை, வழிமொழிந்து எனது கருத்துக்களைக் கூறுவதற்கு முன்
வருகிறேன்.

பொதுவாக, ஆளுநர் உரை என்பது, ஆளுங்கட்சியின் கொள்
கைப் பிரகடனமாக இருக்கும். ஆனால், தமிழகத்து மேதகு
ஆளுநர் அவர்கள், இந்த பெருமைக்குரிய மன்றத்திலே ஆற்றி
யிருக்கிற உரை, ஆளும் அனைத்து இந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய கொள்கைப் பிரகடனம்
என்று சொல்வதைக் காட்டிலும், போர்க் களத்திலே நின்று
கொண்டிருக்கிற ஒரு போர்ப்படை தளபதியினுடைய போர்
முழக்கம் என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்.
காரணம், ஆறு கோடி தமிழர்களுடைய எதிர்பார்ப்பாய் 50
இலட்சம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்
தொண்டர்களின் இதயத் துடிப்பாய் விளங்குகிற மாண்புமிகு
தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், இன்றைக்கு தமி
ழகத்து மக்களைப் பார்த்து, தமிழகத்தின் முன்னேற்றம்தான்
என்னுடைய குறிக்கோள்; அப்படிப்பட்ட போர்க்களத்திலே
நான் நின்றுகொண்டிருக்கிறேன்; நீங்கள் எல்லோரும் என் பின்
னாலே அணி வகுத்து வாருங்கள் என்று சொல்லி, பாடுகிற
போர் பரணி முழங்குகிற போர் முழக்கம்தான் இந்த ஆளுநர்
உரை. கடந்த 7 மாதங்களுக்கு முன்னால் தமிழகத்து மக்கள்
ஆட்சிப் பொறுப்பு என்கிற ஒரு மிகப் பெரிய சுமையினை புரட்சித்
தலைவியின் தோள்களிலே சுமத்தினார்கள். அப்போது கடுமை
யான நிதி பற்றாக்குறை; கஜானா காலி என்ற அளவுக்கு
ஒரு கடுமையான நிதி நெருக்கடியான நேரத்தில், ஆட்சிப்
பொறுப்பை அவர்கள் ஏற்றார்கள். அந்தச் சுமைக்கு, கூடுதல்
சுமையாக மலிவு விலை மதுவை ஒழித்ததன் மூலம், சற்றொப்ப
400 கோடி ரூபாய் அளவுக்கு இந்த அரசுக்கு வருமான இழப்பு
ஏற்பட்டது. அப்போது அதிகாரிகள் எல்லாம் சொன்னார்கள்;
அரசியல் தலைவர்கள் எல்லாம் சொன்னார்கள். வருவாயை
இழந்துவிட்ட புரட்சித் தலைவி அவர்கள் எப்படி திட்டங்களை
அமல்படுத்தப் போகிறார்கள் என்று சொன்னபோது, அவர்கள்
சொன்னார்கள்; எங்களுக்கு நிதி பெரிதல்ல; சமூக நீதிதான்
பெரிது என்று சொல்லி, தமிழகத்திலே இருக்கிற பல்லாயிரக்
கணக்கான தாய்மார்களின் விழி நீரைத் துடைப்பதிலே, மிகப்
பெரிய வருவாய் இழப்பு அரசுக்கு ஏற்பட்டாலும், அதை நாங்கள்
சமாளிப்போம் என்று சொல்கிற அளவுக்கு அவர்கள் ஒரு மிகப்
பெரிய போராட்டத்தை இன்றைக்கு அவர்கள் ஏற்றுக்கொண்
டிருக்கிறார்கள்.

[திரு. ப. சின்னசாமி] [1992 பிப்ரவரி 5

அதைவிட, ஏற்கெனவே இருக்கிற வேலையில்லாத் திண்டாட்
டப் பிரச்சினையை எதிர்நோக்குவதிலே ஒரு போராட்டம்; அது
மட்டுமல்ல; காவிரி நதிநீர்ப் பிரச்சினையால் கர்நாடகத்திலே
தமிழர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பின் காரணமாக, அவர்கள் தாய்
மண்ணிற்குத் திரும்பியபோது, அவர்களைக் காப்பாற்றுவதில்
ஏற்பட்ட இடர்ப்பாடுகள். அதைவிட, இரண்டாண்டுக்கால
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அங்கிங்கெனாதபடி எங்
கும் ஆழமாய் புரையோடியிருந்த ஆயுதக் கலாச்சாரத்தை அழிப்
பதிலே ஏற்பட்ட போராட்டம். அந்த தீவிரவாதிகளுக்கு,
ஆயுதம் தாங்கிய விடுதலைப் புலிகளைப் போன்றவர்களுக்கு
இங்கே ஆலவட்டம் சுற்றிய அரசியல் தலைவர்கள்.
அந்தத் தலைவர்களுக்குப் பல்லக்குத் தூக்கிய அரசு அதிகாரிகள்
இவர்களையெல்லாம் அடையாளம் கண்டு பிடித்து அவர்களுடைய
முதுகெலும்பை உடைப்பதிலே இன்றைக்கு மிகப் பெரிய போ
ராட்டத்தைத் துவக்கியிருக்கிறார் நமது முதலமைச்சர் அவர்கள்.
அப்படிப்பட்ட ஒரு இக்கட்டான சூழ்நிலையில் அவர்கள் ஒரு
போர்ப்படைத் தளபதியைப் போல் பிரச்சினைகளைச் சமாளித்து
ஆட்சி நடத்தி வருகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில்
ஏழை எளிய மக்களைப் பாதிக்கிற அளவுக்கு நம்முடைய மத்திய
அரசு, மாநில அரசைக் கலக்காமலேயே அரிசி விலையை ஏற்றி
இருக்கிறது. அதனாலே பாதிக்கப்பட்டவர்கள் யார் தெரியுமா?
தாழ்த்தப்பட்ட மக்கள், ஏழை எளிய மக்கள். கடந்த பொதுத்
தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழ
கமும், காங்கிரஸ் பேரியக்கமும் மத்தியிலே அமரர் இராஜீவ்
காந்தி பிரதமர் என்றும், தமிழகத்திலே புரட்சித் தலைவி அவர்
கள் முதல்வர் என்று சொல்லி மக்களைச் சந்தித்தோம். அமரர்
இராஜீவ் காந்தி அவர்களும், முதல்வர் புரட்சித் தலைவி அவர்
களும் விடுத்த வேண்டுகோளை ஏற்றுத் தமிழக மக்கள், மத்தி
யிலே காங்கிரஸ் ஆட்சியையும், மாநிலத்திலே புரட்சித் தலைவி
அவர்களுடைய ஆட்சியையும் கொண்டு வந்தார்கள்.

பிற்பகல் 1-35

இன்றைக்கு அரிசி விலை ஏற்றத்தின் காரணமாக, இங்கே
இருக்கிற ஏழை எளியவர்கள் எல்லாம் இந்தக் கட்சிக்கு ஓட்டுப்
போட்டதன் காரணத்தால் தானே அரிசி விலை ஏறி இருக்கிறது
என்கிற ஒரு சந்தேகம் அவர்களுக்கு வருவதற்குக் காரணமாக
இருப்பது மத்திய அரசு தான் என்பதை இந்த நேரத்திலே நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள்
சொன்னார்கள். திட்டங்களைத் தீட்டுவதிலும், அதனைச் செய
லாக்குவதிலும் மாநில அரசு வெறும் பார்வையாளராக இருக்கக்
கூடாது. அதில் பங்கேற்கிறவர்களாக இருக்க வேண்டும் என்
றார்கள். அவர்களுடைய கொள்கையினைத் தாங்கி இன்றைக்கு
அரசு நடத்துகிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் அந்தக்
கருத்தைத்தான் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். கடந்தத்
தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழ



1992 பிப்ரவரி 5] [திரு. ப. சின்னசாமி

கமும், இந்திய தேசியக் காங்கிரசும் கூட்டணி அமைத்து நாம்
போட்டியிட்டோம். இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும். தமி
ழகம் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக மக்கள் வாக்
களித்தார்கள். அந்த மக்களுக்கு ஏமாற்றம் தருகிற விதத்தில்
இன்றைக்கு மத்திய அரசின் நடவடிக்கைகள் இருக்கின்றன.
ஆகவே, மத்திய அரசு, மாநில அரசுக்கு உதவி செய்கிற வகை
யில், புரட்சித் தலைவி அவர்கள் கேட்கிற நிதியைக் கொடுத்தாக
வேண்டும். இல்லையென்று சொன்னால், தமிழகத்து மக்கள்
இன்றைக்கு மத்திய அரசைச் சந்தேகக் கண்ணோடு பார்த்துக்
கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை வரக்கூடாது என்
பதற்காகத்தான் நம்முடைய முதல்வர் அவர்கள், கேட்காத கர்
நாடகத்திற்கு அதிக நிதியையும், கேட்கின்ற தமிழகத்திற்குக்
குறைந்த நிதியையும் வழங்குவது என்ன நியாயம் என்று கேட்
டிருக்கிறார்கள். இங்கே இருக்கிற காங்கிரஸ் தலைவர்கள் எல்
லாம் மத்திய அரசுக்கு இதை எடுத்துச் சொல்லி, ஏற்பட்டிருக்கிற
அநீதிக்குப் பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டுக் கொள்ள
விரும்புகிறேன்.

அடுத்து, கூட்டுறவுத் தேர்தல்களைப் பொறுத்தவரை, போலி
உறுப்பினர்களைக் கலைத்து விட்டுத் தேர்தல் நடத்தப்படும்
என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, இருந்த கூட்டுற
வுச் சங்கங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் புகுந்து கொண்டு
ஒரு மிகப் பெரிய மோசடியை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த
நிலையை மாற்றுகிற வகையில் திட்டத்தை ஆளுநர் உரையிலே
குறிப்பிட்டிருப்பது உள்ளபடியே வரவேற்கப்பட வேண்டிய
ஒன்றாகும்.

அடுத்து, கரூர்-தூத்துக்குடி அகல இரயில் பாதைத் திட்டம்
இன்றைக்கு ஆமை வேகத்தில் நடந்து கொண்டிருக்கிறது.
அதைப் போல, கரூரிலிருந்து சேலத்திற்கு இரயில் பாதைத்
திட்டமும் போடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை மாநில
அரசு தீவிரமாக வற்புறுத்தி அது நிறைவேற்றப்பட வேண்டு
மென்று கேட்டுக் கொண்டு, இந்த ஆளுநர் உரையிலே பேசு
வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.
நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி கே. மரியம்உல்
ஆசியா.

*திருமதி. கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு சட்டமன்றப்
பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி
தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு
அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்
கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்
தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று 7 மாதங்களில் பல
புரட்சிகரமான திட்டங்களைத் தீட்டி, அவற்றைச் செயல்படுத்து

வதிலே வெற்றி கண்டு, இன்று வெற்றி வீராங்கனையாகத்
திகழ்ந்து கொண்டிருக்கிற தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித்
தலைவி அவர்கள் ஆட்சியின் செயல்பாட்டுச் சிறப்பினை மேதகு
ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்த தமிழகம் கடந்த 2½ ஆண்டுக்
காலமாக அமைதி இழந்து, விடுதலைப் புலிகளின் ஊடுருவலால்
அமைதி இழந்து, மயான பூமியாகக் காட்சி தந்தது. சட்டம்,
ஒழுங்கு சீர்கெட்டு பட்டப் பகலிலே படுகொலை, செய்யும் அள
வுக்குப் பயங்கரவாதம் தலை தூக்கி இருந்தது. மாண்புமிகு
டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற
வுடன், துணிச்சல் மிக்க நடவடிக்கையின் காரணமாகத் தமிழ
கத்தில் இன்று அமைதியை நிலைநாட்டியிருப்பதை மேதகு
ஆளுநர் உரையிலே குறிப்பிட்டு இருப்பது பாராட்டத்தக்கதாகும்.

ஸ்காட்லான்ட் யார்ட் போலீஸ்-க்கு இணையாக தமிழக
காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டம் தொடங்கப்பட்டு
செயல்பட்டு வருவது அனைவராலும் பாராட்டத்தக்கது.

பிற்பகல் 1-40

இ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர் பத்மநாபா கொலை மற்றும்
முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கொலை
போன்ற அரசியல் படுகொலையில் சம்பந்தப்பட்டவர்களாகக்
கருதப்பட்டவர்களுக்கு எதிராகத் தடா சட்டம் பயன்படுத்தப்
படுகிறது. பொதுமக்கள், அப்பாவிகள், தொழிற்சங்கத்
தினர் ஆகியவர்களுக்கு எதிராக இந்தச் சட்டம் இதுவரை பயன்
படுத்தப்படவில்லை. பயங்கரவாத கொலை வழக்கில் சம்
பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது தடா
சட்டம் பயன்படுத்தப்படுவது தவிர்க்க முடியாதது. தேச
விரோதிகளுக்கு எதிராகத் தடா சட்டத்தைப் பயன்படுத்துவதில்
தவறே இல்லை. மற்ற மாநிலங்களுக்கெல்லாம் தமிழகம் ஒரு
எடுத்துக்காட்டாக விளங்குகிறது. நாட்டில் பயங்கரவாதத்தைத்
தூண்டியவர்கள் மீதும், அதற்கு உறுதுணையாக இருந்தவர்கள்
மீதும் தடா சட்டத்தைப் பயன்படுத்தாமல் வேறு எதைப்
பயன்படுத்துவது ?

பொறுப்புள்ள முதல்வராகச் சொல்லிக்கொண்டிருக்கிற
மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள், வேறு எந்தச்
சட்டத்தைப் போடலாம் என்று ஆலோசனையாவது கூறி
யிருக்கலாமே. பொறுப்பற்ற ஆட்சி நடத்தியதன் காரண
மாகத்தான் பயங்கரவாதத்தைத் தூண்டிவிட்டு, அதற்குத்
துணையாக இருந்தவர்கள் மீது தடா சட்டம் பயன்படுத்தப்
படுவதை கண்டித்துக்கொண்டிருக்கிறார்கள். பத்மநாபா
மற்றும் 16 பேர் பயங்கரவாதிகளால் கொலை செய்யப்பட்ட
பிறகு அவர்கள் தொடர்ந்து 18 மாத காலம் ஆட்சி நடத்
தினார்கள். பத்மநாபா கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்





களை தி.மு.க. ஆட்சியில் மாண்புமிகு முன்னாள் முதல்வர்
அவர்கள் பிடிக்காமல் இருந்ததிலிருந்து இரண்டு விஷயங்
களைத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம்.
ஒன்று பத்மநாபாவைக் கொலை செய்தவர்களைப் பிடிக்
காமல் விட்டதால் அது திறமையற்ற ஆட்சியாகக் கருதப்
பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படி இல்லாமல் வேண்டுமென்றே
கொலையாளிகளைத் தப்பி ஓட அனுமதித்திருந்தால் பயங்கர
வாதத்திற்கு உடந்தையாக இருந்தவர் மாண்புமிகு முன்னாள்
முதல்வர் என்பது புலனாகும். இதில் எந்தத் தவறை மாண்புமிகு
முன்னாள் முதல்வர் செய்திருந்தாலும் அது விசாரணைக்கு உட்
படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விடுதலைப் புலிகளுடன் தி.மு.க.-வுக்குத் தொடர்பு
இருக்கிறது என்பதற்கு எல்.டி.டி.-யை ஆதரித்து தமிழக
சட்டப்பேரவையில் மாண்புமிகு முன்னாள் முதல்வர் கருணாநிதி
அவர்கள் அளித்த பதில்களே ஆதாரமாகும். மேலும் விடுதலைப்
புலிகள் இந்திய அரசுக்கு எதிராகச் செயல்படத் தொடங்கிய
பிறகும் முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்கள் விடுதலைப்
புலிகளுக்கு ஆதரவு தெரிவித்தார். இலங்கையிலிருந்து திரும்பி
வந்த இந்திய அமைதிப் படையை வரவேற்க மறுத்துவிட்டார்.
இந்திய கடற்படைத் தளபதி ராமதாஸ் அவர்கள் விடுதலைப்
புலிகளைப் பிடித்து அரசிடம் ஒப்படைத்த பிறகும் அவர்களை
முன்னாள் முதல்வர் கருணாநிதி விடுதலை செய்து, தேச விரோத்
நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருந்து, தான் ஒரு தேச
விரோத சக்தி என்பதை நிரூபித்துவிட்டார்.

அடுத்து காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில்
உச்சநீதிமன்ற ஆணையை மத்திய அரசு உடனடியாகச் செயல்
படுத்தி இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே
காலதாமதம் செய்யாமல் உடனடியாக வெளியிட்டிருந்தால்
கர்நாடகத் தமிழர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்காது. ஒரு
இலட்சத்திற்கும் மேலான கர்நாடக தமிழர்கள் உடமைகளை
இழந்து தமிழகத்திற்கு வந்தபோது தாயுள்ளம் கொண்ட தங்கத்
தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பாதிக்கப்பட்ட
கர்நாடகத் தமிழர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ததோடு
மட்டுமல்லாமல் தமிழகத்தில் வாழ்கிற சிறுபான்மையினரான
கர்நாடக மக்களுக்கு எந்தவிதத் தீங்கும் ஏற்படாமல் பாது
காப்புத் தந்து அதே சமயத்தில் கிளர்ச்சியைத் தூண்ட
எத்தனித்தவர்கள் மீதும் நடவடிக்கை மேற்கொண்டு அமைதிகாத்து
தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டிக்காத்தார்கள் மாண்புமிகு
பரட்சித் தலைவி அவர்கள். இந்த நேரத்தில் நான் ஒன்றை
நினைவுப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவி
லிருந்து பாகிஸ்தான் பிரிந்தபோது அப்போது பாகிஸ்தானில்
கராச்சியில் இறுதியாகக் கூட்டப்பட்ட முஸ்லீம் லீக் கூட்டத்தில்
பாகிஸ்தான் தலைவர் சொன்னார் கண்ணியத்திற்குரிய காயிதே
மில்லத் அவர்களிடம், நீங்கள் இந்தியாவில் உள்ள சிறுபான்மை

[திருமதி கே. மரியம் உல் ஆசியா] [1992 பிப்ரவரி 5

இன மக்களான முஸ்லீம்களுக்கு எந்த ஊறும் விளையாமல்
பார்த்துக் கொள்ளுங்கள் ; அதைப் பார்த்துக்கொண்டு நாங்கள்
சும்மா இருக்க மாட்டோம்; நாங்கள் உங்களுக்கு ஆதரவு தரு
கிறோம் என்று சொன்னார்கள். அதற்கு உடனடியாக நமது
கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்கள், இன்று முதல்
நான் ஒரு இந்தியன் நீங்கள் ஒரு பாகிஸ்தானி, எங்கள் இந்தி
யாவில் உள்ள முஸ்லீம்களைப் பாதுகாக்கும் பொறுப்பு எங்க
ளிடத்தில் இருக்கிறது; அதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்
டாம்; ஆனால் பாகிஸ்தானில் உள்ள சிறுபான்மை மக்களாகிய
இந்துக்களுக்கு எந்த ஒரு தீங்கும் ஏற்படாமல் நீங்கள் பார்த்துக்
கொள்ளவேண்டும் என்று கூறினார்கள். அத்தகைய பெருந்
தலைவருடைய பெயரில் மாவட்டம் கண்ட நமது மாண்புமிகு
புரட்சித் தலைவி அவர்கள் கர்நாடகத் தமிழர்களுக்கு எதிராகக்
கிளர்ச்சி நடந்து தமிழர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் தமிழகத்
திற்கு வருகை தந்த கர்நாடகத் தமிழர்களுக்குத் தேவையான
அனைத்து உதவிகளையும் செய்ததோடு மட்டுமல்லாமல் தமிழ
கத்தில் வாழ்கிற கர்நாடக மக்களும் இந்தியர்களே என்ற அந்த
தேச உணர்வின் காரணமாக கர்நாடக மக்களுக்கு இம்மியளவும்
தீங்கு ஏற்படாவண்ணம் பாதுகாப்புக் கொடுத்து ஒரு தேசியத்
தலைவியாக உயர்ந்துவிட்டார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி
அவர்கள்.

பிற்பகல் 1-45

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மேலும் மதுவிலக்கு கொள்கையில் புரட்சித் தலைவி அவர்கள்
மேற்கொண்ட நடவடிக்கையினால் நூற்றுக்கு 90 சதவிகிதம்
கள்ளச்சாராயம் ஒழிந்துவிட்டது. முழுப்பயனும் கிடைக்க
வேண்டுமென்றால் பொதுமக்களுடைய முழு ஒத்துழைப்பும்
தேவைப்படுகிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மேலும்
வருங்காலத்தில் இளம் தலைமுறையினர் நிச்சயமாக குடிக்க
மாட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பூரண
மதுவிலக்கு கொள்கையால் ஒரு நல்ல தலைமுறையினரை
உருவாக்குகின்ற பெருமை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி
அவர்களையே சாரும்.

மேலும் தமிழகத்தை தொழில் துறையில் இந்தியாவிலேயே
முதல் மாநிலமாக உருவாக்க மாண்புமிகு முதல்வர் டாக்டர்
புரட்சித் தலைவி அவர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருப்
பதை தமிழக மக்கள் மனம் உவந்து பாராட்டுகிறார்கள். நானும்
பாராட்டுகிறேன். உலகில்..(மணியடிக்கப்பெற்றது) ஒரு
நிமிடம். பல்வேறு நாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள் தங்கள்
முதலீட்டை தமிழகத்தில் தொழில் துறையில் பயன்படுத்துவதற்கு
வேண்டிய ஏற்பாடுகளை துரிதமாகச்செய்துகொண்டிருக்கிறார்கள்.
மேலும் ஒரு லட்சம் மகளிருக்கு சுய வேலைவாய்ப்பு அளிக்க
வேண்டும் என்ற ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம்



1992 பிப்ரவரி 5] [திருமதி கே. மரியம் உல் ஆசியா]

என்று ஒரு புரட்சிகரமான திட்டத்தை அறிவித்ததற்கு தாய்க்
குலத்தின் சார்பாக வரவேற்று பாராட்டுக்களை தெரிவித்துக்
கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம்..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடி
யுங்கள் அம்மா. 1.46 மணி ஆகிறது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத்
துணைத்தலைவர் அவர்களே, மத்திய அரசு பெண்களுக்காக தேசிய
கமிஷன் ஏற்படுத்தியிருப்பதுபோல, பெண்களுடைய முன்
னேற்றத்திற்காகவும் அனைத்து துறைகளிலே பெண்களை
உயர்த்துவதற்காகவும் பாடுபட்டுக்கொண்டிருக்கின்ற நம்
முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழ
கத்தில் பெண்கள் நலன்களை ஆராய பெண்கள் கமிஷன்
ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி
யடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எச். எம்.
ராஜு.

*திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தமிழக மேதகு ஆளுநர் அவர்கள் நமது
சட்டசபையில் 29–1–1992 ஆம் நாள் ஆற்றிய உரையின்மீது
நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேச வாய்ப்புத் தந்தமைக்கு
நன்றி கூறி ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இவ்வருடத்திய மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் சில
சிறப்பான திட்டங்களை நாம் காண்கிறோம். உதாரணமாக
கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பொருளா
தார தகுதி முன்னேற்றம் அடைய செய்யும் வகையில் மகளிர்
மேம்பாடு திட்டத்தின் மூலமாக 1 லட்சம் மகளிர்க்கு சுய வேலை
வாய்ப்பு அளிக்கும் திட்டம் ஒன்றாகும். இந்த அரிய திட்ட
மானது நகர்ப்புறத்தில் வசிக்கும் வறுமைக் கோட்டிற்குக் கீழே
யுள்ள மகளிருக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்ற என்
னுடைய தாழ்மையான கருத்தைச் சொல்லிக் கொள்ள விரும்பு
கிறேன்.

கிராமப் பகுதியிலே உள்ள மக்களுக்குரிய மருத்துவ வசதிகள்
இன்னும் சரிவர எட்டாத நிலையில், பல முனை மருத்துவ
நல திட்டத்தின் மூலமாக இலவசமாக சிறந்த மருத்துவ வசதி
களை கிராம மக்கள் பெற வேண்டுமென்ற அரசின் குறிக்கோள்
வரவேற்கத்தக்கது. மக்கள் நலத்திற்காக அரசு மருத்துவர்கள்
இந்தத் திட்டத்திற்கு தங்களுடைய அன்பையும், ஆதரவையும்,
ஒத்துழைப்பையும் முழுமனதாக செலுத்த வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எச். எம். ராஜு] [1992 பிப்ரவரி 5

கிராமப்புறங்களில் உள்ள பொதுச் சுகாதார நிலையங்
களில் சில முக்கியமான மருந்துகளே மக்களுக்கு கிடைக்காத
காரணத்தினால் அரசு இந்தத் திட்டத்திற்கு மிகவும் விசேஷ
கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓராசிரியர் பள்ளிக்கூடங்களுக்கு கூடுதலாக இன்னொரு ஆசிரி
யரை நியமிப்பதன் மூலம் வேலையில்லாது துன்பப்படும் அனேக
ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதை மகிழ்ச்சியோடு
ஏற்றுக்கொள்கிறோம்.

எல்லா குக்கிராமங்களுக்கும், நகரப் பகுதிகளுக்கும்
31—3—1992-க்குள் குடிநீர் வழங்கப்படும் என்ற அறிவிப்பை தமிழக
தாய்மார்கள் எல்லோரும் வரவேற்கிறார்கள். மக்களுக்குக்
குடிநீர் தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக்கொள்வது அரசின்
கடமை ஆகும். பல கிராமங்களில் குடிநீர் வசதிகள் இல்லை.
தொலை தூரம் சென்று குடிநீர் எடுத்து வரும் சூழ்நிலை இன்னும்
இருக்கிறது. சில கிராமங்களில் தண்ணீர் இருந்தால் மின்சாரம்
இல்லை. மின்சாரம் இருந்தால் பம்ப் செட் இல்லை என்ற சூழ்
நிலை இருக்கிறது.

இந்த குடிநீர் சப்ளை, நம் நீலகிரி மாவட்டத்தில் பல
குடியிருப்புகளுக்கு வாரிகள் மூலம் குடிநீர் சப்ளை செய்வதை
அரசு அறியும். இதில் அரசு முழு கவனம் செலுத்த வேண்டும்.
குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் இதில் முழு கவனம்
செலுத்தி எல்லா பொதுமக்களுக்கும் குடிநீர் கிடைப்பதற்கு
தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறோம்.

தமிழகத்திலே பல சாலைகள் மிகவும் மோசமான நிலையில்
இருக்கின்ற இத்தருணத்தில் சுங்க கட்டண வசூல் நடவடிக்கை
யின் மூலமாக நிதியைப் பெற்று சாலைகளைச் சீர்செய்யும் திட்
டம் சிறந்த ஒன்றாகும். நீலகிரி மாவட்டத்திற்கும் அரசு இந்தத்
திட்டத்திற்கு அனுமதி அளித்துள்ளது. அதற்கு அரசுக்கு நன்றி
யைத் தெரிவித்துக் கொள்கிறோம். மாவட்டத்தின் சாலைகளின்
பராமரிப்பிற்காக நிதி ஒதுக்கும் செய்வது நல்லதொரு நட
வடிக்கை. சுங்க சாவடியை அரசு அமைக்குமா அல்லது பொது
ஏலம் விடப்படுபடுமா என்பது குறித்து இந்த ஆளுநர் உரையிலே
தெரிவிக்கப்படவில்லை.

தமிழகத்தில் பல்வேறு மத்திய திட்டங்களுக்கு விரைவில்
அனுமதியளிக்குமாறு தமிழக அரசு மத்திய அரசை கேட்டுக்
கொள்ளும் இச்சமயத்தில் உதகையிலுள்ள இந்துஸ்தான்
போட்டோ பிலிம்ஸ் கம்பெனிக்கு வர இருக்கும் கலர் பிலிம்
திட்டத்தையும் இதில் சேர்த்திருக்கவேண்டும். கலர் பிலிம்
திட்டத்தை எவ்வளவு விரைவாக நீலகிரி மக்களுக்கு பெறமுடி
யுமோ அவ்வளவு விரைவில் கிடைக்கப்பெற செய்யுமாறு கேட்டுக்
கொள்கிறோம்.



1992 பிப்ரவரி 5] [திரு. எச். எம். ராஜு]

ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு
இலவச வேஷ்டி சேலை வழங்கும் திட்டத்தின் மூலமாக 1.20
கோடி மக்கள் பலன் பெறுகிறார்கள் என்று பெருமைப்படும்
போது, உண்மையில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள பல
தாய்மார்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பலன் பெறவில்லை.
என்று அறியும்போது வேதனையாக இருக்கிறது. இந்தத்
திட்டத்தின் மூலம் தகுதி வாய்ந்த எல்லா தாய்மார்களுக்கும்
பயன்படும்படி அரசு அதிகாரிகள் பார்த்துக் கொள்ளவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறோம்.

பிற்பகல் 1-50

தற்போது அத்தியாவசியப் பண்டங்களின் விலை உயர்த்தப்
பட்டிருப்பது பரவலாகப் பேசப்படுகிறது. அதற்குப் பல காரணங்
கள் உள்ளன. பதுக்கல் காரணம், கறுப்பு மார்க்கெட் காரணம்,
அதுபோல கடத்தல் போன்றவைகளும் காரணங்கள் ஆகும்.
சிவில் சப்ளைஸ் காவலர்களுக்கும் மற்றும் ஆயுதம் தாங்கிய
காவலர்களுக்கும் நவீன சக்தி வாய்ந்த ஆயுதப் பொருள்களைக்
கொடுத்து உதவ வேண்டும். மற்றும் தரமான வாகன வசதிகள்
செய்து கொடுத்தல் மிகவும் அவசியம். தமிழகத்தில் கள்ளச்
சாராயத்தை ஒழிக்க அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகள்
போல, சிவில் சப்ளைஸ் துறையினருக்கும், 'புட் செல்' அதி
காரிகளுக்கும், 'புட் செல்' காவல் துறையினருக்கும் பொருந்தும்
படி தகுந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறோம்.

ஒரு உயர்மட்டக் குழுவில் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்
பினர்களையும், உறுப்பினர்களாக கொண்டு, ஒரு குறிப்பிட்ட
வருமானத்திற்குமேல், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள
குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேசன் அரிசி கொடுக்க வேண்டியது
இல்லை என்ற உத்திரவை அரசு பிறப்பிக்க வேண்டும். இதன்
மூலமாக இந்த அரிசி விலையை நாம் கட்டுப்படுத்த
கடமைப்பட்டிருக்கிறோம். காரணம் ரேஷன் அரிசியை பலர்
வாங்குவதே இல்லை. கோதுமை வாங்குகிறார்கள். மண்
ணெண்ணெய் வாங்குகிறார்கள். மற்ற எல்லா சாமான்களை வாங்கி
னாலும், அரிசியை வாங்குவதில்லை. இதன்மூலம் பல முறை
கேடுகள் ஏற்படுகின்றன. இந்த முறைகேடுகளை தவிர்ப்பதன்
மூலம் அரிசி விலையைக் குறைக்க முடியும் என்பதைச் சொல்ல
கடமைப்பட்டிருக்கிறோம். மதுவிலக்கு 100 சதம் வெற்றி பெற
சம்பந்தப்பட்ட குற்றங்களுக்கு அபராதத்தையும், சிறை
தண்டனையையும் மேலும் அதிகப்படுத்த வழி வகைகள் செய்ய
வேண்டும் என்று கேட்டுகொள்கிறோம். மதுவின் மூலம் ஏற்
படும் தீமைகளையும், போதை மருந்தின் தொல்லைகளால்
ஏற்படும் துன்பங்களையும் மாநிலத்து மாணவர்களுக்கு 6-வது
வகுப்பு முதல் அறிமுகம் செய்தல் மூலமாக மாணவர்களுக்கு
சிறுவயதிலேயே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தலாம் என்ற கருத்தைச்
[illegible] விரும்புகிறோம்.

[திரு. எச். எம். ராஜு] [1992 பிப்ரவரி 5

காவல் துறையினர் மேலும் சிறப்பாகச் செயல்பட, அவர்
களுக்கு நவீன ஆயுதங்களையும், கிராமங்களில் உள்ள காவல்
நிலையங்களுக்கு வாகன வசதியையும் ஏற்படுத்திக் கொடுத்து
மேலும் மேலும் அவர்கள் சிறப்பாகச் செயல்பட ஏற்பாடு செய்ய
வேண்டும் என்று கேட்டு, இந்த அளவிலே ஒத்துழைத்த மாண்பு
மிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி
விடைபெறுகின்றேன். ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சிங்கை
கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரி
விக்கின்ற இந்த உரையிலே எனக்கு பேச வாய்ப்பு கொடுத்
தமைக்காக உள்ளபடியே என்னுடைய நன்றியைச் சொல்லி,
இன்றைய தினம் தமிழகத்தினுடைய காவல்தெய்வமாக விளங்கு
கின்ற, 4½ கோடி மக்களினுடைய நம்பிக்கை நட்சத்திரமாக
விளங்குகின்ற தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித்
தலைவி அவர்கள் ஆளுநர் உரை மூலமாக தமிழக மக்களுக்கு
தந்திருக்கக்கூடிய பல்வேறு அரசு நலத் திட்டங்களை இங்கே
பாராட்டுகின்ற விதத்திலே அமைந்துள்ளன என்பதை இங்கே
நான் பணிவன்போடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்
கிறேன்.

தமிழகத்தின் அமைதி இழந்து, மிகப் பெரிய ஒரு சோதனைக்கு
ஆளான நேரத்திலே, விடுதலைப் புலிகளாலே, தமிழ் சமுதாயம்
நிம்மதியின்றி வாடிக்கொண்டிருந்த நேரத்திலே, அவைகளை
எல்லாம் தாங்கிக் கொண்டிருந்த தமிழக மக்கள் இன்றைய தினம்
நிம்மதி பெருமூச்சு விட்டு, மிகப் பெரிய ஒரு மகிழ்ச்சிக் கடலிலே
அமர்ந்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

தடா சட்டத்தைப் பற்றி வெளியிலே ஆயிரத்தெட்டு விமரி
சனங்கள், அரசியல் கருத்து வேறுபாடு கொண்டு பேசி வரு
கிறார்கள் என்றாலும் உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான
இந்தியாவின் மிகப் பெரிய அரசியல் கட்சியின் தலைவராக
விளங்கிய அமரர் ராஜீவ் காந்தி அவர்களை உருத் தெரியாமல்,
சின்னாப் பின்னமாக்கி, கொலை செய்து, தமிழகத்தை தென்
இந்தியாவின் பஞ்சாப் ஆக மாற்றிட திட்டம் தீட்டிய அந்நிய
தீவிரவாதிகள், அதற்கு பக்கமேளம் வாசித்து பல்லாக்குத்
தூக்கிய உள்ளூர் பயங்கரவாதிகள், இவர்களை எல்லாம் தமிழ்
மண்ணை ரத்தத்தினால் குளிப்பாட்டி சிவந்த மண்ணாக்கிக் காட்ட
வேண்டும் என்ற சித்தாந்தத்தின் சிறகுகள், அமைதியான
தமிழகத்தை ஆயுதச் சந்தையாக, ஆயுதப் பண்ணையாக,
ஆக்கிட நினைத்த அற்பதிமதியாளர்கள், வெடிகுண்டுகளுக்கும்,
துப்பாக்கிக் குண்டுகளுக்கும் வெண்சாமரம் வீசி, வரவேற்பு



1992 பிப்ரவரி 5] [திரு. சிங்கை கோவிந்தராசு]

கம்பளம் விரித்த நாட்டின் துரோகிகளை, தடா சட்டத்தின்
மூலம் கைது செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை
மனதார பாராட்டி வணங்குவதற்கு நான் கடமைப்பட்
டிருக்கிறேன்.

இந்த அழிவு சக்திகள், விஷ பாம்புகள், துரோகிகளை தடா
சட்டத்தின் கீழ் மட்டுமல்ல, இதைவிட கடுமையான சட்டத்தின்
கீழ் கைது செய்து நடவடிக்கை எடுத்தாலும் தமிழக மக்கள்
மிகவும் மகிழ்வார்கள்.

பிற்பகல் 1–55

முறத்தால் புலியை விரட்டி அடித்த புறநானூற்றுத் தமிழ்த்
தாய்வழி வந்த மாண்புமிகு தமிழக முதல்வர், காவல் தெய்வம்,
புரட்சித் தலைவி அவர்கள் அமைதிப் பூங்காவாக தமிழகத்தை
மாற்றிக் காட்டியதற்கு தமிழகம் காலம் உள்ளவரை நன்றி
கூறக் கடமைப்பட்டிருக்கிறது.

காவிரித் தண்ணீர் பிரச்சினையில் இன்றைய தினம், அன்று
கரை தொட்டு ஓடிய காவிரி, இன்று தரை தட்டி ஓடி, தமிழ
கத்தைத் தார் பாலைவனம் ஆக்கிவிடும் என்று எண்ணிய சூழ்
நிலையில், தன் ஆணித்தரமான வாதத்தால் நடுவர் மன்றத்தி
லிருந்து நீதியைப் பெற்று, சுதந்திரத் தமிழ் இசைத்த காவிரியை
தன் மந்திர வார்த்தைகளால் சந்தனப் புகழ் பாட மீண்டும்
அழைத்து வரும் மாபெரும் பணியில் வெற்றி நடை போட்டுக்
கொண்டிருக்கிறார்கள் புரட்சித் தலைவி அவர்கள். இந்தச்
சூழ்நிலையில்தான் மதத்தால், இனத்தால், மொழியால் வேறு
பட்டாலும், ஒரு தாய் மக்களாக வாழ்ந்து கொண்டிருந்த நமது
ஒற்றுமை உணர்வையே கேள்விக் குறியாக மாற்றிடும் வகையில்
கர்நாடகத்திலிருந்து அபலைகளாக, அகதிகளாக, சொந்த
நாட்டிலேயே அகதிகளாக விரட்டி அடிக்கப்பட்டு, தமிழகம்
வந்த லட்சத்திற்கும் மேற்பட்ட கர்நாடகத் தமிழர்களை தாயாக
அரவணைத்து, போர்க்கால அடிப்படையிலே அவர்களுக்கு,
வேண்டிய உதவிகளைச் செய்து, பாதிக்கப்பட்ட தமிழ் மக்க
ளுக்கு இழப்புத் தொகை தருமாறு கர்நாடக அரசிடம் உரிமைக்
குரலை எழுப்பி வருகிறவர்கள் நம்முடைய புரட்சித் தலைவி
அவர்கள் ஆவார்கள். கர்நாடகத்தில் கட்டவிழ்த்துவிடப்பட்ட
வன்முறை தமிழகத்தைப் பற்றிக்கொள்ளுமோ என்று நாடே
எதிர்பார்த்த நேரத்தில் தமிழக மக்களிடம் தோன்றிய அச்சம்,
கோபம், கொந்தளிப்பு ஆகிய உணர்வுகள் வெடித்துச் சிதறி
எரிமலையாக மாறாமல், அவர்களுடைய உணர்வுகளை 'முழு
அடைப்பு' என்ற திசையிலே திருப்பி, அமைதி பூத்துக் குலுங்கும்
பூஞ்சோலையாக மிகவும் ராஜதந்திர முறையிலே மாற்றிக் காட்டி
தமிழகத்தின் பண்பாட்டை உலகத்திற்கு எடுத்துக் காட்டியவர்
நமது தங்கத் தலைவி, தமிழக முதல்வர், புரட்சித் தலைவி
அவர்கள் ஆவார்கள்.

[திரு. சிங்கை கோவிந்தராசு] [1992 பிப்ரவரி 5

'உச்சிமீது வானிடிந்து வீழினும் அச்சமில்லை, அச்சமில்லை'
என்று பாடிய பைந்தமிழ்க் கவிஞரின் பாடலுக்கு ஏற்ப, எந்தத்
துயரங்கள் வந்தாலும் புரட்சித்தலைவி அவர்கள் இருக்கிறார்கள்,
அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று தமிழக மக்கள்
புரட்சித் தலைவி மீது முழு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.
அப்படிப்பட்ட தமிழக மக்களுடைய நெஞ்சங்களிலே, அவர்கள்
வாழ்க்கையிலே மலர வேண்டிய நல்வாழ்வுத் திட்டங்களை இன்று
புரட்சித் தலைவி அவர்கள் கவர்னர் உரை வாயிலாகத் தெரிவித்
திருக்கிறார்கள்.

மக்கள் நல்வாழ்வு மருத்துவப் பணிகள் நகரங்களில் பட்டா
ளத்து வீரனைப் போல வீர நடை போட்டாலும் கிராமங்களைப்
பொறுத்தமட்டிலும் தொய்வு நடை போடுவதை அறிந்த புரட்சித்
தலைவி அவர்கள், கிராமப் பகுதிகளில் முழு வீச்சில் செயல்படுத்த
புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டத்தின் மூலமாக
கிராம மக்களுக்கு இலவச மருத்துவ உதவி கிடைத்திட தாய்
உள்ளத்தோடு செய்திருப்பது அனைத்து நற்பணிகளிலும் நாட்
டுக்கு வழிகாட்டியாக விளங்குகிறது. இன்றைய தமிழகத்தில்
இத்திட்டத்தின் மூலம் மீண்டும் ஒரு சாதனை படைக்கப்பட்
டுள்ளது. தாய் சேய் நல மருத்துவம், ஒருங்கிணைந்த சுகாதார
ஊட்டச்சத்துத் திட்டம் சிறப்பாகச் செயல்பட கிராம மக்களுக்கு
வசந்த யுகமாக, வரப்பிரசாதமாகத் திகழ்கிறது.

பிற்பகல் 2-00

எண்ணற்ற நல்ல பணித் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி,
அல்லும் பகலும் பாராது உழைக்கும் தாய்மையின் வார்ப்புகள், பூமி
யில் சஞ்சரிப்பதாக, தர்மத்தின் கருவறையில் பிரசவித்த முழு ஒளி
யாய், நீதியின் போதனைகள் பூபாளத்தின் தன்மைக்கு, சக்தி
யத்தின் சன்னிதானத்திலே மலர்ந்த தாரக மந்திரமாக விளங்கும்
புரட்சித் தலைவி அவர்களுக்கும், நன்றியைத் தெரிவித்துக்
கொள்ள நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆளுநர் உரையின் மூலமாகத் தெரியப்படுத்திய நல்ல நல்ல
திட்டங்களை இன்றைய தினம் தமிழகத்திலே உருவாக்கித் தந்த
புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி சொல்வதோடு, என்னுடைய
தொகுதியில் மூடிக்கிடக்கின்ற வசந்தா மில் ஆலை, மது ஸ்பின்னிங்
மற்றும் ஜெயலட்சுமி மில், ராதாகிருஷ்ணா மில்
போன்ற மில்களைப் பற்றியெல்லாம் நான் பேசியிருக்கின்றேன்.
பின்னி மில் போன்றவைகளுக்கெல்லாம் தன்னுடைய கருணை
உள்ளத்தைக் காட்டி, அந்த மில்களையெல்லாம் திறக்கவேண்டு
மென்று பேசி முடிவு எடுத்ததிற்கும் எங்களுடைய குடும்ப தெய்வம்
தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் அவர்கள்,
இந்த மில்களையும் திறப்பதற்கான சாத்தியக் கூறுகளை செய்து
தரும்படி கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதி மக்களும்
அதை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் தியாகதீபம்
ராமசாமி அவர்களுடைய பெயரை ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைக்குச்



1992 பிப்ரவரி 5] [திரு. சிங்கை கோவிந்தராசு]

அந்த தொழிலாளர்களின் தலைவராக விளங்கிய
சூட்டி, மதிக்கிற வாய்ப்பை என்னுடைய தொகுதிக்கும்
தியாகியை பெற்றுத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த ஆளுநர்
உரை மீது நன்றி சொல்லிப் பேசுகின்ற வாய்ப்பு தந்திருக்கக்கூடிய
பேரவைத் துணைத்தலைவர் அவர்களுக்கும் உளமார்ந்த நன்றி
யைச் சொல்லி விடை பெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : திருமதி ஏ.எஸ்.
பொன்னம்மாள்.

<u>திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்</u> : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, எனக்கு அதிக நேரம் வேண்டும்.
இப்போது இரண்டு மணியாகி விட்டது. நாளைக்குப் பேசுகிறேன்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : பேரவையின்
இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றது. பேரவை,
மீண்டும் நாளை காலை (6—2—1992) 9.30 மணிக்குக் கூடும்.
வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.01 மணிக்கு ஒத்தி வைக்கப்
பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

54. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1989-90-ஆம் ஆண்டிற்கான நாற்பத்தொன்றாவது ஆண்டறிக்கை. [1956ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956] 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] [தமிழ், ஆங்கிலம்.]

55. தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்தின் 1987—88ஆம் ஆண்டிற்கான இருபத்திரண்டாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்.)

56. தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்தின் 1988—89ஆம் ஆண்டிற்கான இருபத்திமூன்றாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

[1992 பிப்ரவரி 5

57. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் 1990-91ஆம் ஆண்டிற்கான பதினேழாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

20. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முதலாவது அறிக்கை, 1991–92.

21. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இரண்டாவது அறிக்கை 1991–92.

---

600 008
162334
D
V2:1,31 N92
N92.15.1

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-1.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14
21 Kumaran Book Depot, Booksellers, Erode.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Teaunre High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai 1

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthagbalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

©